மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம்

**Directorate of Distance and Continuing Education**

# இக்கால இலக்கியம்

# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம்

## Directorate of Distance and Continuing Education

## இக்கால இலக்கியம்

**முனைவர். ஜோ.பென்னி**

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

தெ.தி. இந்துக்கல்லூரி,

நாகர்கோவில்.

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி**

**தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம்**



| பாட எண் | பாடங்கள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | அலகு - 1<br>மரபுக்கவிதை | 1-39 |
| 2 | அலகு - 2<br>புதுக்கவிதை | 40-58 |
| 3 | அலகு - 3<br>சிறுகதைகள் - மனோ சிறுகதைகள் | 59-148 |
| 4 | அலகு - 4<br>நாவல் - இல்லந்தோறும் இதயங்கள் | 149-162 |
| 5 | அலகு - 5<br>இலக்கிய வரலாற்று நோக்கில்<br>படைப்பும் படைப்பாளிகளும் | 163-188 |

# இக்கால இலக்கியம்

**கற்றல் நோக்கங்கள்**

- இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் இக்காலத் தமிழ் இலக்கியங்களை அறிந்து கொள்ள வாய்ப்பளித்தல்.
- கவிதை, சிறுகதை, புதினம், ஆகிய படைப்பியல் வகைகளைப் பற்றிய பரந்துபட்ட புலமையைப் பெருக்குதல்.
- இக்காலத் தமிழ் இலக்கியங்களின் உள்ளடக்கம், வெளியீட்டு நெறி, படைப்பியல் கொள்கை ஆகியவற்றை அறியச் செய்தல்.
- இலக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் இக்கால இலக்கியங்களைத் திறனாய்வு செய்யப் பயிற்சி அளித்தல்.
- படைப்புத் துறையிலும் ஊடகத்துறையிலும் கல்விப் புலத்திலும் அயல்நாடுகளிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்குத் துணைசெய்தல்.

**கற்றல் அடைவுகள்**

- இலக்கியங்கள் வாயிலாக மாணவர்கள் பல்வகைப்பட்ட சமூகப் போக்குகளையும் மக்களின் பண்புநலன்களையும் அறிந்துகொள்வர்.
- பல வகையான இலக்கிய வாசிப்பின் வழி மாணவர்கள் கவிஞர், சிறுகதையாசிரியர், புதினப் படைப்பாளர், நாடக ஆசிரியர், கட்டுரையாளர், நடிகர், இயக்குநர், இசையாளர் உள்ளிட்ட பணிநிலைகளுக்கு உயர்வதற்கான வாய்ப்பினைப் பெறுவர்.
- சமகாலப் படைப்பாளர்களை நேரில் சந்தித்து அவர்களின் படைப்பு அனுபவங்களை அறிந்து மாணவர்கள் தங்களின் ஆளுமை மேம்பாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்வர்.
- மாணாக்கர்தம் கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்வர்.
- பன்முகப் படிநிலைகளில் வாழும் மனிதர்களின் உணர்வியலை உளவியல் நோக்கில் அறிந்து கொள்வர்.

**அலகு – 1**

**மரபுக் கவிதை**

பாரதியார் - குயில்பாட்டு

பாரதிதாசன் - வீரத்தாய்

காமராசர் தாலாட்டு – கண்ணதாசன் கவிதைகள் - தொகுதி 3

**அலகு – 2**

**புதுக்கவிதை**

1. தொ.மு.சி.இரகுநாதன் -'எங்கள் திருநெல்வேலி'
   'சொல்வேலிதனையெழுப்பி.... இன்றைக்கும் பொருந்தாதோ' (18 வரிகள்)
2. வாலி – 'கம்பநாடனுக்கு ஒரு கடிதம்'
   'கம்பனே!.... வினவியது உன் மூளை' (43 வரிகள்) அவதார புருஷன் பக்கம் VIII.
3. மு.மேத்தா – 'துருதுருத்த கவலைகளில்.....
   அப்படியே அனுப்புகிறேன்' (27 வரிகள்) இதயத்தில் நாற்காலி
4. வைரமுத்து – சுய விடுதலை (49 வரிகள்) 'கவிராஜன் கதை' – பக்கங்கள் 21 & 22
5. கல்யாண்ஜி – 'சுடலைமாடன் கோவில் தெரு.... அப்படியே இருக்குமா? (12 வரிகள்) கல்யாண்ஜி கவிதைகள், புலரி
6. கலாப்ரியா – காரணி நீ – 'ஆடிப்பெருக்கில் - காரணிநீ கல்லாய்' (21 வரிகள்) கலாப்ரியா கவிதைகள் தொகுதி 2.
7. ஜெயதேவன் - மானுடம் தோற்கும் 'அந்தத் தாய்க்கோழி.... அதோ மேசைமேல்' (30 வரிகள்) சுய தரிசனம், பக்கங்கள் 64 & 65
8. அறிவுமதி - துளிப்பாக்கள், கடைசி மழைத்துளி, பக்கங்கள் 78 & 79
9. நெல்லை ஜெயந்தா – 'புத்தகம்' (26 வரிகள்) நிலாவனம், பக்கம். 43
10. சக்திஜோதி – 'பருவம் எனும் நினைவு' (13 வரிகள்)
    கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரகைகள், பக்கம் 27

**அலகு – 3**

**சிறுகதைகள்**

மனோ சிறுகதைகள் - தொகுப்பு பாடத் திட்டக்குழு

**அலகு – 4**

**நாவல்**

இல்லந்தோறும் இதயங்கள் - ஆசிரியர் : சு.சமுத்திரம்

**அலகு – 5**

**இலக்கிய வரலாற்று நோக்கில் படைப்பும் படைப்பாளிகளும்**

தொ.மு.சிதம்பர ரகுநாதன், பொன்னீலன், சுந்தர ராமசாமி, நாஞ்சில் நாடன், வண்ணதாசன், தோப்பில் முகமது மீரான், நீல பத்மநாபன், ஸ்ரீதர கணேசன், சோ.தர்மன், மலர்வதி

**பாட நூல்கள்**

- பாரதியார் - கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- பாரதிதாசன் - கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- கண்ணதாசன் கவிதைகள் (தொ.4), வானதி பதிப்பகம், சென்னை.
- வைரமுத்து கவிதைகள்.
- புதுமைப்பித்தன் - புதுமைப்பித்தன் படைப்புகள், காலச்சுவடு, ஐந்திணைப் பதிப்பம், சென்னை – 600 005.
- ஜெயகாந்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள், நான்காம் மறு அச்சு, 1997. நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா – புதுதில்லி 110 012
- மனோ சிறுகதைகள், தொகுப்பு: பாடத் திட்டக்குழு, வெளியீடு: ரிஷி பப்ளிகேஷன்ஸ், கோவை, அம்மா புக் சென்டர்: 37 ஏ வடக்காவணி மூலவீதி, மதுரை 1
- இல்லந்தோறும் இதயங்கள் ஆசிரியர்: சு.சமுத்திரம், கங்கை புத்தக நிலையம் தி.நகர் சென்னை 17.

**குறிப்பு**

- சரியான விடையைத் தேர்வு செய்யும் வினா பாடநூலிலிருந்து மட்டும் கேட்கப்பட வேண்டும். ‘இக்கால இலக்கியம்’ என்னும் பாடத்தில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் பாட நூல்கள் மற்றும் பார்வை நூல்களிலிருந்து தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

# அலகு – 1

# மரபுக்கவிதை

# குயில் பாட்டு

# பாரதியார்

சின்னச்சாமி - இலக்குமி அம்மையாருக்கு 11.12.1882 அன்று மகனாகப் பாரதி பிறந்தார். இவரது ஊர் திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரம் ஆகும். வடமொழி, இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் புலமை மிக்கவர். மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சிறிது காலம் தமிழாசிரியராய் பணியாற்றியவர். 'பாரதி' என இந்த வையகமே வாழ்த்தும் கவிஞன். இவரை சுப்பையா என்று இவரது பெற்றோர் செல்லமாக அழைப்பர். இந்த மண்ணின் வேள்விக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். "எனது தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என நெஞ்சுயர்த்திச் சொன்ன செந்தமிழ்ப் பேராண்மையாளர்.

1904-1906 வரை 'சுதேசமித்திரன்' நாளிதழின் ஆசிரியராகவும், 1905 - 1906 வரை சக்ரவர்த்தினி என்ற திங்களிதழின் ஆசிரியராகவும், 1906 - 1908 வரை 'இந்தியா' என்ற வார இதழில் பெயர் குறிப்பிடாத ஆசிரியராகவும், மீண்டும் 1908 முதல் 1910 வரை இந்தியா வாரப் பத்திரிகையின் பெயர் குறிப்பிடாத ஆசிரியராகவும், 1909-1910களில் 'விஜயா' என்ற தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராகவும், 1910 -இல் 'கர்மயோகி' என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியராகவும் 1920-1921 களில் சுதேசமித்திரன் உதவி ஆசிரியராகவும் இருந்து பலநூறு கட்டுரைகளை எழுதியுள்ளார்.

கவிதைகள், கதை, மொழிபெயர்ப்பு எனப் பல தொகுப்புகள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், தேசிய கீதங்கள், வாழ்த்துப்பாக்கள், கண்ணன் பாட்டு, பாஞ்சாலிசபதம், குயில்பாட்டு, வசன கவிதைகள், புதிய பாடல்கள், கடிதம், சொற்பொழிவுகள், கட்டுரைகள், சிறுகதைகள், வாழ்க்கை வரலாறுகள், நூல் மதிப்புரைகள், மொழிபெயர்ப்புகள், சித்திர விளக்கங்கள் எனப் பாரதியார் 1897 முதல் 1909 வரை எழுதியவற்றைப் பாரதியின் படைப்புலக ஆய்வாளர் திரு.சீனி. விசுவநாதன் அவர்கள் நான்கு தொகுதிகளில் பதிவு செய்துள்ளார்.

பாரதியாரின் கவிதைகள் அறிவுக்கும் உணர்வுக்கும் ஒருங்கே விருந்தளிப்பன. இருபதாம் நூற்றாண்டில் பாரதியை விஞ்சுமளவிற்கு இனி ஒரு கவிஞன் தோன்றுவான் என்று கூறுமுடியாதவாறு உயர்ந்து விளங்குகிறார். அவர்தம் கவிதைகளுள் முப்பெரும் பாடல்கள் என்று அழைக்கப்படுவன கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பஞ்சாலிசபதம் ஆகிய மூன்றுமாகும். பாரதியின் ஏனைய பாடல்களோடு ஒப்பு நோக்கும் போது இவை மூன்றும் சிறப்புமிக்கவையாகத் திகழ்கின்றன. கண்ணன் பாட்டும், பாஞ்சாலி சபதமும் கண்ணபெருமானோடு தொடர்புடையன. பாரதியின் புதுமை நோக்கு இவற்றின் மூலம் வெளிப்படும். குயில்பாட்டு ஒரு கற்பனைப் படைப்பு. இதனை,

“மாலை அழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி”

என்ற பாடலடிகள் தெறிவுறுத்தும். பட்டப்பகலில் தான் கண்ட கனவு நிகழ்ச்சியால் இப்படைப்பு தோன்றியதாகக் கவிஞர் கூறினாலும், அவ்வாறு தோன்றியதாகப் பாடியதும் அவர்தம் கற்பனையே ஆகும். கற்பனையின்றிக் கவிதை தோன்றாது. இவர்தம் கற்பனை பொருள் பொதிந்த கற்பனையாகவும், வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க வாய்ப்பளிப்பதாகவும் இருத்தலே இதன் சிறப்பாகும். பாரதியின் இப்படைப்பு, பல்வேறு நிலைகளில் பயின்று இன்புறத்தக்க நிலையில் அமைந்துள்ளதை நாம் உணரமுடிகிறது.

**குயில்பாட்டின் கதைப்பொருள்**

**காலைநேரம்**

காலை நேர இளஞ்சூரியன் கடலிடையே தன் கதிர்களை வீசி, அலைப்பரப்பை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிறது. கடலின் அலைகள் வேதப் பொருளைப் பாடிக் கொண்டு கரையை வந்து தழுவுகின்றன. இத்தகைய காட்சிகள் நிறைந்த புதுவை நகரத்தின் மேற்கே, பறவைகள் நிறைந்த ஒரு மாஞ்சோலை இருந்தது.

**மாஞ்சோலைக் குயில் கனவு**

அந்தச் சோலைக்குச் சென்ற பாரதியார், இளமை மிக்க குயிலொன்று இன்னிசை கீதம் பாடிக் கொண்டிருக்கும் விந்தையைக் கண்டு, அந்தப் பாட்டிலே சிந்தனையைப் பறிகொடுத்தார். இது பாரதியின் கனவிலே நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். இதனைப் பாரதியார்,

“இன்னமுதைக் காற்றினிடை எங்கும் கலந்தது போல்
மின்னற் சுவைதான் மெலிதாய் மிகவினிதாய்
வந்து பரவுதல் போல் வானத்து மோகினியாள்
இந்தவுரு வெய்தித்தன் ஏற்றம் விளங்குதல் போல்
இன்னிசைத் தீம்பாடல் இசைந்திருக்கும் வித்தைதனை
முன்னிக் கவிதைவெறி முண்டே நளவழியப்
பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே – கண்டேன் யான்”

என்று குறிப்பிடுகிறார். அவர்தம் கனவு தொடரக் கவிதை தொடர்கிறது. குயில்பாடும் பாட்டின் இசையின் இனிமையிலே மயக்கம்கொண்டு குயிலைக் காதலிக்கலானார். தன்னுடைய மனித உருவம் நீங்கிக் குயிலுருவம் வரக் கூடாதா? அதனைக் காதலித்து இன்பமுடன் வாழும் வாய்ப்புக் கிடைக்காதா? என்றெல்லாம் எண்ணி ஏங்கினார். அப்போது குயில் தன் துன்பம்கலந்த பாடலைப் பாடி முடித்தது.

**குயிலின் துயர்**

சோலையிலிருந்த ஏனைய பறவைகள் அனைத்தும் பறந்திடவே, இந்தக் குயில் மட்டும் தனித்து வாடியிருக்கக் கண்ட பாரதியார், அதன் பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத்தார்.

“கானப் பறவை கலகலவெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்று நீ ரோசை அருவி யொலியினிலும்
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனருகப் பாடுவதில் ஊறிடுத்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்குங்

கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சம் ஒலியினிலும்

சுண்ண மிடிப்பார் தஞ் சுவை மிகுந்த பண்களிலும்

பண்ணை மடவார் பழகு பல பாட்டினிலும்

வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்

கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்

வாயின் குழலோடு வீணை முதலா மனிதர்

வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல கருவி

நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்

பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன்"

குயிலின் துன்பத்தை கண்டு அதனருகே சென்ற பாரதியார், கவலைக்கான காரணத்தை வினவ,

"காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்

சாதலை வேண்டித் தவிக்கின்றேன்"

என்று குயில் பதில் கூறியது.

**குயில் புலவரிடம் தன் காதலைக் கூறியது**

சிறந்த அறிவும், பறவைகளையெல்லாம் மையலுறப்பாடும் திறமும் உடைய உனக்கு, ஒரு காதலனா கிடைக்கவில்லை? என்று கவிஞர் கேட்டார். குயில் தன் துன்ப வாழ்வையும் வாழும் பொருட்டு அது துடிப்பதையும் எடுத்துக் கூறியது. அத்துடன் அவர் மீது தான் கொண்டிருந்த காதலையும் குறிப்பாகக் கூறியது.

குயிலின் காதலைப் பெற்ற மகிழ்ச்சியில் கவிஞர் திளைத்திருந்த போது சோலையிலுள்ள ஏனைய பறவைகள் வந்து சேர்ந்தன. அவர்களது பேச்சிற்கு இடையூறு ஏற்பட்டதால்,

"காதல் வழிதான் கரடுமுடா மென்பர்

சோதித்திருவிழியீர்! துன்பக் கடலினிலிலே

நல்லுறுதி கொண்டதோர் நாவாய்போல் வந்திட்டார்,

'அன்போடு நீரிங்கே அடுத்தநான் காநாளில்

வந்தருளல் வேண்டும், மறவாதீர், மேற்குலத்தீர்!

சிந்தை பறிகொண்டு செல்கின்றீர்! வாரீரேல்,

ஆவி தரியேன், அறிந்திடுவீர், நான்காம்நாள்

பாவியிருந்த நான்குநாள் பத்துயுக மாக்கழிப்பேன்;

சென்று வருவீர்..............."

என்று மிகக் துயரத்துடன் குயில் விடைகொடுத்து அனுப்பியது.

நான்கு தினங்கள் கழித்து வரும்படி குயில் கூறி அனுப்பிய பின் வீடு திரும்பிய கவிஞருக்கு அதனைப் பிரிந்திருப்பது இயலாததாயிற்று. ஒருநாள் கழித்து மறுநாள் காலை வந்தது, அதற்குள் அவர் பட்ட துன்பம் விவரிக்க இயலாதது.

**குரங்கொடு காதல்**

காமனார் விந்தையினால் கவிஞருடைய சித்தம் செயலற்றுப் போயிற்று, கயிற்றின் வழியாகச் செல்லும் பொம்மையைப் போல, அவர் குயிலைக் காணச் சென்றார். குயிலிருக்கும் இடம் தேடி அலைந்து வருகையிலே, குயில் ஓர் ஆண் குரங்கிடம்,

"....................................வானரரே

ஈடறியா மேன்மையழ தேய்ந்தவரே! பெண்மைதான்

எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே நின்னழகைத்

தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ!

மண்ணுலுயிர்க் கெல்லாந் தலைவரென மானிடரே

எண்ணி நின்றார் தம்மை, எனிலொருகால் ஊர்வகுத்தல்

கோயில் அரசு குடிவகுப்புப் போன்ற சில

வாயிலிலே, அந்த மனிதர் உயர்வெனலாம்

மேனியழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்

கூனி யிருக்கும் கொலு நேர்த்தி தன்னிலுமே
வானரர்தந் சாதிக்கு மாந்தா நிக ராவாரோ?
ஆனவரையும் அவர் முயன்று பார்த்தாலும்
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை
எட்டு டையால் மூடி எதிருமக்கு வந்தாலும்
மீசையையும் தாடியையும் விந்தை செய்து வானரந்தம்
ஆசை முகத்தினைப்போலாக்க முயன்றிடினும்
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும் கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணி வைத்துச் சென்றாலும்
வேறெத்தைச் செய்தாலும் வேகமுறப் பாய்வதிலே
வானரர்போ பாவரே? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு, கந்தைபோல்
வேசமுறத் தாவுகையில் வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?
சைவசுத்த போசனமும் சாதுரியப் பார்வைகளும்
வானரர் போற் சாதியொன்று மண்ணுலகின் மீதுளதோ?

என்று அதன் மேன்மையினைப் புகழ்ந்து கூறி, காதலையும் வேண்டி நின்றது. அது கேட்ட குரங்கும் மகிழ்ச்சி தாங்கமாட்டாமல் கூத்தாடி நின்றது.

அந்தக் காட்சியைக் கண்ணுற்ற பாரதியார் மிகுந்த துயரம் கொண்டார். குயிலைக் கொல்லும் பொருட்டு வாளை வீசினார். ஆனால் குயிலும் குரங்கும் தப்பி ஓடிவிட்டன. சீற்றம் தணியாத பாரதியார், சோலை எங்கும் தேடியும் அந்தக் குயில் அகப்படவில்லை. நாணமும் துயரமும் துன்புறுத்த அவர் வீட்டிற்கு வந்து மூர்ச்சையுற்று வீழ்ந்தார். மூர்ச்சை நிலைமாறிக் கண்விழித்துப் பார்த்தபோது நான்கு புறமும் நண்பர் சூழ்ந்து நின்று

கேள்விக்கணைகளால் பாரதியை துளைத்து விட்டனர். நண்பர்களை அனுப்பிவிட்டு உறக்கம் கொண்டார் பாரதியார்.

**எருதுடன் காதல்**

பாரதியார் மறுநாள் காலையில் மீண்டும் சோலையை நோக்கி சொந்த உணர்வு இல்லாதவராய் நடந்து சென்றார். அப்போது மாமரத்தின் மீதிருந்த குயில் தன் கதையினை,

"காளையர் தம் முன்னே கனமிருந்தீர். ஆரியரே
நீள முகமும் நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்
பஞ்சுப் பொதிபோல் படர்ந்த திருவடிவும்
மிஞ்சுப் புறச்சுமையும், வீரத்திருவாலும்
வானத் திடிபோல 'மா' வென்றுறுமுவதும்
ஈனப்பறவை முதுகின் மிசை ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும், பல்
காலம்நான் கண்டு கடுமோக மாய்விட்டேன்"

என்று ஒரு கிழட்டு காளை மாடு அதனை ஆவலுறக் கேட்பதனைக் கண்டார். இறுதியில் குயில் மாட்டிடம், அதன் காதலை வேண்டி நின்றது. அதைக் காணச் சகியாத பாரதியார் குயிலின் மீது தன் வாளை எறிய, அதுவும் மாடும் தப்பி மறைந்தன. சோர்ந்த உள்ளத்துடன் வீடு திரும்பிய பாரதியார், தன்னுடைய நிலைமைக்கான காரணத்தை அறியாமல் கவலையுற்றுப் பின்னர் உறங்கிவிட்டார்.

குயில் அவரை வரச்சொன்ன நான்காம்நாள் வந்தது. குயிலால் தான் அடைந்த துன்பத்தினை எல்லாம் நினைத்து உள்ளம் வருந்தினார். வீட்டின் மாடத்தில் தனிமையில் இருந்து அமைதி தேடிக் கொண்டு இருந்தார்.

**கவிஞரின் சினம்**

நான்காம் நாள் காலையில் மீண்டும் சோலையை நோக்கிச் சென்ற பாரதியார் வானில் தாழ்வாகக் குயில் பறக்கக் கண்டு அதைப் பின் தொடர்ந்து சென்றார். பழைய

சோலைக்கு இருவரும் வந்தனர். குயில் தன் காதல் பாட்டினை மீண்டும் பாடத் தொடங்கியது. அது கேட்ட கவிஞர் கோபம் கொண்டு,

“நீசக் குயிலே! நிலையறியாப் பொய்மையே!

ஆசைக் குரங்கினையும் அன்பார் எருதினையும்

எண்ணிநீ பாடும் இழிந்த புலைப்பாட்டை

நண்ணி இங்குக்கேட்க நடத்திவந்தாய் போலுமென்ன!”

எனக் கேட்டார். பாரதியார் கூறியதைக் கேட்ட குயில், “ஐயனே! நீ சினங் கொண்டால் நான் இறந்து விடுவேன், குரங்கிடமும் மாட்டிடமும் நான் காதல் கொண்டேன் என்று என்மீது குற்றம் கூறுகின்றார். உண்மையில் நான் குற்றம் அற்றவள்” என்று சொல்லித் தன் கதையைக் கூறத் தொடங்கியது.

**குயிலின் முற்பிறப்புக் கதை**

பொதிய மலைக்கு அருகேயுள்ள சோலையிலிருந்த குயிலிடம், அங்கு வந்த முனிவர் உரைத்த குயிலின் முற்பிறப்புக் கதையினையே குயில் கவிஞரிடம் பின்வருமாறு கூறியது.

**மாமன் மகன் மாடன்**

முந்தைய பிறவியில் முருகன் என்ற வேடர்குலத் தலைவன் மகளாகப் பிறந்தேன். சின்னக்குயிலி என்பது என்பெயர். என் மாமன் மகன் மாடன் என்பவன் என்னை மணக்க விரும்பினான். எனக்கு அவன் மீது விருப்பமில்லாமல் இருந்தும், அவன் வருத்தமுறக் கூடாது என்பதற்காக அவனை மணந்து கொள்ளச் சம்மதித்தேன்.

**நெட்டைக் குரங்கன்**

என் தந்தையாரோ வேடர்குலத் தலைவனான மொட்டைப்புலியனின் மகன் நெட்டைக் குரங்கனுக்கு என்னை திருமணம் செய்து கொடுக்க ஒப்புதல் அளித்து விட்டார். இதனை அறிந்ததும் என் மாமன் மகனான மாடன் ஓடோடி வந்து என்னைச் சினந்து சில வார்த்தைகள் சொன்னான். நானும் அவன்பால் கொண்ட கருணையினால் அவன் சினம் தணியும்படியாகப் பேசினேன்.

## சோலையில் சேர இளவரசன்

நாள்கள் சில சென்ற பின்னர், நான் என் தோழியருடன் காட்டில் ஒரு மாலைப்பொழுதில் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு வந்த சேர இளவரசர் என்னை நோக்கினார். நானும் அவரைப் பார்த்தேன். எங்கள் உள்ளம் இரண்டும் தம்முள் கலந்தன. நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் ஆரத்தழுவி மகிழ்ந்திருந்தோம்.

## நெட்டைக்குரங்கனும், மாடனும் இளவரசனைக் கொன்றனர்

சேர இளவரசனும் நானும் சேர்ந்திருந்த சமயத்தில் அங்குவந்த நெட்டைக்குரங்கனும், மாடனும் நாங்கள் தழுவி நின்ற காட்சியைக் கண்டு சினம் கொண்டவர்களாய் இருவரும், மன்னன் முதுகில் தங்கள் வாளைப் பாய்ச்சினர். இளவரசரும் தம் வாளால் அவர்கள் இருவரையும் வெட்டி வீழ்த்தியபின் சோர்வுற்று மண்மீது விழுந்தார். அவரை வாரி எடுத்து மடியிலிட்டு அழுது புலம்பினேன். அப்போது அவர்,

“பெண்ணே! இனிநான் பிழைத்திடேன், சில்கணத்தே
ஆவி துறப்பேன் அழுதோர் பயனில்லை.
சாவிலே துன்பமில்லை தையலே! இன்னமும் நாம்
பூமியிலே தோன்றிடுவோம், பெண்ணே! நினைக்கண்டு
காமுறுவேன், நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்
இன்னும் பிறவியுண்டு, மாதரசே இன்பமுண்டு,
நின்னுடனே வாழ்வன்இனி நேரும் பிறப்பினிலே”

என்று கூறி மடிந்தார்.

## குயிலியின் மறுபிறப்பு

நான் இப்பிறவியிலும் விந்தைமலைச் சாரலில் வாழும் வேடர்குலத் தலைவன் மகளாகத்தான் பிறந்தேன். மாடன் செய்த மந்திரத்தினால் குயிலுருவம் வாய்க்கப் பெற்றேன். மாடனும், நெட்டைக்குரங்கனும் நான் மன்னனைச் சேரக் கூடாது என்று பேய் உருவத்துடன் என்னைச் சுற்றி வருகின்றனர்.

**இளவரசனின் மறுபிறப்பு**

என்னுடைய காதலர் தொண்டை வள நாட்டில் பிறந்துள்ளாராம். என் பாட்டைக் கேட்டு என்மீது காதல் கொள்வாராம். அப்போது பேய்கள் இரண்டும் மாயச்செய்கை பல செய்து என்னைச் சந்தேகித்துப் பிரியச் செய்ய முயலுமாம். அதற்கு மேலுள்ளவற்றை நீயே கண்டுகொள்வாய் என்று கூறிவிட்டு அந்த முனிவர் காற்றில் மறைந்துவிட்டார். ஐயனே! எனக்கு இரங்கி அருள்புரிவீர்! இல்லையேல் உமது கையால் கொன்றிடுவீர்! என்ற கூறிக் கவிஞர் கையில் வீழ்ந்தது குயில்.

**குயிலின் உருமாற்றம்**

குயிலின் சோகத்தை கேட்ட கவிஞருக்குக் குயிலைக் கொன்றுவிட மனம் வருமோ? அதன் மீது அளவிடற்கரிய அன்பு எழவே, ஆரத்தழுவி முத்தமிட்டார். குயில் மறைந்து அழகு பொருந்திய பெண் ஒருத்தி அங்கு நின்றாள், "இவள் அழகை எப்படி தமிழில் சொல்வேன்!" என்று கவிஞர் திகைக்கிறார்; சொல்ல முயல்கிறார். கவிதையாகிய பழத்தைப் பிழிந்து சாறு எடுத்து, இசைநாட்டியம் என்னும் கலைகளின் சாரத்தை அதனோடு சேர்த்து இனிய அமிழ்தத்தையும் கலந்து காதல் என்னும் வெயிலில் உலர்த்திக் கட்டியாக்கி அதனால் செய்யப்பட்டதே அந்தப் பெண்ணின் மேனி என்கிறார். அவளைத் தழுவி முத்தமிட்டு, முத்தமிட்டு மேகப் பெருமயக்கத்தில் ஆழ்ந்திருந்தார். அப்போது அந்தப் பெண்ணும் பக்கத்திலிருந்த சோலையும் கலைந்திடவே நிகழ்ந்த அனைத்தும் மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தில் தோன்றிய ஒரு கற்பனையின் சூழ்ச்சி என்பதனைக் கண்டு கொண்டார்.

**குயில்பாட்டு – கற்பனைக் காவியம்**

குயில்பாட்டு பாரதியின் கற்பனைத்திறத்திற்குச் சிறந்ததோர் உதாரணமாகத் திகழ்கிறது. அதில் கற்பனையைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்ற கருத்தும், கற்பனையுடன் வேதாந்தப் பொருளும் கூறப்பட்டுள்ளது என்ற கருத்தும் அறிஞர்கள் மத்தியில் இருக்கின்றன. வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதானுஞ் சற்றே இடமிருந்தால் கூறீரோ என்று பாரதியே கூறியுள்ளதால் அதனையும் உட்கொண்டே குயில்பாட்டைப் படைத்துள்ளமை புலனாகிறது.

ஒரு பொருளைச் சாதாரண மனிதன் காண்பதிலும் புலவன் காண்பதிலும் வேறுபாடு உண்டு. சாதாரண மனிதன் அப்பொருளை மட்டும் காண புலவனோ அப்பொருளை

மட்டுமன்றி அதனுடன் தொடர்புடைய பலவற்றையும் காண்கிறான். சாதாரண மனிதன் அறிவின் வாயிலாக நகர, புலவனோ உணர்ச்சியின் மூலமாக அனுபவிக்கிறான். இதற்குக்காரணம் சாதாரண மனிதனிடம் இல்லாத ஆற்றல் புலவனைக் கவிதை படைக்கத் தூண்டுகிறது. இது கவிஞர்களுக்கே உரிய தனி இயல்பாகவும் ஆற்றலாகவும் இருக்கிறது.

கவிஞனுக்கிருக்கும் அந்த ஆற்றலைத்தான் 'கற்பனை ஆற்றல்' என்கிறோம். ஒரு புலவனின் கற்பனை ஆற்றலே, அவனது புலமைத் திறத்தின் அளவுகோல் ஆகும். இந்த ஆற்றலை, அவனது படைப்புகளில் காணமுடியும். உவமைகளின் மூலமாக வருணனைகளின் வழியாக பாத்திரப்படைப்பின் வாயிலாக இக்கற்பனைத்திறன் காட்சி வழங்கிக் கொண்டிருக்கும். கற்பனைத்திறத்துடன் கருத்ததுவளமும் ஒருவனிடம் காணப்பட்டால், அவனை சிறந்த கவிஞனாக மதிக்கப்படுவான். பாரதியார் அத்தகைய கவிஞர் என்பதைத்தான் குயில்பாட்டு உணர்த்துகிறது. எனவேதான், "இது பட்டப் பகலில் பாவலர்க்குத் தோன்றுவதாம், நெட்டைக் கனவின் விளைச்சல் உண்மையிலேயே இது ஒரு கனவு, மது மயக்கத்தில் உண்டாகும் மிகைப் பேச்சுப் போல, கவிக்கு அருள் வந்த வேளையில் மெய்மறந்து கொட்டிய கற்பனை" என்று குயில்பாட்டு பற்றி எழுத்தாளர் கு.ப.ராஜகோபாலன் கூறியுள்ளார்.

**கற்பனைப் பாத்திரங்கள்**

பாரதியாரின் குயில்பாட்டில் குயில் அல்லது சின்னக்குயிலி, சேரன் மகன். மாடன், நெட்டைக் குரங்கன், முனிவர், வீரமுருகன், மொட்டைப்புலியன் முதலிய பாத்திரங்கள் கற்பனையாகவே படைக்கப்பட்டுள்ளன. கவிஞனே இந்தக் கற்பனைக் கவிதையைப் படைத்திருந்தாலும், குயில் தன் முற்பிறப்புக் கதையை, முனிவர் தனக்கு உரைத்ததைக் கவிஞரிடம் கூறுவதாகக் கதையை அமைத்துள்ள கற்பனைத்திறம் வியந்து போற்றுதற்குரியது. 'குயில்பாட்டு' என்ற தலைப்பிற்கேற்பக் குயில் அதிகமான இடங்களில் பேசுவதாக அமைத்திருக்கிறார் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஆறறிவு படைத்த மனிதன் ஐயறிவுடைய குயிலைக் காதலித்ததையும், குயில் மனிதனையும், மாட்டையும், குரங்கையும் காதலித்ததையும் பாட, அவருடைய கற்பனையே காரணமாகும். மனிதப் பிறவியிலான காதல் நிகழாதவாறு தடையாக மனிதர்கள் இருந்தததையும், அந்தத்தடையானது பிறவிகள் தோறும் தொடர்வது என்பதையும், உண்மையான காதல் இப்பிறப்பில் வெற்றி பெறாமல் போனாலும் மறுபிறப்பிலாவது

கைக்கூடக்கூடியது என்பதையும் காட்டும் பொருட்டாக இருபிறப்புகளின் கதைகளைக் கூறி, இரண்டாவது பிறப்பில் காதலனும் காதலியும் கூடுவதாகக் கற்பனை செய்து பாடியுள்ளார் பாரதியார்.

**குயில் பாட்டில் வேதாந்தக் கருத்துக்கள்**

கவிதைச் சிறப்பாலும் பொருள் ஆழத்தாலும் சிறந்து விளங்கும் குயில்பாட்டு, அடிப்படையில் ஒரு காதல் பாட்டாகும். இதனைக் குறித்து அறிஞர் பெருமக்கள் மாறுபட்ட சிந்தனையுடையவராய் விளங்குகின்றனர். குயில் பாட்டில் வேதாந்தமாக விரித்து பொருளுரைக்க இடம் இல்லை என்றும், அது கவிதை பற்றிய புனைவியல் கவிதை என்றும் சி.கனகசபாபதி குறிப்பிட்டுள்ளார். வேதாந்தம் என்ற சொல்லை 'ஒரு கொள்கை' என்ற பொருளிலேயே பாரதியார் பயன்படுத்தியுள்ளார் என்றும், ஆன்ற தமிழ்ப் புலவர்களை விரித்து உரைக்குமாறு பாரதியார் வேண்டிக் கொண்டது வேதாந்த சமயக்கொள்கைகள் இல்லை; குயிலின் வாழ்க்கையில் உணரக்கூடிய ஒரு உயர்ந்த உண்மையையே ஆகும் என்றும் கு.சிவஞானம் குறிப்பிடுகிறார். குயில்பாட்டில் வேதாந்தப் பொருள் உள்ளது என்ற கருத்தினைச் சி.சுப்பிரமணியன் ஏற்றுக் கொண்டுள்ளார்.

பாரதியாரின் குயில்பாட்டை வேதாந்த நோக்கில் விரித்துப் பொருளுரைக்கும் போது 'குயிலாகிய ஆன்மா, குரங்கு மாடு என்னும் மலங்கள் தரும் துன்பங்களிலிருந்து நீக்கப் பெற்று ஆண்டவனாகிய கவிஞனை அடைந்து பேரின்ப நிலை அடையப் பெற்றது' எனக் கூறலாம்.

# வீரத்தாய்

## பாரதிதாசன்

புதுவையைச் சார்ந்த பாரதிதாசன், பாரதியாரின் சாதி மதம் கருதாத, தெளிந்த உறுதியான கருத்துக்களால் ஈர்ப்புற்றுத் தெய்வப் பாடல்களைப் பழகு தமிழில் எழுதினார். புதுவையிலிருந்து வெளிவந்த தமிழ்ப் பத்திரிக்கைகளில் கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் என்ற பெயர்களில் பாடல், கதை, கட்டுரை, மடல்கள் எழுதினார். பத்து ஆண்டுகள் பாரதியாருக்குத் தோழனாக இருந்தார். இந்திய விடுதலைக்கான அறப்போராட்டத்தில் பங்கேற்றார். குடியரசு, பகுத்தறிவு பத்திரிக்கைகளில் எழுதினார். இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு பற்றி பாட்டெழுதிய முதல் பாவலர் பாரதிதாசன் ஆவார். சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் நகைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு நூல்களை வெளியிட்டார். நாத்திகம் மாநாட்டில் 'நான் ஒரு நிரந்திர நாத்திகன்' என்று எழுதிக் கையெழுத்திட்டார். ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் என்ற இந்தியாவின் முதல் கவிதைப் பத்திரிக்கையைத் தொடங்கினார். பெரியார் தன்மான இயக்கத்தில் சிறந்தப் பாவலர் என்று பாராட்டு பெற்றார்.

எதிர்பாராத முத்தம், குடும்பவிளக்கு பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு, அழகின் சிரிப்பு, முல்லை இதழ் தொடங்கி அமைதி – ஊமை நாடகம், சௌமியன் நாடக நூல், ஆத்திச்சூடி, குயில், காதலா கடமையா? முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள், கடல் மேற்குமிழிகள், திராவிடர் திருப்பாடல், தமிழச்சியின் கத்தி, எற்றப்பாட்டு, அமிழ்து எது?, தேனருவி, தாயின்மேல் ஆணை, இளைஞர் இலக்கியம், பாரதிதாசன் நாடகங்கள், குறிஞ்சித்திட்டு, பிசிராந்தையார், வள்ளுவர் உள்ளம், கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா ஆகியவை பாடல்களாகவும், சில தனித்தனி நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

நம் பாடப்பகுதியில் வீரத்தாய் என்ற நாடகம் கொடுக்கப்பட்டுள்ளது. இது பெண்களின் வீரத்தினைப் போற்றும் நாடகமாக அமைந்துள்ளது. இழந்த ஆட்சியைத் தனது புத்திக் கூர்மையாலும், கல்வியாலும் மீட்டெடுக்கும் போராட்டம் நிறைந்த இந்நாடகம் வாயிலாக பாரதிதாசன் கல்வியின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுகிறார். சூழ்ச்சிகள் நிறைந்த இந்த நாடகம் படித்து இன்புறத் தக்கதானது.

மணிப்புரி நகரத்தில் அரசன் இறந்தபின்பு சேனாதிபதி காங்கேயன் ஆட்சியைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்கிறான். அரசனின் மனைவி தலைமறைவாக இருந்ததைத் தனக்குச் சாதமாக்கி அவள் இறந்துவிட்டாள் என்று அறிவித்தான். மகனை கல்வியறிவு பெறக் கூடாது என்று காட்டில் ஒரு கிழவனிடம் பயிற்சி பெற அனுப்பி வைத்தான். அவன் வில், வாள் போன்ற பயிற்சிகளைப் பெறலாம். ஆனால் கல்வி பெறக் கூடாது என்று கட்டளை இட்டான். அரண்மனையிலுள்ள இரகசிய அறையிலுள்ள பொருள்களையும் ஆவணங்களையும் கைப்பற்றி பிற நாட்டு மன்னர்கள் மத்தியில் அரசாட்சி எற்கவும், மக்களை ஏமாற்றவும் முடிவெடுத்தான். மந்திரி காங்கேயன் அவனுக்கு உற்ற துணை நின்றான். மன்னனின் மனைவி விஜயதாரணி பெண் என்பதால் அவளால் எதும் செய்யமுடியாது என்று எண்ணினான்.

அரசாங்கப் பொக்கிஷத்தைத் திறக்கும் நாள் பார்த்தான். வயதான கிழவர் அந்தப் பொக்கிஷத்தைத் திறந்தார். பின் பதவி ஏற்க ஏற்பாடாயிற்று. மன்னர் இறந்தபின் வாரிசு இல்லை. அதனால் தானே மன்னனாக வேண்டும் என்று அறிவித்தான். பிற மன்னர்கள் பதவி ஏற்று வைக்க வந்தபோது, அவர்களுக்கு இரகசியம் கடிதம் வந்ததை குறிப்பிட்டனர். அக்கடிதத்தில் வாரிசு உண்டென்றும், அதனை நீர் சூழ்ச்சியால் மறைத்தீர் என்றும் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் அனுப்பியவரை விசாரிக்கும் போது கிழவர் முன்னால் வந்து நின்றார். சேனாதிபதி அரசனின் மகனை வளர்ப்பதற்காக விடப்பட்ட கிழவர் தன் வேசம் களையும் போது அரசனின் மனைவியான விஜயதாரணியாக நின்றாள். பின் வாரிசுபடி அரசனின் மகன் பதவி ஏற்றான். வஞ்சகக்காரர்களின் சூழ்ச்சிக்கு ஆட்பட்ட அரசைக் காப்பாற்றி வீரத்தாய் என்ற நிலையில் உயர்ந்து விளங்கினாள் விஜயதாரணி.

பாரதிதாசன் எழுதிய நாடகங்களில் வீரத்தாய் பெண்மையின் வீரமும் அறிவுநுட்பமும் பேசக்கூடியதாக உள்ளது. அக்கதை வருமாறு:

**காட்சி: 1**

(மணிபுரி மாளிகையில் ஓர் தனி இடம், சேனாதிபதி காங்கேயனும் மந்திரியும் பேசுகின்றனர்)

**சேனாதிபதி**

மன்னன் மதுவினில் ஆழ்ந்து கிடக்கிறான்

மின்னல் நேர் சிற்றிடை ராணி விஜயா

நமக்கும் தெரியாமல் எவ்விடமோ சென்றாள்

அமைப்புறும் இந்த மணிபுரி ஆட்சி

எனக்கன்றோ? அன்றியும் என்னரும் நண்பர்

உனக்கே அமைச்சப் பதவி உதவுவேன்!

**மந்திரி**

ஒன்றுகேள், சேனைத் தலைவ! பகைப்புலம்

இன்றில்லை, ஆயினும் நாளை முளைக்கும்

அரசியோ, வீரம் உறுதி அமைந்தாள்,

தரையினர் மெச்சம் சர்வ கலையினள்!

**சேனாதிபதி**

அஞ்சுதல் வேண்டாம் அவளொரு பெண்தானே?

**மந்திரி**

நெஞ்சில் நான் பெண்ணை எளிதாய் நினைக்கிலேன்

**சேனாதிபதி**

ஆடை, அணிகலன் ஆசைக்கு வாசமலர்

தேடுவதும், ஆடவர்க்குச் சேவித் திருப்பதுவும்,

அஞ்சுவதும், நாணுவதும், ஆமையைப் போல் வாழுவதும்

கொஞ்சுவது மாகக் கிடக்கும் மகளிர் குலம்

மானிடர் கூட்டத்தில் வலியற்ற ஓர் பகுதி!

ஆனமற் றோர்பகுதி ஆண்மை எனப் புகல்வேன்!

எவ்வாறா னாலும்கேள்! சேனையெல்லாம் என்னிடத்தில்

செய்வார்யார் நம்மிடத்தில் சேட்டை இதையோசி!

**மந்திரி (சிரித்துச் சொல்வான்)**

மானுஷிகம் மேல் என்பார், வன்மையுடைய தென்பார்

ஆன அதனை அளித்ததெது? மீனக்

கடைக்கண்ணால் இந்தக் கடலுகம் தன்னை

நடக்கும்வகை செய்வதெது? நல்லதொரு சக்தி

வடிவமெது? மாமகளிர் கூட்டமன்றோ? உன்சொற்

கொடிது! குறையுடைத்து! மேலும் அது கிடக்க,

மன்னன் இளமைத்தன் எட்டு வயதுடையான்,

இன்னும் சிலநாளில் ஆட்சி எனக் கென்பான்!

**சேனாதிபதி**

கல்வியின்றி யாதொர் கலையின்றி, வாழ்வளிக்கும்

நல்லொழுக்க மின்றியே நானவனை ஊர்ப்புறத்தில்

வைத்துள்ளேன், அன்னோன் நடைப்பிணம் போல் வாழ்கின்றான்,

இத்தனை நாள் இந்த ரகசியம் நீயறியாய்!

**மந்திரி**

ஆமாம் கல்வியிலான் ஆவி யிலாதவனே!

சாமார்த்திய சாலி தந்திரத்தில் தேர்ந்தவன் நீ!

உன் எண்ணம் என்ன சொல்? நான் உனக் கொத்திருப்பேன்!

முன்னால் செயப்போவ தென்ன மொழிந்துவிடு!

**சேனாதிபதி**

ராசாங்க பொக்கிஷத்தை நாம் திறக்க வேண்டும் பின்

தேசத்தின் மன்னமெனச் சீர்மகுடம் நான்புனைத்தே

ஆட்சிசெய வேண்டும் என் ஆசையிது! காலத்தை

நீட்சிசெய வேண்டாம் விரைவில் நிகழ்விப்பாய்!

**மந்திரி**

பொக்கிஷத்தை யார் திறப்பார்? பூட்டின் அமைப்பை அதன்

மிக்க வலிமைத்தனைக் கண்டோர் வியக்கின்றார்

தண்டோராப் போட்டுச் சகலர்க்கும் சொல்லிடுவோம்

அண்டிவந்து தாம்திறப்பார்க் காயிர ரூபாய்கொடுப்போம்.

**சேனாதிபதி**

தேவலை! நீ சொன்னதுபோல் செய்துவிடு சீக்கிரத்தில்

ஆவி அடைந்த பயன் ஆட்சி நான் கொள்வதப்பா!

**காட்சி: 2**

(சேனாதிபதி அரச குமாரனாகிய சுதர்மனை மூடனாக்கி வைக்கக் கருதிக் காடு சேர்ந்த ஓர் சிற்றூரில் கல்வியில்லாத காளிமுத்து வசத்தில் விட்டு வைத்திருக்கிறான். கிழவர் ஒருவர் காளிமுத்தை நண்பனாக்கிக் கொண்டு உடன் வசிக்கிறார்)

**காளிமுத்து**

என்ன கெழவா? பொடியனெங்கே? இங்கேவா!

கன்னாபின்னா இன்னு கத்துறியே என்னது?

மாடுவுளை மேய்க்கவிடு! மாந்தோப்பில் ஆடவிடு!

காடுவுளே சுத்தவிடு! கல்வி சொல்லித் தராதே!

**கிழவர்**

மாட்டினொடும் ஆட்டி னொடும் மன்னன் குமாரனையும்

கூட்டிப்போய் வந்திடுவேன் குற்றமொன்றும் நான்புரியேன்

மன்னன் மகனுக்குக் கல்வியோ நல்லறிவோ

ஒன்றும வராமே உன் உத்தரவுபோல் நடப்பேன்.

**காளிமுத்து**

ஆனாநீ போய்வா அழைச்சிப் போ பையனையும்

ஓநாயில் லாதஇடம் ஓட்டு!

**காட்சி : 3**

(கிழவர் ஓர் தனியிடத்தில் சுதர்மனுக்கு வில்வித்தைக் கற்றுக் கொடுக்கிறார்)

**கிழவர்**

விற்கோலை இடதுகரத்தால் தூக்கி, நாணை

விரைந்தேற்றித் தெறித்துப்பார்! தூணீ ரத்தில்

பற்பலவா சரங்களிலே ஒன்றை வாங்கிப்

பழுதின்றிக் குறிபார்த்து, லட்சியத்தைப்

பற்றிவிடு! மற்றொன்று, மேலும் ஒன்று,

படபடவெனச் சரமாரி பொழி! சுதர்மா

நிற்கையில் நீ நிமிர்ந்து நிற்பாய் குன்றத் தைப்போல்!

நெளியாதே! லாவகத்தில் தேர்ச்சி கொள்நீ!

**சுதர்மன்**

கற்போர்கள் வியக்கும்வகை இந்நாள் மட்டும்
கதியற்றுக் கிடந்திட்ட அடியேனுக்கு
மற்போரும், விற்போரும், வாளின் போரும்,
வளர்கலைகள் பலப்பலவும் சொல்லித் தந்தீர்!
நற்போத காசிரியப் பெரியீர், இங்கு
நானுமக்குச் செயும்கைம்மா றொன்றும் காணேன்!
அற்புதமாம்! தங்களை நான் இன்னா ரென்றே
அறிந்ததில்லை, நீரும் அதை விளக்கவில்லை.

**கிழவர்**

இன்னாரென் றென்னை நீ அறிந்து கொள்ள
இச்சையுற வேண்டாங்காண் சுதர்மா என்னைப்
பின்னாளில் அறிந்திடுவாய்! நீறு பூத்த
பெருங்கனல்போல் பொறுத்திருப்பாய் உன் பகைவன்
என் பகைவன்! உன்னாசை என்றன் ஆசை!
இ∴தொன்றே நானுனக்குச் சொல்லும் வார்த்தை
மின்னாத வானம் இனி மின்னும்! அன்பு
வெறிக்காட்டத் தக்கநாள் தூர மில்லை!

**காட்சி : 4**

(சுதர்மனும் கிழவரும் இருக்குமிடத்தில் தண்டோராச் சத்தம் கேட்கிறது)

**தண்டோராக்காரன்**

அரசாங்க பொக்கிஷத்தைத் திறப்பா ருண்டா?

ஆயிரரூபாய் பரிசாய்ப் பெறலாம் கண்டீர்!

வரவிருப்பம் உடையவர்கள் வருக! தீம்! தீம்!

மன்னர் இடும் ஆணையிது தீம்! தீம்! தீம்! தீம்

**கிழவர்**

சரி இதுதான் நற்சமயம் ! நான்போய் அந்தக்

தறுக்குடைய சேனாதி பதியைக் காண்பேன்

வரும்வரைக்கும் பத்திரமாய் இரு! நான்சென்று

வருகிறேன் வெற்றிநாள் வந்த தப்பா!

**காட்சி : 5**

(மந்திரியின் முன்னிலையில் கிழவர் அரசாங்க பொக்கிஷத்தைத் திறந்தார். மந்திரி கிழவரைக் கூட்டிக் கொண்டு சேனாதிபதியிடம் வந்தார்.)

**மந்திரி**

தள்ளாத கிழவரிவர் பொக்கிஷத்தின்

தாழ்தன்னைச் சிரம மின்றித் திறந்துவிட்டார்!

**சேனாதிபதி**

கொள்ளாத ஆச்சரியம்! பரிசு தன்னைக்

கொடுத்துவிடு! கொடுத்துவிடு! சீக்கிரத்தில்

**மந்திரி**

விள்ளுதல் கேள்! இப்பெரியார் நமக்கு வேண்டும்

வேலையிலே அமைத்துவிடு ராசாங்கத்தில்!

**சேனாதிபதி**

உள்ளதுநீ சொன்னபடி செய்க (கிழவரை நோக்கி) ஐயா.

ஊர்தோறும் அலையாதீர்! இங்கியிருப்பீர்!

**கிழவர்**

அரண்மனையில் எவ்விடத்தும் சஞ்சரிக்க

அனுமதிப்பீர்! என்னால் இவ் வரசாங்கத்தில்

விரைவில் பல ரகசியங்கள் வெளியாம்! என்று

விளங்குகின்ற தென்கருத்தில்! சொல்லிவிட்டேன்!

**சேனாதிபதி**

பெரியாரே! அவ்வாறே அட்டி யில்லை!

**மந்திரி**

பேதமில்லை இன்று முதல் நீரு மிந்த

அரசப் பிரதானியரில் ஒருவர் ஆனீர்.

அறிவுபெற்ற படியாலே எல்லாம் பெற்றீர்!

**காட்சி : 6**

(சேனாதிபதி காங்கேயன், தானே மணிபுரி அரசனென்று நாளைக்கு மகுடாபிஷேகம் செய்து கொள்ளப் போகிறான். வெளிநாட்டரசர்களும் வருகின்ற நேரம் மந்திரி நாட்டின் நிலைமையைச் சேனாதிபதிக்குத் தெரிவிக்கின்றான்.)

**மந்திரி**

மணிபுரி மக்கள் பால் மகிழ்ச்சி யில்லை!
அணிகலன் பூண்கிலர் அரிவை மாக்கள்!
பாடகர் பாடிலர்! பதுமம் போன்ற
ஆடவர் முகங்கள் அழகு குன்றின!
வீதியில் தோரணம் விளங்க வில்லை!
சோதி குறைந்தன, தொல்நகர் வீடுகள்
அரச குலத்தோர் அகம் கொதித்தனர்!
முரசம் எங்கும் முழங்குதல் இல்லை!

**சேனாதிபதி**

எனக்கு பட்டம் என்றதும் மக்கள்
மனத்தில் இந்த வருத்தம் நேர்ந்ததா?
அராஜகம் ஒன்றும் அணுகா வண்ணம்
இராஜக சேவகர் ஏற்றது செய்க!
வெள்ளி நாட்டு வேந்தன் வரவை
வள்ளிநாட்டு மகிபன் வரவைக்
கொன்றை நாட்டு கோமான் வரவை
ஏற்றுப சரித்தும் இருக்கை தந்தும்
போற்றியும் புகழ்ந்தும் புதுமலர் சூட்டியும்,
தீதர நாளை நான் திருமுடி புனைய
ஆதரவு அளிக்க! அனைத்தும் புரிக!

**மந்திரி**

ஆரவாரம் அதுகேட் டாயா?

பாராள் வேந்தர் பலரும் வரும்ஒலி!

**சேனாதிபதி**

லிகிதம் கண்ட மன்னர்

சகலரும் வருகிறார் சகலமும் புரிகநீ!

**காட்சி 7**

(அயல்நாட்டு வேந்தர்கள் வந்தார்கள். சேனாதிபதி அவர்களை வரவேற்றுத் தனது மகுடாபிஷேகத்தை ஆதரிக்க வேண்டுகிறான்.)

**சேனாதிபதி**

மணிபுரியின் வேந்தனார் மதுவை யுண்டு

மனங்கெட்டுப் போய்விட்டார் விஜயராணி

தணியாத காமத்தால் சென்றாள்

தனியிருந்த இளங்கோமான் சுதர்மன் என்பான்

அருமையுடன் வளர்ந்து வந்தும் கல்வியில்லை,

அணியாத அணியில்லை! அமுதே உண்பான்

பிணிபோல அன்னவன் பால் தீயொழுக்கம்

பெருகினதால் நாட்டினரும் அமைச்சர் யாரும்

என்னை முடிசூடு கென்றார், உங்கட் கெல்லாம்

ஏடெழுதி னேன் நீரும் விஜயம் செய்தீர்,

சென்னியினால் வணங்குகிறேன். மகுடம் பூணச்

செய்தென்னை ஆதரிக்க வேண்டு கிறேன்.

மன்னாதி மன்னர்களே, என் விண்ணப்பபம்!

மணிமுடியை நான் புனைந்தால் உம்மை மீறேன்!

எந்நாளும் செய்நன்றி மறவேன் கண்டீர்!

என்னாட்சி நல்லாட்சி யாயிருக்கும்!

**வெள்ளி நாட்டு வேந்தன்** (கோபத்தோடு கூறுகிறான்)

காங்கேய சேனா பதியே நீர்ஓர்

கதைசொல்லி முடித்துவிட்டீர் யாமும் கேட்டோம்

தாங்காத வருத்தத்தால் விஜயராணி

தனியாக எமக்கெல்லாம் எழுதியுள்ள

தீங்கற்ற சேதியினைச் சொல்வோம், கேளும்!

திருமுடியை நீர்கவர, அரசருக்குப்

பாங்கனைப் பொல் உடனிருந்தே மதுப்பழக்கம்

பண்ணி வைத்தீர்! அதிகாரம்அபக ரித்தீர்!

மானத்தைக் காப்பதற்கே ராணி யாரும்

மறைவாக வசிக்கின்றார் அறிந்து கொள்ளும்!

கானகம் நேர் நகர்ப்புறத்தில் ராஜ புத்ரன்

கல்வியின்றி உணவின்றி ஒழுக்கமின்றி

ஊனுருகி ஒழியட்டும் என விடுத்தீர்,

உம் எண்ணம் இருந்தபடி என்னே! என்னே!

ஆனாலும் அப்பிள்ளை சுதர்மன் என்பான்

ஆயகலை வல்லவனாய் விளங்கு கின்றான்.

**வள்ளிநாட்டு மன்னன்** (இடைமறுத்து உரைக்கின்றான்)

சுதர்மனை நாம் கண்ணால் பார்க்க வேண்டும்

சொந்தநாட் டார் எண்ணம் அறிய வேண்டும்

இதம் அதிகம் தெரியாமல் உம்மை நாங்கள்

எள்ளளவும் ஆதரிக்க மாட்டோம் கண்டீர்!

**கொன்றை நாட்டுக் கோமான்** (கோபத்தோடு கூறுகிறான்)

சதிபுரிந்த துண்மையெனில் நண்பரே, நீர்

சகிக்கமுடி யாததுயர் அடைய நேரும்.

**குன்ற நாட்டுக் கொற்றவன்** (இடியென இயம்புவான்)

அதிவிரைவில் நீர்நிரப ராதி என்ப

தத்தனையும் எண்பிக்க வேண்டும் சொன்னோம்!

**சேனாதிபதி** (பயந்து ஈன சுரத்தோடு)

அவ்விதமே யாகட்டும் ஐயன்மீர்! போசனத்தைச்

செவ்வையுற நீர் முடிப்பீர் சென்று.

**காட்சி 8**

(சேனாதிபதி மந்திரியிடம் தனது ஆசாபங்கத்தைத் தெரிவித்து வருந்துவான்.)

**சேனாதிபதி**

வரைமட்டும் ஓங்கி வளர்ந்த என் ஆசை

தரைமட்டும் ஆயினதா? அந்தோ! தனிமையிலே

ராணி விஜயா நடத்தி வைத்த சூழ்ச்சிதனைக்

காண இதயம் கலக்கம் அடைந்திடுதே!

வேந்தன் மகனுக்கு வித்தையெல்லாம் வந்தனவாம்

ஆந்தை அலரும் அடவிசூழ் சிற்றூரில்

போதித்த தார்? இதனைப் போயறிவோம் வா வா வா!

வாதிக்கு தென்றன் மனம்.

**மந்திரி**

பொக்கிஷந் திறந்தஅந்தப் புலனுறு பெரியார் எங்கே?

அக்கிழவர்பால் இந்த அசந்தர்ப்பம் சொல்லிக் காட்டி

இக்கணம் மகுடம்பூண ஏற்றதோர் சூழ்ச்சி கேட்போம்

தக்கநல் லறிஞரின்றித் தரணியும் நடவா தன்றோ!

(கிழவர் காணப்படாத தறிந்து மந்திரி வருந்துவான்)

திருவிலார் இவர்என் றெண்ணித் நீங்கினை எண்ணி அந்தப்

பெரியாரும் நம்மைவிடுப் பிரிந்தனர் போலும் நண்பா

அரிவையர் கூட்டமெல்லாம் அறிவிலாக் கூட்டம் என்பாய்

புரிவரோ விஜயராணி புரிந்த இச் செயல்கள் மற்றோர்!

**சேனாதிபதி**

இன்னலெலாம் நேர்க! இனியஞ்சப் போவதில்லை

மன்னன் மகளைப் பார்ப்போம் வா.

**காட்சி 9**

(கிழவர் சுதர்மனுக்கு வாட்போர் கற்பிக்கிறார். இதனை ஒரு புறமிருந்து சேனாதிபதியும் மந்திரியும் கவனிக்கிறார்கள்.)

தாழ்திறந்த அக்கிழவன் ராச தனயனுக்குப்

பாழ்திறந்து நெஞ்சத்தில் பல்கலையும் சேர்க்கிறான்

வஞ்சக் கிழவனிவன் என்னருமை வாழ்க்கையிலே

நஞ்சைக் கலப்பதற்கு நம்மை அன்று நண்ணினான்

வாளேந்திப் போர் செய்யும் மார்க்கத்தைக் காட்டுகின்றான்

தோளின் துரிதத்தைக் கண்டாயோ என் நண்பா!

**(சேனாதிபதி கோபத்தோடு சுதர்மனை அணுகிக் கூறுவான்)**

ஏடா சுதர்மா! இவன்யார் நரைக் கிழவன்

கேடகமும் கத்தியும் ஏன்? கெட்டொ ழியத் தக்கவனே!

**சுதர்மன்**

என் நாட்டை நான் ஆள ஏற்ற கலையுதவும்

தென்னாட்டுத் தீரர் செழுந்தமிழர் ஆசிரியர்!

**சேனாதிபதி**

உன் நாட்டை நீ ஆள ஒண்ணு மோ சொல்லடா!

**சுதர்மன்**

என் நாட்டை நான் ஆள்வேன்! எள்ளவும் ஐயமில்லை!

**(சேனாதிபதி உடனே தன் வாளையுருவிச் சுதர்மன் மேல் ஓங்கியபடி கூறுவான்.)**

உன்நாடு சாக்காடே ஓடி மறைவாய்! பார்!

மின்னுகின்ற வாள் இதுதான்! வீச்சும் இதுவே!

**(கிழவர் கணத்தில். சேனாபதி ஓங்கிய வாளைத் தமது வாளினால் துண்டித்துக் கூறுவார்.)**

உருவியவாள் எங்கே? உனதுடல்மேல் என்வாள்

வருகுதுபார், மானங்கொள்! இன்றேன் புறங்காட்டு!

(என வாளை லாவகத்தோடு ஓங்கவே சேனாதிபதி தன்னைக் காத்துக்கொள்ள முடியாமலும் சாகத் துணியாமலும் புறங்காட்டி ஒடுகிறான். கிழவரும் சுதர்மனும் சபையை நோக்கி ஓடும் சேனாதிபதியைத் துரத்திக் கொண்டு ஓடி வருகிறார்கள்.)

**காட்சி 10**

(கூடியுள்ள அயல்நாட்டு வேந்தர்களிடம் சேனாதிபதி ஓடி வந்து சேர்ந்தான்.அவனைத் தொடர்ந்து கிழவரும் சுதர்மனும் உருவிய கத்தியுடன் வந்து சேர்கிறார்கள்.)

**வெள்ளிநாட்டு வேந்தன்**

ஆடுகின்ற நெஞ்சம், அழுங்கண்ணு மாகநீ

ஓடிவரக் காரணமென் உற்ற சபை நடுவில்?

சேனாதிபதியே, தெரிவிப்பாய் நன்றாக?

**(சேனாபதி ஒருபுறம் உட்கார்தல்)**

மானைத் துரத்தி வந்த வாளரிபோல் வந்து

குறித்தெடுத்துப் பார்க்கின்றீர், நீவிர்யார்? கூறும் !

**(என்று பெரியவரை நோக்கி கூறிப் பின் அயல் நின்ற சுதர்மனை நோக்கிக் கூறுவான்.)**

பறித்தெடுத்த தாமரைபூம் பார்வையிலே வீரம்

பெருக்கெடுக்க நிற்கின்றாய் பிள்ளையே, நீ யார்?

**கிழவர்**

இருக்கின்ற வேந்தர்களே, என் வார்த்தை கேட்டிடுவீர்!

மன்னர் குடிக்கும் வழக்கத்தைச் செய்து வைத்தும்,

என்னை வசப்படுத்த ஏற்பாடு செய்வித்தும்,

செல்வனையும் தன்னிடத்தே சேர்த்துப் பழிவாங்கக்

கல்வி தராமல் கடுங்காட்டில் சேர்ப்பித்தும்

பட்டாபிஷேகமனப் பால் குடித்தான் காங்கேயன்

தாட் டவாள் துண்டித்தே தோள் திருப்பி இங்கு வந்தான்!

(தான் கட்டியிருந்த பொய்த்தாடி முதலியவைகளைக் களைகிறாள் கிழவராய் நடித்த விஜயதாரணி.)

தாடியும் பொய்! என்றன் தலைப்பாகையும் பொய்யே!

சூடியுள்ள அங்கியும் பொய்! கொண்ட முதுமையும் பொய்!

நான் விஜயதாரணி! நகைக்க புவியினிலே

ஊனெடுத்த காங்கேயன் ஒன்றும் உணர்கிலான்!

கோழியும்தன் குஞ்சுதனைக் கொல்லவரும் வான்பருந்தைச்

சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவியில், ஆடவரைப்

பெற்றெடுத்த தாய்குலத்தைப் பெண்குலத்தைத் துஷ்டருக்குப்

புற்றெடுத்த நச்சரவைப் புல்லெனவே எண்ணி விட்டான்!

**வெள்ளி நாட்டரசன்** (ஆச்சரியத்தோடு கூறுவான்)

நீரன்றோ அன்னையார்! நீரன்றோ வீரியார்!

ஆர்எதிர்ப்பார் அன்னையார் அன்பு வெறிதன்னை!

**வள்ளிநாட்டு மகிபன்**

ஆவி சுமந்துபெற்ற அன்பன் உயிர் காப்பதற்கோ

இந்த தாயினெதிர், கொல்படைதான் என் செய்யும்?

**கொன்றை நாட்டுக் கோமான்**

அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்

என்னும்படி அமைந்தீர்! இப்படியே பெண்ணுலகம்
ஆகும்நாள் எந்நாளோ? எந்நாளே துன்பமெலாம்
போகும் நாள், இன்பப் புதியநாள் என்றுரைப்பேன்!
அன்னை யெனும் தத்துவத்தை அம்புவிக்குக் காட்டவந்த
மின்னே, விளக்கே, விரிநிலவே வாழ்த்துகின்றேன்!

**குன்றநாட்டுக் கொற்றவன்**

உங்கள் விருப்பம் உரைப்பீர்கள் இவ்விளைய
சிங்கத்திற் கின்றே திருமகுடம் சூட்டிடலாம்!
தீங்குபுரிந்த, சிறுசெயல்கள் மேற்கொண்ட
காங்கே யனுக்குக் கடுந்தண் டனையிடலாம்.!

**ராணி**

கண்மணியே! உன்றன் கருத்தென்ன நீயேசொல்!
எண்ணம் உரைக்கின்றேன்! என் உதவி வேந்தர்களே!
இந்தமணிபுரிதான் இங்குள்ள மக்களுக்குச்
சொந்த உடைமை! சுதந்தரர்கள் எல்லாரும்!
ஆதலினால் இந்த அழகு மணிபுரியை
ஓதும் குடியரசுக் குட்படுத்த வேண்டுகிறேன்!
அக்கிரமம் சூழ்ச்சி அதிகாரப் பேராசை
கொக்கரிக்கக் கண்ட குடிகள் இதயந்தான்
மானம் உணர்ந்து வளர்ந்து எழுச்சியுற்றுக்
கானப் புலிபோல் கடும்பகைவர் மேற்பாயும்!

ஆதலினால் காங்கேயன் அக்கரமும் நன்றென் பேன்.

தீதொன்றும் செய்யாதீர் சேனா பதி தனக்கே!

**மன்னர்கள்**

அவ்வாறே ஆகட்டும் அப்பனே ஒப்பில்லாய்!

செவ்வனே அன்புத் திருநாடு வாழியவே!

சேய்த்தன்மை காட்டவந்த செம்மால்! செழியன்புத்

தாய்த்தன்மை தந்த தமிழரசி வாழியவே!

**சுதர்மன்**

எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமைஎலாம்

எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே

எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக!

எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!

வல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடமை

வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக,

வில்லார்க்கும் நல்ல நுதல்மாதர் எல்லார்க்கும்

விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே!

# காமராசர் தாலாட்டு

## கவிஞர் கண்ணதாசன்

'கவியரசு' பட்டம் பெற்ற கண்ணதாசன் இயற்பெயர் முத்தையா. பிறந்த ஊர் சிறுகூடல்பட்டி. சண்டமாருதம், தென்றல், கண்ணதாசன், முல்லை போன்ற பல இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவருக்கு வணங்காமுடி, பார்வதிநாதன் என்ற புனைப்பெயர்களும் உண்டு. இவர் பெற்ற அனுபவங்களே கவிதைகளாக மலர்ந்தன. எனவேதான் இவர்தம் கவிதையில் அனுபவமே கடவுள் என்கிறார். திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பெரியாரின் சீடராய், அண்ணாவின் தொண்டராய்ப் பகுத்தறிவு பேசியதும் உண்டு, அதற்குமாறாய்ப் பக்திப் பழமாகி அர்த்தமுள்ள இந்து மதம் கண்டு, பஜகோவிந்தம் எழுதி மகிழ்ந்ததும் உண்டு. சமயப் பொறைக்கு எடுத்துக்காட்டாய் ஏசுகாவியம் பாடி உயர்ந்ததும் உண்டு.

இவரைக் குழந்தை மனம் கொண்ட கவிஞர் என்பர். தத்துவப் பாடல்களையும் புரியும்படி எளிமையாக எழுதும் ஆற்றல் மிக்கவர். சொற்சிலம்பம் கவிதைகளில் மிகுதி. தேன், தேன் என்று வரும் வகையிலும், காய், காய் என்று வரும் வகையிலும் இவர் பாடிய பாடல்கள் மறக்க முடியாதனவாகும்.

"வீடுவரை உறவு, வீதிவரை மனைவி" எனும் சாதாரண வாசகங்கள் இவர் எழுத்தில் தத்துவமாய் மிளிர்கின்றன. பிறப்பையும் இறப்பையும் வரவாகவும் செலவாகவும் பாடுகின்றார். காதல் பாடல்கள் இவருக்குக் கைவந்த கலையாய் இருந்தன. வார்த்தை ஜாலமின்றி எளிமையோடு சந்த நயத்தோடு அமையும் கண்ணதாசன் பாடல்கள் படித்தவுடன் மனத்தில் பதிந்து விடும் தன்மையன.

1948இல் திரையுலகில் நுழைந்த கண்ணதாசன் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் திரைப்படப் பாடல்கள் எழுதிச் சாதனை புரிந்தார். தமிழக அரசின் ஆஸ்தானக் கவிஞராக இருந்தவர். சேரமான் காதலி இவருக்கு சாகித்திய அகாதமி விருதைப் பெற்றுக் கொடுத்தது. இவரது உரைநடையும் கவிதை போல் அழகு தரும். ஆட்டனத்தி ஆதி மந்தி, தைப்பாவை, மாங்கனி, இயேசு காவியம் போன்ற தனி நூல்களும் பாடியுள்ளார். கண்ணதாசன் கவிதைகள் எனப் பல தொகுதிகளும் வெளிவந்துள்ளன. இவரது அர்த்தமுள்ள இந்துமதம் பல தொகுதிகள் மட்டுமின்றிப்

பலபதிப்புகளையும் கடந்தது. 1981இல் இவர் இயற்கை எய்தினாலும் இவர் படைத்த கவிதைகள் இறவா வரம் பெற்றவை.

தன்னை ஈன்றெடுத்த பெற்றோர்களுக்கு அடுத்த படியாக, படைத்த கடவுளுக்கு அடுத்த படியாக, கண்ணதாசன் போற்றி வணங்கியது காமராசரைத்தான்.

முரட்டு பக்தி என்று செல்லுவார்களே. அது காமராசர் மேல் கண்ணதாசன் வைத்திருந்த பாசம்தான் அது. தன்னலமற்ற சேவையினாலும், தன்னை வருத்திக் கொண்டு செய்த தியாகத்தினாலும், வாழ்க்கையில் கடைப் பிடித்த நேர்மையினாலும், ஆட்சிப் பணியில் அமர்ந்திருந்த போது ஆற்றிய சாதனைகளாலும், இயல்பு நிறைந்த எளிமையினாலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு மாபெரும் தலைவராக திகழ்ந்தவர் தான் காமராசர்.

எனவே தான் கண்ணதாசன், தனது சிம்மாசனத்தில் எவருக்கும் அளிக்காத இடத்தைக் கொடுத்து அவரை அமர்த்திக் கொண்டார். தமிழகத்தில் உள்ள அனைத்து தலைவர்களையும் அறிந்தவர் தான் கண்ணதாசன். ஒவ்வொரு வகையிலே ஒவ்வொரு தலைவரும் சிறப்பானவர்கள். ஆனால் எல்லா வகையிலும் சிறப்பானவர் காமராசரே என்பது கண்ணதாசனுடைய கருத்து. அதனால் தான் உளப்பூர்வமாக தான் நேசித்த அந்த மாபெரும் தலைவரைக்கு தாலாட்டுப் பாடி கொண்டாடி மகிழ்ந்தார்.

“குணத்திலே குழந்தை, கோபத்திலே தந்தை

அணைப்பதிலே அன்னை,

அன்புக்கோர் தெய்வம்“

ஆகவே அவரை வழிபாடுவது, ஆயிரம் தெய்வங்களை வழிபடுவதற்குச் சமமாகும் என்று காமராசரைப் பற்றி எழுதுகிறார் கண்ணதாசன். நினைத்த மாத்திரத்திலே, எழுதுகோல் எடுத்து எதையும் எழுதிவிடுகிற ஆற்றல் நிறைந்தவர் கண்ணதாசன் என்பது எல்லோரும் அறிந்ததே. அப்படிப்பட்ட திறமைக்கும், புலமைக்கும் சொந்தக்காரரான கண்ணதாசன் தான் ஏற்றுக் கொண்ட மாபெரும் தலைவரான காமராசருக்கு.. எந்தத் தலைவருக்கும் இப்படி எழுதியதில்லை என்று சொல்லும் அளவுக்கு, நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதிக் குவித்திருக்கிறார். அவற்றுள் தாலாட்டாக எழுதிய ஒரு கவிதையே நமக்கு பாடப்பகுதியாக அமைந்தள்ளது. தாலாட்டு என்றால் சாதாரணத் தாலாட்டில்லை. தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்த தாலாட்டு இது. மேடைகளில் இந்த

தாலாட்டினைப் பாடகர்கள் பாடும் பொழுது காமராசரை நினைத்து பலர் அழுது கண்ணீர் சிந்தியிருக்கிறார்கள்.

“தங்கமணி மாளிகையில்
தனிவயிரப் பந்தலிட்டு
மங்கையர்கள் சுற்றி வந்து
மங்கலமாய்க் கோலமிட்டு
திருநாள் அலங்காரச்
சிலைபோல் அலங்கரித்து
வாழ்த்தொலிக்கப் பெற்றெடுக்கும்
மகனாக வந்ததில்லை....
வண்ணமலர்த் தொட்டிலிலே

வடிவம் அசைந்ததில்லை.
மாமதுரை நாட்டில்
மறவர் படைநடுவில்
தேமதுரத் தமிழ்பாடும்
திருநாடார்தம் குலத்தில்
வாழையடி வாழையென
வந்த தமிழ் பெருமரபில்
ஏழைமகன் ஏழையென
இன்னமுதே நீ பிறந்தாய்...
நிமிர்ந்தால் தலை இடிக்கும்
நிற்பதற்கே இடமிருக்கும்.
அமைவான ஓர் குடிலில்
ஐயா நீ வந்து தித்தாய்...

கொட்டிலிலே தோன்றிக்
குவலயத்தில் பேரேடுத்து
இட்டமுடன் சேர்ந்தார்க்கு
இறைவனாய்த் தோற்றமுற்ற

ஏசுபிரான் மேற்றிசையில்
இளையபிரான் கீழ்த்திசையில்!
சத்தியமே தெய்வம்,
சமத்துவமே வாழ்க்கையென
இத்திசையில் ஒருநாள்
இளவரசாய் வந்துதித்த
புத்தபிரான் நேபாளம்
புனிதபிரான் விருதுநகர்!

என்று பலவாறாய்
ஏத்தி உனைப் பாடுகிறார்!
பாடுகிற பாட்டையெலாம்
பரிசாய் நினைக்காதே!
கூடுகிற கூட்டமெல்லாம்
குறைகூறும் மற்றொருநாள்!
மாலையிடும் மக்கள்
மண்ணெடுக்க அச்சமுறார்!
வாழ்த்துரைக்கும் கூட்டம்
வசைபொழிய மறவாது!

நந்தமிழர் வீரம்
நாகரிகம் என்பதெலாம்
சந்தையிலே கூடும்
சரக்காகப் போனதய்யா!
அண்ணனென்றும் தம்பியென்றும்
அன்பனென்றும் தோழனென்றும்
கண்ணீரைக் காட்டிக்
கலங்கவைப்பார் நாள்முழுதும்!
உள்ளே கிடப்பதவர்
உள்ளமன்றி யாரறிவார்!"

என்று பெருந்தலைவர் பிறந்த சூழலையும், வளர்ந்த சூழலையும் அழகாக படம் பிடித்து காட்டுகிறார் கண்ணதாசன். பெரும்பாலும் மாபெரும் தலைவர்களின் பிறப்பும், வளர்ப்பும் இப்படித்தான் ஏழ்மை நிலையில் இருந்திருக்கிறது.

அன்னை சிவகாமியும், தந்தையார் குமார சாமியும் வாயார ராஜா என்று அழைத்து மகிழ்ந்தார்களே தவிர வேறு எந்த செல்வமும் அவர்கள் வீட்டிலே இல்லை. நடுத்தர மக்கள் வீட்டிலே இருக்கும் தொட்டில் கூட இல்லை. தூளியிலேதான் (சேலை துணியிலே) தொட்டில் கட்டி காமராசரை தூங்க வைத்தார்கள். தொன்று தொட்டு வந்த தமிழ்மரபில் ஏழைக்கும் ஏழையாக பிறந்தாயே தலைவா... நிமிர்ந்தால் தலையிடிக்கும் நிற்பதற்கே இடமிருக்கும் என்று சொல்லும் அளவுக்கு அப்படி ஒரு எளிமையான சூழல்தானே நீ பிறந்த இந்த இல்லம் ஐயா என்று உருகி உருகி பாடுகிறார் கண்ணதாசன்.

செல்வந்தர் வீட்டு பிள்ளை என்றால் தூக்கி கொஞ்சி குலவுவதற்கு ஆயிரம் பேர் வருவார்கள். ஆனால் நீ ஏழைக்கும், ஏழை வீட்டு குழந்தை தானே ஐயா... பிறந்து விட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் வளர்ந்த பருவத்தில் துணை ஒன்று அமையுமே. அதையும் மறந்து விட்டாயே ஐயா... தமிழகத்தை அரசாளுகிற பொறுப்பு உனக்கு வந்த போதும் தூய மணி மாளிகைகள் இருக்கட்டும்... ஒரு தோட்டம் கூட உனக்கில்லையே ஐயா. அது மட்டுமா ஆண்டி கையில் ஓடிருக்கும். அது கூட உனக்கில்லையே என்று கண்ணீரில் நனைந்து உருகி கரைகிறார் கண்ணதாசன்.

”தங்கமே... தென்பொதிகை
சாரலே தண்ணிலவே
சீராட்டும் தாய் தவிர
சிங்கமே என்றழைத்து
சொந்தமென்று ஏதுமில்லை.
துணையாருக்கு மங்கையில்லை
ஆண்டி கையில் ஓடிருக்கும்
அதுவும் உனக்கில்லையே”

என்ற அந்த பாட்டை படிக்கும் போது தான் அழுதது மட்டுமல்ல, இந்த தமிழகத்தையே அழ வைத்து விட்டார் கண்ணதாசன்.

நாட்டுக்காகப் பாடுபட வந்த வீரர்கள் பலர் தங்கள் வீட்டுக்காகவே பாடுபட்டனர். ஆனால் அரசாங்கப் பணிகள் மட்டுமே செய்யவென்று இந்நாட்டில் வந்து உதித்தவர் காமராசர் என்பதனை,

“நாட்டுக்குப் பாடுபட
நாடிவந்த வீரர்பலர்
வீட்டுக்கே பாடுபட்டார்
வீணுக்கே கோஷமிட்டார்
அந்திபகல் நாடு,
அரசாங்கம் பொதுப்பணிகள்
என்றுலவ நீயும்
இந்நாட்டில் வந்துதித்தாய்!

ஆளழகு பார்ப்பார்
ஐயா, உனைமதியார்!
தோளழகு பார்ப்பார்
சுவையே, உனைமதியார்!
பொன்னழகு பார்ப்பார்
பூவே, உனைமதியார்!
மண்ணளந்து ஆளப்பார்
மகனே, உனைமதியார்!”

என்று கூறி அந்த கவிதையை நிறைவு செய்கிறார் கண்ணதாசன்.

குடும்ப சூழ்நிலை காரணமாக ஆறாம் வகுப்புக்கு மேல் காமராசரால் படிக்க இயலவில்லை. அப்படிப்பட்ட ஒரு மனிதன் பின்னாளில் உலகமே போற்றுகிற மாமனிதராக, பெருந்தலைவராக உருவான வரலாற்றினை,

“கல்விக் கடலுமில்லை
களஞ்சியமும் இல்லைஜயா!
கல்லானே யானாலும்
கற்றவரை மற்றவரைக்
கல்லாக்கி வைத்துவிடும்
கல்விமிகக் கற்றுவிட்டாய்!

மேடையிலே பேசவரும்
வீறுமிக்க பேச்சாளர்
கூடவரும் கூட்டத்தில்
குதித்துவிளை யாடுபவர்
ஓட்டுவரும் பாதையினை
உன்னிடத்தே கற்றார்காண்!

ஊமைபோல் நீ பறந்து
ஓட்டுகளை வாங்குகிறாய்
எல்லாம் சரிதான் என்
இன்னமுதே! செந்தமிழர்
தொல்லைப் படுகின்றார்,
தொலைவழியில்! மறவாதே!

தங்கச் சமுதாயம்
தழைக்கவைக்க வேணுமையா!
தாயகத்தில் எல்லார்க்கும்
தங்க இடம் வேணுமையா!
பொங்கிவரும் பால்போல்
பூத்துவரும் வெண்மலர்போல்
திங்கள் போல் எந்தமிழர்
சீராக வேண்டுமையா!"

என்று எடுத்துரைக்கிறார் கண்ணதாசன். காமராசர் தான் தமிழகத்தை ஆட்சி செய்த காலத்தில் செய்த பணிகளை, அதனால் தமிழகம் தழைத்த நிலையை எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் மறக்கவோ, மறைக்கவோ இயலாது.

"இன்று தமிழுலகம்
இன்னமுதே உன்பணியை
என்றும் தமிழுயர
எதிர்பார்த்து நிற்குதையா!
'இந்தியன்' என்பதனை
இரண்டாவதாக வைத்துச்
'செந்தமிழன்' என்பதனைத்
தீரனே! ஏலாயோ!

நாளை விடியும்
நமதுலகில் நமதுமக்கள்
வாழைபோல் வாழஒரு
வழிவகுக்க மாட்டாயோ?
ஆளுகின்ற கட்சிக்கு
அரசனிவன் என்னாமல்
வாழுகின்ற செந்தமிழர்
மன்னனென மாறாயோ!

எந்நாளும் மக்கள்
இயல்பை அறிந்தவனே!
பொன்னாடாய்த் தாய்த்தமிழைப்
பூக்கவைக்க மாட்டாயோ!
தமிழே தமிழுலகில்
தழைத்துவர வேண்டுமென்று
அமிழ்தேநீ பாடுபட்டால்
அன்னைகுலம் வாழாதோ!”

தேசத்திற்கு உழைக்க வேண்டுமென்று முடிவெடுத்து விட்டால் உறவு, பாசம், நட்பு, குடும்பம் அனைத்தையும் தூக்கி தூரப்போட வேண்டியதுதான். ஆன்மீகத்தில் அதிகமான ஈடுபாடு கொண்டவர்களுக்குத்தான் இந்த துறவு மனப்பான்மை தோன்றும். ஆனால் முழுக்க முழுக்க அரசியலில் இருந்து கொண்டு, கையிலே அதிகாரமிருந்தும் அந்த மாய மலைக்குள் சிக்காத மாமனிதன்தான் காமராசர். இத்தகைய மாமனிதன் பாடுபட்டதால்தான் மங்கையர் குலமே சுய விடுதலையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு பெருந்தலைவரின் புகழினைப் பாட தமிழ்மொழியில் இனி சொற்களே இல்லை என சொல்லும் அளவிற்கு ஒவ்வொரு வரிக்குள்ளும் ஓராயிரம் அர்த்தங்களை உள்ளடக்கி வைத்து, அவருக்கு தாலாட்டு பாடி தான்னும் புளங்காகிதம் அடைந்து நம்மையும் பூரிக்க வைக்கிறார் கண்ணதாசன்.

# அலகு 2

## புதுக்கவிதை

### எங்கள் திருநெல்வேலி

**- கவிஞர் தொ.மு.சிதம்பர ரகுநாதன்**

திருநெல்வேலியில் 1923 ஆம் ஆண்டு பிறந்தவர் தொ.மு.சிதம்பர ரகுநாதன். இவருக்கு திருச்சிற்றம்பலக் கவிராயர் என்ற புனைப்பெயரும் உண்டு. இவருடைய படைப்புகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், ரஷ்யாவிலும் வெளியிடப்பட்டுள்ளன. 1965-ல் சோவியத் நாட்டின் நேரு நினைவு இலக்கிய பரிசைப் பெற்றவர். சாகித்திய அகாதமி விருது பெற்றவர். பல நூற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். தமிழ் எழுத்தாளர் சங்கத் துணைச் செயலராகவும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவராகவும் செயல்பட்டவர். இலக்கியம், ஆராய்ச்சி போன்ற துறைகளில் ஆழமாக கால் பதித்தவர். ரகுநாதன் கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், காவியப்பரிசு போன்றன இவரது கவிதை நூல்களாகும். தொ.மு.சி-யின் காவியப்பரிசு கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள எங்கள் திருநெல்வேலி எனும் கவிதை ஆனந்தவிகடன் வெளியிட்ட நெல்லை மாவட்டச் சிறப்பு மலருக்காக எழுதப்பட்டு அம்மலரில் வெளிவந்தது.

“சொல்வேலி தனையெழுப்பி சுளுவாகப் பாட்டெழுதப்
பல்வேறு பொருளுண்டு பார்போற்றும் எங்கள் திரு
நெல்வேலிச் சீமையிதன் நீடுபுகழ் பாடுதற்குச்
சொல்லேது சொன்னாலும் சொல்லுக்கு முடிவேது?

பெருமைமிகு தமிழ்க்கன்னி பிறந்ததுவும் தமிழ் வளர்த்த
குறுமுனிவன் வாழ்ந்ததுவும் எம் பொதிகைக் குன்றிலன்றோ? தென்பொதிகை
தனிற்பிறந்த தீந்தமிழோ னுடன்பிறந்த
பொன்பொதிந்த புனல் பெருகும் பொருநையெனும் கருணைமகள்

வருகையினால் பூமியெல்லாம் வளங்கொழித்துப் பொன்விளைக்கும்
திருநெல்லைச் சீமையிதன் சிறப்பெல்லாம் ஓர்சிலவோ?

நெல்லுக்கு வேலிகட்டி
நெல்வேலி நாதரெனும் சொல்லுக்கு இலக்கானார்
சிவனென்று சொலப்படுமோர்
நல்லசிறு கதையினையும் நாடறியும் என்றாலும்
நெல்வயல்கள் வேலியென நெருக்கமுறச் சூழ்ந்திருக்கும்
நல்விதத்தால் நெல்வேலி என்றுதமிழ் நாடனைத்தும்
சொல் விதத்தைப் பெற்றதெனச் சொன்னாலும் பொருந்தாதோ?
சிந்துபூந் துறையுறையும் செல்வரென்று, சம்பந்தர்
எந்தமரை வாழ்த்தியசொல் இன்றைக்கும் பொருந்தாதோ?"

சொல்லால் வேலி எழுப்பி எளிமையாக பாட்டெழுத பல்வேறு பொருளுண்டு. உலகமே போற்றும் திருநெல்வேலியின் நீண்ட புகழைப் பாடுவதற்கு சொல்லைப் பயன்படுத்தினாலும் அந்த சொல்லுக்கு முடிவே இராது. பெருமைமிக்க கன்னித்தமிழ் பிறந்ததுவும், தமிழ் வளர்த்த அகத்திய முனிவன் வாழ்ந்ததுவும் திருநெல்வேலியிலுள்ள பொதிகை மலையில் தான். அந்த பொதிகை மலையில் தமிழுடன் பிறந்த தாமிரபரணியின் வருகையினால் செல்வவளம் கொழிக்கும் திருநெல்வேலி சீமையின் சிறப்புகள் பலவாகும். வேதபட்டர் காயவைத்த நெல், மழை நீரில் நனைந்துவிடாபடி நீராலே வேலி கட்டியதால் நெல்வேலி நாதரென்று அழைக்கப்படுவா் சிவபெருமான். எனினும் நெல்வயல்கள் வேலி போன்று நெருக்கமாக சூழ்ந்திருப்பதால் நெல்வேலி என்று தமிழ்நாட்டில் அழைக்கப்படுவதும் பொருத்தமானதே. அவ்வாறே சிந்துபூந்துறையில் வீற்றிருக்கும் செல்வெரென்று திருஞானசம்பந்தா் சிவனை போற்றியதும் பொருத்தமானதேயாகும் என்று திருநெல்வேலியின் பெருமையினை கவிதை வாயிலாக சிறப்புறக் காட்சிப்படுத்துகிறாா் கவிஞா் தொ.மு.சி ரகுநாதன்.

# கம்பநாடனுக்கு ஒரு கடிதம்

## - கவிஞர் வாலி

கவிஞர் வாலி 39 அக்டோபர் 1931 -ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறையில் பிறந்தார். இவரின் இயற்பெயர் டி.எஸ்.ரங்கராஜன் ஆகும். ஓவியர் மாலி போல இவர் பெயரெடுக்க வேண்டும் என்று பள்ளித்தோழன் பாபு 'வாலி' என்ற பெயரைச் சூட்டினார். இவர் ஒரு தலைசிறந்த தமிழ்க் கவிஞரும், தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். சிறுகதை, கவிதை, உரைநடை என இருபதுக்கும் மேற்பட்ட நூற்களை எழுதியுள்ளார். அவற்றுள் அம்மா, பொய்க்கால் குதிரைகள், நிஜ கோவிந்தம், பாண்டவர் பூமி, மற்றும் அவதார புருஷன் ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும். மேலும் 500-க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு திரையிசைப் பாடல்களை எழுதியுள்ளார். பத்மஸ்ரீ விருது பெற்ற கவிஞர். ஐந்து முறை சிறந்த திரைப்பட பாடலாசிரியருக்கான மாநில அரசின் விருதினைப் பெற்ற புகழுக்குரியவர். தமிழ் போற்றும் நல்லுலகிற்கு அவர் அருளிய அருமையான நூலாகிய 'அவதார புருஷன்' இராமாயணத்தை புதுக்கவிதை வடிவில் முன்னிறுத்துகிறது. இந்தச் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'கம்பநாடனுக்கு ஒரு கடிதம்' எனும் கவிதை பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

"கம்பனே!
கல்வியில் பெரியவனே!
பாரிஜாத பூவிற்கு - ஒரு
காகிதப் பூவின் கைகூப்பு
அய்யனே!
அங்கே நீ நலமா?
கொடையப்பர் எனப்படும்
சடையப்பர் நலமா?
சட்டையில்லா அப்பர்
கணேசர் நலமா?
மூவாத் தமிழில் -உன்
மேன்மையை முழங்கிய
ஜீவா நலமா?

பேசி பேசி- உன்
பெருமை வளர்த்த
பி ஸ்ரீ நலமா?
கந்தனைப் பாடாமல்
கம்பனைப் பாடிய

அரும்புலவர் புதுவை
அருணகிரி நலமா?

கடை விரித்த உன் பாட்டில்
இடைச்செருகல் இல்லையென்று
எடை போட்டு அவை நுழையத்
தடை போட்ட டி கே சி நலமா ?

அனைவர்க்கும் -என்
அன்பு வணக்கங்கள்
கவிச்சக்கரவர்த்தியே! -நீ
மரபில் பாடியதை- நான்
புதிதில் பாடுகிறேன்

நீச்சல் தெரியாமல்
நீரில் இறங்கி விட்டேன்....
கூச்சல் போடுவேன்
காப்பாற்று!

நாட்டரசன் கோட்டையில்
நீள்துயில் கொண்ட
பாட்டரசே!
எழுந்து வா!
என்னுள் புகுந்து எழுது;
இறைஞ்சுகிறேன் தொழுது

விதைப்பது என் வேலை
விளைவிப்பது உன் மூளை!
வணக்கமுடன்..
வாலி”

கல்வியில் பெரியவராகிய கம்பரே! பாரிஜாத பூவாகிய உமக்கு இந்த காகிதப் பூவின் வணக்கங்கள். தாங்கள் நலமா? உம்மை ஆதரித்த சடையப்பரும், மூவாத் தமிழில் உமது மேன்மையை முழங்கிய ஜீவாவும், பேசி பேசியே உம் பெருமையை வளர்த்த பி.ஸ்ரீயும், உமது புகழ் பாடிய அருணகிரியாரும், உன்பாட்டில் இடைக்செருகல் இல்லையென்று சொல்லி, அதற்கு தடைபோட்ட டி.கே.சியும் நலமாக இருக்கிறார்களா? கவிக்கு அரசனே! நீ மரபுக் கவிதையாக பாடியதை நான் புதுக்கவிதையாக பாடுகிறேன். ஆனால் நீச்சல் தெரியாதவன் தண்ணீரில் இறங்கி தத்தளிப்பதைப் போல நானும் கூச்சலிடுகிறேன். நாட்டரசன் கோட்டையில் ஆழ்ந்த உறக்கம் கொண்டுள்ள பாட்டரசனே! எழுந்து வந்து என்னுள் புகுந்து நான் கவி பாடுவதற்கான ஆற்றலை தருவாயாக என்று இராமகாவியத்தை புதுக்கவிதையாக எழுத எண்ணிய கவிஞர் வாலி அவர்கள் அதற்கான வரம் வேண்டி, கம்பநாடனுக்கு வேண்டுகை கடிதம் ஒன்றை கவிதையாகவே வடிக்கிறார்.

## துருதுருத்த கவலைகளில்

**- மு.மேத்தா**

புதுக்கவிதையை இளைஞர் மத்தியில் கொண்டு சென்றோரில் குறிப்பிடத்தக்கவர் மு.மேத்தா இவர் 5 செப்டம்பர் 1945 ஆம் ஆண்டு பெரியகுளத்தில் பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். புதுக்கவிதைக்கு ஏற்றம் தந்த கவிஞர்களுள் இவரும் ஒருவராவார். உவமை, உருவகங்களில் பழமையையும், புதுமையையும் இணைத்த மு.மேத்தா வளமான கற்பனை, எளியநடை, எளிய சொல்லாட்சி மனித உணர்வுகளின் படப்பிடிப்புகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர். இவரது முதல் கவிதைத் தொகுப்பு கண்ணீர் பூக்கள். காதல் சோகமும், தமிழ்த்தாகமும் இழையோடும் அவரது கவிதைகள் அவ்வப்போது கூர்மையான சமூக விமர்சனங்களிலும் இறங்குவதுண்டு. ‘தேசப் பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி’ என்ற கவிதை மு.மேத்தாவுக்கு புகழ் தேடித் தந்த கவிதை ஆகும். ‘ஊர்வலம்’

என்னும் கவிதை நூல் தமிழக அரசின் முதல் பரிசினைப் பெற்ற நூலாகும். 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' என்ற கவிதை நூலுக்கு 2006 – ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது பெற்றவர். இவரது இதயத்தில் நாற்காலி கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'துருதுருத்த கவலைகளில்' என்னும் கவிதை பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

"துருதுருத்த கவலைகளில்
தூக்கமில்லா இரவுகளில்
தவிதவித்த தந்தையே!
நான் தாலாட்டுப் பாடட்டுமா?

சற்று நீ கண்மூடி
சாய்ந்து இருப்பாய்
தலையணையில்
உன்னைத்
தட்டிக் கொடுப்பதற்கு
நான் சந்திரனை அனுப்புகிறேன்.

உன் கண்ணை மூடி நீ
ஓய்வெடுப்பாய் சிறு நேரம் -நீ
தூங்கி விழித்தவுடன்
நான் சூரியனை அனுப்புகிறேன்!

வாழ்க்கை உனக்குச் செய்த
வஞ்சகத்தை நீ மறந்து
சிறுபொழுது கண்ணயர்வாய்
நான் தென்றலை அனுப்புகிறேன்.

விடிந்தால் என் வாழ்வில்
வெளிச்சம் வரும்! வந்தவுடன்
அடைந்த வெளிச்சத்தை
நான் அப்படியே அனுப்புகிறேன்!"

நம்மை கருவில் சுமப்பவள் தாயாக இருந்தாலும், மார்பிலும் தோளிலும் சுமந்து நம் முன்னேற்றத்தில் ஏணியாக நின்று வழிகாட்டுபவர் தந்தையே. அந்த தந்தைக்கான தாலாட்டு தான் இக்கவிதை.

மனதை வாட்டும் கவலைகளினால் இரவு நேரங்களில் தூக்கமில்லாமல் பரிதவிக்கும் தந்தையே! நான் தாலாட்டு பாடுகிறேன், நிம்மதியாக உறங்குங்கள். தலையணையில் சற்று நேரம் கண்முடி சாய்ந்திருங்கள். உங்களை தட்டிக் கொடுப்பதற்கு நான் சந்திரனை அனுப்பி விடுகிறேன். சிறிது நேரம் கண்மூடி ஓய்வெடுங்கள் உறக்கம் கலைந்து உங்கள் சோர்வெல்லாம் நீங்கிய பின் விடியலுக்காக சூரியனை அனுப்புகிறேன். வாழ்க்கை உமக்கு செய்த வஞ்சகத்தை எண்ணி கவலை கொள்ளாமல் அதை மறந்து சிறுபொழுது கண்ணயர்வாய், உமக்காக தென்றலை அனுப்புகிறேன். நாளை பொழுது விடிந்தால் என் வாழ்விலும் விடியல் தோன்றி வெளிச்சம் வரும் என்று நம்புகிறேன். வெளிச்சம் வந்ததும் அதனை அப்படியே உம்மிடமே அனுப்புகிறேன். உம் வாழ்வும் விடியலை நோக்கியதாய் அமையட்டும் என்று உழைத்து தேய்ந்த தன் தந்தைக்கு தாலாட்டு பாடுகிறார் கவிஞர் மேத்தா.

## சுயவிடுதலை

### - கவிஞர் வைரமுத்து

வைரமுத்து தமிழகத்தின் புகழ்பெற்ற கவிஞரும், திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். வைகறை மேகங்கள் என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம் அறிமுகமான இவர் இருபதுக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இன்னொரு தேசிய கீதம், தமிழுக்கு நிறமுண்டு ஆகியன சிறந்த தொகுதிகளாகும். திரைப்படத்துறையில் கண்ணதாசனுக்கு அடுத்து சிறந்த புகழை ஈட்டி வருபவர். திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், என் பழைய பனை ஓலைகள், தண்ணீர் தேசம், இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சிக் காவியம் போன்றன இவரது படைப்புகள். சமூக உணர்வும், பொதுவுடைமைச் சிந்தனையும், அழகியலும் இவரது கவிதையின் இயல்புகள். ஆழந்த பொருள் கொண்ட கவிதைகள் பல இவருக்கு தேசிய, மாநில அளவிலான விருதுகளைப் பெற்று தந்துள்ளன. ‘கவிப்பேரரசு’ என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்.

புதுக்கவிதைக்கு வித்திட்ட பாரதிக்குப் புதுக் கவிதையாலேயே அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற எண்ணிய கவிஞர், பாரதியாரின் வாழ்க்கையைக் ‘கவிராசன் கதை’ என வசனக்கவிதையாக்கியுள்ளார். நெல்லை இந்துக்கல்லூரியில் படித்த போது இருந்த பாரதியின் வாழ்வியல் நிலையை ‘சுய விடுதலை’ என்னும் தலைப்பில் கவிதையாக வடித்துள்ளார் கவிஞர் வைரமுத்து.

“பார்த்ததுண்டா?
பட்டம் வாங்கிய பின்
பள்ளிக்குப் போனவனை

பாரதி போனான்
ஆனால் எதை வாசித்தான்?

நெல்லை இந்துக்கல்லூரியின்
ஜன்னல் வழியே
வானத்தை அல்லவா
வாசித்துக் கொண்டிருந்தான்?

அந்தக் காலம்
அந்த இளைய தீபத்திற்கு
இருண்ட காலம்!

ரத்தம் கசியும்
பூவைப் போலவும்
சிறகு எரியும்
பறவை போலவும்
பள்ளிச் சிறையில்
பாரதி கருகினான்

எப்படி அது சாத்தியமாகும் ?
சத்தியமாய் அது
சாத்தியமில்லை.

அக்னி குஞ்சு
வைக்கோற் கூட்டுக்குள்
வாழ முடியுமா?

அந்தச் சுவர்களுக்குள்
வானம் அடங்கி
வசிக்க முடியுமா?

பூமியின் அழுத்தத்தில்
நிலக்கரி வைரமாய்
நிறமெடுக்குமே....
அப்படித்தான்

அவஸ்தைகளின்
அழுத்தத்தில்
ஒரு கண்ணீரத் துளி
முத்தாய் முதிர்ந்தது

சுய விடுதலை பெறும்
எத்தனிப்பின் தத்தளிப்பு
பிஞ்சிலேயே அவனைப்
பீடித்து விட்டுது

கல்வியோடு ஒரு
கட்டாயக் கல்யாணம்
கவிதா தேவியோடு
கந்தர்வ கல்யாணம்

இருந்தும்......
பாரதிக்கு நடந்ததொரு
பால்ய கல்யாணம்!"

பட்டம் வாங்கிய பின் பள்ளிக்குப் படிக்கச் சென்றவனை யாரேனும் பார்த்திருக்கிறீர்களா? ஆனால் 'பாரதி' என்ற பட்டம் பெற்ற பின்னும் பள்ளிக்குச் சென்றான் பாரதி. அப்படி சென்றவன் நெல்லை இந்துக் கல்லூரியின் சன்னல் வழியே பரந்து விரிந்த வானத்தை தான் வாசித்துக் கொண்டிருந்தான். அந்தக் காலம் பாரதியின் வாழ்வில் இருண்ட காலமாகும். இரத்தம் கசிகின்ற பூவினைப் போன்றும், சிறகு எரிகின்ற பறவையைப் போன்றும் பள்ளி என்னும் சிறையில் பாரதி கருகினான். அக்னி குஞ்சு வைக்கோல் கூட்டிற்குள் வாழ்வதும், அந்த நான்கு சுவர்களுக்குள் வானம் அடங்கி வசிப்பதும் எப்படி சாத்திய மாயிற்று. பூமியின் உள்ளிருந்து அதன் அழுத்தத்தினால் நிலக்கரி வைரமாக நிறமெடுப்பது போல உருவெடுத்தான் பாரதி. பிஞ்சிலேயே 'சுய விடுதலை' பெறும் எண்ணம் அவனில் வேரூன்றி விட்டது. கல்வியுடன் ஒரு கட்டாயக் கல்யாணம் செல்லம்மாளுடன் நடந்துவிட்ட போதே, கவிதா தேவியோடு கந்தர்வ கல்யாணமும் நடந்தேறி விட்டது. எனினும் பாரதிக்கு நடந்தது ஒரு பால்ய கல்யாணம் என்று சுயவிடுதலையை விரும்பிய பாரதியின் மனநிலையை படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் வைரமுத்து.

## சுடலை மாடன் கோயில் தெரு

**- கல்யாண்ஜி**

கல்யாண்ஜி அவர்களின் இயற்பெயர் சி.கல்யாண சுந்தரம். இவர் வண்ணதாசன் என்ற புனைப்பெயரில் சிறுகதைகளும், கல்யாண்ஜி என்ற புனைப்பெயரில் கவிதைகளும் எழுதி வருகிறார். பாரத ஸ்டேட் வங்கியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். பா, புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற நதி, மணல் உள்ள ஆறு ஆகியன இவரது கவிதைத் தொகுப்புகளாகும். சிறுகதை, புதுக்கவிதை என இரண்டு துறைகளிலும் தனது இலக்கியப் பங்களிப்பை நல்கி நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக எழுதிவரும் புகழ்மிக்க எழுத்தாளர் கல்யாண்ஜி ஆவார். 'ஒரு சிறு இசை' என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு 2016 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருதினைப் பெற்றவர்.

இன்றைய இயந்திர உலகில் காலங்கள் மாற மாற, காட்சிகளும் மாறிக் கொண்டே இருக்கின்றன. அத்தகையதொரு மாற்றத்தையே கல்யாண்ஜி தன் கவிதை வாயிலாக சுட்டிக் காட்டுகிறார்.

“சுடலைமாடன் கோவில் தெரு
மற்றொரு தெருவைப் போல இருக்கிறது
அப்பா அப்பாவைப் போலவே இல்லை
வேறு யாரோ போல மெலிந்து
பேட்டை ஸ்பின்னிங் மில் தாண்டி போகும்போது
சுத்தமல்லி பஸ்
முன்பு இப்படி இராது
குஞ்சு பிள்ளை வீட்டு பன்னீர் மரமும்
குறுக்குத் துறை ஆறும்
அப்படியே இருக்கிறது
மற்றொன்றாக எல்லாம் மாறிக்கொண்டு இருக்கையில்
அருகம்புல் மட்டும் அப்படியே இருக்குமா?”

சுடலை மாடன் கோயில் தெரு வேறொரு தெருவைப் போன்று காட்சியளிக்கிறது. அப்பா எனது அப்பாவை போன்று இல்லை. மிகவும் மெலிந்து வாடி வேறு யாரோ ஒருவர் போல தோற்றமளிக்கிறார். பேட்டையிலுள்ள ஸ்பின்னிங் மில்லைத் தாண்டி செல்லும் போது, முன்பெல்லாம் சுத்தமல்லி பேருந்து இப்படி வருவதில்லையே என்ற எண்ணம் உள்ளே வட்டமிடுகிறது. குஞ்சு பிள்ளை வீட்டு பன்னீர் மரமும், குறுக்குத் துறை ஆறும் மட்டுமே அப்படியே இருக்கிறது. அவற்றை தவிர நான் பார்த்து பழகிய வேறெல்லாமே மற்றொன்றாக மாறிக் கொண்டிருக்கிறதே என்று காலமாற்றத்தால் விளையும் வாழ்வியல் மாற்றங்களை இக்கவிதை வாயிலாக வெளிக்காட்டி நிற்கிறார் கவிஞர் கல்யாண்ஜி.

## காரணி நீ

### - கலாப்பிரியா

நவீன தமிழ்க் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் கலாப்பிரியா. இவரது இயற்பெயர் சோமசுந்தரம். அறிஞர் அண்ணாவின் இரங்கல் கூட்டத்திற்காக முதன் முதலில் இரங்கற்பா எழுதிய சோமசுந்தரம் அவர்கள் வண்ணநிலவனின் கையெழுத்துப் பத்திரிகையான 'பொருநையில்' கவிதை எழுதும் போது தனக்குத்தானே கலாப்பிரியா என பெயர் சூட்டிக் கொண்டார். கசடதபற, வானம்பாடி, கணையாழி, தீபம் ஆகிய இதழ்களில் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. நெல்லை மாவட்டம் கடையநல்லூரில் வங்கிப் பணிகளுக்கு இடையில் தன்னைச் சுற்றி நிகழும் விஷயங்களை கவிதைகளில் பதிவு செய்து வருகிறார். வெள்ளம், தீர்த்த யாத்திரை, எட்டயபுரம், உலகெல்லாம் சூரியம், வனம் புகுதல், எல்லாம் கலந்த காற்று, நான் நீ மீன் போன்றன இவரது கவிதைத் தொகுப்புகளாகும். இவருடைய பரந்து விரிந்த கவிதைக் களமும், கவித்துவமும் மிகவும் அழகானது. மீண்டும் மீண்டும் சிலாகிக்க வைக்கும் தனியொரு சக்தி இவரது கவிதைகளுக்கு உண்டு. ஓரிரு வார்த்தைகளை ஒன்று சேர்த்து புதியதொரு பொருளைக் கொடுக்கும் அதிசலத்தைக் கலாப்பிரியாவின் கவிதைகள் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன.

"ஆடிப்பெருக்கில் கரையெங்கும் தேரோட்டத்தில்
வீதியெங்கும் உன்னை தேடிச் சலித்து
மனம் தொலைந்தது மறந்துவிட்டது
ஆனால் யாரும் தேரும்
ஆண்டுகள் கடந்தாலும்
நினைவுத் தடத்தில்
அழகாய் நிழலாய்
அகராதியில் அர்த்தம் காணத் தேடிய
புது வார்த்தைக்கருகே
அற்புதமாய்க் கிடைத்த
வேறு வார்த்தை போல நீ
எதிர்பாராமல் எதிர்ப்பட்ட
உன்னைத் திடீரென கண்ட
சில கணத்தின் அதிர்வுகள்

காலப்பரப்பில் கைத்தட்டல் பெறும்
கவிதை வரிகளாய்
காண முடியாத ஆழச்சகதியில்
காரணி நீ கல்லாய்"

## மானுடம் தோற்கும்
## - கவிஞர் ஜெயதேவன்

தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பவர் கவிஞர் ஜெயதேவன். ஆனந்த விகடன் ஆசிரியர் துறையில் பணியாற்றியவர். ஓடம் என்ற இலக்கிய மாத இதழின் ஆசிரியாராக இருந்து வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார். இனிய உதயம், காக்கைச் சிறகினிலே, செம்மலர், கணையாழி, உயிர் எழுத்து, கல்வெட்டு பேசுகிறது போன்ற பல்வேறு இதழ்கனில் தொடர்ந்து எழுதி வருபவர். மரபின் உள்மூச்சை வாங்கி நவீனத்துவ மூக்கில் சுவாசிக்கும் இவரது கவிதைகள் வாசிப்பு சுகம் மிக்கன. சமுக அக்கறை உடையன. விடியலை நோக்கி, சுய தரிதனம், இன்றைய செய்திகள், கண்ணாடி நகரம் ஆகியன இவரது கவிதைத் தொகுப்புகளாகும். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து நடத்திய கவிதைப் போட்டியில் இவரது 'சுயதரிசனம்' கவிதை நூல் தமிழக அளவில் முதல் பரிசினைப் பெற்றுள்ளது.

"அந்தத் தாய்க் கோழி
அடைகாத்ததில்
ஐந்து குஞ்சுகள்

இறகுப் போர்வையால்
சூடு பரப்பி
இதமாய்க் காத்தது
கழுகின் கவனம்
திரும்பும் போது
வலை பின்னியது

வாரிசுகள் வளர்ந்தன
தனித்தனி இரைவேட்டைக்குத்
தயாராயின குஞ்சுகள்
வழியில் அதோ ஒரு
தானியமணி
தாயும் சேயும் ஓடின!

இரைக்கான போட்டியில்
கூரிய அலகால்
குஞ்சுகளையே
கொத்தி விரட்டியது கோழி

ஊட்டிய வாயே
வாளாய்ப் பாய்
‘கக் கக்’ என்று
பறந்தன குஞ்சுகள்

பூர்வீக சொத்தில்
பங்கு கேட்டு
சிரஞ்சீவியான என்
செல்வப் புதல்வன்
காலையில் விட்ட
வக்கீல் நோட்டீஸ்!
அதோ மேசை மேல்.”

தாய்க்கோழி முட்டையிட்டு அடைகாத்ததில் ஐந்து குஞ்சுகள் பிறந்தன. அக்குஞ்சுகளை தன் சிறகென்னும் போர்வைக்குள் அணைத்து, கழுகுகளுக்கு இரையாகாமல் பாதுகாத்து வளர்த்தது தாய்க்கோழி. தனித்தனியாக இரைத் தேடி செல்லுமளவிற்கு குஞ்சுகளும் வளர்ந்தன. இரை வேட்டைக்குச் சென்ற தாயும், குஞ்சுகளும் வழியில் கண்ட தானிய மணிகளைத் தானே முதலில் உண்ண வேண்டும்

என்று ஒவ்வொன்றும் வேகமாக ஓடின. இரைக்கான போட்டியில் அத்தனை நாட்கள் அடைகாத்து வளர்த்த தாய்க்கோழி தன் கூரிய அலகால் குஞ்சுகளையே கொத்தி விரட்டியது. உணவூட்டிய வாயே வாளாய் பாய்ந்ததைக் கண்டு பயந்த குஞ்சுகள் இடம் விட்டுப் பறந்தன. இந்நிலை அப்படியே நேர்மாறாக நடக்கிறது அந்த வீட்டில். தான் பெற்று பாதுகாத்து வளர்த்த மகன், பூர்விக சொத்தில் பங்கு கேட்டு அனுப்பிய வக்கீல் நோட்டீஸ் மேசையில் கிடப்பதைக் கண்டு கலங்கி பரிதவித்துக் கிடக்கிறது அந்த தாயுள்ளம். சொத்திற்காக, பதவிக்காக தன் உறவுகளையே காயப்படுத்தும் மனித இனத்தால் மானுடமே தோற்றுவிட்டதாக பதிவு செய்கிறார் கவிஞர் ஜெயதேவன்.

## துளிப்பாக்கள்

**- கவிஞர் அறிவுமதி**

கவிஞர் அறிவுமதி புகழ்பெற்ற தமிழக் கவிஞரும், திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். இவரது இயற்பெயர் மதியழகன். தனது நண்பர் அறிவழகன் பெயரையும் தனது பெயரையும் சேர்த்து ‘அறிவுமதி’ என வைத்துக் கொண்டார். இவர் தமிழ் இலக்கியத்தின் மீது கொண்ட ஈடுபாட்டைக் கண்டு கவிஞர் மீரா, அப்துல் ரகுமானிடம் அறிமுகப்படுத்தினார். அறிவுமதி, கவிஞர் அப்துல் ராகுமானிடமிருந்து ஹைக்கூ கவிதை எழுதும் கலையைக் கற்றுக் கொண்டார். அவிழரும்பு, புல்லின் நுனியில் பனித்துளி, கடைசி மழைத்துளி, நட்புக்காலம், அறிவுமதி கவிதைகள், வலி போன்றன இவரது கவிதைத் தொகுப்புகளாகும். கவிஞரின் கடைசி மழைத்துளி என்னும் கவிதைத் தொகுப்பிலிருந்து ஐந்து ஹைக்கூ கவிதைகள் பாடப்பகுதியாக இடமபெற்றுள்ளன.

“மனசுக்குள் தாலாட்டு
கருவறைக்குள் ஒப்பாரி
கலங்குகிறது கள்ளிப்பால”

பெண் என்ற ஒரே காரணத்திற்காக கருவிலேயே அழிக்கப்படும் பெண் சிசுவின் அவலநிலையை இக்கவிதை வரிகள் வாயிலாக சுட்டிக் காட்டுகிறார் கவிஞர் அறிவுமதி.

“மணவறை
மெதுவாகப்

பெருக்குகிறாள்

முதிர்கன்னி”

புதிதாக திருமணமான மணமக்களின் மணவறையை பெருக்கி சுத்தம் செய்கிறாள் முதிர்கன்னி ஒருத்தி. திருமண வயது தாண்டியும் தனது வாழ்க்கையில் இப்படியொரு நிகழ்வு நடைபெறவில்லையே, எப்போது நடக்கும் என்ற ஏக்கத்தோடும், சோர்வோடும் ஒரு மந்தநிலையில் மெதுவாக மணவறையைப் பெருக்குவதாக காட்சிப்படுத்துகிறார் கவிஞர்.

“தோசை-நிலா

புகை - மேகம்

அடுக்களைக்குள் வானம்”

அடுக்களைக்குள் அவசர அவசரமாக தோசை சுட்டுக் கொண்டிருக்கிறாள் அம்மா. அவள் சுடும் தோசை, இரவில் வானத்தை வலம்வரும் நிலவினைப் போன்று காட்சியளிக்கிறது. அடுப்பெரிவதால் வரும் புகையோ வானத்தில் ஊர்ந்து செல்லும் மேகம் போல் தோன்றுகிறது என்று அடுக்களைக்குள் வானத்தையே கொண்டு வந்த விட்டார் கவிஞர்.

“தெய்வமாக இருந்தாலென்ன பெண்

சிறியதாகத்தான் செதுக்கும்

சிற்ப சாஸ்திரம்”

தெய்வமாகவே இருந்தாலும் அது பெண் என்றால் ஆணுக்கு கீழ் தான். இதுதான் சிற்ப சாஸ்திரம். ஆணுக்குப் பெண் சமமென்று சொல்லும் ஓர் ஆன்மீகத்தை தன்னால் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை என சமுதாயத்தில் பெண்ணுக்கான இருப்பை முன்னிறுத்துகிறார் கவிஞர் அறிவுமதி.

“நெருப்புதான் பெண்

அம்மாவுக்கு அடிவயிற்றில்

மாமியாருக்கு அடுப்படியில்”

பெண்ணைப் பொறுத்த வரையில், குழந்தையாக இருந்தாலும் சரி, தெய்வமாக இருந்தாலும் சரி, அவள் இரண்டாம் நிலைதான். புகுந்த வீடோ, அலுவலகமோ எதுவாயினும் இன்று பெண்கள் எதிர்கொள்ளுவது விதவிதமான பிரச்சினைகளைத்தான்.

இன்றைய கண்ணோட்டத்தில் பெண் என்பவள் மகள் என்ற நிலையில் தாய்க்கு அடிவயிற்றிலும், மருமகள் என்ற நிலையில் மாமியாருக்கு அடுப்படியிலும் நெருப்பாகவே தகிக்கிறாள். அடிமடி, அடுப்படி என இடத்தில் தான் வேறுபாடு. மற்றபடி நெருப்புதான் பெண் என்று பெண்ணின் நிலையைப் பதிவு செய்கிறார் அறிவுமதி.

## புத்தகம்

**- கவிஞர் நெல்லைஜெயந்தா**

வளர்ந்து வரும் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் நெல்லை ஜெயந்தா ஆவார். ஆனந்த விகடன், முத்திரை, ஜீனியர் விகடன், குமுதன் என பல இதழ்களில் இவரது கவிதைகள் வெளிவந்து பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளன. பொதிகைத் தொலைக்காட்சியில் எண்பத்தியிரண்டு வாரங்கள் ஒளிபரப்பு செய்யப்பட்ட 'வாலிப வாலி' என்னும் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியுள்ளார். திணைமயக்கம், கவிதை உறவு, தென்றலோடு சில தினங்கள் போன்றன இவரது கவிதைத் தொகுப்புகளாகும். இவரது 'நிலாவனம்' எனும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'புத்தகம்' எனும் கவிதை வாசிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாக அமைகிறது.

"வாசிக்கையில்
குனிய வைக்கும்!
வாழ்க்கையில்
நிமிர வைக்கும்!

மனிதர்களை விட்டு
தொலைவில் இருப்பது
புத்தகங்களுக்குப்
பிடிப்பதே இல்லை!
அதனால் தான் அவை
பக்கமாகவே இருக்கின்றன!

நல்ல புத்தகத்தில்
அத்தனை பக்கங்களும்
அட்டைதான்!
உறிஞ்சி விடும் உங்களை!

புத்தகங்களை நாம்
மேலிருந்து கீழே
வாசிக்கிறோம்!
நம்மைக் கீழிருந்து மேலே
தூக்கி விடும்!”

தலை குனிந்து படித்தாலும் நம்மை வாழ்க்கையில் நிமிரச் செய்வது புத்தம்தான். இன்றைய உறவுகளைப் போல மனிதர்களை விட்டு விலகி இருப்பது புத்தகங்களுக்கு பிடிப்பதில்லை. எனவேதான் ஏதோ ஒரு வகையில் எப்போதும் மனிதர்களுக்கு பக்கமாகவே அவை இருந்து விடுகின்றன. நல்ல புத்தகத்திலுள்ள ஒவ்வொரு பக்கமும் அட்டைதான். ஏனெனில் இரத்தம் உறிஞ்சும் அட்டையைப் போல, அவையும் தன்னுள் புதைந்திருக்கும் கருத்துக்களால் நம்மை உறிஞ்சிவிடுகின்றன. இத்தகைய புத்தகங்களை நாம் மேலிருந்து கீழ் நோக்கி வாசிக்கிறோம். ஆனால் அவை நம்மைக் கீழிருந்து மேல் தூக்கி விடும் ஏணியாக விளங்குகின்றன என இக்கவிதை மூலம் வாசிப்பை நேசிக்க வைக்கிறார் கவிஞர் நெல்லை ஜெயந்தன்.

## பருவம் எனும் நினைவு

**- கவிஞர் சக்தி ஜோதி**

இன்றைய தமிழ்ச் சூழலில் ஒரு தனித்துவமான கவிஞராக விளங்குபவர் சக்திஜோதி. இவர் திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையத்தைச் சார்ந்தவர். இவரது கவிதை பெண்ணின் மனதை, நூற்றாண்டுகளாக அடக்கப்பட்ட வேட்கையை எழுத்தாய் வடிப்பவை. நிலம் புகும் சொற்கள் தொடங்கி கடலோடு இசைத்தல், எனக்கான ஆகாயம், காற்றில் மிதக்கும் நீலம், நீ உறங்கும் காடு, வெள்ளி வீதி, கனவின் முற்றத்தில் தரையிரங்கும் தாரகைகள் என பல கவிதை நூற்களை எழுதியுள்ளார். சிறந்த கவிஞர், கட்டுரையாளர், பேச்சாளர், விவசாயி மற்றும் சமூகப் பணியாளர் என்று பன்முகத் தன்மை கொண்டவராகத் திகழ்பவர். சக்தி ஜோதியின் கவிதை உலகம் முற்றிலும் தன் மனதை சார்ந்தது. புற உலக நிகழ்வுகள் அதில் வெறும் காட்சியாக மட்டுமே வருகின்றன. அவரது சமூக அக்கறை கவிதைகளைத் தாண்டி வெளிவருகிறது. பெண்ணையும் இயற்கையையும் இணைத்து கவிதைகள் படைப்பது இவரது பலமாகும். அதற்கு சான்றாக கனவின் முற்றத்தில் தரையிரங்கும் தாரகைகள் என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ‘பருவம் எனும் நினைவு’ என்னும் கவிதை அமைகிறது.

ஒரு பருவத்தில் துளிர்த்து
மறு பருவத்தில்
பூத்து நிறைந்து
வேறு பருவத்தில் உதிர்ந்த பிறகும் இன்னுமொரு பூப்பிற்கான

ஈரத்தை
தனது வேரடி மண்ணில்
வெதுவெதுப்பாகத்
தேக்கி வைத்திருக்கிற
தாவரத்தின் நினைவில்
உறங்குகிறது
துளிர்க்கக் காத்திருக்குமொரு
கனவு

# அலகு – 3

# சிறுகதைகள்

## 1. காலனும் கிழவியும்

**- புதுமைப்பித்தன்**

வெள்ளைக்கோயில் என்றால் அந்தப் பகுதியில் காடு என்று அர்த்தம். ஆனால் அது ஒரு கிராமமும்கூட கிராம முனிஸீபு முதலிய சம்பிரமங்கள் எல்லாம் உண்டு. ஊர் என்னமோ அப்படி அப்படித்தான். "வெள்ளைக்கோயிலுக்குப் போறேன்" என்றால் உலகத்திடம் செலவு பெற்றுக்கொள்வது என்பது அந்தப் பகுதிவாசிகளின் வியாக்கியானம். ஆனால், வெள்ளைக்கோயிலுக்குப் போய்த் திரும்பி வருகிறவர்களும் பலர் உண்டு. சுப்பு நாடான் தினசரி காலையும் சாயங்காலமும் அங்கு போய்த்தான் ஏழை மக்களுக்குக் கஷ்டத்தை மறக்கவைக்கும் அமுதத்தை இறக்கி வருகிறான். மாடத்தி தினசரி அங்க போய்த்தான் சுள்ளி பொறுக்கிக்கொண்டு திரும்புகிறாள். ஆனால் இப்படித் திரும்புகிறவர்களைப் பற்றி மட்டிலும் நினைவு வருகிறதில்லை போலும் அவ்வூர்வாசிகளுக்கு.

அந்தப் பிரதேசத்திற்குச் சென்றும் வெறுங்கையுடன் திரும்பி வரும் நிலைமை ஒரே ஓர் ஆசாமிக்கு ஏற்பட்டது. அவர்தான் தர்மராஜா. இந்தச் சமாசாரத்தைப் பற்றி வெள்ளைக்கோயில்காரருக்குத் தெரியாது. ஏனென்றால், மருதாயி, புகையும் சுடுகாட்டுக்கும் சலசலக்கும் பனைவிளைக்கும் இடையில் உள்ள ஒரு குடிசையில் வசிக்கும் கிழவி.

மருதாயிக்கு இந்த விளையில் பனைகள் சிறு விடலிகளாக நின்றது தெரியும். அது மட்டுமா? கும்பினிக்காரன் பட்டாளம் அந்த வழியாகச் சென்றது எல்லாம் தெரியும். அந்தக் காலத்தில் மருதாயியின் பறையன் நல்ல செயலுள்ளவனாக இருந்தான். வஞ்சகமில்லாமல் குடிப்பான்.

மருதாயிக்கு அந்தக் காலத்திலேயிருந்த மிடுக்கு சொல்லி முடியாது. அறுப்புக்குச் சென்றுவிட்டு, களத்திலிருந்து மடி நிறையக் கொண்டுவரும் நெல்லை, கள்ளாக மாற்றுவதில் நிபுணி. சதிபதிகள் இருவரும் இந்த இலட்சியத்தை நோக்கி நடந்தால் வெள்ளைக்கோயில் பக்கம் குடியிருக்காமல் வேறு என்ன செய்யமுடியும்? மருதாயிக்குப்

பிள்ளைகள் பிறந்தன. அவையெல்லாம் எப்பவோ ஒரு காலத்தில் நடந்த சமாசாரம் கனவு போல. இப்பொழுது பேரன் மாடசாமியும், எருமைக்கிடாவுந்தான் அவளுடைய மங்கிய கண்கள் கண்ட உண்மைகள். கிடாவை வெளியில் மேயவிட்டுக் கொண்டு வருவான் பேரன். கிடாவும் நன்றாகக் கருகருவென்று ஊரார் வயலை மேய்ந்து கொழுத்து வளர்ந்திருந்தது. வாங்குவதற்கு ஆள் வருவதை மாடசாமி எதிர்பார்த்திருந்தான்.

மாடசாமி அவளுடைய கடைக்குட்டிப் பெண்வழிப் பேரன். கொஞ்சம் துடிப்பான பயல். பாட்டனின் ரத்தம் கொஞ்சம் ஜாஸ்தி. அதனால்தான் மாடு மேய்க்கிற சாக்கில் கிழவியைக் குடிசையில் போட்டுவிட்டுப் போய்விடுவான். அவனுக்கு ஒரு பெண்ணைக் கட்டிவைத்துவிட்டால் தனக்கு இந்தக் குடிசைக் காவல் ஓயும் என்று நினைத்தா கிழவி. தன் கைக்கு ஒரு கோல் போல அவளுக்கும் ஒரு உதவிக் கட்டை தேவை என்று நினைத்தாள்.

காலத்தின் வாசனை படாத யமபுரியில் சிறிது பரபரப்பு. யமதர்மராஜா நேரிலேயே சென்று அழைத்துவர வேண்டிய ஒரு புள்ளியின் சீட்டுக் கிழிந்துவிட்டது என்பதைச் சித்திரபுத்திரன் மகாராஜாவிடம் அறிவித்தான். சித்திரபுத்திரனுக்கு ஓலைச்சுவடிகளைப் பார்த்துப் பார்த்தோ என்னவோ சிறிது காலமாகப் பார்வை அவ்வளவு தெளிவில்லை. நேற்றும் இன்றும் அற்ற லோகத்தில் மாறுதல் ஏற்படுவது ஆச்சரியந்தான். இருந்தாலும் உண்மையை மறைக்க முடியவில்லையே! தர்மராஜாவின் சிங்காதனத்தின் மேல் அந்தரத்தில் தொங்கும் ஒளிவாளின் மீது மாசு படர்ந்துவிட்டது. காரணம், மகாராஜனின் தொழிலிலும் மனத்திலும் மாசு படர்ந்ததால் என்று கிங்கரர்களுக்குள் ஒரு வதந்தி. மகாராஜாவும் தம் முன் வரும் உயிர்களுக்கு நியாயம் வழங்கும்போதெல்லாம் அடிக்கடி உயர அண்ணாந்து வாளைப் பார்த்துக் கொள்வாராம்.

போருக்கு முதல்வனையும் ஊருக்கு மூத்தவரையும் மகாராஜாவே நேரில் சென்று அழைத்து வரவேண்டும் என்பது சம்பிரதாயம். காலத்திற்கு அதிபதியான மன்னன் அந்தக் கைங்கரியத்தைச் செய்வதில் மனக்குழப்பம் ஏற்பட்டது. பூலோகத்திலே, குறிப்பாக வெள்ளைக்கோயிலிலே, அப்போது அஸ்தமன சமயம். பேய்க்காற்று யமதர்மராஜனின் வருகையை அலறி அறிவித்தது. பனைமரங்கள் தங்கள் ஓலைச் சிரங்களை சலசலத்துச் சிரக்கம்பம் செய்தன. சுடுகாட்டுச் சிதையில் வெந்து நீறாகும் வாத்தியார் உடல் ஒன்று கிழவிக்குக் கிடைக்கப்போகும் பெருமையைக் கண்டு பொறாமைப் புகையைக் கக்கித் தன்னையழித்துக் கொண்டது. எங்கிருந்தோ ஒரு கூகையின் அலறல். ஓடிப்போய்ப் பேயாக

மாறியாவது தனக்குக் கிடைக்கப்போகும் சித்திரவதைகளிலிருந்து தப்ப முயலும் வாத்தியார் உயிரை மறித்து தூண்டிலில் மாட்டி, மேல் நோக்கிப் பறக்கும் கிங்கரர்கள். மகாராஜா தூரத்திலே வருவதைக்கண்டு வேகமாக யமபுரியை நோக்கிச் சொல்லலானார்கள்.

எங்கிருந்தோ ஒரு நாய் தர்மராஜனின் வருகையை அறிந்துகொண்டு அழுது ஓலமிட்டது. வருகையை கிழவி, குடிசைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு இடுக்கான நடையில் வந்து உட்கார்ந்து வெற்றிலைக் குழவியை எடுக்கத் தடவினாள். கை கொஞ்சம் நடுங்கியது. என்றுமில்லாமல் கொஞ்சம் நாவரட்சி ஏற்பட்டது. “சவத்துப் பயலெ அந்திலெ சந்திலெ தங்காதே, மாட்டே ஓட்டிக்கிட்டு வந்திருன்னு சொன்னா, மூதி…“ என்று ன்று சொல்லிக்கொண்டே கலயத்தை எடுத்தாள். தண்ணீர் புறக்கடையில் திடுதிடுவென்று எருமைக் கிடா வந்து நின்றது. அதன்மேலிருந்த கறுத்த யுவன் குதித்தான். “ஏலே மாடா, எத்தினி தெறவதான் ஒன்கிட்டச் சொல்லி மாரடிக்க. மூதி, தொளுவிலே கட்டி, பருத்தி விதையெ அள்ளி அரசய பாளையங்கோட்டை எசமா வந்திருந்தாவ. நாளைக்கி கூடாவெ கொண்டாரச் சொன்னாவ!” என்றாள் வந்தவனைப் பார்த்து. வந்தவன்தான் யமதர்மராஜா.

“பாவம் கிழவிக்கு அவ்வளவு கண் பஞ்சடைந்து போய்விட்டதா?” என்று அவன் மனம் இளகியது. கிழவியின் கடைசி விருப்பத்திற்குத் தடையாக ஏன் இருக்கவேண்டும் என்று எருமையைத் தொழுவில் கட்டிவிட்டு, பருத்தி விதையை அள்ளிவைத்தான். பூலோகத் தீனியைக் கண்டிராத எருமை திருதிருவென்று விழித்தது. கிழவி திடுக்கிட்டுவிடாமல் இதமாக வந்த காரியத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு குனிந்து குடிசைக்குள் நுழைந்தான் யமன். ”ஏலே அய்யா, அந்த வெத்திலைச் சருகை இப்பிடித் தள்ளிப்போடு!” என்றாள் கிழவி. வெற்றிலையை எடுத்துக் கொடுத்துவிட்டு, “அதிருக்கட்டும் கிழவி. நான் யார் தெரியுமா? என்னை நல்லாப் பாரு! நான்தான்…” என்று ஆரம்பித்தான் எமன்.

“என்ன குடிச்சுப்பிட்டு வந்தியாலே! எனக்கென்ன கண்ணு பொட்டையாப் போச்சுன்னு நினைச்சிக்கிட்டியாலே!” கிழவிக்கு அவன் நின்ற நிலைப் பார்த்ததும் மத்தியானச் சம்பவம் ஏதோ நினைவுக்கு வந்தது. ”சிங்கிகொளத்தா மவளே. அவதான் சொக்கி. அவளைப் பார்த்திருக்கியாலே. நேத்துக்கூடச் சுள்ளி பொறுக்க வந்தாளே… அவ அப்பங்காரன் வந்திருந்தான்… உனக்கு அவளெ புடிச்சுக் கட்டிப்போட்டுட்டா நல்லதுன்னான். என்ன

சொல்றே?..." காலத்தின் அதிபனான, காலத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட யமதர்மராஜன் நடுநடுங்கினான்.

"நான்தான் யமதர்மராஜன்!" என்று அவனது வாய் உளறியது. பல் பயப்பிராந்தியின் வாய் உண்மையைக் கக்கியது. ஆனால் அந்த உண்மை கிழவியின் உள்ளத்தில் பயத்தை ஏற்படுத்தவில்லை. "குடிச்சுப்பிட்டுத்தான் வந்திருக்கே. ஒங்க பாட்டன் குடிச்சுக் குடிச்சுத்தான் தொலைஞ்சான். . . அதான் வெள்ளக்கோயில் குடிசை! நாசமாப் போரதுக்கு நாலு வளி வேணுமா? விதி யாரை விட்டது..?" என்றாள். விதியைப் பற்றி நினைத்ததும் கிழவிக்கு என்றுமில்லாத தளர்வு தட்டியது. . . மூச்சுத் திணறியது… யமனுக்குக் கால்களில் தெம்பு தட்டியது. . . விதிக்கோலைப் பற்றித் தன் ஆட்சியை நிலைநாட்ட நிமிர்ந்தான். "ஏலெ, ஒன் வக்கணையெல்லாம் இருக்கட்டுமிலே, என்னா, எருமை அத்துக்கிட்டு ஓடுது? மறிச்சுப் பிடிச்சா!" என்றாள் கிழவி.... "எதேச்சையாக அலைந்த வாகனத்தைக் கட்டிப்போட்டுப் பருத்திவிதை வைத்தால் நிற்குமா?" என்று நினைத்துக்கொண்டே, வெளியேறி வந்து சமிக்ஞை செய்தான் யமன். வாகனம் வந்து மறைவில் அவன் சொற்படி நின்றது.

எருமையின் முதுகில் போட்டிருக்கிற பாசக் கயிற்றை எடுத்துக் கொண்டு மறுபடியும் உள்ளே நுழைந்தான் யமன். பாசத்தால் அவளைக் கட்டிவிடலாம் என்று நம்பினான். பாவம்! "ஏலே, கயிறு நல்லா உறுதியாக இருக்கே, எங்கலே வாங்கினே? ஒங்க பாட்டனிருந்தாருல்ல, அவருக்கு அப்பங் காலத்துலேதான் இதுமாதிரிக் கெடைக்கும். அங்கென சுத்தி ஒரு கொடியாக் கட்டிப்போட்டு வய்யி. ஒண்ணுக்குமில்லாட்டா நாலு ஓலையாவது சேர்த்துக் கட்டிக்கிட்டு வரலாம்!" என்றாள். பாசக் கயிற்றின் நுனியைக் கூரையைத் தாங்கும் விட்டத்தில் கட்டிக்கொண்டே, தான் அவள் பேரன் அல்லன் என்பதை இந்தக் கிழவிக்கு எப்படித் தெளிவுபடுத்துவது என்று எண்ணியெண்ணிப் பார்த்தான். தனது சுய உருவைக் காண்பித்தால் - பயந்துவிட்டால் என்ன செய்வது என்ற நினைப்பு - வேறு வழியில்லை.

'ஏ கிழவி, என்னை இப்படித் திரும்பிப் பார்!" என்று அதிகாரத்தொனியில் ஒரு குரல் எழுந்தது. கிழவி திரும்பிப் பார்த்தாள். கூரையின் முகட்டையும் தாண்டி, ஸ்தூலத் தடையால் மறையாமல் யமன் தன் சுய உருவில் கம்பீரமாக நிற்பதைக் கண்டாள். "நீ யாரப்பா! இங்கென ஏம் பேரன் நிண்டுகிட்டிருந்தானே, அவனெங்கே?" என்றாள். நான்தான் யமன்! நான்தான் அவன்; உன் பேரனில்லை!" என்றான் யமன். "அப்படியா சேதி! வா

இப்படி இரி” என்று கூறிக்கொண்டே, வெற்றிலையைத் தட்டத் தொடங்கினாள் கிழவி. “இப்பம் எதுக்கு இங்கெ வந்தே?” யமன் அவள் அருகில் வந்து உட்கார்ந்தான். அதனால், நின்றதன் காம்பீரியம் மறைந்துவிட்டது. ”போருக்கு முதல்வனையும் ஊருக்கு மூத்தவரையும் நான்தான் அழைத்துக்கொண்டு போகவேண்டும்!” என்றான். “அப்பிடின்னா?” ”நீ என்கூட வரவேண்டும். நீ அப்பொழுது கட்டிப்போடச் சொன்னாயே அது உன் எருமையல்ல. என் வாகனம்.

”நான் உன்கூட வரணுமாக்கும்! என்னெ கூட்டிக்கிட்டுப் போவ ஒனக்குத் தெறமையிருக்கா? ஒனக்குப் பாதி வேலேகூட சரியாச் செய்யத் தெரியாதே. என்னைக் கட்டோடெ கூட்டிக்கிட்டுப் போவ ஒனக்கு முடியுமா?” “எனக்கு முடியாத ஒன்று இருக்கிறதா? நான் இதுவரை எத்தனை பேரை அழைத்துச் சென்றிருக்கிறேன். அது உனக்கெப்படித் தெரியும்? நீ என்ன புராணம், இதிகாசம் படிக்கக்கூடிய ஜாதியில் பிறந்திருக்கிறாயா?. இப்படிச் சொல்லிக்கொண்டே போகும்பொழுதே யமனுக்குத் தானே தனக்குப் பொய் சொல்லிக் கொள்கிறது போலப்பட்டது ஏனென்றால் அவனுக்கு மார்க்கண்டன் சமாசாரமும் நினைவுக்கு வந்துவிட்டது. “அதெல்லாம் இருக்கட்டும். நீ என்னெக் கூட்டிக்கிட்டு போய்த்தின்னா, நான் இருந்த நெனப்பே, என்னப் பத்தின நெனப்பே, நான் வச்சிருந்த பொளங்கின சாமானெல்லாம் ஒன்னோட எடுத்துக்கிட்டுப் போவ முடியுமா? என்னவோ எமன் கிமன் இவன்னு பயமுறுத்திரியே, ஒன் தொழிலே ஒனக்குச் செய்யத் தெரியிலியே! அதெ தெரிஞ்சிக்கிட்டு எங்கிட்ட வா!” என்று காலை நீட்டிக்கொண்டு முழங்காலைத் தடவினாள் கிழவி.

”என்ன சொன்னாய்! எனக்கா தெரியாது? இதோ பார், உன்னை என்ன செய்கிறேன்!” என்று உறுமிக்கொண்டு எழுந்தான் யமன். அந்தோ! அவன் வீசவேண்டிய பாசக்கயிறு அவனே கட்டிய கொடியாகத் தொங்கியது. ”உன்னாலெ என் உசிரெத்தானே எடுத்துக்கிட்டுப் போவ முடியும்? இந்த உடலைக்கூடத் தூக்கிட்டுப் போவ உனக்குத் தெறமை இருக்கா? யோசிச்சுப்பாரு. ஒண்ணே வேறயா மாத்த முடியும் உன்னாலே அழிக்க முடியுமா! அடியோட இல்லாமே ஆக்க முடியுமா? அதெ உன்னைப் படைச்ச கடவுளாலேயே செய்ய முடியாதே! அப்புறமில்ல உனக்கு. பழசுன்னா அவ்வளவு கிள்ளுக்கீரேன்னா நெனச்சே?” என்று பொக்கை வாயைத் திறந்து காட்டிச் சிரித்தாள் கிழவி. கையைப் பிசைந்துகொண்டே வெளியேறினான் யமன், அன்றுதான் அவனுக்கு உண்மையான தோல்வி. மார்க்கண்டேயன் சமாசாரம்கூட அவனுக்கு அன்று வெற்றி

மாதிரியே புலப்பட்டது. யமராஜனின் தோல்வியைக் கண்டு தன்னை காப்பாற்றிக் கொள்ள போய்ப் பதுங்கியது போலப் பேய்க்காற்றும் ஓய்ந்து நின்றது. மாடசாமி எருமையை ஓட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான். கட்டுத்தறியில் தீனி போட்டு பருத்தி விதை வைத்துத் தயாராக இருந்ததைக் கண்டான். குருட்டுக் கிழவிக்கு வெறும் இடத்தில் எருமையிருப்பதாகத் தோன்றியதால் எல்லாம் தானாகத் தடவித் தடவிச் செய்திருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது.

உள்ளே நுழைந்தான். வாயில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே கிழவி யமதேவனின் விஜயத்தையும், தோல்வியையும் பற்றிச் சொன்னாள். மாடசாமி வாலிபத்தின் அவநம்பிக்கையுடன் சிரித்தான். ‘குருட்டு மூதி என்னவோ ஔருது!" என்று முணுமுணுத்தான். இருந்தாலும். "நல்ல கெட்டிக் கயிறு காஞ்ச சருகாவது கட்டலாம். கைக்கு வந்தது தவறிவிட்டதே!" யென்று அவள் ஏங்கியது அவனுக்கும் கொஞ்சம் நம்பும்படிதான் இருந்தது.

**ஆசிரியரைப் பற்றி**

புதுமைப்பித்தன் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் சொ.விருத்தாசலம். காலம் 1906-1948 வரையாகும். சிறுகதை மன்னன், சிறுகதைச் செல்வர், தமிழ்நாட்டின் மாப்பஸான் எனப் போற்றப்படுபவர். நெல்லைத் தமிழில் கிண்டலும் நையாண்டியும் கலந்து எழுதித் தமிழ்ச் சிறுகதைக்குப் புதியதோர் அழுத்தமும் வேகமும் தந்தவர். மணிக்கொடி காலத்தைச் சார்ந்தவர். இவா் 200-க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். நடப்பியலையும் நனவோட்ட உத்தியையும் பேச்சுத்தமிழையும் முதன்முதலில் சிறுகதையில் புகுத்தியவர் இவரே. புராணக் கதைகளில் புதிய மறுமலர்ச்சிக் கருத்துக்களை விதைத்தவர். அகலிகை, சாபவிமோசனம், கல்யாணி, பொன்னகரம், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், காஞ்சனை போன்றவை இவர்தம் சிறப்புக்குரிய சிறுகதைகள். இதில் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் என்னும் சிறுகதை சமூக, தனிமனிதரிடையே காணப்படும் குறைகளை எள்ளல் சுவையுடன் விவரிக்கிறது.

# 2. நட்சத்திரக் குழந்தைகள்

## - பி.எஸ். இராமைய்யா

“அப்பா! நக்ஷத்திரங்களுக்குக்கூட அப்பா உண்டோ?” ”உண்டு அம்மா!” அவர் யார் அப்பா?” ”ஸ்வாமி” ”ஸ்வாமியா? அப்பா! அவர்கூட உன்னைப் போலத்தானே இருப்பார்? நக்ஷத்திரம் ரொம்ப அழகாயிருக்கே அவர் அப்பா கூட அழகாத்தானே இருப்பார்?” “ஆமாம் அம்மா! ஸ்வாமியினுடைய அழகைப் போலே வேறு யாருக்கும் அழகு இல்லை” ”ஸ்வாமி கூட உன்னைப்போலே நல்லவர்தானே? ”ஆமாம்”. ”ஆமாம். எனக்குக் கூடத் தெரியறது. ஸ்வாமி ரொம்ப ரொம்ப. நல்லவர். நக்ஷத்திரமே பளிச்சின்னு அவ்வளவு நன்னாயிருக்கே, அவர் அப்பா எப்படியிருப்பார்!” ”அவர் ரொம்ப நல்லவர். நம்மையெல்லாம் விடப் பெரியவர்”.

“அப்பா! நக்ஷத்திரம் எப்போ பிறக்கும்?” ”ஸாயங்காலத்தில்” ”எப்படியப்பா அது பிறக்கிறது?” ”நாம் சத்தியத்தையே பேசுவதால் நாம் ஒவ்வொரு தடவையும் ஓர் உண்மையைச் சொல்லும்பொழுது ஒரு நக்ஷத்திரம் பிறக்கிறது”. ”நான் கூட நிஜத்தையே சொன்னால் நக்ஷத்திரம் பிறக்குமா அப்பா?” ”ஆமாம் அம்மா! நீ ஒவ்வொரு தடவையும் நிஜம் சொல்லும்பொழுது ஒரு நக்ஷத்திரம் பிறக்கிறது” “அப்பா!” “என்ன அம்மா!” ”நம்ப ஊரிலே அவ்வளவு பேரும் குழந்தைகள் எல்லாம், நிஜத்தையே பேசினா எவ்வளவு நக்ஷத்திரம் பிறக்கும்? நிறைய (இரண்டு கைகளையும் விரித்துக் காட்டி) இவ்வளவு நக்ஷத்திரம் பிறக்குமோல்லியோ?” ”ஆமாம் அம்மா!” அதைக் கேட்டவுடன் குழந்தை ரோஹிணி வேறொன்றும் பேசாமல் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவளாய்த் திரும்பிவிட்டாள். அவள் தனது முதிரா உள்ளத்தினுள்ளே ஸ்வாமியைப் பற்றியும், அவருடைய நக்ஷத்திரக் குழந்தைகளின் அழகைப் பற்றியும், மனிதர்கள் யாவரும் சத்தியத்தையே பேசுவதைப் பற்றியும் கற்பனை செய்து காண முயன்றுகொண்டே வாசலுக்குச் சென்றாள்.

குழந்தை ரோஹிணிக்கு ஆறு வயசுதான் ஆகிறது. ஆனாலும் அவளுடைய வார்த்தைகள் யாவும் மணி மணியாக இருக்கும். முத்தும் பவளமும் கோத்த ஹாரம் போல இருக்கும் அவளது பேச்சு. அவளுடைய கேள்விகள் எல்லாம் தெய்வ உலகத்துக் கேள்விகள். அவளுடைய இளம் நெஞ்சில் உதிப்பவை ஸ்வர்க்க உலகத்து எண்ணங்கள். ஸ்ரீமான் ஸோமஸுந்தரம், பி.ஏ. வரையில் படித்திருக்கிறார். ஆனாலும் கூட குழந்தை

ரோஹிணியின் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஒவ்வொரு சமயம் திணறிப் போய்விடுவார். ஐயோ இந்தக் குழந்தையின் மனத்தைக்கூட என்னால் திருப்தி செய்யக் கூடவில்லையே என்று ஏங்கி நிற்பார். ஆனால் ரோஹிணியைக் கண்டவுடன், ரோஹிணியைப் பற்றி நினைத்தவுடன் அவருடைய உள்ளத்திலெழும் கர்வம் ஒரு சக்கரவர்த்திக்குக் கூட இராது. பட்டணத்தில் இருக்கும்பொழுது குழந்தை இயந்திர தேவதையின் கேள்விகளைக் கேட்டாள். கிராமத்திற்கு குழந்தைகளைப் பற்றிப் புதிய புதிய வந்தவுடன் அவளுடைய கேள்விகள் அதியாச்சரியகரமாக மாறிவிடும்.

இயற்கைத் தேவதையின் சிறுவிளையாட்டுகளின் இடையே அவளுடைய உள்ளம் சென்று கலந்து கொள்ளும். அவளுடைய எண்ணங்கள் இயற்கை அன்னையுடன் இறக்கை விரித்துப் பறப்பவையாக இருக்கும். ஸோமஸுந்தரம் அப்பொழுது தபால் ஆபீஸுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். தினந்தோறும் தபால்காரன் வருவதற்குள் அங்கேயே நேரில் போய், ஏதாவது கடிதம் உண்டாவென்று பார்த்துவிட வேண்டுமென்று அவசரம் அவசரமாகப் போவார். கடிதம் எதுவும் வராவிட்டாலும் தினசரிப் பத்திரிகையாவது வருமே என்று போவார். அவ்வாறு அவர் புறப்பட்டுக் கொண்டிருந்த பொழுதுதான் குழந்தை நக்ஷத்திரங்களைப் பற்றிக் கேட்டாள்.

அதற்குமேல் ரோஹிணிக்கு அப்பொழுது தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் வேறு ஒன்றும் இல்லை. நக்ஷத்திரங்களினுடைய அப்பாவைப்பற்றிக் கற்பனை செய்து கனவு காண்பதற்குத்தான் அவளுடைய சிறிய மனசில் இடம் இருந்தது. ஸோமஸுந்தரம் அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே தபால் ஆபீஸுக்குச் சென்றார். மாலை நேரம் வந்தது. குழந்தை ரோஹிணி அப்பொழுது தான் குளித்துவிட்டு அம்மா செய்துவிட்ட அலங்காரங்களுடன் வாசலில் வந்தாள். அவர்கள் வீட்டு வாசலில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வாதா மரங்கள் உண்டு, அவற்றின் நடுவில் சென்று நின்றாள். சூரியன் அஸ்தமிக்கும் சமயம் வான வீதியில் வெளியும் ஒளியும் மோனத்திலே கலந்து நகைசெய்து கொண்டிருந்தன. குழந்தை ரோஹிணி மேற்றிசைக் கோடியில் நடந்து கொண்டிருந்த இந்திர ஜாலத்தைக் கண்டாள். அவளுடைய நிஷ்களங்க நெஞ்சத்தில் பரவச நிலை பிறந்தது.

ஆஹா! என்ன அழகு! அங்கு, அந்த வான வெளியிலே உமை கவிதை செய்து கொண்டிருந்தாள். ரோஹிணியின் முகம் மலர்ந்தது. அங்கு ஒரு புதிய ஒளி தோன்றியது. அது வான வெளியில் தோன்றிய திவ்ய ஒளியின் பிரதி அல்ல. குழந்தையின் ஹிருதய

சந்திரனிலிருந்து வெளிப்பட்டு முகத்தில் வீசும் நிலவு! அவளுடைய கண்கள் சுடர் ஏியும் இரண்டு மீன்கனளெனப் பிரகாசித்தன. காலையிலே, அதிகாலையில், சூரியோதய காலத்தில் தாமரையொன்று மலர்வதைக் கண்டிருக்கிறீர்களா? கொஞ்சமாகத் திறந்து அது தனது காதலனைக் கண்டு இளநகையாடுவதைப் பார்த்ததுண்டா? அந்த தாமரையைப் போல மலர்ந்து, வியப்பின் சந்தோஷத்தின் இள நகை தவழ்ந்தாட ரோஹிணியின் சிறிய அழகிய வாய் சிறிது திறந்திருந்தது. "அவள் யார்? வானத்திலே அப்படிப் படம் எழுதி விளையாடும் அந்த வான ரோஹிணி எப்படி இருப்பாள்?"

குழந்தை ரோஹிணி பலகையில் சித்திரம் எழுதி விளையாடுவதுண்டு. முதலில் ஒரு படம் வரைவாள். "சீ! இது நன்றாயில்லை" என்று அதை அழித்துவிட்டு வேறு ஒன்று எழுதுவாள். அது நன்றாக இருக்கும். ஆனாலும் அதைக் கலைத்துவிட்டு வேறு ஒன்று எழுதுவாள். அதையும் துடைத்துவிட்டுப் புதிய தினுசாக மற்றொன்று வரைவாள். வானத்து ரோஹிணியும் அவ்வாறே புதிய புதிய படங்களை எழுதுகிறாள். ஆனால் அவள் அழித்து அழித்து வரையவில்லை மாற்றுகிறாள். எல்லாம் வர்ணப் படங்கள். புதிய புதிய வர்ணங்கள். ஒன்றைப் போல் மற்றொன்று இல்லை. "கணந்தோறும் நவ நவமாங்களிப்புத் தோன்றுகிறது. அந்த வானுலக ரோஹிணிக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? குழந்தை ரோஹிணிக்கும் சந்தோஷந்தான், வானுலக ரோஹிணியின் சந்தோஷத்தைப் பற்றி நினைப்பதில். சந்தியா தேவி நாணத்தினால் தலைகுனிந்து கீழ்த்திசை அடிவானத்தினின்றும் மெல்ல அடிவைத்து வானவீதியிலே வந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய வருகை ஓர் இனிய சங்கீதத்தைப் போன்றிருக்கிறது. கல்யாணி ராகத்தின் அவரோகணம் போல, அவளுடைய சௌந்தர்யம் இனிமையானது உள்ளம் கவர்வது. அது நாணத்தினால் ஆக்கப்பட்டது நிமிர்ந்து பார்க்காது ஆனாலும் மகிழ்ச்சி ஊட்டுவது. அவளுடைய நிறம் ஸப்த வர்ணங்களில் ஒன்றல்ல் அவற்றிற்குப் புறம்பானது அதன் பெயர் மாலை ஆதலால் அது மயக்கம் தருவது.

வர்ணப் படங்கள் எழுதுவது நின்றுவிட்டது. இனி வேறு வகையான சித்திரங்கள், வெள்ளை மேகத்தினால் எழுதப்படும் ஓவியங்கள். அவற்றின் விளிம்புகளில் சுடர் கலந்த வெள்ளி முலாம் பூசப்பட்டிருக்கிறது. அவை ஏன் இப்படி அங்கும் இங்கும் அலைந்துகொண்டே இருக்கின்றன? ஓரிடத்தில் இருந்தால் என்ன? ஆகாசத்திற்கு இந்த நீலவர்ணம் எப்படி வந்தது? பூமி ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு வர்ணமாக இருக்கிறதே, வானம் மாத்திரம் ஏன் இப்படி ஒரே நீலமாக இருக்கிறது? நேர் மேலே இரண்டு மேக வடிவங்கள் மெதுவாக அசைந்து கொண்டிருக்கின்றன. இரண்டிற்கும் நடுவில் நீலவானம்.

களங்கமற்றது ரோஹிணியின் உள்ளத்தைப் போன்றது. அந்த இடத்திலே, அந்த இரண்டு வெண்மையான மேகக் கூட்டங்களின் இடையிலுள்ள நீலப்பட்டாடையிலே, திடீரென்று ஒரு சுடர் தோன்றுகிறது! அடேயப்பா! அது எவ்வளவு துரிதமாகத் தோன்றிவிட்டது. கண் இமைக்கும் நேரத்தைவிடச் சீக்கிரமாக, மின்வெட்டும் நேரத்தில் அதுகூட அதிகம். ஒரு கணத்தின் ஆயிரத்தில் ஒரு பங்கு நேரத்தில் அந்தச் சுடர்பொறி பிறந்துவிட்டது!

"அம்மா! ஸ்வாமிக்கு ஒரு நட்சத்திரக் குழந்தை பிறந்து விட்டது" என்று கூவினாள் குழந்தை ரோஹிணி. கைகளைக் கொட்டுகிறாள். அவளது கண்கள் சிரிக்கின்றன. உள்ளம் களிவெளி கொள்கிறது. அவளுடைய தாய் வீட்டு வாசற்படியின் அருகில் நிற்கிறாள். அவளது கவனம் வீதியில் போவோர் வருவோர்மீது சென்று லயித்திருக்கிறது. அதோ போகும் பெண்ணினுடைய ஆடையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றாள். குழந்தை ரோஹிணியின் வார்த்தைகள் அவளுடைய செவிகளில் படவில்லை. ஆனால் குழந்தையின் சந்தோஷம் மாத்திரம் அவளுடைய மனத்தில் சென்று தாக்கி அதை ரோஹிணியினிடம் இழுத்துச் செல்லுகிறது. குழந்தையை அப்படியே விழுங்க விரும்புபவளைப் போலக் கரை புரண்டோடும் ஆசையுடன் அம்மாவின் கண்கள் குழந்தையைப் பார்க்கின்றன. வான வெளியிலே இருள் பரவுகிறது. இருளும் அழகாகத் தான் இருக்கிறது. அதிலும் இனிமை இருக்கிறது மாதாவின் ஸ்நேகத்தைப் போன்ற இனிமை. ஒன்றன்பின் ஒன்றாக நட்சத்திரங்கள் பிறந்துகொண்டே இருக்கின்றன. அப்பா! எத்தனை நட்சத்திரங்கள்! குழந்தை ரோஹிணியால் அவற்றை எண்ண முடியவில்லை. அவை பிறக்கும் வேகந்தான் என்ன! அந்த வேகத்தைக் குழந்தையின் சிறிய மனம் தொடர்ந்து செல்வது ஸாத்யமில்லை.

"வா கண்ணே! உள்ளே போகலாம். இருட்டிப் போய்விட்டது என்று அம்மா அழைக்கிறாள். இரு அம்மா போகலாம், மானத்தைப் பாரு. எவ்வளவு அழகாயிருக்கு!" என்று நிற்கச் சொல்லுகிறாள் குழந்தை. "ஆமாம் அழகாய்த்தான் இருக்கிறது. இருட்டிப் போய்விட்டதே. இனிமேல் இப்படி வாசலில் நிற்கக் கூடாது. வா அம்மா உள்ளே என்று மறுபடி அழைக்கிறாள் அம்மா. அம்மா!" "உம்". "மானம் இப்போ, எதைப்போலே இருக்கு சொல்லட்டுமா?" "சொல்லு". "உன் முகத்தைப் போல. நீ என்னை முத்தமிடுகிறாயே, அப்போ உன் முகம் இந்த மானத்தைப் போலேயே இருக்கு." அம்மாவுக்கு அதன் பொருள் விளங்கவில்லை. அது சரியென்று தோன்றவில்லை. ஆனால் அந்த வார்த்தைகளில் இருக்கும் ஏதோ ஆதிமூம் ஒன்று, 'அது வாஸ்தவந்தான்" என்று

சொல்லியது அவளுடைய மனத்தில்ர்ழ அம்மா சட்டென்று கீழிறங்கிச் சென்று குழந்தையை இழுத்துக் கட்டிலடங்காத காதலுடன். முத்தாடினாள். அம்மாவுக்கு வீட்டில் வேலை இருக்கிறது. மற்றொருமுறை ”உள்ளே வாடா குஞ்சு” என்று சொல்லிவிட்டு வீட்டினுள் சென்றுவிட்டாள். குழந்தை ரோஹிணி ‘சீரவிருஞ்சுடர் மீனொடு வானத்துத் திங்களையும் சமைத்தே ஓரடியாக விழுங்கிடும் உள்ளச் செல்வம்“ படைத்து அப்படியே நின்றிருந்தாள்.

வெளியே சென்றிருந்த ஸோமஸுந்தரம் வீட்டிற்குத் திரும்பி வந்தார். வாசலில் தனியாக வானத்தின் அழகில் லயித்து நின்ற ரோஹிணியைக் கண்டார். “ரோஹிணிக்குஞ்சு! என்ன அம்மா பார்க்கிறாய்? உள்ளே போகலாம் வா” என்று அழைத்தார். குழந்தை, ”இரு அப்பா! அந்த மானம் எவ்வளவு அழகாயிருக்கு! அவ்வளவு குழந்தைகளையுடைய ஸ்வாமிக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கும் அப்பா” என்றாள். அதற்குள் ஸோமஸுந்தரத்தின் மனத்தில் வேறு ஏதோ சிந்தனை வந்துவிட்டது. குழந்தை சொல்லியது சரியாகக்கூடக் காதில் விழவில்லை. ”உம்” என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றார். அடுத்த வினாடி ஒரு விண்மீன் நிலை தவறிச் சுடர்வீசிக் கொண்டு வானத்தினின்றும் கீழே விழுந்து மறைந்தது. அதன் பிரயாணம் சில வினாடிகளே கண்ணுக்குத் தெரிந்தது. குழந்தையின் கண்களில் கண்ணீர் பெருகியது. இரண்டு கண்களினின்றும் இரண்டு நீர் வடிவமான முத்துக்கள் கீழே உதிர்ந்தன. அந்தச் சின்னஞ்சிறு ஹிருதயத்தில் விவரிக்க இயலாத, சுருக்கென்று தைக்கும், ஒரு வேதனை காணுகின்றது. குழந்தை விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அழுகையினிடையில், “அப்பா!” என்று இரும்பை உருக்கும் குரலில் கூப்பிட்டுக் கொண்டே வீட்டினுள் சென்றாள். ஸோமஸுந்தரம் அப்பொழுதுதான் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து அருகிலிருந்த மேஜையின் மீதிருந்து ஒரு புஸ்தகத்தைக் கையில் எடுத்தார். குழந்தையின் குரலைக் கேட்டவுடன் அவருடைய கையினின்றும் புஸ்தகம் தொப்பென்று கீழே விழுந்தது. அவருடைய ஹிருதயம் ஆயிரம் சுக்கல்களாகச் சிதறி விழுந்ததுபோல் இருந்தது. உடல் பதைத்தது.

கண்ணே! என் ராசாத்தி அல்லவா என் ”என்னடா ரோஹிணிக்குஞ்சை யார் என்ன செய்தார்கள்?”அப்பா!” என்று படப்படப்புடன் கேட்டுக் கொண்டே குழந்தையை வாரித் தூக்கித் தோளின்மேல் சாத்திக் கொண்டார். “அப்பா! எனக்குத் தெரிஞ்சுப்போச்சு” என்று விக்கல்களுக்கும் விம்மல்களுக்கும் இடையே சொன்னாள் குழந்தை. “என்னடா கண்ணே,

தெரிஞ்சுபோச்சு?" "அப்பா நம்ப ஊரிலே, யாரோ ஒரு பொய் சொல்லிவிட்டா விக்கல்கள், விம்மல்கள், ஹுங்காரத்துடன் அழுகை. "ஏன் அம்மா அப்படித் தோன்றுகிறது உனக்கு?" நீதானே அப்பா சொன்னே, நாம் ஒரு நிஜம் சொன்னால் ஒரு நக்ஷத்திரம் பிறக்கிறதுன்னு அப்போ... ஒரு நக்ஷத்திரம்... கீழே விழுந்தா... யாரோ ஒரு பொய்... சொல்லவிட்டான்னுதானே அர்த்தம்? ஸ்வாமியினுடைய... மனசு... இ இப்போ... எப்படி இருக்கும் அப்பா?... எனக்கே... நிறைய... அழ வரதே... என்று சொல்லிவிட்டு அழத் தொடங்கினாள் அந்தக் கபடமற்ற குழந்தை. அந்தப் பச்சை உள்ளத்தில் எழுந்த துக்கத்தையும் அதன் துன்பத்தையும் நாவின் மொழிகளில் விவரிப்பது இயலாத காரியம். அது ஹிருதயம் ஹிருதயத்தினோடு தனது சொந்த பாஷையில் உணர்த்தவேண்டிய புனிதமான ஒரு துக்கம்.

**ஆசிரியரைப் பற்றி**

பி.எஸ்.இராமைய்யா வத்தலக்குண்டு என்னும் இடத்தில் 1905ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்க காலத்துக் கதை எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் இவர். 'மலரும் மணமும்' என்னும் கதையில் தொடங்கி எண்ணற்ற கதையைப் படைத்தவர். மணிக்கொடி இதழின் ஆசிரியராக விளங்கியவர் இராமையா. பூவும் பொன்னும், புதுமைக் கோவில் முதலான பல கதைத் தொகுதிகள் இவர் பெயரைச் சொல்வன. பரந்துபட்ட வாழ்க்கை அனுபவங்களும், சிறந்த வருணனைத் திறங்களும் இவரது கதைக்கு அழகு தந்தன. இராமையா புதின ஆசிரியராகவும், நாடக ஆசிரியராகவும் இதழாசிரியராகவும் திகழ்ந்தவர் ஆவார்.

# 3. விடியுமா?

**- கு.ப. இராசகோபாலன்**

தந்தியைக் கண்டு எல்லோரும் இடிந்து உட்கார்ந்து போனோம். அதில் கண்டிருந்த சேதி எங்களுக்குத் தெளிவாகப் புரியவில்லை. 'சிவராமையர் டேஞ்ஜரஸ்' என்ற இரண்டு வார்த்தைகளே இருந்தன. தந்தி, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருந்தது. என் தமக்கை இரண்டு மாதங்களுக்கு முன்புதான் சென்னையிலிருந்து வந்தாள். அப்பொழுது எங்கள் அத்திம்பேர் நன்றாகக் குணமடைந்து விட்டார். காசத்தின் சின்னம் கொஞ்சங்கூட இல்லையென்று பெரிய பெரிய மருத்துவர்கள் உறுதியாகச் சொல்லி விட்டார்கள். ஓங்கித் தலையில் அடித்தது போல குஞ்சம்மாள் பிரமை தட்டிப்போய் உட்கார்ந்தாள். எங்கள் எல்லோருடைய மனத்திலும் ஒரு பெருத்த போர் நடந்து கொண்டிருந்தது. "இருக்காது!" ஏன் இருக்கக் கூடாது? இருக்கும்!" என்று இரண்டு விதமாக மனத்தில் எண்ணங்கள் உதித்துக் கொண்டிருந்தன. 'இருக்கும்!" என்ற கட்சி, தந்தியின் பலத்தில் வேரூன்றி வலுக்க வலுக்க, 'இருக்காது! என்ற கட்சி மூலை முடுக்குகளிலெல்லாம் ஓடிப் பாய்ந்து தனக்குப் பலம் தேடத் தொடங்கியது.

தந்தியில் கண்டிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்தோம். அதில் ஒன்றும் தவறு இருக்கவே முடியாது. சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்துதான் வந்திருந்தது. சந்தேகமில்லை. காலையில் அடித்திருக்கிறார்கள். குஞ்சம்மாள் பேருக்குத்தான் தவறு எப்படி இருக்க முடியும்? ஆனால், இவ்வளவு விரைவில் என்ன நேர்ந்திருக்க முடியும்? மூன்று நாட்களுக்கு முன்புதானே கடிதம் வந்தது? உடல் நலம் கெட்டிருந்தால் அதில் எழுதாமல் இருப்பாரோ? என தமக்கையும் நானும் மாலை ரெயிலில் சென்னைக்குப் புறப்பட்டோம். அதுதான் அன்று கும்பகோணத்திலிருந்து சென்னை போகும் முதல் வண்டி. புறப்படுதற்கு முன் நல்ல வேளை பார்த்துப் பரஸ்தானம் இருந்தோம். எங்கள் ஜோதிடர் "ஒண்ணும் இருக்காது. கிரகம் கொஞ்சம் வருத்தும், அவ்வளவுதான்!" என்றார். அம்மா, தெய்வங்களுக்கெல்லாம், நினைவாக ஒன்றைக்கூட விடாமல் வேண்டிக் கொண்டு, மஞ்சள் துணியில் காணிக்கை முடித்து வைத்தாள். குஞ்சம்மாளுக்கு மஞ்சள் கிழங்கு, குங்குமம்,பூ, வெற்றிலை பாக்கு எல்லாம் மறந்து போகாமல் மடிநிறையக் கட்டிக் கொடுத்தாள். பசியுடன் போகக் கூடாது என்று புறப்படும்பொழுது கட்டாயப்படுத்தி இருவரையும் சாப்பிடச் செய்தாள். குஞ்சம்மாள், இயந்திரம்போலச் சொன்னதையெல்லாம் செய்தாள் குலதெய்வத்தை வணங்கச் சொன்னாள். குஞ்சம்மாளும் அப்படியே செய்தாள்.

அவள் கதிகலங்கிப் போயிருந்தாள் என்பது அவள் பேச்சற்றுப் போயிருந்ததிலிருந்தே நன்றாகத் தெரிந்தது.

அவளுடைய கலகலப்பு, முதல் தடவையாக அன்று அங்கே அடங்கி விட்டது. அம்மா வாசலில் போய்ச் சகுனம் பார்த்தாள். காவேரியிலிருந்து அடுத்த வீட்டுச் சுந்தரி குடத்தில் நீர் எடுத்துக் கொண்டு எதிரே வந்தாள். நல்ல சகுனந்தான். "ஒண்ணும் இருக்காது! நமக்கேன் அப்படியெல்லாம் வரும்? நாம் ஒருத்தருக்கும் ஒண்ணும் கெடுதல் எண்ணவில்லை" என்றெல்லாம், அம்மா அடிக்கடி தன்னையும் பிறரையும் சமாதானம் செய்து கொண்டிருந்தாள். ரெயில் ஏறுகிறபொழுது மணி சுமார் எட்டு இருக்கும். இரவு முழுதும் போயாக வேண்டுமே என்று துடித்தோம். போய் இறங்குவதற்குமுன் செய்வதற்கு ஒன்றுமில்லை என்றதால், கொஞ்சங் கொஞ்சமாகத் துடிப்பும் கலக்கமுங்கூட மட்டுப்பட்டன. இரண்டு சாளரங்களின் அருகில் நேர் எதிராக இரண்டு பெஞ்சுகளில் உட்கார்ந்தோம்.

"நீ புறப்படுகிறபோது ஒன்றுமே இல்லையே. அக்கா?" என்றேன், ஏதாவது பேச்சுக்கொடுக்க வேண்டும் என்று? "ஒண்ணுமில்லையே! இருந்தால் வருவேனா?" என்று அவள் ஏக்கம் நிறைந்த குரலில் பதில் சொன்னாள். "அதற்குள் திடீரென்று ஒன்றும் ஏற்படுவதற்குக் காரணமே இல்லையே!" எது எப்படியானாலும், மனசைச் சில மணி நேரங்களாவது ஏமாற்றித் தத்தளிப்பைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம் என்று நினைத்ததுபோலப் பேச்சு வெளிவந்தது. "நான், அந்த நோன்புக்காக இங்கே தாமதம் செய்யாமல், அப்போதே போயிருக்க வேண்டும்!" "ஒரு வேளை, அக்கா, நோன்புக்காக நீ இங்கே இருந்துவிட்டது தான் அத்திம்பேருக்குக் கோபமோ? அவர் உடனே வரும்படியாக எழுதியிருந்தார். நாம் ஒரு வாரத்தில் வ வருவதாகப் பதில் எழுதினோம். அதற்காகத் தான் இப்படித் தந்தி அடித்து விட்டாரோ?" "ஆஸ்பத்திரியிலேயிருந்து வந்திருக்கே?" "ஆஸ்பத்திரி பேரை வைத்து அத்திம்பேரே அடிக்கக் கூடாதா?" அப்படி அடிக்க முடியுமோ?" குஞ்சம்மாள் குரலில் ஆவல் இருந்தது. "ஏன் முடியாது? தந்தியாபீசில்" "ஒரு வேளை அப்படி இருக்குமோ?" என்று கேட்டபொழுது குஞ்சம்மாளின் முகம் சற்றே மலர்ந்து விட்டது.

"அப்படித்தான் இருக்க வேண்டும். இப்படித் திடீரென்று ஒன்றும் ஏற்படக் காரணமே இல்லை. முந்தின நாள் தானே கடிதம் வந்தது?" "ஆமாம்! அதில் உடம்பைப் பற்றி ஒண்ணுமே இல்லையே!"ஆயுசு "தந்தி அடித்தால் தான் உடனே புறப்பட்டு வருவோம் என்றுதான் அடித்திருக்கிறார். வீட்டிலிருந்து அடித்தால்கூட அவ்வளவு தாக்காது என்று

ஆஸ்பத்திரி பேரை வைத்து அடித்திருக்கிறார்." "அப்படி அடிக்க முடியுமாடா, அம்பி? அப்படி இருக்குமா?" என்று மறுபடியும் குஞ்சம்மாள் சந்தேகத்துடன் கேட்டாள். அவள் அப்படிக் கேட்டபொழுது, முடியாது என்று எனக்குத் தெரிந்திருந்தால்கூடச் சொல்ல மனம் வந்திருக்குமோ, என்னவோ? "நீ வேண்டுமானால் பாரேன்! எழும்பூர் ஸ்டேஷனில் வந்து இருக்கப் போகிறார்" என்றேன்.

மனத்தில், ஆழத்தில் பீதி அதுபாட்டிற்குப் புழுபோலத் துளைத்துக் கொண்டே இருந்தது. மேலே மட்டும் அமைதி. கொஞ்ச நேரத்திற்கு ஒரு தரம் அந்தத் திகில் மேல் மட்டத்திற்கு வந்து தலையெடுக்கும் உடம்பு பதறும் நெஞ்சு உலரும் அடிவயிறு கலங்கும் முகம் விகாரம் அடையும் மறுபடியும் மெதுவாக அமைதி ஏற்படும், பலம் மிகுதியாகும் பயத்தைக் கீழே அமுக்கிவிடும். சுகமோ துக்கமோ எந்த நிலைமையிலும் நீடிக்க முடியாது என்பதற்கு மனித சுபாவத்தில் இதுவும் ஓர் அத்தாட்சியோ? ரெயில் வண்டி வெறி பிடித்ததுபோல் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தது எங்கேயோ சென்னையில் விடியப்போகும் காலையை நோக்கி, கனவேகமாகப் போய்க் கொண்டிருந்தது போடு இருந்தது. துக்கத்தில் தலையெடுக்கும் துணிவுபோல் தொலை இருளில் அந்த ஒளித்தொடர் விரைந்து சென்று கொண்டிருந்தது. சென்னை போய்ச் சேரும்பொழுது, எங்கள் கவலையும் அந்த இருளைப்போலப் பின் தங்கிவிடாதா? நிம்மதி, காலையைப்போல, அங்கே எங்களை வந்தடையாதா? இருள், நிச்சயமாக, நம்கூட வராது! சென்னையில் காலைதான்! - இவ்வாறெல்லாம் பேதை மனம் தன்னைத் தேற்றிக் கொண்டே இருந்தது. குஞ்சம்மாள் மூட்டையிலிருந்து வெற்றிலை பாக்கை எடுத்து எனக்குக் கொடுத்துத் தானும் போட்டுக் கொண்டாள். எங்களவர்களுக்குள்ளேயே குஞ்சம்மாள் அதிக அழகு என்று பெயர். நல்ல சிவப்பு ஒற்றை நாடியான உடல்வாகு. அவளுக்குத் தெருவிலேயே ஒரு செல்வாக்கு உண்டு. அன்று என்னமோ, இன்னும் அதிகமாக, அவள் ஒளிர்ந்து கொண்டிருந்தாள். அவளது முகத்தில் என்றுமே இல்லாத ஓர் ஏக்கம் அன்று முதல்முதலாகத் தென்பட்டதாலோ என்னவோ, அவள் அழகு மிளிர்ந்து தோன்றினாள்.

குஞ்சம்மாளுக்குப் பூ என்றால் உயிர். யார் கேலி செய்தாலும் பொருட்படுத்த மாட்டாள். தலையை மிஞ்சிப் பூ வைத்துக் கொள்ளுவாள். ஆனால் அன்று அவள் தலையில் வைத்துக் கொண்டிருந்த பூவைப்போல, அது என்றும் சோபித்ததில்லை என்று என் கண்களுக்குப்பட்டது. வெற்றிலைக் காவி அவளுடைய உதடுகளில் அன்றுதான் அவ்வளவு சிவப்பாகப் பிடித்திருந்தது போல் இருந்தது. அயர்வில்தான் அழகு

பரிமளிக்குமோ? அல்லது..? கடைசியாக, அணைவதற்கு முன்னால் விளக்கு...? இல்லை! இல்லை! குஞ்சம்மாள் அன்று என்னவோ அப்படி இருந்தாள். வெற்றிலையைப் பாதி மென்றுகொண்டே, ”அம்பி, உன் அத்திம்பேருக்கு வாழ்க்கைப்பட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்?” என்றாள் குஞ்சம்மாள்.

அவளுடைய கண்களிலிருந்து நீர் மளமளவென்று பெருகிற்று. ”என்றைக்கும் பிடிவாதம்! என்றைக்கும் சண்டை! நான் அழாத நாள் உண்டா? என் வாழ்வே அழுகையாக” என்று உணர்ச்சி வேகத்தில் தொடங்கியவள் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். ”எதிலாவது நான் சொன்ன பேச்சைக் கேட்டது உண்டா? எப்படியோ உயிருடன் இருந்தால் போதுமென்று தோன்றிவிட்டது, போன தடவை உடம்புக்கு வந்தபோது!” இருவரும் வெகுநேரம் மௌனமாக இருந்தோம். ஆனால் மனம் மட்டும் அவ்வாறு இருக்கவில்லை. நல்ல நிசிவேளை. வண்டியில் மக்கள் உட்கார்ந்து கொண்டும் படுத்துக்கொண்டும் பலவிதமாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வண்டி ஒரு சின்ன ஸ்டேஷனில் நின்றதும், சிலர் எழுந்து இறங்கிப் போவார்கள், மௌனமாகப் பிசாசுகள்போல. அப்பொழுதுதான் தூங்கி எழுந்த சிலர், “இதென்ன ஸ்டேஷன்” என்று தலையை வெளியே நீட்டிக் கேட்பார்கள். போர்ட்டர் ஒருவன் ஏதாவது ஒரு ஸ்டேஷனின் பெயரை அரைகுறையாகத் தூங்கி வழிந்துகொண்டே சொல்லுவான். மறுபடியும் வண்டி பூரானைப்போல ஓடத் தொடங்கும். சுமார் ஒரு மணிக்கு வண்டி விழுப்புரம் ஸ்டேஷனுக்குள் ஆர்ப்பாட்டத்துடன் போய் நின்றது. அதுவரையிலும் வண்டியில் அமைதி நிலவியது. ஆனால் இப்போது அந்த ஸ்டேஷனில் கூட்டமும் கூக்குரலும் மிகுதியாயின. அது வரையில் காலியாகவே வந்த எங்கள் பலகையில் சாமான்கள் நிறைந்தன. நகரத்தார் இனத்தைச் சார்ந்த பெண்மணி ஒருத்தி, பெண் குழந்தையும் புட்டியுமாக என் தமக்கையின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

அவள் அணிந்திருந்த முதல் தரமான வைரங்களுடன் அவளது முகமும் ஒளிர்ந்தது. ஏதோ ஓர் உள்ளப் பூரிப்பில் அவள் தன்னையே மறந்து தன் குழந்தையுடன் கொஞ்சினாள். வண்டி புறப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் என் தமக்கையின் பக்கம் தன் புன்னகை பூத்த முகத்தைத் திருப்பி, ”எங்கிட்டு போறீக, அம்மா?” என்று கேட்டாள். என் தமக்கை சுருக்கமாக, “பட்டணம்” என்றாள். ”நானும் அங்கேதாம்மா வாரேன்!” என்று தொடங்கிய அந்தப் பெண் வரிசையாகக் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருந்தாள். பிறகு தன் பக்கத்திலிருந்த ஓலைப் பெட்டியிலிருந்து கொஞ்சம் மல்லிகைப்பூ எடுத்துக்

குஞ்சம்மாளுக்குக் கொடுத்தாள். என் தமக்கை மெய்சிலிர்த்துப் போனாள். வெகு ஆவலுடன் அந்தப் பூவை வாங்கித் தலையில் வைத்துக் கொண்டாள். அம்பாளே அந்த உருவத்தில் வந்து தனக்குப் பூவைக் கொடுத்து, ”கவலைப்படாதே! உன் பூவிற்கு ஒரு நாளும் குறைவில்லை!” என்று சொன்னது போல எண்ணினாள்.

அதுவரையில் அவளுக்கு ஒவ்வொரு வார்த்தை பதில் சொல்லிக் கொண்டு வந்தவள், உடனே இளகி, அவளிடம் முழு விவரத்தையும் சொன்னாள். “மகாலட்சுமி போல இருக்கீங்கம்மா! ஒங்களுக்கு ஒண்ணும் கொறவுவராது!” என்று அந்தப் பெண் சொன்னதைத் தெய்வ வாக்காக எடுத்துக் கொண்டாள் குஞ்சம்மாள். அந்த ஆறுதலில் சிறிது நேரம் அவளுடன் கவலை மறந்து பேசிக் கொண்டிருந்தாள். திடீரென்று நினைவு வந்துவிட்டது. ஏதோ பெருத்த குற்றம் செய்தவள் போலத் திகில் அடைந்தாள். ”ஐயையோ! பைத்தியம் போல் இப்படிச் சிரித்துக் கொண்டு பேசிக்கொண்டிருக்கிறேனே!” என்று எண்ணினவள் போல அவள் கலவரம் அடைந்தது நன்றாகத் தெரிந்தது. வண்டி போன வேகத்தில் விர்ரென்று அடித்த காற்றிலும் அவளுடைய முகத்தில் வியர்வை தென்பட்டது. ஆனால் எவ்வளவு நேரந்தான் கவலைப்பட முடியும்? கவலையால் ஏற்பட்ட அசதியிலேயே எங்களை அறியாமல் கண்ணயர்ந்தோம். தூக்கத்தில், உறக்கமும் நினைவு மறதியும் சேர்ந்து தான் வாழ்க்கைக்கு ஒரு சிறு போதையாகித் தாபத்தை தணிக்கின்றனவோ? வண்டி செங்கற்பட்டை நெருங்குகிற சமயம். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தோம். கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது. வண்டி ஏதோ ஒரு குக்கிராமத்தைக் கடந்து போய்க் கொண்டிருந்த பொழுது கோழி கூவியதுகூட காதில் வந்து பட்டது. “அப்பா! விடியுமா?“ என்கிற நினைப்பு ஒரு பக்கம். “ஐயோ! விடிகிறதே! இன்று என்ன நேரப் போகிறதோ?“ என்ற நினைப்பு மற்றொரு பக்கம். இரவின் இருட்டு அளித்திருந்த ஆறுதலைச் சிறிது சிறிதாகத் தலைகாட்டிய வெளிச்சம் பறிக்க வருவதுபோல இருந்தது.

எங்கேயோ, கண்காணாத தொலைவில் உருவடைந்த ஒரு காட்சியில் ஈடுபட்டவளாய் நிலைகுத்திய பார்வையுடன் குஞ்சம்மாள் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். ”செங்கற்பட்டில் பல் துலக்கிக் கொண்டு காபி சாப்பிடுவோமா?” என்று கேட்டேன். ”எல்லாம் பட்டணத்தில்தான்!” என்று சொல்லி விட்டாள் குஞ்சம்மாள். பக்கத்தில் நகரத்தார் பெண் கவலையற்றுத் தூங்கிக் கொண்டிருந்தாள். ”இதோ ஆயிற்று, இதோ ஆயிற்று!” என்று சொல்வது போல வண்டி தாவிப் பறந்து கொண்டிருந்தது. ஆனால்

எங்களுக்கு என்னவோ பட்டணம் நெருங்க நெருங்க, வண்டி வேண்டுமென்றே ஊர்வது போல இருந்தது. எழும்பூர் வந்தது கடைசியாக... ஸ்டேஷனில் யாருமில்லை அதாவது எங்கள் அத்திம்பேர் இல்லை. எல்லோரும் இருந்தார்கள். “ஆனால் அவர் ஸ்டேஷனுக்கு எதற்காக வர வேண்டும்? அங்கே எதிர்பார்ப்பது சரியில்லைதான்“ என்று அப்பொழுது தோன்றிற்று.

வீட்டுக்குப் போனோம். வீடு பூட்டியிருந்தது. உடம்பு சரியில்லைதான்! சந்தேகமில்லை இப்பொழுது! ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போனோம். அரை மணி நேரம் துடித்த பிறகு ஒரு சிப்பந்தி வந்தார். ”நீங்கள் கும்பகோணமா?” என்றார். “ஆமாம்” என்றேன். ”நோயாளி நேற்றிரவு இறந்து போய்விட்டார்” என்று அவர் சாவதானமாகச் சொன்னார். ”இறந்து? அது எப்படி? அதற்குள்ளாகவா?” அப்பொழுதும் சந்தேகமும் அவநம்பிக்கையும் விடவில்லை. ”சிவராமையர்?” ”ஆமாம், சார்!” ஒரு வேளை...” ”சற்று இருங்கள். பிரேதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்” என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு அவர் தம் அலுவலைக் கவனிக்கப் போனார். சிறிதுநேரம் கழித்துப் பிரேதத்தைப் பெற்றுக் கொண்டோம். அப்பொழுது, அதைப் பார்த்தவுடன், நிச்சயமாயிற்று! ஒரு வழியாக மனத்திலிருந்த பயம் நீர்த்தது திகில் தீர்ந்தது. பிறகு...? விடிந்து விட்டது.

**ஆசிரியரைப் பற்றி**

புதுமை வேட்கை கொண்ட புரட்சி எழுத்தாளர் கு.ப.இராஜகோபாலன். இவர் சிறுகதை உலகில் தனக்கெனத் தனியிடம் பெற்றவர். இவரது சிறுகதைகளில் இன்றைய சிறுகதையின் முழு வடிவத்தையும் காணலாம். கற்பனையும் உளவியலும் இவரது கதைகளில் மிகுந்து காணப்படும். மனித மனதில் எழும் இன்ப துன்ப உணர்வுகளையும் நிராசைகளையும் நிறைவேறாக் கனவுகளையும் கலைநயத்தோடு சொற்சித்திரமாகத் தீட்டும் திறன் பெற்றவர் இவர். இவரது கதைகளில் குடும்ப உறவுகள், அதில் ஏற்படும் பிரச்சனைகள் ஆகியன கருவாக அமைந்திருப்பதையும் காணலாம். இவர் எழுதிய ‘விடியுமா?’ என்ற சிறுகதை தமிழ்ச் சிறுகதைகளின் இலக்கணமாக - மாதிரியாகக் காணப்படுகிறது. இவர் புனர்ஜென்மம், கனகாம்பரம், காணாமலே காதல், சிறிது வெளிச்சம் சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். ‘அடி மறந்தால் ஆழம்’, ‘நடுத்தெரு நாகரிகம்’ என்ற சிறுகதைகள் கு.ப.ரா.வின் சிறந்த படைப்புகளாகக் கருதப்படுகின்றன. இவர் சிலகாலம் கிராம ஊழியன் பத்திரிக்கையில் ஆசிரியராகப் பணியாற்றினார். அன்றாட நிகழ்ச்சிகளையும் சுவைபடச் சொல்வதில் இவர் வல்லவர்.

# 4. பெரியநாயகி உலா

**- ந. பிச்சமூர்த்தி**

நூறு வருஷமாகக் கால் சதங்கை ஊமையாகவே இருந்தது. சதங்கையை அணிந்த பெரியநாயகிக்கு நின்று நின்று கால்கள் கடுத்து விட்டன. கருப்பையைப் போன்ற இருளும் கண்மூடா விளக்கொளியும் தவிர அவளுக்குத் துணை இல்லை. நூறு வருஷமாகத் தனித்து நின்ற அலுப்பு. வெளியே சென்று வந்தாலென்ன? ஒரு சின்ன உலா! எண்ணமே செயல்தானே? எண்ணம் பிறந்ததும் கால்கள் நகர்ந்தன. கல், கல் என்று சதங்கைகள் ஒலித்தன. அர்த்த மண்டடத்து வாயிலண்டை உருவிய கத்தியும் கோரைப் பல்லும் மின்ன நின்று கொண்டிருந்த ஜயையும் விஜயையும், "கோயிலுக்குள் யாருமே போகவில்லையே! சதங்கை ஒலி ஏது?" என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். "பெரியநாயகி நின்று கொண்டுதானே இருக்கிறாள். - நம்மைப்போல்? சதங்கை ஒலி எங்கிருந்து வந்தது?" இந்தச் சந்தேகம் முளைத்ததும் கழுத்தைத் திருப்பி அர்த்த மண்டபத்தைப் பார்க்க முடிந்தது. எண்ணமே செயல்தானே! என்ன ஆச்சரியம்! பீடத்தை விட்டு இறங்கி, பெரியநாயகி வெளியே வந்து கொண்டிருந்தாள். வாயில் காப்பாளர்களுக்குப் பெரியநாயகியின் செயல் புரியவில்லை.

ஆனால் எஜமானியைக் கேட்க வேலைக்காரிகள் யார்? கேட்க முடியவும் இல்லை. தேவதாரு மரத்துக்கு மேலே, காலைக் கதிரொளி பட்ட சிகரம் போல், பெரியநாயகியின் அழகும் அழலும் ஊமையாக்கும் வியப்பாய் எழுந்தன. வாயில் காப்பாளர்கள் வாயடைத்து நின்றார்கள். "அடீ ஜயை, விஜயை! இப்படியே உலாச் சென்று வருவோம்". "நீங்கள் உண்டாக்கிய உலகில் நீங்களே உலாச் சென்று பெற வேண்டிய பிராண சக்தி இருக்கிறதா? நீங்களே இழுக்க வேண்டிய கடலமுதம் இருக்கிறதா?" என்றாள் ஜயை. "நாம் பயிர் செய்த தோட்டத்தைத்தானே பார்க்கவேண்டும்? சிருஷ்டி செய்து எத்தனை யுகமாயிற்று! எவ்வளவு மேதாவிகளாக வளர்ந்து விட்டாலும் நான் தாங்கிய விதைதானே? உலாச் சென்று வந்தால் என்ன தவறு? வாருங்கள்" வாயில் காப்பாளர்கள் வாளை உறையிலிட்டு, கோரைப் பற்களைச் சுருக்கிக் கொண்டு கூடவே புறப்பட்டனர். "ஆனால் உங்களுக்கு எல்லாம் தெரியுமா?" "வாயில் காப்பாளருக்கு வெளியே செல்ல வேண்டிய வேலை உண்டா?" "கோயில் பள்ளியறைக்குப் பிறகு எங்களுக்கு ஓய்வுதானே?" கண் மறைந்தால் விடுமுறையா? காவலாளிகளை நம்பினால் இப்படித்தானா? போகட்டும்."

‘க-ர் க-ர்’ என்று சதங்கை ஒலிக்கப் பெரியநாயகி நடக்கத் தொடங்கினாள். காப்பாளர்கள் மிடுக்குடனே முன்னே சென்றனர். கல் தூண்களில் இருந்து யானைகள் வியப்பினால் காதுகளை நெறித்தன் கண்களைச் சுழற்றின. திறந்த வாய்களை உடைய யாளிகள் பயத்தினால் வாயை மூடிக்கொண்டன: சிங்கங்கள் பிடரி மயிர்களைச் சிலுப்பிக் கொண்டு, முறுக்குக் கம்பி வால்களைப் பாவட்டாக்களைப் போல் ஆட்டின, பெரியநாயகி கையை அமர்த்திய பிறகுதான் அரவங்கள் அடங்கின. திருக்குளத்து நீரலைகள் மட்டும் படிக்கட்டின் ஓரங்களில் வந்து சதங்கை ஒலியை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தன. கோயிலின் கிழக்குக் கோபுரவாயிலை மெல்லத் தாண்டிப் பெரிய நாயகி வீதியில் வந்து ஒரு நிமிஷம் நின்றுவிட்டாள். ஒரே திகைப்பு! கர்ப்பக்கிருக இருளையே பார்த்துப் பழகிய கண்களுக்குத் தெரு வெளிச்சம் ஒருவாறு அமைதி பெற்ற பிறகு வெகுதூரம் நடந்து செல்ல வில்லை. அதற்குள் தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்த பெண்களின் கூட்டம் ஒன்று பெரியநாயகியைச் சுட்டிக் காட்டிக்கொண்டு தெருவில் இறங்கிவிட்டது. பெரியநாயகியின் நடையில் தயக்கம் கண்டது.

முதல் மாது : ”இது யார் புதிதாக இருக்கிறதே?”

இரண்டாவது மாது: ”அதுதான் தெரியவில்லை. அம்பாள் பெரியநாயகியை அச்சில் வார்த்து வைத்தாற்போல் இருக்கிறதே!”

மூன்றாவது மாது : ”உன் பிதற்றல் உன் மண்டையோடுதான் போகும் போலிருக்கிறது. உலகமே உனக்குப் பெரியநாயகிதான்! சுவாமி தரிசனம் செய்ய யாரோ கோயிலுக்கு வந்துவிட்டுப் போனால், அவள் உனக்குப் பெரியநாயகி ஆகிவிடுகிறாள்! வருகிற போகிற பெண் பிள்ளைகள் யார் என்று விசாரிப்பதுதானா நம்முடைய வேலை? அழகாய் இருக்கிறாள். நமக்கும் நாலு நகை இருந்துவிட்டால் நம்மைப் பற்றியும் நாலுபேர் கேட்பார்கள்”.

முதல் மாது: “ஜோதிஷம் பார்ப்பானேன்? நானே கேட்டுவிட்டு வந்துவிடுகிறேனே!” இப்படிச் சொல்லிக்கொண்டே அந்த மாது இவர்களை நோக்கி அவசரமாக வந்தாள். மெய்க்காப்பாளர்களில் ஒருவரைத் தொட்டு ”யார் இது?” என்று கேட்டாள்.

‘அம்மாதான் கனககிரி ஊமை ராணி’ என்று வாயைப் பொத்திக் காட்டிவிட்டு ஜயை நகர்ந்தாள். பெரியநாயகியும் மற்றொரு மெய்க்காப்பாளரும் பின் தொடர்ந்தனர். அந்தத் தெருதான் சந்நிதி வீதி. இருபுறத்திலும் சில வீடுகளே இருந்தன. இருந்தாலும் அழகிய

புது வீடுகள். பாதிக்கு மேற்பட்டு வக்கீல் வீடுகள். வீட்டு வாசல் திண்ணையில் சின்னச் சாய்வு மேஜையும் வக்கீல் குமாஸ்தாவுமாகக் காட்சி அளிக்காமல் இல்லை. ஒரு வக்கீல் வீட்டுத் திண்ணையில் கும்பலாகக் கட்சிக்காரர்கள் உட்கார்ந்திருந்தனர். குமாஸ்தா மூக்குக் கண்ணாடியைக் கட்டி இருந்த கயிற்றை ஏதோ ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தார்.

விஜயைக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, பெரிய நாயகியின் கால் சதங்கைகளைக் கழற்றி மடியில் கட்டிக்கொண்டாள். “அடி ஜயை, இங்கென்ன இவ்வளவு பேர் உட்கார்ந்திருக்கிறார்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?” ”இதற்குப் பெயர்தான் வக்கீல் வீடு.” ”அப்படி என்றால்?” ”நான் சொன்னால் உங்களுக்குப் புரியாது”. ”ஏன் புரியாது? புரியாவிட்டால் ஆலமரத்துப் பித்தைக் கேட்டுக் கொள்கிறேன். ”சொத்து இருக்கிறதே”. “அப்படி என்றால்? ”அது பெரிய கதை. அதைப் பற்றிப் பிறகு சொல்லுகிறேன். இப்பொழுது இதைப்பற்றி மட்டும்... சொத்துக்காக இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டால் மண்டை உடையும். மண்டைக்கு நியாயம் செய்ய ஆஸ்பத்திரி இருப்பதுபோல், சண்டைக்கு நியாயம் சொல்லக் கச்சேரி என்று ஒன்று இருக்கிறது. அங்கே போய் இரண்டு பேரும் தாம் செய்ததுதான் நியாயம் என்று வழக்கிடுவார்கள். அவரவர்கள் கட்சியை எடுத்துச் சொல்வதற்காக, வக்கீல்களை அமர்த்துவார்கள். ஒரு மாதிரி மந்திரவாதிகள் ஜாலவித்தைக்காரர்கள் அதற்காகவே இவர்கள் படித்தவர்கள். இவர்கள் எடுத்துச் சொல்வதைக் கேட்டதும் நீதிபதிக்கு எது உண்மை, எது பொய் என்று தெரியாமல் போய்விடும். கண்ணை மூடிக்கொண்டு அதாவது ஆழ்ந்து யோசித்து விட்டுத் தீர்ப்புக் கூறிவிடுவார். அந்த மாதிரி வக்கீல் வீடு இது. தினசரி இந்த மாதிரி சண்டை இட்டுக் கொள்பவர்கள் எல்லாம் வக்கீல் வீட்டுக்குப் போய்ச் சேருவார்கள். அதுதான் கும்பல்”.

”பிறருக்கு உதவி செய்வதுதான் இவர்கள் வேலை இல்லையா?” ”பலாச்சுளையில் ஈ மொய்க்காமல் தெருக்கோடியில் கிழவி வாழையிலையாலே விசிறுகிறாளே. அந்த மாதிரி உதவி. கிழவிக்கும் லாபம் பலாச்சுளைக்கும் சுகாதாரம். அதேமாதிரி வக்கீல்களுக்கும் லாபம். அந்த லாபத்தில் முளைத்த வீடுகள் இவை.” ”சொத்திலிருந்து பிறந்த வம்பு என்கிறாய்?” “சொத்து இல்லாமற்போனால்கூட இன்னும் பெரிய வம்பு தும்புகள் உண்டு. அதில்தான் இவர்களுக்குக் கொள்ளை லாபம். அதாவது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் ஆகிய இவ்வளவு அசுரசக்திகளும்

எழுப்பிவிடும் நித்திய யுத்தங்களில் இவர்களுக்குப் பெரிய வேட்டை இந்த நித்திய யுத்தங்களிலே மனிதர்கள் சாகக்கூடச் சாவார்கள். ஆனால் வக்கீலிடம் விஷயத்தை ஒப்படைத்துவிட்டால் நீதிபதிக்குப் பிரமையே உண்டாகிவிடும். "கொன்றவன் யார்? கொல்லப்பட்டது எது?" என்றெல்லாம் கேள்விகளை எழுப்பி வாதாடும்போது கொலை செய்தவனுக்குக்கூடத் தான் குற்றம் அற்றவன் என்று தோன்றிவிடும்.

இந்த உதவி செய்வதால், வக்கீல் வயிற்று வேள்வித்தீக்கு வேண்டிய அவ்வளவு பொருள்களும் தாமாகவே அவரை வந்தடைந்துவிடும். நிதி என்னும் யாக குண்டத்தருகில் இருக்கும் ரித்விக்குகளும், ஹோதா". ஐயை பேச்சை முடிப்பதற்குள் மூக்குக் கண்ணாடி குமாஸ்தா இவர்கள் அருகில் வந்துவிட்டார். "ஜீவனாம்ச வழக்குக் கட்சிக்காரர்கள் நீங்கள்தானே? ஐயா உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்றார். "நின்றால் பிடித்துக் கொண்டு விடுவார்கள் போலிருக்கிறதே!" என்று பெரியநாயகி சொல்லவும், எல்லோருமாக நகர்ந்து விட்டார்கள். மூக்குக்கண்ணாடி குமாஸ்தா வாயடைத்துப் போய்விட்டார். பெரியநாயகிக்கு ஏதோ சந்தேகம் வந்துவிட்டது. அடி ஐயை, சொத்து என்று இருப்பதனால்தானே பாதி வம்பு வருகிறது போலத் தெரிகிறது? ஆதியில் இந்த ஏற்பாட்டை நாங்கள் செய்ய வில்லையே! காற்று, நெருப்பு, தண்ணீர், மண், மரம், லோகங்கள் இப்படித்தானே உண்டாக்கிக் கொடுத்தோம்? இவர்களாகச் சொத்து என்ற ஒன்றைக் கற்பனை பண்ணிக்கொண்டுவிட்டு வீணே சிக்கறுக்க நியாயத்தைக் கூப்பிடுவானேன்?"

"கூடு கட்டுகிற குருவிகூட ஒரே இடத்தை வருஷந்தோறும் நாடுகிறது அப்படி இருக்கும்பொழுது வாக்கியம் முடியவில்லை. சந்நிதித் தெரு முனை திரும்பி விட்டார்கள். அதுதான் கடைத்தெரு. தெருவுக்குள் நுழைந்ததும் மளிகைக் கடை நெடி பாய்மரம் விரித்துக்கொண்டு வந்தது. பேரியநாயகி தும்மினாள் - ஒன்று, இரண்டு, மூன்று. ஐயையும் விஜயையும் மட்டும் தும்மவில்லை. தும்மலின் வேதனை தீர்ந்ததும் பெரியநாயகி சுற்று முற்றும் பார்த்தாள். பெரிய செட்டியார் பெரிய மளிகைக் கடை, சின்னச் செட்டியார் பலசரக்குக் கடை, நடுச் செட்டியார் மருந்துக் கடை.. நாயுடு அரிசி மண்டி ரகீம் புகையிலைக் கிடங்கு, லெபாஸ்டியன் சோடா நிலையம் முதலிய எல்லா முக்கியக் கடைகளும் அங்கேதான் இருந்தன. வியப்பு மிகுந்து பெரியநாயகி கடைகளைப் பார்த்தாள். பெரிய செட்டியார் கடையில் கூடை கூடையாக, சாக்குச் சாக்காக, மளிகைச் சாமான்கள் வைக்கப் பட்டிருந்தன. கல்லாப் பெட்டிக்கு அருகில் பெரிய செட்டியார் கறுப்பாய், வைரக்கடுக்கன் மின்ன உட்கார்ந்திருந்தார்.

“என்ன அம்மா, எப்பொழுது ஊரிலே இருந்து வந்தீங்க? ரொம்ப நாளாகக் காணோமே! ஐயா சொகமா?” என்றார் செட்டியார். பெரியநாயகிக்கு விஷயம் விளங்கவில்லை. ”அடி ஜயை, இவர் என்னமோ சொல்லுகிறாரே! என்று மெய்க்காப்பாளர் பக்கம் திரும்பினாள். ”ஆள்மாறாட்டம் போலிருக்கிறதே!” என்று ஜயை பதில் சொன்னதும் செட்டியார் தலையை ஆட்டினார். “ஆள்மாறாட்டம் இல்லை அம்மா. சும்மா கேட்டேன். உங்களுக்கு வேண்டிய சாமான்களை இங்கேயே வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லத்தான் வந்தேன். எங்கே வாங்கினாலும் பணந்தானே? ரூபாய்க்கு ஒரு பைசாவுக்கு மேலே லாபம் தவத்தனர் வைக்கிறதே இல்லை. பணமா பெரிசு? சுத்தமான சரக்குச் சல்லிசான விலை” என்றார் செட்டியார்.

விஜயை சொல்ல வந்த பதிலை யாரும் எதிர்பார்க்கவில்லை. ”எங்கள் வீட்டுக் குண்டோதரன் இதோ வருவான். வந்ததும் பார்ப்போம்” என்றாள் விஜயை. பெரிய வியாபாரம் நடக்கும் என்று செட்டியாருக்கு நப்பாசை! ”இப்படிப் பெஞ்சில் உட்காரலாமே!” ஜயை பெஞ்சில் உட்கார்ந்தாள். இவர்கள் இருவருக்கும் அது கரு வட்டு பெரும் வியப்பாக இருந்தது. அடுத்த நிமிஷம் ஜயை கால் கொலுசுத் திருகாணியை இறுக முறுக்க ஆரம்பித்த பிறகுதான் இவர்களுக்கு ஆ விஷயம் ஒருவாறு விளங்கிற்று.

இதற்கிடையில், கடையில் இரண்டு மூன்று பேர் கூடிவிட்டார்கள். ஆளுக்கு ஒரு சாமானின் பெயரைச் சொல்லிக் கேட்டார்கள். பெரியநாயகிக்கு நின்று பார்க்க வேண்டும் போல் இருந்து. கடையில் நடப்பதைக் கவனித்தாள். சாமான்களைத் தராசில் எடை போட்டு அவரவர்களுக்குக் கடைக்காரப் பையன் கொடுத்தான். கடைசியில் செட்டியாரிடம் ஒவ்வொருவரும் பணம் கொடுத்துவிட்டுச் சாமானை எடுத்துக் கொண்டு சென்றார்கள். வாடிக்கைக்காரர் கூட்டம் கிளம்பியதும் ஜயை பெஞ்சை விட்டு எழுந்து புறப்பட்டு விட்டாள். எனவே பெரியநாயகியும் கடையை விட்டு நகர்ந்தாள். தெருவில் உள்ள கடைகள் எல்லாம் அவள் கவனத்தை ஒருபுறம் ஈர்த்தன. மற்றொரு புறம் மனத்தில் ஒரு சந்தேகம். இரண்டு காரியத்தையும் பெரியநாயகி கவனிக்க முயன்றாள். ”ஏண்டி ஜயை, இந்தச் சாமான்கள் எல்லாம் எப்படி இங்கே முளைக்கின்றன? ஜலம் இல்லாமல், செடி இல்லாமல், கொடி இல்லாமல், மரம் இல்லாமல் - என்ன ஆச்சரியம்! இந்த வித்தை எங்களுக்குக்கூடத் தெரியாதே!”

”நீங்கள்தான் இருட்டிலேயே இருக்கிறீர்களே! பிறந்த பிள்ளையை வளர்க்க வேண்டாமா? அப்படியே அநாதையாகத் தெருவில் போட்டுவிட்டுப் போய்விட்டால்? யாரோ

எடுத்து வளர்த்தார். எப்படியோ வளர்ந்தது. இப்பொழுது எப்படி எப்படியோ இருக்கிறது! அந்த மாதிரிதான்". "நாங்கள்தான் உலகத்தையும் ஆறறிவையும் படைத்துக் கொடுத்து விட்டோமே, வேறு என்ன செய்யவேண்டும்?" "ஆறறிவைப் படைக்காமல் இருந்திருக்க வேண்டும். பெற்றோரைப் பழிக்கத்தான் ஆறறிவு உதவுகிறது. வியாபாரத்தை வளர்க்கவும் உதவுகிறது. நீங்கள் கேட்டீர்களே, இந்தச் சாமான் ஒன்றும் இந்த இடத்தில் விளைவதில்லை. செடி, கொடி, மரத்தில்தான் வருணபகவான் தயவால் எங்கெங்கோ உண்டாகின்றன. இந்தச் செட்டியார் போன்றவர்கள் அந்தச் சாமான்களை எல்லாம், வலை வீசி மீன் பிடித்துச் சுருட்டிக் கொண்டு வருவதுபோல், இங்கே கொண்டு வந்து குவிக்கிறார்கள்.

அங்கெல்லாம் பணம் கொடுத்து வாங்கி இங்கே மறுபடி பணத்திற்கு விற்கிறார்கள்." இதென்ன ஆச்சரியம்! பணத்திற்கு வாங்குவானேன்? மறுபடியும் விற்பானேன்? அதிருக்கட்டும், பணம் என்றால் என்ன? பணத்தை நாங்கள் சிருஷ்டி செய்ததாக ஞாபகம் இல்லையே!" "வந்திருக்கிற வினை எல்லாம் அதனால்தான். நீங்கள் எதை எதை எல்லாம் செய்யவில்லையோ அதை எல்லாம் ஆறறிவு செய்துவிட்டது. நீங்கள் எதை ரகசியமாக வைத்திருந்தீர்களோ அதை ஆற்றிவு அம்பலத்தில் செய்து காட்ட முயலுகிறது. ஆறாவது அறிவு சிருஷ்டி செட்டியார் வாங்கிப் பெட்டியில் போட்டுக் செய்ததுதான் பணம். கொண்டாரே, அதுதான் பணம்." "ரொம்பச் சுற்றலாக இருக்கிறதே" சாமான் வேண்டுமென்றால் செடி இருக்கும் இடத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே? செட்டியாரும் பணமும் குறுக்கே முளைப்பானேன்?" "இவர்கள் ஆறறிவு சொல்லுகிறதைக் கேட்டால் உங்களுக்குக் கொஞ்சம் புரியலாம். பக்தன் உங்களை நினைக்க வேண்டுமென்றால் நேரே நினைத்துவிட்டுப் போக வேண்டியதுதானே? அதை விட்டுவிட்டு அப்பாலில் இருப்பதை இப்பாலில், இருபாலில் வடித்துக் காட்டி, வணங்க ஏற்பாடு செய்து, திரை வழிகாட்டுபவர்களை சிவாச்சாரியார்களை போட்டுத் திரைதள்ளும் தெய்வ நெறியைக் கூட்டி வைத்துவிடவில்லையா? அதே போலத்தான் என்கிறார்கள்.

எல்லா பக்தர்களும் ஒரே காலத்தில் உங்களை நாடினால் யாருடைய மனத்தில் என்று நீங்கள் இறங்குவீர்கள்? ஒழுங்கில்லாமல் ஒரே குழப்பமாக இராதா? அதேபோல, செடியண்டை போய் எல்லாரும் சாமான் பறிக்க ஆரம்பித்தால் சண்டைதான் மிஞ்சும். அதற்காகச் சொத்து என்ற ஏற்பாட்டையும், பணம் என்ற விபூதியையும், அதாவது அளவுகோலையும், ஆறறிவு படைத்து வைத்தது. இப்படிச் செய்திருப்பதனால் தான் எல்லாருக்கும் பொதுவாய் நன்மை கிடைக்கிறதாம். இல்லாவிட்டால் சிலர் கைக்குள்

சாமான்களும் நீங்களும் சிக்கி, பெருத்த சங்கடம் உண்டாகிவிடுமாம்." "சொத்து, பணம் இரண்டையும் நாங்கள் உண்டாக்கவில்லை. இவற்றை உண்டாக்கத்தான் ஆறறிவு உபயோகப்பட்டது என்கிறாயா?" ஐயை பதில் சொல்வதற்குள் ஒரு பெரிய விபத்து நிகழப் பார்த்து விட்டது. பெரியநாயகி நின்றுகொண்டிருந்த இடத்துக்கு மூன்று அங்குலம் தள்ளி, கிரீச் என்ற பெரும் சப்தத்துடன் ஒரு மோட்டார் கார் பிரேக் போட்டு நிறுத்தப்பட்டது. சத்தத்தைக் கேட்டதும் இவர்களுக்கெல்லாம் வெலவெலத்துப் போய்விட்டது. தொப்பியும் நிஜாரும் பூட்சும் அணிந்த ஒரு கனவான் வண்டியை விட்டு இறங்கி வெகு கோபத்துடன் இவர்களை நோக்கி வந்தார். "நீ பெண்பிள்ளைதானா?" நடு ரஸ்தாவிலே நிலாப் பேச்சில் முழுகி, செவிடாய், குருடாய், கல்லாய்."

புயலைப்போல அடித்த பேச்சைக் கேட்டுப் பெரியநாயகி தலை நிமிர்ந்தாள். கனவான் பெரியநாயகியைப் பார்த்ததுதான் தாமதம், வந்த கோபமெல்லாம் பெட்டிப் பாம்பைப்போல் அடங்கிவிட்டது. தலையில் இருந்த தொப்பி தரையில் விழுந்துவிட்டது. கையில் கட்டியிருந்த கடிகாரம் கொக்கி கழன்று விழுந்தது. பயத்தினால் உடம்பு ஒட்டிப் போய்ச் சட்டை துணிமணி எல்லாம் தொளதொளவென்று தொய்ய ஆரம்பித்து விட்டன. பெரியநாயகியின் அழகு, மின் தாக்கியதுபோல் அவரைக் கருக்கிவிட்டது. "மன்னிக்க வேண்டும். நடுத்தெருவில்." பெரியநாயகி அவர் மன்னிப்பை பொருட்படுத்தவில்லை. "இதோ நிறுத்தி இருக்கிறாயே, இந்த மிருகத்திற்கு என்ன பெயர்? நாங்கள் சிருஷ்டித்ததாக ஞாபகமில்லையே!" இப்படிப் பெரியநாயகி கனவானைக் கேட்டதும் அவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. பைத்தியத்துக்குத்தானா இவ்வளவு அழகு!. "ஏம்மா, பைத்தியத்தைத் தெருவில் அழைத்துக் கொண்டு வந்தால் உஷாராக இருக்க வேண்டாமா? என்னைப் பைத்தியக்காரன் ஆக்கப் பார்த்துவீட்டீர்களே!" என்று மெய்க்காப்பாளர்களைக் கேட்டுவிட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டார். "கடைத்தெரு உலாப் போதுமென்று நினைக்கிறேன்" என்றாள் பெரியநாயகி.

ஐயையும், விஜயையும் பெரியநாயகியை அழைத்துக்கொண்டு ஒற்றைச் சாரி வீதி, கூரையும், கொட்டகையும், மாட்டுப் பட்டியும், வைக்கோல் போருமாக இருந்தன. "இது ஏழைகள் தெரு" என்றால் ஐயை. பக்கத்துத் தெருவில் புகுந்தார்கள். அதிருக்கட்டும். அந்தப் பிராணிக்குப் பெயர் என்ன? வெகு விநோதமாக இருக்கிறதே! அந்த மாதிரிப் பிராணியை நாங்கள் ஒன்றும் செய்ததாக ஞாபகம் இல்லையே!" "அந்த மாதிரி இன்னும் எவ்வளவோ விநோதமான பிராணிகள் இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் பெயர்

விஞ்ஞானம் நல்ல வேளையாகப் போயிற்று இல்லாவிட்டால், நீங்கள் பீடத்திற்குத் திரும்பிப் போக முடியாமல் போயிருக்கும். ஆறறிவு புது து எமன்களைச் சிருஷ்டித்து வருகிறது. அந்தப் பட்டாளத்தில் இது ஒரு சின்ன எமன்!"

"மறுபடியும் அதே ஆறறிவுப் பெருமைதானா?" பெரியநாயகியின் அலுப்புச் சொல்லத்தரம் அன்று. "உலாப் புறப்பட்டீர்கள். அதற்குள்ளாகவே கசந்து விட்டதே! இன்னும் பார்க்க எவ்வளவோ இருக்கின்றனவே?" "போதும் என்று தோன்றுகிறது. என்மீது போடுகிற மாலை மாதிரி உலகம் இருக்கிறது - தழையும் நாருந்தான். ஆனால் ஒன்று: கொடுத்த பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் சக்தி எங்களுக்கு இல்லை. ஆறறிவுக்கு அறிவு இருந்தால் ஆகட்டும் அல்லது அழிக்கட்டும். அத்துடன் தானும் அழியட்டும். பிறகு நாங்கள் மறுபடியும் ஆரம்பித்து விடுகிறோம். இதுதானே சிருஷ்டி என்னும் -லை? போதும், கோயிலுக்குப் போவோம்" என்றாள் பெரியநாயகி.

“இந்தத் தோட்டத்து வழியாகப் போனால் சீக்கிரம் போய்விடலாம். தோட்டத்தில் நுழைந்ததும் பெரியநாயகிக்கு ஒரு நினைப்பு எழுந்தது. "அடி ஜயை, என் சதங்கையை இனிமேல் காலில் கட்டிவிடு. மறந்து போய்விடும்" என்றாள். ஜயை சதங்கையைக் காலில் பூட்டினாள். க-ர் க-ர் என்ற ஒலியலை தோட்டத்தில் பரவிற்று. அந்த இனிய ஒலியைக் கேட்டுத் தோட்டத்து மலர்கள் நாலு பக்கமும் திரும்பின. மலரை நோக்கிச் சென்ற வண்டுகள் திசை தடுமாறின. மலர்களின் மணம் நடைபாவாடை விரித்துச் சென்றது. பாதை வழியே கொஞ்ச தூரம் சென்றார்கள். நடுக்குளத்தங்கரை ஓரம் இருவர் உட்கார்ந்திருந்ததை இவர்கள் கவனிக்கவில்லை. அவர்களும் முதலில் இவர்களைக் கவனிக்கவில்லை. அருகில் சதங்கை ஒலி கேட்டதும் திடுக்கிட்டு எழுந்தார்கள். இவர்களை ஒரு நொடி பார்த்தார்கள். அதற்குப் பிறகு பார்த்ததெல்லாம் பெரியநாயகியைத்தான்.

பெரியநாயகி திகைப்படைந்து நின்று விட்டாள். "கண்காணாச் சண்பகமே மண்காணா மரகதமே!" என்று முணுமுணுத்துக்கொண்டே இருவரில் ஒருவர் பெரியநாயகி அருகில் வந்து வணங்கினார். “இந்த வழியே அதிசயமாகப் போகிறீர்களே, எந்த ஊர்?" என்றார் பெரியநாயகி பதில் பேசவில்லை. "மெய்யூர்" என்றார் விஜயை. "அம்மா பேர்?" "மாயாதேவி." இந்தப் பதில்களைக் கேட்டதும் அவர் பூரித்துப் போய் விட்டார். ஊசுநுயுவு "நித்திய சுந்தரி" என்ற படம் எடுக்கிறோம். படத்தில் அம்பாள் ஐந்து நிமிஷத்திற்குக் கொலு இருக்க வேண்டும். சிலை வைத்துப் படம் எடுக்காமல் முடிக்கவேண்டும் என்று

மூன்று மாதமாகப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம் - பிரார்த்தனை பலித்துவிட்டது. ஐந்த நிமிஷத்திற்கு மேல் மாயாதேவிக்குப் படத்தில் வேலை இல்லை.”

மெய்க்காப்பாளர்களுக்கு இந்த நிலைமையைப் போரிட்டுச் சமாளிக்க முடியாது என்ற எண்ணம் தோன்றிவிட்டது. அதனால்தான் விஜயை வேறு வழியைக் கடைப்பிடித்தாள். ”மாயாதேவி ஊமை ஆயிற்றே?” “அப்படியா? அம்பாளே எங்கள் பிரார்த்தனைக்கு இரங்கி வந்து விட்டாள் போலிருக்கிறது! எங்களுக்கு வேண்டியதும் வாயைத் திறக்காத அம்பாள்தான். கனககிரி பீடத்தில் அம்மாள் ஐந்து நிமிஷம் நின்றால் போதும். பணத்தைப் பற்றி யோசிக்க வேண்டாம்” என்றார். ”கோயில் திருப்பணிக்குப் பணம் கொடுப்பீர்களா?” ”எப்படி செய்யச் சொன்னாலும் செய்கிறோம். இப்படிப் பேசிவிட்டு முடிவில் என்ன செய்வதென்று விஜயை மனத்திற்குள் ஒரு திட்டமிட்டிருந்தாள். தோட்டத்தைத் தாண்டியதும் விருட்டென்று கோயில் சந்துக்குள் நுழைந்து போய்விடுவதென்று யோனை செய்து வைத்திருந்தாள். போகலாமே என்று ஐயை கூறியதும் பெரியநாயகியின் சதங்கைகள் விழிப்படைந்தன. தோட்டத்தை விட்டுச் செல்லும் ரோஜாவைத் தேனீ தொடர்வதுபோலச் சினிமாக்காரர்கள் பின்னே சென்றனர். தோட்டத்து வாயிற்புறம் வந்தவுடன் சினிமாக்காரர்கள் முன்னே ஓடிப்போய் நின்று விட்டார்கள்.

கோயில் சந்துக்கெதிரில் ஒரு மோட்டார் கார் நின்று கொண்டிருந்தது. இதைத் தாண்டிக் கோயிலுக்குள் எப்படிப் போகிறது என்று ஐயையும் விஜயையும் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே, ”ஏறுங்கள் வண்டியில்” என்றார் அவர்களில் ஒருவர். மற்றொருவர் சந்தில் நுழைய முடியாதபடி அடைத்துக் கொண்டிருந்தார். விஜயை போட்ட ரகசியத் திட்டம் பகற்கனவாகி விட்டது. இனி என்ன செய்வது என்ற யோசனை. “ஏறுங்கள் வண்டியில்” என்று அவர் வற்புறுத்தினார். “எதற்காக?” என்று தடுமாறினாள் விஜயை. ”இத்தனை நேரமாகச் சொல்லி வந்தோமே! நீங்கள் கூடச் சரி என்றீர்களே?” “சொன்னேன். வாஸ்தவம். நாங்கள் வந்து நேராமாயிற்று, தவிர வீட்டில் தெரிவிக்க வேண்டாமா? வந்த இடத்தில் ”ஏழே நிமிஷம்! வந்து போனதே யாருக்கும் தெரிய வேண்டாம். அம்பாள் ஸ்தானத்தில் அமரும் பெருமையைவிட மாந்தருக்கு என்ன கிடைத்துவிடும்? அம்மாளால் எங்கள் படத்துக்கும் பெருமை உங்கள் திருப்பணிக் கோரிக்கையும் நிறைவேறிவிடும். ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் ஏறுங்கள்.”

இவர்கள் தயங்கி நின்றதைப் பார்த்து, புறாவைக் கூட்டில் அடைக்கக் கையை விரிப்பார்களே, அந்த மாதிரி இவர் செய்து விடுவாரோ என்ற அச்சம் விஜயைக்கு

உண்டாகிவிட்டது. விஜயை திடீரென்று தானாக வண்டியில் ஏறினாள். ஐயையும் பெரியநாயகியும் மட்டும் வேறு என்ன செய்துவிட முடியும்? அவர்களும் காரில் ஏறினார்கள். கண்மூடித் திறப்பதற்குள் கார் ஸ்டுடியோ வாசலண்டை போய் நின்றது. எவ்விதப் பேச்சும் இல்லாமல் இவர்களை நெடுந்தூரம் உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள். 'இதென்ன, தெய்வலோகம் போலிருக்கிறதே!" என்று பெரியநாயகி மனத்திற்குள் நினைத்துக் கொண்டே இருந்தாள். "நீங்கள் இருவரும் இப்படி உட்கார்ந்திருங்கள். அதோ மேடை தெரிகிறதே, அதுதான் கனககிரி பீடம். மாயாதேவி பீடத்தில் அப்படியே நின்றால் போதும். அம்மா இப்படி பெரியநாயகி சிந்தனையிலிருந்து விடுபட்டு எதிரே பார்த்தாள். "என்ன பயப்படுகிறீர்களே! குறுஞ்சிரிப்புச் சிரித்துக் கொண்டு ஐந்து நிமிஷம் நின்றால் போதும். வாயைத் திறக்கவே வேண்டாம்" என்றார் அழைத்துக் கொண்டு வந்தவர்.

பெரியநாயகி தெய்வலோகத்தில் நடப்பதுபோல் சென்று மேடை மீது ஏறினாள். ஆனால் முகத்தின் கடுகடுப்பு மட்டும் மாறவில்லை. அடுத்த நிமிஷம் வந்தவரில் மற்றொருவர் ஒரு குருக்களை அழைத்து வந்து ஒரு பெரிய நிலைமாலையைக் கழுத்தில் சாத்தினார். வலக்கையில் ஒரு தங்க கிளியைக் கொடுத்தார். இடக்கையை இடுப்பண்டை வரத ஹஸ்தமாக வைத்துக் கொள்ளச் சொன்னார். இந்த அலங்காரம் முடிந்ததும் பெரியநாயகிக்குச் சிரிப்பு வந்து விட்டது. ஹஉருவம் மாறினாலும் தத்துவம் மாறாது போலிருக்கிறது அந்தஸ்து அழியாது போலிருக்கிறது" என்று எண்ணிக் கொண்டிருந்தாள். "பேஷ்! பேஷ்! அதே புன்சிரிப்புடன் ஆடாமல் அசையாமல் நில்லுங்கள்" என்று கூறிவிட்டு அந்த ஆண்கள் இரண்டு தரம் தரம் குறுக்கும் நெடுக்குமாக ஓடி இரண்டு மூக்குக் கண்ணாடிக்காரர்களை அழைத்து வந்தனர். வந்தவர்கள் பெரியநாயகிக்கு எதிரில் இருந்த காமிராவுக்குப் பின் கோணம் பார்த்து அமர்ந்து கொண்டார்கள்.

அடுத்த விநாடி ஜகத்ஜோதியாக மின்சார ஒலி பெரியநாயகி மீது விழுந்தது. கண்ணை விழித்திருக்க முடியாமல் அவள் கண்களை மூடிக்கொண்டாள். "கண்ணை மூடக்கூடாது" என்றது ஒரு குரல். "இவ்வளவு வெளிச்சத்தில் கண்ணைத் திறந்து கொண்டிருப்பதா?" பெரியநாயகியையும் அறியாமலே கோபம் பொங்கிவிட்டது. "அம்பாள் இருக்கிற இடம் இருட்டாகத்தானே இருக்கிறது? அதைப்போய்ப் பட்டப் பகலைவிட மோசமாக்கினால்? இருந்தால் குழந்தை வளரும். ரஸ்தா ஓரத்தில் பதைபதைக்கிற வெயிலில் வைத்தால்?" என்றாள். "உங்களுக்கு என்ன தெரியும்? இருட்டைக்கூட

வெளிச்சத்தால் தான் நிலைநாட்ட முடியும். கொஞ்சம் சும்மா இருங்கள். கோடி புண்ணியம்" என்று கெஞ்சியது பழைய குரல். பெரியநாயகியின் சிரிப்பு அலையாடிற்று. வெகு பிரயாசையுடன் கண்ணைத் திறந்து கொண்டாள். அதற்குப் பிறகு என்ன நடந்ததென்று பெரியநாயகிக்குத் தெரியவில்லை. "உஷர்", "ஓ.கே." என்ற இரண்டு வார்த்தைகள் தாம் ஜயை, விஜயை காதில் விழுந்தன. "அவ்வளவுதான். ரொம்ப நன்றி".

"இந்த மாதிரி அதிருஷ்டம் பட உலகில் யாருக்கும் அடிக்கவில்லை" என்று கூறிக்கொண்டே பெரியநாயகியிடம் ஒரு பொட்டலத்தை நீட்டினார் சினிமாக்காரர். பெரியநாயகி பொட்டலத்தை வாங்கி, விஜயையிடம் கொடுத்து விட்டு கோயிலுக்குப் புறப்பட்டுவிட்டாள். எங்கிருந்தாலுந்தான் கோயில் கோபுரம் தெரிகிறதே! கோபுர வாசல் வந்து விட்டது. ஜயையும் விஜயையும் உறையில் இட்ட கத்தியை வெளியே இழுத்தார்கள். சுருக்கிய கோரைப் பற்களை நீட்டிக் கொண்டார்கள்.

"பொட்டலத்தைப் பிரித்துப் பார்க்கவில்லையே!" என்றாள் ஜயை. "காட்டு" என்றாள் பெரியநாயகி. பொட்டலத்தைப் பிரித்தால் நோட்டுகளாக இருந்தன! "எதற்கு இந்தக் கடுதாசுகள்?" "இதற்குப் பெயர்தான் நோட். இது தான் வியாபாரி கடையிலே கண்ட பணம். வக்கீல் வீடாகி இருக்கிற பணம். உங்கள் திருப்பணி சம்பாத்தியம் இன்னும் "இது இல்லாவிட்டால்?" "உலகம் நடக்காது. இதை உங்களுக்குச் சிருஷ்டிக்கத் தெரியாத தனால்தான் ஆறறிவு உங்கள் ஸ்தானத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டது". "அப்படியா செய்தி அடுத்த சிருஷ்டியில் தப்பைத் திருத்திக் கொண்டு விடுகிறோம்" என்று சிரித்துவிட்டுக் கோயிலுக்குள் நுழைந்தாள் பெரியநாயகி. கால் சதங்கைகள் க-ரென ஒலித்தன. பத்தி உலா மண்டபத்துச் சிங்கங்களும் யாளிகளும் காதை நெறித்தன. பெரியநாயக் பழைய பீடத்தில் அமர்ந்தாள். சதங்கைகள் ஊமையாயின. கருப்பை இருளும் நெய் தரும் குளிர் சுடரும் இனிமையாய்ச் சூழ்ந்தன.

**ஆசிரியரைப் பற்றி**

ந. பிச்சமூர்த்தி கும்பகோணத்தில் பிறந்தவர். புதுக்கவிதை இயக்கத்தின் விடிவெள்ளி. புதுக்கவிதையின் தோற்றத்திற்கு அடித்தளம் அமைத்தவர்களில் ஒருவர். பிச்சமூர்த்தி கவிதைகளுள், கிளிக்குஞ்சு, பூக்காரி, வழித்துணை, கிளிக்கூண்டு ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

# 5. அன்பளிப்பு

## - கு. அழகிரிசாமி

மறுநாள் ஞாயிற்றுக்கிழமைதானே என்று இரவு வெகுநேரம் வரையில் கண் விழித்துப் படித்துக்கொண்டிருந்து விட்டேன். சனிக்கிழமை இரவு படுத்துக் கொள்ளும்போது மணி இரண்டிருக்கும். எவ்வளவு காலதாமதமாகித் தூங்கப் போனாலும், தூக்கம் வருவதற்கு மேற்கொண்டு ஒரு அரைமணி நேரமாவது எனக்கு ஆகும். ஆகவே இரண்டரைக்குத் தான் தூங்க ஆரம்பித்திருப்பேன். சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கும் போது, முதுகில் நாலைந்து கைகள் வந்து பலமாக அடிக்க ஆரம்பித்து விட்டன. அடிகளால் ஏற்பட்ட வலியைவிட, அவற்றுள் ஏற்பட்ட ஓசை மிகப்பெரியதாக இருந்தது. தூக்கம் கலைந்து கண் விழிப்பதற்குள், வலது புஜத்தில் எறும்பு கடிப்பதுபோல இருந்தது.

"தூங்கு மூஞ்சி மாமா!..." "மணி ஏழரையாகி விட்டது..." "எழுந்திருக்கிறீர்களா, பலமாகக் கிள்ளவா" "முகத்தில் ஜலத்தைக் கொண்டுவந்து தெளித்து விடுவோம். இன்னும் இரண்டு நிமிஷத்துக்குள் எழுந்துவிட வேண்டும்..." இப்படியே பல குரல்கள் பேசிக் கொண்டிருந்தன. பேச்சின் நடுவே இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்து சிரிடா சிரி என்று சிரித்தார்கள். கண் விழித்து விட்டேன். "யார் அது? உம்! இதோ வருகிறேன். தூக்கத்திலே வந்து..." என்று அதட்டிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தேன். ஒரு பையனைத் தவிர, அதாவது சாரங்கராஜனைத் தவிர, மற்ற எல்லாக்குழந்தைகளும் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். "கடிகாரத்தைப் பாருங்கோ மாமா! மணி எட்டு ஆகப்போகிறது! இன்னும் தூங்கு மூஞ்சி மாதிரி தூங்கிக் கொண்டு..." என்று சொல்லி விட்டுச்சிரித்தாள் சித்ரா. "அது இருக்கட்டும், விடிந்ததும் எங்கே இப்படிப் பட்டாளம் மார்ச் பண்ண ஆரம்பித்துவிட்டது?" என்று கேட்டேன்.

"இரவில் வெகு நேரம் கண் விழித்தால் உடம்புக்குக் கெடுதல் என்று எங்கள் பாடப் புத்தகத்தில் போட்டியிருக்கிறது மாமா" என்றான். இதுவரையிலும் மௌனமாக இருந்த சாரங்கராஜன். "நான் படித்த பாடப் புத்தகத்திலும் அப்படித்தான் போட்டிருந்தது! என்ன செய்வது?" என்று எனக்கு கு நானே சொல்லிக் கொண்டேன். ஆனால், சிறுவன் சாரங்கனிடம் அவ்விதம் சொல்லாமல், "நாளை முதல் சீக்கிரமாகவே தூங்கி விடுகிறேன். கண் விழிக்கவில்லை" என்றேன். அவனுக்குப் பரம சந்தோஷம்... அவன் சொன்னதை

அப்படியே ஏற்றுக் கொண்டதற்காக. மறு நிமிஷத்தில் எல்லோருமாகச் சேர்ந்து ஒருமிக்க, ”என்ன புத்தகம் கொண்டு வந்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள்.

”ஒரு புத்தகமும் கொண்டு வரவில்லை!” ”பொய், பொய், சும்மா சொல்கிறீர்கள்!” ”நிஜமாக, ஒரு புத்தகமும் கொண்டு வரவில்லை”. நேற்று புத்தகம் கொண்டு வருவதாகச் சொன்னீர்களே!” ”நேற்றுச் சொன்னேன்...” “அப்புறம் ஏன் கொண்டு வரவில்லை?” ”புத்தகங்கள் ஒன்றும் வரவில்லை. வந்திருந்தால் தான் கொண்டு வந்திருப்பேன்”. “பிருந்தா! மாமா பொய் சொல்கிறார் கொண்டு வந்து எங்கேயாவது ஒளித்து வைத்திருப்பார். வாருங்கள், தேடிப் பார்க்கலாம்” என்றால் சித்ரா. அவ்வளவுதான், என்னுடைய அறை முழுவதும் திமிலோகப்பட்டது. ஒரே களேபரம். சித்ரா மேஜையைத் திறந்து உள்ளே கிடக்கும் பெரிய காகிதங்களையும், துண்டுக் காகிதங்களையும், கடிதங்களையும் எடுத்து வெளியே எறிந்தாள். துழாவித் துழாவிப் பார்த்தாள். மேஜையில் புத்தகம் எதுவும் இல்லாது போகவே, அதிலிருந்து சாவிக்கொத்தை எடுத்துப் பெட்டியைத் திறந்து தேட ஆரம்பித்து விட்டாள்.

பிருந்தாவும், சுந்தரராஜனும் பீரோவைத் திறந்து புத்தகங்களை எடுத்துக் கண்டபடி கீழே போட்டார்கள். சின்னஞ்சிறு குழந்தையான கீதா கீழே உட்கார்ந்து, இறைந்து கிடக்கும் ஆங்கிலப் புத்தகங்களை அர்த்தமில்லாமல் திறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். பிதா சித்ரா பெட்டியில் உள்ள சலவைத் துணிகளை எடுத்து வெளியே போட்டாள். என்னுடைய பழைய டைரிகள், எனக்கு வந்த பழைய கடிதங்கள், இரண்டொரு புத்தகங்கள் எல்லாம் ஒரே குப்பையாக வந்து வெளியே விழுந்தன. பீரோவை சோதனை போட்ட பிருந்தாவும், சுந்தரராஜனும் ஜன்னல்களில் அடுக்கியிருந்த புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே போட்டார்கள்.

சாரங்கன் ஒருவன்தான் என்னோடு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் எப்பொழுதுமே குறும்பு பண்ணமாட்டான் விளையாடமாட்டான். மற்றக் குழந்தைகள் எல்லோரும் ஒரு விதம் அவன் ஒரு விதம். என்னிடத்தில் பயபக்தியோடு நடந்து கொள்ளும் சிறுவன் அவன் ஒருவன் தான். ஜன்னலில் இருந்த புத்தகங்கள் ஒவ்வொன்றாக வந்து விழும்போது. ஒரே சந்தடியும் இரைச்சலுமாய்ப் போய்விடவே, சமையற்கட்டிலிருந்து என் தாயார் ஓடி வந்தாள். வந்து பார்த்தால் எல்லாம் ஒரே கந்தர் கோளமாகக் கிடந்தது. ”என்னடா இது. இந்தக் குழந்தைகள் இப்படி அமர்க்களம் பண்ணுகிறார்கள். நீ பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாயே” என்று என்னைப் பார்த்துக் கோபித்துக் கொண்டாள். “நீ

வீட்டுக்குள் போ அம்மா. இது எங்கள் விவகாரம். நீ எதற்கு வேலையைப் போட்டுவிட்டு இங்கே வந்து நின்று கொண்டிருக்கிறாய்?" சொல்லிவிட்டுச் சிரித்தேன்.

"இவ்வளவு வயதாகியும் இன்னும் குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடிக் கொண்டிருப்பது ரொம்ப அழகாகத்தான் இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே அம்மா உள்ளே போய்விட்டாள். பாதி தூரம் போனதும் அங்கே நின்ற வாக்கிலேயே, "ஏண்டா நீ எப்போது ஸ்நானம் பண்ணப் போகிறாய்?" என்று இரைந்து கேட்டாள். "இரண்டு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று அம்மாவுக்குப் பதில் குரல் கொடுத்துவிட்டு இந்தப் பக்கம் திரும்பும் போது, ஜன்னலிலிருந்து பத்துப் பதினாறு கனமான புத்தகங்கள் "தட தட'வென்று அருவி மாதிரி கீழே விழுந்தன. ஒரு பழைய தமிழ் அகராதி அட்டை வேறு புத்தகம் வேறாகப் போய் விழுந்தது. குப்புற விழுந்த சில புத்தகங்கள் வளைந்து, ஒடிந்து, உருக்குலைந்து விட்டன. புத்தகங்கள் ஒரே மொத்தமாகக் கீழே விழுந்துவிட்டதைக் கண்டு எல்லாக் குழந்தைகளும் பயந்து விட்டார்கள். கீழே கிடக்கும் புத்தகங்களையும் என்னையும் திரும்பத் திரும்பப் பார்த்தார்கள். கீழே விழுந்தவை மொத்தம் அறுபது புத்தகங்களாவது இருக்கும்.

குழந்தைகளின் முகத்தில் பயத்தின் சாயல் படர ஆரம்பித்துவிட்டது. நான் என்ன சொல்லப்போகிறேனோ என்று எதிர்பார்த்துக் கொண்டு கண்ணிமைக்காமல் என் முகத்தையே பார்த்தார்கள். மற்றக் குழந்தைகளின் பயத்தைப் பார்த்த ஐந்து வயது நிரம்பாத கீதாவும் பயந்து போய் என்னைப் பார்த்தாள். நான் வேண்டுமென்றே மௌனமாக இருந்தேன். குழந்தைகளையும் வெறித்த பார்வையோடு பார்த்தேன். புத்தகங்களையும் மௌனம் நீடித்தது. ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நிமிஷம்... குழந்தைகளுக்கு என் மௌனம் சித்திரவதையாக இருந்தது. ஒவ்வொரு குழந்தையும் மூச்சுப் பேச்சிழந்து விட்டது. சித்ராவின் முகத்தில் வியர்க்க ஆரம்பித்துவிட்டது. பயம் அறியாத சித்ராவே பயந்து விட்டாள்.

என்னை ஒட்டி உட்கார்ந்து கொண்டிருந்த சாரங்கன் நாலு அங்குலம் நகர்ந்து உட்கார்ந்து கொண்டான். என்னைத் தொடவே அவனுக்குப் பயமாகி விட்டது. அவனுடைய சலனத்தால் தூண்டப்பெற்று, "நான் வீட்டுக்குப் போகிறேன்" என்று கிளம்பிவிட்டாள் பிருந்தா. என்று யாதொரு "பிருந்தா! இங்கே வா" என்று இல்லாமல் சொன்னேன். யாதொரு உணர்ச்சிப் பிரதிபலிப்பும் நான் சொன்னபடி அவள் உள்ளே வந்தாள். இதற்கு மேல் குழந்தைகளைப் பயமுறுத்த நான் விரும்பவில்லை.

எழுந்து நின்றேன். என் அறையின் மற்றொரு ஜன்னல் பக்கம் சென்றேன். அங்குள்ள புத்தகங்களில் கை வைத்தேன். என் ஒவ்வொரு அசைசைவயும் குழந்தைகளின் கண்கள் சர்வ ஜாக்கிரதையுடன் கவனித்துக் கொண்டிருந்தன. புத்தகங்களின் நடுவில் பெரிய புத்தகங்களுக்குக் கீழே இருந்த பதின்மூன்று கதைப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு திரும்பினேன். கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டு, ”தோற்றுப் போய் விட்டீர்களா? நீங்கள் தேடு தேடு என்று தேடினீர்களே, புத்தகங்கள் உங்களுக்குத் தட்டுப்பட்டதா? வாருங்கள், வாருங்கள்” என்று ஒரே உற்சாகத்துடன் சொன்னேன். குழந்தைகளுக்கு வந்துவிட்டது. என்னைப் பார்த்து ஓடோடியும் வந்தன. சாரங்கன் என் பக்கம் நெருங்கி உட்கார்ந்தான். என் இடது கையில் சாய்ந்தும் உட்கார்ந்து கொண்டான். சித்ராவுக்கு ஏனோ என் மேல் கோபம் வந்துவிட்டது.

வெகுநேரம் மௌனமாக இருந்து அவர்களைப் பயத்தில் ஆழ்த்தி வைத்ததை எண்ணிக் கோபப்பட்டாளோ? அல்லது தான் பயந்ததற்காக வெட்கப்பட்டு, தான் பயப்படவில்லை என்பதாகக் காட்டிக் கொள்ளுவதற்கும், அதன் மூலம் வெட்கத்தை மறைப்பதற்காகக் கோபப்பட்டாளோ? ‘விறு விறு’ என்று கட்டிலில் ஏறினாள். எனக்குப் பின்புறமாக வந்து, ”பொய்தானே சொன்னீர்கள், புத்தகங்கள் கொண்டு வரவில்லை என்று? உம், இனிமேல் பொய் சொல்லாதீர்கள், சொல்லவில்லை என்று சொல்லுங்கள்” என்று சொல்லிவிட்டு, ”சொல்லுங்கள், சொல்லுங்கள்” என்று எச்சரித்துக் கொண்டே முதுகில் தன் பலங்கொண்ட மட்டும் அடித்தான். ”ஐயோ! ஐயோ! பொய் சொல்லவில்லை! இனிமேல் பொய் சொல்லவில்லை!” என்று வேதனையோடு சொல்கிறவன் மாதிரி சொன்னேன். குழந்தைகள் எல்லோரும் சிரித்தார்கள்.

சுந்தரராஜன் வந்து, ”சாரங்கா, அந்தப் பக்கம் நகர்ந்துக் கோடா” என்று சொல்லி அவனைத் தள்ளிவிட்டு எனக்கும் அவனுக்கும் நடுவில் வந்து உட்கார்ந்தான். என் கையிலுள்ள அத்தனை புத்தகங்களையும் “வெடு“க்கென்று பிடுங்கிக் கொண்டு, ‘விறுவிறு’ ன்று ஒவ்வொன்றின் பெயரையும் உரக்க வாசித்தான். கடைசிப் புத்தகத்தின் பெயரை வாசித்ததும் ‘பளிச்’ சென்று எழுந்து “இத்தனையும் எனக்குத்தான்“ என்று சொல்லிக்கொண்டே வெளியே கிளம்பிவிட்டான்.

குழந்தைகள் உடனே அழுவதற்கு ஆயத்தமாகி விட்டன. அப்பொழுது மௌனமாக இருந்தவன் சாரங்கன்தான். ”சுந்தர்! இதோ பார், இந்தப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு ஓடினால் அப்புறம் உனக்குப் புத்தகங்களே கொண்டுவரமாட்டேன்” என்றேன். அவன்

‘கடகட’ வென்று சிரித்துக்கொண்டே, பாவம் பயந்துவிட்டார்!” என்று கூறிக்கொண்டு உள்ளே வந்தான். மாமா புத்தகங்களை என் கையில் வாங்கி ஏழு புத்தகங்களில், ”என் பிரியமுள்ள சித்ராவுக்கு அன்பளிப்பு” என்று எழுதி என் கையெழுத்தையும் போட்டுச் சித்ராவிடம் கொடுத்தேன். மீதியுள்ள ஆறு புத்தகங்களிலும், என் கையெழுத்திட்டுச் சுந்தரராஜனிடம் கொடுத்தேன். பிருந்தாவும் தேவகியும் ”எனக்கு? என்று ஏககாலத்தில் கேட்டனர். “சித்ராவிடமும் சுந்தரிடமும் வாங்கிப் படித்துக் கொள்ளுங்கள். இதுவரையிலும் நீங்கள் மற்றப் புத்தகங்களை எப்படி வாங்கிப் படித்தீர்களோ, அப்படியே இப்பொழுதும் வாங்கிப் படித்துக் கொள்ளுங்கள்” என்றேன்.

அந்த இரண்டு பெண்களும் நான் ஆட்சேபணையின்றி ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ”மத்தியானத்துக்குள் இந்த ஏழு புத்தகங்களையும் படித்து விடுவேன். படித்து முடித்த பிறகு வருகிறேன், மாமா” என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டாள் சித்ரா. அவளைத் தொடர்ந்து, சாரங்கனைத் தவிர எல்லோரும் எழுந்து தத்தம் வீடுகளுக்குக் கிளம்பினார்கள். சாரங்கன் இரண்டொரு தடவை என் முகத்தையே ஏறிட்டுப் பார்த்தான். அவன் ஒன்றும் பேசவில்லை. அவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பதை அறிவிக்கும் சலனமும் முகத்தில் இல்லை.

அப்பொழுது அவன் அவ்வாறு பார்த்ததற்கு ஒரு முக்கியத்துவமோ, ஒரு அர்த்தமோ இருந்ததாக நான் கருதவும் இல்லை. நான் எழுந்து குப்பையாகக் கிடந்த புத்தகங்களையும் துணிமணிகளையும் எடுத்து அவையவை இருக்க வேண்டிய இடத்தில் வைக்க ஆரம்பித்தேன். சுருண்டு நசுங்கிக் கிடந்த புத்தகங்களை பாரமாகத் தூக்கி வைத்தேன். இந்த வேலைகளைச் செய்யும் போது சாரங்கன் நான் எதிர்பாராமலே எனக்கு உதவி செய்து கொண்டிருந்தான்.

எந்த வகுப்பு பாஸ் பண்ணினால் இந்தப் புத்தகத்தைக் கஷ்டமில்லாமல் படிக்கலாம்?” என்று ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு கேட்டான் சாரங்கன். அவன் குரலில் மூச்சைத் திணற வைக்கும் சங்கோஜம் நிறைந்திருந்தது. அது மட்டுமின்றி, பயந்தவனைப் போல, முயற்சியில் தோல்வியடைந்து புண்பட்டவனைப் போல, அவன் பேசினான். ”சாரங்கா! நீ கெட்டிக்காரப் பையன், உன் வயதில் நான் இவ்வளவு கெட்டிக்காரனாக இருந்ததில்லை. அதனால், நீ எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்புக்கு வந்ததும் இந்தப் புத்தகத்தைச் சிரமமில்லாமல் படித்துப் புரிந்து கொள்ளலாம்” என்று பரிவோடு சொன்னேன். அவன் கையில் வைத்துக் கொண்டிருந்தது வால்ட் விட்மனின் கவித்

தொகுதி. “அப்படியானால் இன்னும் இரண்டு வருஷம் இருக்கிறது” என்று அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். பிறகு கையிலுள்ள புத்தகத்தை ஜன்னலில் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்து உட்கார்ந்தான்.

என் தாயார் கோபமாக என்னென்னவோ சொல்லிக்கொண்டு அங்கே வந்தாள். “ஏண்டா, நான் எத்தனை தடவை உனக்குச் சொல்லுகிறது? வெந்நீர் ஆறி அலர்ந்தது ஜில்லிட்டுப் போய்விட்டது” என்று சொல்லிவிட்டு “இந்தப் பொல்லாத குட்டிகளை இப்படி அமர்க்களம் பண்ண விடலாமா? என்ன பிரியமோ இது? ஊரார் குழந்தைகளுக்கு இத்தனை சலுகை காட்டுகிறவர்களை நான் பார்த்ததே இல்லை... “நீ ஸ்நானம் பண்ணப் போடா, நான் எடுத்து வைக்கிறேன்” என்று வந்தாள் அம்மா. ”அம்மா! உனக்குப் புத்தகங்களை இனம் பிரித்து அடுக்கத் தெரியாது. நீ போ, நான் ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்”. ”இன்றைக்கு அடுக்கி வைக்க வேண்டியது நாளைக்கு அவர்கள் வந்து குப்பையாக்க வேண்டியது அப்புறம் பழையபடியும் அடுக்கி வைக்க வேண்டியது. உனக்கு வேற வேலை என்ன?” என்று சொல்லிவிட்டு அவள் சமையற் கூடத்துக்குச் சென்று விட்டாள்.

நானும் வெகு சீக்கிரத்திலேயே ஸ்நானம் பண்ணக் கிளம்பிவிட்டேன். அப்பொழுது என்னோடு நடுக்கூடம் வரையில் நடந்து வந்தான் சாரங்கன். அப்புறம் பளிச்சென்று மறுபக்கமாகத் திரும்பி, ”போய்விட்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். ”அம்மா! குழந்தைகளை இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறாயே! அதுகள் ஒவ்வொன்றும் ஒரு பொக்கிஷம்!” என்று சொல்லிவிட்டு ஸ்நான அறைக்குள் சென்றேன். நான் சொன்னது புகை மூட்டிய அடுப்பங் கரையில் திக்குமுக்காடும் அம்மாவுக்குக் கேட்டதோ என்னவோ? ஒவ்வொரு குழந்தையும் ஒரு பொக்கிஷந்தான். மாம்பலத்துக்கு வீடு மாற்றி வந்ததை என் பாக்கியம் என்றே நான் கருதினேன். இங்கே வந்திராவிட்டால் இந்த பொக்கிஷங்களை நான் சந்தித்திருக்க முடியுமா? இங்கு வந்து நான்கு வருஷங்களாகின்றன. வீட்டில் நானும் என் தாயாருந்தான். ஒரு பெரிய வீட்டின் ஒரு பகுதியிலே தான் எங்கள் குடித்தனம். வந்து ஆறு மாதங்களாகும் வரையில் இந்தக் குழந்தைகளின் நட்பு எனக்கு ஏற்படவே இல்லை.

ஒருநாள் திடீரென்று இரண்டு குழந்தைகள் சுந்தரராஜனும் சித்ராவும் வந்தார்கள். அன்று வந்தது போலவே தினமும் வந்தார்கள். சில நாட்களுக்குள் சம்பிரதாய மரியாதைகள், நாசூக்குகள் எல்லாம் மறைந்தன. மனப்பாசம் கொள்ளத் தொடங்கினோம். ஒன்றாக உட்கார்ந்து கதைகள் படிப்பது, பத்திரிகைகள் வாசிப்பது, கதைகள்

சொல்லுவது, செஸ் விளையாடுவது - இப்படிப் பொழுது போக்கினோம். நான் வேலை செய்யும் பத்திரிகாலயத்துக்கு மதிப்புரைக்கு வரும் புத்தகங்கள் என்னிடம் ஏராளமாக இருந்தன. குழந்தைகளுக்கு அவை நல்விருந்தாக இருந்தன. ஒரே ஆவலோடு ஒருசில தினங்களுக்குள் அத்தனை புத்தகங்களையும் சுந்தரராஜனும் சித்ராவும் படித்துத் தீர்த்துவிட்டார்கள். அவர்களுடைய புத்தகத் தேவையை என் மதிப்புரைப் புத்தகங்களைக் கொண்டு ஈடுசெய்ய முடியவில்லை. இதனால் அவ்வப்போது சில குழந்தைப் புத்தகங்களை உண்மையான விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பேன். அதனால், அவர்கள் தினம்தோறும் நான் காரியாலயம் போகும் போது, “இன்று ஞாபகமாகப் புத்தகங்கள் கொண்டு வரவேண்டும்” என்று சொல்லியனுப்புவார்கள்.

சாயங்காலத்தில் வெறுங்கையோடு வீடு திரும்பினால் ஒரே கலாட்டாதான். சுந்தரராஜனும் சித்ராவும் நான் குடியிருக்கும் வீட்டுக்கு பக்கத்து வீட்டுக் குழந்தைகள் பணக்காரக்குழந்தைகள், குழந்தை என்று சொன்னாலும் சுந்தரராஜனுக்குப் பதின்மூன்று வயது சித்ராவுக்கு ஒன்பது வயது. இந்த இருவரின் புத்திசாலித்தனம், களை நிறைந்த தோற்றம், எல்லாவற்றையும் விடச் சீரிய மனப்பாங்கு - எல்லாம் சேர்ந்து என்னை வசீகரித்தன் என்னை ஆட்கொண்டுவிட்டன. அவர்கள் மேல் நான் வைத்திருந்த அன்பு இம்மட்டு அம்மட்டு என்றில்லை. தினந்தோறும் அவர்களுக்கு ஏதேனும் ஒரு பரிசு கொடுக்கவேண்டும். தினந்தோறும் அவர்களுக்குப் புதியதொரு மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டும் என்றெல்லாம் என் மனம் துடித்துக் கொண்டிருக்கும். இவர்களுடைய நட்பு தொடங்கி சில வாரங்கள் ஆவதற்குள்ளாக மற்றக் குழந்தைகளின் பரிச்சயமும் எனக்கு ஏற்பட்டது. பிருந்தா, தேவகி, கீதா, சாரங்கராஜன் ஆகியவர்களும் வர ஆரம்பித்தார்கள். பிருந்தாவும் தேவகியும் சித்ராவுடன் ஒரே வகுப்பில் படிக்கும் சம வயதுக்குழந்தைகள், கீதா தேவகியின் தங்கை, சாரங்கராஜன் சுந்தரராஜனுடைய பள்ளித்தோழன். எல்லோருடைய வீடுகளும் ஒன்றையடுத்து ஒன்றாக இருந்தன. இவர்களில் சாரங்கனுடைய வீட்டார்தான் வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள். மற்றக் குழந்தைகள் சொந்த வீடு உள்ள பணக்காரக் குழந்தைகள்.

எல்லோரிடத்திலும் நான் ஒன்று போலவே அன்பாக இருந்தேன். சுந்தரராஜனும் சித்ராவும் எனக்கு முதலில் பரிச்சயமானவர்கள் என்பதற்காகவோ என்னவோ அவர்களிடத்தில் எனக்கு ஒரு அலாதிப் பிரியம் இருந்தது. ஆனால், வெளிப்படையான பேச்சிலும் நடவடிக்கைகளிலும் ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் நான் வித்தியாசம் காட்டி நடந்து கொள்ளவில்லை. உள்ளன்பிலும் வேற்றுமை காட்டவில்லை.

முன்னால் சொன்னதுபோல ஏதோ ஒரு அலாதிப்பிரியம் சித்ராவிடமும் அவளுடைய அண்ணனிடமும் ஏற்பட்டிருந்தது. ஆனால் குழந்தைகளோ என்னை ஒரே மாதிரி நேசித்தன. அவர்களுடைய பிரியத்தில் வேற்றுமை இல்லை. ஒவ்வொரு குழந்தையும் தனக்காகவே இந்த உலகத்தில் பிறந்த நண்பன் என்று என்னை நினைத்தது. ஒவ்வொன்றும் ஒரு மகத்தான நம்பிக்கையான, ஒரு பெரிய ஆறுதலாக,

ஒரு நல்ல வழிகாட்டியாக என்னைக் கருதியது. எந்த விதத்திலும் தனக்குச் சமதையான ஜீவன் என்று என்னைக் கருதியது. குழந்தைகள் என்னைப் பெரிய மனித பீடத்தில் தூக்கி வைக்காமல், நட்பு முறையில் கைகோத்துக் கொள்ள வந்தார்கள். இவர்கள் என்னோடு விளையாடினார்கள் என்னோடு சண்டை போட்டார்கள் என்னை அடித்தார்கள் என்னைக் கண்டித்தார்கள் என்னை மன்னித்தார்கள் என்னை நேசித்தார்கள். உலகத்தில், எல்லோரும் குழந்தைகளைக் கண்டால் பிரியமாக நடந்து கொள்ளுவதும், அல்லது விளையாடுவதுமாக இருக்கிறார்கள்.

ஆனால், அவர்களுடைய அன்பில் ஒரு விளையாட்டுணர்ச்சியும், ஒரு நடிப்பும் கலந்திருக்கின்றன. குழந்தையைப் போலப் பேசி, குழந்தையைப் போல் ஆடிப்பாடி, குழந்தையை விளையாட்டுப் பொம்மையாகக் கருதி அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளுகிறார்கள். ஆனால், அந்தச் சூதுவாதறியாத குழந்தைகளோ அப்படி நடிப்பதில்லை அவர்களுடைய அன்பில் அந்த விளையாட்டுணர்ச்சி கலக்கவில்லை. அவர்கள் உண்மையிலேயே அன்பு காட்டுகிறார்கள். இந்த உண்மை எனக்கு என்றோ, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனத்தில் தைத்தது. அன்று முதல் நான் அவர்களைக் குழந்தைகளாக நடத்தவில்லை. நண்பர்களாக நேசித்தேன். உற்ற துணைவர்களாக மதித்தேன். உள்ளன்பு என்ற அந்தஸ்தில் அவர்களும் நானும் சம உயிர்களாக மாறினோம். மாம்பலத்தில் எனக்கு இவர்கள் தான் நண்பர்கள், குழந்தைகளுடன் இம்மாதிரிப் பழகுவதும் இம்மாதிரி விளையாடுவதும் அம்மாவுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஐம்பது வயதுத் தாயாருக்குத் தன் மகனை மனைவி மக்களுடன் குடித்தனம் செய்யும் தகப்பனாகக் காணத்தான் பிடிக்குமே தவிர, குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடிக் கொண்டும் சண்டை போட்டுக் கொண்டும் இருப்பதைக் காணப்பிடிக்குமா?

பதின்மூன்று புத்தகங்களை எடுத்துக் கொடுத்த அந்தத் தினம், அந்த ஞாயிற்றுக்கிழமை கழிந்து இரண்டு வாரங்கள் ஆகியிருக்கும். பிருந்தா ஜுரத்தோடு

படுத்துவிட்டாள். அவளுடைய பெற்றோர்களை எனக்கு நேரில் தெரியாது. அதனால், அவளைப் போய்ப் பார்த்து விட்டுவர எனக்கு சங்கோஜமாக இருந்தது. ஆனால் மற்றக் குழந்தைகளிடத்தில், ”பிருந்தாவின் உடம்பு எப்படி இருக்கிறது?” என்று தினமும் விசாரித்துக் கொண்டிருந்தேன். குழந்தைகள் அதற்கு எப்படிப் பதில் சொல்லும்! ஜுரம் அதிகமாக இருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்று அவர்களுக்குச் சொல்லத் தெரியவில்லை. ”பிருந்தா எப்போது பார்த்தாலும் படுத்துக் கொண்டே இருக்கிறாள்” என்று மட்டும் தெரிவித்தார்கள்.

ஒருநாள் இரவு எட்டு மணி இருக்கும். வீட்டு முற்றத்தில் ஈஸிச் சேரைப் போட்டுக் காற்றாட நிலா வெளிச்சத்தில் படுத்துக்கொண்டிருந்தேன். அப்போது தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்த பிருந்தாவின் வீட்டு வேலைக்காரனை அழைத்து, ”பிருந்தாவின் உடம்பு எப்படி இருக்கிறது? ஜுரம் குறைந்திருக்கிறதா?” என்று கேட்டேன். “இல்லை ஸார், நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறது. எதுவும் சாப்பிடுவதில்லை. இந்த நான்கு நாட்களில் குழந்தை துரும்பாக மெலிந்து போய்விட்டது. தூக்கத்தில் உங்களை நினைத்துத்தான் என்னென்னவோ புலம்பிக் கொண்டிருக்கிறாள்” என்றான் வேலைக்காரன். “என்னை நினைத்துப் புலம்புகிறாளா!” என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

”ஆமாம் சார், நேற்று ராத்திரிகூட ”மாமா புத்தகம்”, “மாமா புத்தகம்” என்று என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தாள்” என்றாள். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. இந்தக் குழந்தையைப் போய்ப் பார்க்காமல் இருந்ததற்காக மிகவும் வருத்தப்பட்டேன். என் சங்கோஜத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு மறுநாள் காலையில் அவசியம் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டேன். ”போய்வா” என்று வேலைக்காரனை அனுப்பிவிட்டு, தனியாகப் படுத்து என்னென்னவோ யோசித்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் என் மனம் அவசரப்பட ஆரம்பித்துவிட்டது.

மறுநாள் காலை வரையில் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்ற நிலைமை வந்துவிட்டது. அவ்வளவு தான், உடனே எழுந்து வீட்டுக்குள் போய் சட்டையை மாட்டிக் கொண்டு ‘விறுவிறு’ என்று பிருந்தாவின் வீட்டுக்குச் சென்றேன். அவளுடைய பெற்றோர்கள் என்னை உள்ளே வரும்படி சொன்னார்கள். பிருந்தா படுத்துக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். கண்களை வெறுமனே மூடிக்கொண்டிருந்தாள்.

“பிருந்தா!” என்றேன். அவள் கண் விழித்து என்னைப் பார்த்தாள். அப்போது அவளுடைய முகத்தில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. அப்புறம் ஒருமுறை கண்களை மூடித் திறந்து என்னை நன்றாக உற்றுப் பார்த்தாள். ஒரு நிமிஷம் இப்படியே பார்த்துவிட்டு, திடீரென்று “மாமா!“ என்று உறக்கக் கூவினாள் அப்படியே எழுந்து உட்கார்ந்து விட்டாள். ”பிருந்தா! படுத்துக்கொள் அம்மா” என்று சொன்னேன். அவள் கேட்கவில்லை. எழுந்து என் பக்கம் வந்தாள். என்னைக் கட்டிக்கொண்டு என்தோள்மீது முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளுடைய, உடம்பு அனலாகச்சுட்டது. அவளைத் தட்டிக்கொடுத்து, படுக்கையில் கொண்டு போய்ப் படுக்க வைத்தேன்.

”எந்நேரமும் உங்கள் நினைப்புத்தான்” என்றாள் பிருந்தாவின் தாயார் என்னால் ஒன்றும் பேச முடியவில்லை. வாய் அடைத்து விட்டது. மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். சுமார் ஒரு மணிநேரம் அவள் பக்கத்தில் உட்கார்ந்துவிட்டு, வீட்டுக்கு வருவதற்காகப் புறப்பட்டு விட்டேன். “போக வேண்டாம். இங்கேயே இருங்கள் மாமா” என்று பிடிவாதம் பிடித்தாள், பிருந்தா. அப்புறம் அவளைப் பலவிதமாகச் சமாதானப்படுத்தி, ”நாளைக் காலையில் வருகிறேன்” என்று சொல்லிவிட்டு வந்தேன்.

அவ்விதமே மறுநாள் காலையில் சென்றேன். அங்கேயே இருந்தேன். அவள் ஜுரத்தினால் கஷ்டப்படுகிறவள் மாதிரியே இல்லை. என்னோடு பேசிக்கொண்டுதான் இருந்தாள். ஆபீசுக்கு நேரமாகிவிட்டதென்று அவளிடம் கூறிவிட்டு வெளியே எழுந்து வந்தேன். தெருவோடு வந்து கொண்டிருக்கும் போது சாரங்கன் தன் வீட்டு ஜன்னல் வழியாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கிருந்த வாக்கிலேயே, ”மாமா” என்று கூப்பிட்டான். நான் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாகத் தெருவுக்கு ஓடி வந்துவிட்டான்.

“எங்கள் வீட்டுக்கும் வாருங்கள்” என்று கையைப் பிடித்து இழுத்தான். ”உங்கள் வீட்டுக்கு எதற்கு?” ”பிருந்தா வீட்டுக்கு மட்டும்…” ”பிருந்தாவுக்கு ஜுரம். அதனால் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன்”. ”ஊஹும், எங்கள் வீட்டுக்கு வரவேண்டும். ஆமாம்”. “சாரங்கா! இன்னொரு நாளைக்கு வருகிறேன். எனக்கு ஆபீசுக்கு நேரமாகிவிட்டது.” கையை விடு. நான் சொன்னபடியே கையை விட்டுவிட்டான். தன் இடது கையில் வைத்திருந்த இரண்டு நெல்லிக்காய்களில் ஒன்றை எடுத்து ”இந்தாருங்கள்” என்று எனக்குக் கொடுத்தான். நான் சிரித்து விட்டேன். ”வேண்டாம்,

நீயே வைத்துக்கொள்” என்றேன். அவனோ கட்டாயப்படுத்தி என்னிடம் கொடுத்தான். நான் என்ன சொல்லியும் கேட்கவில்லை. நெல்லிக்காயை வாங்கிக்கொள்ளாவிட்டால் அவன் என் சிநேகிதத்தையே உதறித் தள்ளிவிடுவான் போல் இருந்தது. அந்த அதனால் ஒன்றும் சொல்லாமல் வாங்கிக்கொண்டேன். அவனுக்கு அப்பொழுது சொல்ல முடியாத ஆனந்தம். நான் புறப்படும் போது, ”எப்போது எங்கள் வீட்டுக்கு வருவீர்கள்?” என்று கேட்டுக்கொண்டே என்னைத் தொடர்ந்து நடந்து வந்தான். “அடுத்த ஞாயிற்றுக்கிழமை” என்று பேச்சுக்குச் சொல்லி வைத்தேன்.“கட்டாயம் வரவேண்டும்” ”சரி” அவன் வீட்டுக்குப் போய்விட்டான்.

அதற்குப் பிறகு நான் பிருந்தாவின் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் “ஞாயிற்றுக்கிழமை வரவேண்டும் கட்டாயம் வரவேண்டும்” என்று எனக்கு ஞாபகமூட்டிக் கொண்டு இருந்தான். பிருந்தாவுக்கு மூன்று நாட்களில் ஜுரம் குணமாகிவிட்டது. ஓர் ஆச்சரியமாகவே இருந்தது. நான் தினமும் அவள் வீட்டுக்குப் போய் வந்ததுதான் அவளுக்கு மருந்தாக இருந்தது என்று அவளுடைய தகப்பனார் என்னிடம் கூறினார். நான் போய் வந்ததன் காரணமாக ஒரு குழந்தையின் நோய் குணமாகிவிட்டது என்று அவர் சொன்னதைக் கேட்க எனக்கு எப்படியோ இருந்தது. ”எப்படியாவது உடம்பு குணமாயிற்றே, அதுபோதும்” என்றேன். அப்புறம், அவர் சொன்னது ஒரு வேளை உண்மையாக இருக்கலாமோ என்று கூட எனக்குத் தோன்றியது. சனிக்கிழமையன்று குழந்தைகளுக்கு விடுமுறை. பிருந்தா உட்பட எல்லாக்குழந்தைகள் என் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். புது வருஷம் பிறந்து இரண்டு மூன்று தினங்களே ஆகியிருந்தன.

நான் வாக்களித்திருந்தபடி சுந்தரராஜனுக்கும் சித்ராவுக்கும் இரண்டு டைரிகள் வழக்கம் போல வாங்கிக் கொண்டு வந்திருந்தேன். அவற்றில் “அன்பளிப்பு” என்று எழுதி அந்த இருவர் கையிலும் கொடுத்தேன். மற்றக் குழந்தைகள் தமக்கு டைரி வேண்டுமென்று என்னிடம் கேட்கவில்லை. நான் எத்தனை புத்தகங்கள் கொண்டு வந்தாலும், என்ன பரிசு கொடுத்தாலும் சுந்தரராஜனுக்கும் சித்ராவுக்கும் தான் கொடுப்பேன் என்று ஒவ்வொரு குழந்தைக்கும் தெரியும். அவர்கள் இருவர் தான் இப்படிப்பட்ட அன்பளிப்புக்குத் தகுதியானவர்கள். அவர்களுக்குக் கொடுப்பது தான் நியாயம் என்று எல்லாக் குழந்தைகளும் ஒப்புக்கொண்டுவிட்ட பாவனையில் பேசாமல் இருந்தன. முதல் நட்பு என்ற காரணத்தினால் தானோ என்னவோ ஒரு அலாதிப் பிரியத்துடன் அவர்களுக்கு மட்டும்

நான் புத்தகங்களைக் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. இந்த நெடுநாளைய வழக்கம் மற்றக் குழந்தைகளுக்குப் பழகியும் போய் விட்டது.

டைரிகளை வாங்கிக் கொண்டு அந்த இருவரும் சாப்பிடப் போய் விட்டார்கள். அவர்கள் போன பிறகு மற்றவர்களும் புறப்பட்டார்கள். ஆனால், அன்று சாரங்கன் மட்டும் போகவில்லை. எல்லோரும் போன பிறகும்கூட அவன் உட்கார்ந்து கொண்டு தான் இருந்தான். என்னிடத்தில் அந்தரங்கமாக, ”மாமா! நாளைக்கு எங்கள் வீட்டுக்கு வருவீர்களா? நாளைக்குத்தான் ஞாயிற்றுக்கிழமை” என்றான். ”சரி சாரங்கா. எத்தனை தடவை சொல்லகிறது? ஒரு தடவை சொன்னால் ஞாபகமிருக்காதா?” என்றேன். அவன் எழுந்து வால்ட் விட்மனின் கவித்தொகுதியைக் கையில் எடுத்தான். ”இந்தப் புத்தகத்தை எனக்குத் தருவீர்களா?” என்று கெஞ்சுதலாகக் கேட்டான். எனக்கு அது வேடிக்கையாக இருந்தது. சிரித்துக்கொண்டே, “இந்தப் புத்தகம் உனக்கு எதற்கு? அது உனக்கு இப்பொழுது புரியாது. நான் அன்றைக்கே சொல்லவில்லையா? நீ எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்புக்கு வந்ததும் கேள், தருகிறேன்” என்றேன்.

நான் சொன்னதை அவன் கேட்கவில்லை. பதின்மூன்று வயதுப் பையன் ஐந்து வயதுக் குழந்தையைப் போல முரண்டு பண்ணிக் கொண்டு, அந்தப் புத்தகத்தை அவசியம் கொடுத்தாக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான். ”சாரங்கா! உனக்குப் புரியாது சொன்னால் கேள்” என்று சொன்னேன். அப்புறம் அவன் கையிலிருந்து புத்தகத்தை வாங்கி ஜன்னலில் கொண்டுபோய் வைத்தேன். சாரங்கனின் முகம் ஏமாற்றத்தினால் வெளிறிப் போய்விட்டது. வறண்ட பார்வையோடு என்னைப் பார்த்தான். ஒன்றுமே சொல்லாமல் எழுந்து வாசல் -பக்கம் போனான். சரி, வீட்டுக்குப் போகிறான் என்று நினைத்து,

நான் என் வேலையைக் கவனிக்கலானேன். இரண்டு நிமிஷ நேரத்துக்குப் பிறகு, திடீரென்று ஒரு அழுகைக்குரல் கேட்டது. அழுதது சாரங்கன்தான். ”சாரங்கா! ஏன அழுகிறாய்? சேச்சே, அழாதே ராஜா” என்று சொல்லிக்கொண்டே அவன் பக்கத்தில் எழுந்து சென்றேன். ஆனால், நான் போகும் வரையில் அவன் அங்கே நிற்கவில்லை. அழுகையை நிறுத்தினான். என்னைத் திரும்பிப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். அவனுடைய வயிறு அசாதாரணமாக குழிந்து புடைத்தது.

அப்பொழுது முகம் ரத்தம் போலச் சிவந்து விட்டது. இதெல்லாம் எதற்கென்றே எனக்குப் புரியவில்லை. அவன் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். என்னைப் பார்க்கவே அவனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. நான் போய் கை எட்டிப் பிடிப்பதற்குள் ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான். "சாரங்கா.... சாரங்கா!" அவன் ஓடியே விட்டான். அன்று அவன் நடந்து கொண்ட விதம் எனக்கு ஒரு புதிராக இருந்தது. எப்பொழுதும் அவன் பிடிவாதம் பண்ணமாட்டான். என்னிடத்தில் பேசுவதற்கே கூசுவான். அப்படிப்பட்ட பையன் எதற்காகப் பிடிவாதம் பிடித்தான்? எதற்காக அப்படி அழுதான்? எதற்காகத்தான் அழுதானோ? அவனைப் பின் தொடர்ந்து சென்று, அழுத காரணத்தைக் கேட்காவிட்டால் என் நெஞ்சு வெடித்துவிடும் போல இருந்தது. ஆனால், அவன் வீட்டுக்குப் போகவும் என்னால் இயலவில்லை. அவனுடைய பெற்றோர்கள், பிற பெற்றோர்களைப் போலவே எனக்குப் பரிச்சயமில்லாதவர்கள். பாவம்! ஏங்கி ஏங்கி அழுதான். அவமானப்பட்டவன்போல் அழுதான்.

பிற்பகலில் குழந்தைகள் என் அறைக்கு வந்தால், அவர்களை அனுப்பி அவனை அழைத்துவர வேண்டுமென்று தீர்மானித்தேன். மூன்று மணிக்கெல்லாம் முதல் ஆளாக சுந்தரராஜன் வந்து சேர்ந்தான். அவனைச் சாரங்கனிடம் அனுப்பி வைத்தேன். சாரங்கன் தூங்கிக் கொண்டிருப்பதாக சுந்தரராஜன் என்னிடம் வந்து தெரிவித்தான். அதற்குப் பிறகு அவனை வரவழைக்கும் முயற்சியை நிறுத்தினேன். மறுநாள் காலையில் அவன் வந்தால் பார்க்கிறது. இல்லையென்றால் நானே அவன் வீட்டுக்குப் போவது. இதே தீர்மானத்துடன் மற்றக் குழந்தைகளுடன் அன்றைய மாலை பொழுதைப் போக்கினேன்.

இரவில் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்ட பிறகு தான் என் மனம் மிகமிகக் கஷ்டப்பட்டது. பக்கத்தில் யாருமில்லாத அந்தத் தனிமையில் மனத்துயரம் பெரிதாகிக் கொண்டே இருந்தது. உள்ளத்தில் எத்தனையோ துயரம் படிந்த சிந்தனைகள் ஏன் அழுதான்? நான் அவனை ஒன்றும் சொல்லவில்லையே! எல்லாக் குழந்தைகளையும் போலவே அவனையும் என் கண்ணுக்குக் கண்ணாக வைத்துக் கொண்டிருந்தேன். வால்ட் விட்மன் கவித்தொகுதியைக் கேட்டான். அது அவனுக்குப் புரியாது என்று வாங்கி வைத்து விட்டேன். இதற்காகவா அவன் அழுதிருப்பான்? அவன் விபரம் தெரிந்த பையன். எப்போதும் நான் சொல்வதை மறுதலிக்காமல் ஏற்றுக்கொள்ளுபவன். அப்படிப்பட்ட பையன் புத்தகத்தை நான் திருப்பி வாங்கிக் கொண்டதற்காக இப்படி அழுதிருக்க முடியாது. நான் திரும்பி வாங்கிக் கொண்ட காரியம், விம்மி விம்மி அழத்தக்க மனவேதனையைத் தர நியாயமில்லை! சாரங்கா! எதற்காக அழுதாய்? எதற்காக அழுதாயடா?"

ஞாயிற்றுக்கிழமை. மற்றும் நேற்று பிற்பகலில் அவன் வராமல் இருந்துவிட்டதால் இன்றும் வரமாட்டான் என்றே எண்ணியிருந்தேன். சப்தரிஷி மண்டலம் போன்ற எங்கள் கூட்டத்தில் இந்த ஒரு நக்ஷத்திரம் மறைந்து நிற்பதை மற்றக் குழந்தைகள் பொருட்படுத்தவில்லை. அத்துடன் அவர்கள் கவலைப்படுவதற்கும் இங்கே என்ன இருக்கிறது? ஒருநாள் பிற்பகலில் அவன் வராமல் இருந்தது அவர்களுக்கு ஒரு பிரிவாகத் தோன்ற நியாயமில்லை. எனக்குச் மற்றச் சமயங்களில் இது கவனத்தைக் கவரத்தக்க விஷயமாக இல்லாமல், சகஜமான காரியமாக இருந்திருக்கும். ஆனால், அவன் நேற்று எந்த நிலையில் என்னைப் பிரிந்து சென்றான். எந்த நிலையில் என்னை விட்டு விட்டுச் சென்றான் என்ற விபரங்கள் எனக்கல்லவா தெரியும்?

காலை பத்து மணி இருக்கும். ஞாயிற்றுக்கிழமையானதால் சாப்பாட்டைப் பகல் ஒரு மணிக்கு ஒத்திப் போட்டுவிட்டு, காலையில் பலகாரம் பண்ணி நானும் என் தாயாரும் சாப்பிட்டோம். அப்புறம் நான் என் அறைக்கு வந்து ஏதாவது படிக்கலாம் என்று உட்கார்ந்தேன். மனம் என்னவோ அந்த வால்ட் விட்மனின் கவித்தொகுதியைத் தான் படிக்க விரும்பியது. அதைக் கையில் எடுத்து விரித்ததும் என் கண்களுக்குக் கவிதா வாசகங்கள் தென்படவில்லை. சாரங்கன்தான் காட்சியளித்தான் அவனுடைய கண்ணீரும் ஏக்கமும் தான் காட்சியளித்தன. இது சோதனையாக இருக்கிறதே! அவனாவது இங்கு வரக்கூடாதா? அல்லது வேறு குழந்தைகளாவது வரக்கூடாதா" என்று மறுகிக் கொண்டு கிடந்தேன்."

சிறிது நேரத்திற்குப் பிறகு பிருந்தா வந்தாள். பாக்கிய தேவதை என ஒரு தெய்வ மகள் உண்மையிலேயே இருந்து, ஒரு தரித்திரனின் வீட்டில் அடியெடுத்து வைத்ததுபோல இருந்தது பிருந்தாவின் வரவு. வா. வா பிருந்தா! பிருந்தா என்ற பெயரை மாற்றி "பிரியதர்சினி" என்று பெயர் வைத்தால் உனக்குப் பொருத்தமாக இருக்கும் பிருந்தா!" என்றேன். என் பரவசம் அவள் உள்ளத்தைத் தொடவில்லை. என் சொற்கள் அவள் செவிக்கு எட்டவும் இல்லை.

"சுந்தரராஜனும் சித்ராவும் சினிமாவுக்குப் போய்விட்டார்கள்" என்று காரண காரியமில்லாமல் சொன்னாள் பிருந்தா. சாரங்கன்?" என்று ஆவலோடு கேட்டேன். "நான் பார்க்கவில்லை" என்று சொல்லிவிட்டாள். மேற்கொண்டு நான் சாரங்கனைப் பற்றி விசாரிக்கத் தொடங்கும் போது, பிருந்தாவின் வீட்டு வேலைக்காரன் வந்து "அம்மா கூப்பிடுகிறார்கள்" என்று சொல்லி அவளை அழைத்தான். பிருந்தா உடனே, "போய்

வருகிறேன்” என்று சொல்லிக் கிளம்பிவிட்டாள். அவள் போன பிறகு பழையபடியும் அந்தக் கவித்தொகுதியை எடுத்து விரித்தேன். அப்போது பிருந்தா வெகுவேகமாக ஓடி வந்தாள். வந்து, “சாரங்கன் வருகிறான்” என்று சொல்லிவிட்டு அந்த க்ஷணத்திலேயே தன் வீட்டை நோக்கி ஓடிவிட்டாள்.

என் இதயம் ‘படபட’ வென்று அடித்துக் கொண்டது. அதிவேகமாக வால்ட் விட்மனின் புத்தகத்தை மறைத்து வைத்து விட்டேன். அதைப் பார்த்தால் சாரங்கனுக்குப் பழையபடியும் அழுகை வந்துவிடுமோ என்று எனக்குப் பயம். சாரங்கன் வந்துவிட்டான். ”சாரங்கா...” ”உம்.” “ஏன் நீ இவ்வளவு நேரம் வரையிலும் வரவில்லை?” நேற்றும் வரவில்லை? அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. அவன் முகத்தில் துயரமோ, வேறுவிதமான ஆழ்ந்த உணர்ச்சிகளோ பிரதிபலிக்கவில்லை. ஒரே சந்தோஷமாகத்தான் இருந்தான். இது மகிழ்ச்சிக்குரிய மாறுதல்தான் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

”எங்கள் வீட்டுக்குப் போவோமா?” ”உங்கள் வீட்டுக்கா?” ”ஆம். நீங்கள் வருவதாக அன்றே சொல்லவில்லையா?” ”சும்மா வேடிக்கைக்குச் சொன்னேன். சாரங்கா! உங்கள் வீட்டிற்கு எதற்கு?” ”எதற்கோ? நீங்கள் வாருங்கள்” என்று இரண்டு கைகளாலும் என் கையைப் பிடித்து இழுத்தான். அவனுடைய வேண்டுகோள் எனக்கு ஒரு பிரச்சனையாக மாறிவிட்டது. அன்று பிருந்தாவின் வீட்டிலிருந்து வரும்போது அவனுடைய கட்டாயத்தைப் பார்த்து, ”ஞாயிற்றுக்கிழமை வருகிறேன்” என்று சொல்லி வைத்தேன். அந்த விஷயத்தை அவன் இவ்வளவு தூரம் வற்புறுத்துவான் என்று தெரிந்திருந்தால் அப்படிச் சொல்லியிருக்கவே மாட்டேன்.

இந்தச் சிறுவனின் வேண்டுகோளுக்காக வேற்றார் வீட்டுக்குப் போவது எப்படி? போவதற்குக் காரணமும் வேண்டுமே! பிருந்தா வீட்டுக்குப் போனதற்காகவாவது அவளுடைய தேக அசௌக்கியம் காரணமாக இருந்தது. இங்கே போவது எதற்காக? இவனுடைய அப்பாவை வீதியிலும் பஸ் ஸ்டாண்டிலும் ஆயிரம் தடவைகள் பார்த்திருக்கிறேன். ஒரு தடவை கூட நாங்கள் பேசிக் கொண்டதில்லை. ஒருவருக்கு ஒருவர் அறிமுகமானவர்கள் என்று எவ்வித சைகை ஜாடையின் மூலமாகக் காட்டிக் கொண்டதில்லை. அப்படியிருக்க அங்கு நான் எப்படிப் போவது?

சாரங்கன் மிகவும் அதிகமாக வற்புறுத்தத் தொடங்கினான். அவசரப்படவும் ஆரம்பித்தான். எனக்கு அது ஒரு தொந்தரவாகவே ஆகிவிட்டது. “இத்தனை நாளும்

இவன் வாய்மூடி மௌனியாக இருந்தது போதும், இன்று படாய்ப் படுத்துவதும் போதும்" என்று சலித்துக் கொண்டேன். "வாருங்கள் மாமா. சொல்லிவிட்டு மாட்டேன் என்கிறீர்களே?" என்று கெஞ்சினான். "சாரங்கா! நீ சிறு பிள்ளை, உன் பேச்சைக் கேட்டுக்கொண்டு நான் வருவது எப்படி? இந்த நாசூக்கு எல்லாம் உனக்குப் புரியாது. என்னை விட்டுவிடு" என்று பொறுமையிழந்து சொன்னேன். "ஏன் வரமாட்டேன் என்கிறீர்கள்?" என்று என் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு ஏக்கத்துடன் கேட்டான். "அங்கே எதற்கு?" "அதென்னமோ, கட்டாயம் வரத்தான் வேண்டும்". நான் கோபப்பட்டவன் போல் நடித்து, "என்னால் வர முடியாது எனக்கு அவசரமான வேலை இருக்கிறது. இன்னொரு நாளைக்கு வேண்டுமானால் பார்த்துக் கொள்வோம்" என்று சொல்லிவிட்டு மறுபுறம் திரும்பிக்கொண்டேன். ஏதோ ஒரு புத்தகத்தைத் தேடுபவன்போல, மேஜையைத் துழாவிக் கொண்டிருந்தேன்.

சாரங்கன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தான். ஒரு நிமிஷம் கழிந்திருக்கும் அவனை ஒரு முறை திரும்பிப் பார்த்தேன். நான் பார்த்தமாத்திரத்தில் அவனும் ஒருமுறை பெருமூச்சு விட்டுக்கொண்டு, "வரமாட்டீர்களா" என்று தடுமாறும் குரலில் கேட்டான். அவனுடைய இந்தக் கடைசி முயற்சியைத் தகர்த்து விட்டால், பழைய படியும் அழ ஆரம்பித்துவிடுவான் என்பதற்குரிய அடையாளம் அவன் திரும்ப அழவைத்துப் முகத்தில் தென்பட்டது.

சாரங்கனைத் திரும்பத் பார்க்க எனக்கு இஷ்டமில்லை. "தங்கமான பையனை ஏன் இப்படிக் கஷ்டத்துக்கு ஆளாக்கவேண்டும்? போய்விட்டுத் தான் வருவோமே! நம்மை வரவேண்டாமென்றா சொல்லப் போகிறார்கள்? அப்படியிருக்க ஒருமுறை போய் வருவதில் என்ன நஷ்டம்?" என்று அதிசீக்கிரமாக யோசித்து முடிவு கட்டினேன். அவன் கண்ணீர் சொரிவதற்குள் என் சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன்.

"சாரங்கா! வா! உன் வீட்டுக்கே போகலாம்" இருவரும் கைகோர்த்துக் கொண்டே சென்றோம். அவன் வீட்டுக்கு முன்னால் போனதும், என் கையைவிட்டு விட்டு வீட்டுக்குள்ளே வேகமாக ஓடினான். அப்புறம் வெளியில் வந்து வாசல் பக்கத்திலுள்ள அறையைத் திறந்து, "வாருங்கள், வாருங்கள்" என்று படபடப்பாக இரைந்து சொன்னான்... என்னுடைய தயக்கத்தையும், என்னுடைய சங்கோஜனத்தையும் அளவிட்டுச் சொல்லமுடியாது. வேறு வழியில்லாமல் அந்த அறைக்குள் சென்றேன். அறையின் சூழ்நிலையைக் கொண்டே சாரங்கனின் பெற்றோர்கள் ஏழைகள் என்று எளிதில்

தீர்மானிக்க முடிந்தது. நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, பக்கத்தில் கிடந்த அவனுடைய சரித்திரப் புத்தகத்தை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தேன். சாரங்கன் வீட்டுக்குள்ளே ஓடிவிட்டான். அப்போது வெளியிலிருந்து வந்த அவனுடைய தகப்பனார், அறைக்குள் எட்டிப் பார்த்தார். என்னைப் பார்த்து “வாருங்கள்“ என்று சொல்லிவிட்டு, உள்ளே போய்விட்டார். “என்ன விசேஷம்?” என்று என்னை அவர் விசாரிக்காமல் விட்டது எனக்கு ராஜமரியாதை செய்தது போல இருந்தது. சாரங்கன் திரும்பி வரும்போது, ஒரு தட்டில் உப்புமாவும் ஒரு டம்ளரில் காபியுமாக வந்து சேர்ந்தான். நான் திடுக்கிட்டு விட்டேன். என் சுவாசம் அப்படியே நின்றுவிட்டது.

“ஐயோ! இதெல்லாம் எதற்கு? நான் இப்போதுதானே சாப்பிட்டேன்?” சந்தோஷப் படபடப்பில் ஒன்றுமே சொல்லாமல் வந்து அவன் என் வலது கையைப் பிடித்து இழுத்து உப்புமாத் தட்டில் கொண்டுபோய் வைத்தான். சாரங்கன் ரொம்பவும் சிறு பிள்ளையாக இருக்கிறான். இனிமேல் இவனிடம் கொஞ்சம் கண்டிப்பாகத்தான் நடந்துகொள்ள வேண்டும். இன்று மட்டும் ஏதோ கசப்பு மருந்தைச் சாப்பிடுவோம். வேறு வழியில்லை என்று எண்ணிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தேன். சிறு பையன் பேச்சைக் கேட்டு விருந்தாட வந்த என்னைப்பற்றி அவனுடைய பெற்றோர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு அதிர்ச்சி கொடுத்த வண்ணமாக இருந்தது.

ஒரு வழியாகச் சாப்பிட்டு முடிந்தது. தட்டையும் டம்ளரையும் உள்ளே கொண்டுபோய் வைக்கப் போனான் சாரங்கன். ”இந்தப் பையனுக்கு எதற்கு என் மேல் இவ்வளவு அன்பு? இவன் அன்பு என்னைத் திணற அடிக்கிறதே! இது தாங்க முடியாத அன்பு! தாங்க முடியாத பேதைமை! இரண்டும் சேர்ந்து என்னைக் குரங்காட்டம் ஆட்டுகின்றன... ஆனால் இவனைக் கோபிக்கக் கூடாது. இவன் இப்போது எனக்குக் கொடுக்கும் தொந்தரவே இவனுடைய அன்பை அளந்து காட்டுகிறது. ஏதோ ஒரு நாள் என்னைக் கஷ்டப்படுத்துவதனாலாவது, இவன் திருப்தியடையட்டும். என்னுடைய முயற்சி எதுவும் இல்லாமல், என்னால் மட்டுமே ஒர் உயிர் சந்தோஷமும், திருப்தியும் கொள்ள முடிகிறது என்றால், அதை எந்தச் சமயத்திலும் தடுக்கக்கூடாது.

தடுக்க முயலுவது அமானுஷிகம்“ என்று எண்ணித் தேற்றிக் கொண்டேன். சாரங்கன் வெளியே வந்தான். மேஜையைத் திறந்து ஒரு பவுண்டன் பேனாவை எடுத்தான். என் முகத்துக்கு எதிரில் நிற்காமல் என் முதுகுப் புறமாக வந்து நின்று கொண்டான். அங்கே நின்ற வாக்கிலேயே, நான் கையில் வைத்திருந்த சரித்திரப் புத்தகத்தை

மெதுவாகப் பிடித்து இழுத்துத் தூரத்தில் வைத்தான். தூங்கும் குழந்தையின் கையிலிருக்கும் கிலுகிலுப்பையை எவ்வளவு ஜாக்கிரதையாக தனியாக எடுத்து அப்புறப்படுத்துகிறோமோ, அதுபோல அதை அப்புறப்படுத்தினான். பிறகு அவன் வலது கையால் தன் கால் சட்டையின் பையில் கையை விட்டு எதையோ எடுப்பது போல் எனக்கு ஜாடையாகத் தெரிந்தது. அதை என் முன்பாக மேஜை மேல் வைத்தான். அது ஒரு டைரி. நான் சுந்தரராஜனுக்கும் சித்ராவுக்கும் அன்பளிப்பாகக் கொடுத்த டைரிகளைப் போன்ற ஒரு டைரி. அதே கம்பெனியில் செய்தது அதே நிறமுடையது. அப்புறம் பேனாவை என் கையில் கொடுத்து “எழுதுங்கள்” என்றான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. “என்ன எழுத?” என்று கேட்டேன். “என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு“ என்று எழுதுங்கள்.

**ஆசிரியரைப் பற்றி**

குறிப்பிடத்தக்க தமிழ் எழுத்தாளர்களுள் கு.அழகிரிசாமியும் ஒருவர். 20-ம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்த அழகிரிசாமி சிறுகதை, கட்டுரை, புதினங்கள், நாடகங்கள், மேடை நாடகங்கள், கவிதைகள், கீர்த்தனைகள், மொழிபெயர்ப்புகள் என்று பல துறைகளில் சாதனை புரிந்தவர். கு.அழகிரிசாமி திருநெல்வேலி மாவட்டத்தில் இடைசெவல் என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவரது காலம் 1923-1970 ஆகும். ‘உறக்கம் கொள்ளுமா?’ என்பது இவரது முதல் சிறுகதையாகும். ரஷ்ய எழுத்தாளர் கார்க்கியின் நூலை முதன்முதலில் தமிழாக்கம் செய்தவர் இவர்தான். இலக்கிய உலகில் இவரது சிறுகதைகள் புகழ்பெற்றவை. 1970-ல் இவரது ‘அன்பளிப்பு’ என்னும் சிறுகதைத் தொகுப்பு சாகித்திய அகாதமி விருதைப் பெற்றது.

# 6. நந்தவனத்தில் ஓர் ஆண்டி

**- ஜெயகாந்தன்**

தூரத்துப் பார்வைக்கு அது ஒரு நந்தவனம்போல் தோற்றமளிக்கும். உண்மையில் அது ஒரு நந்தவனம் அல்ல, இடுகாடு! பச்சைக்கொடிகள் பற்றிப் படர்ந்த காம்பவுண்ட் சுவரால் நாற்புறமும் சுற்றி வளைக்கப்பட்ட அந்து இடுகாட்டின் மேற்கு மூலையில், பனை ஓலைகளால் வேயப்பட்ட சின்னஞ்சிறு குடிசை ஒன்று இருக்கிறது. அதில்தான் ஆண்டி வசிக்கிறான். குடிசைக்கு முன்னே வேப்ப மரக்கிளையில் கட்டித் தொங்கும் தூளியில் அவன் செல்வ மகன் இருளன் சுக நித்திரை புரிகிறான். அதோ அவன் மனைவி முருகாயி வேலியோரத்தில் சுள்ளி பொறுக்கிக் கெண்டிருக்கிறாள். ஆம், ஆண்டிக்கு மனைவியும் மகனும் உண்டு. அவன் பெயர் மட்டும்தான் ஆண்டி. அவன் இருக்கும் அந்த இடம் தூரத்துப் பார்வைக்குத்தான் நந்தவனம்.

ஆண்டி ஒரு வெட்டியான். அவன் வாழும் இடம் இடுகாடு. அந்த மயான பூமிக்கு வரும் பிணங்களுக்குக் குழி வெட்டுவது அவன் தொழில். அதற்காக முனிசிபாலிடியில் மாதம் ஏழு ரூபாய் சம்பளமும், அந்த இடுகாட்டிலேயே வசிக்க ஒரு வீடும் தந்திருக்கிறார்கள். ஆண்டி 'ஒரு மாதிரியான' ஆள், பைத்தியம் அல்ல. மகிழ்ச்சி என்பது என்னவென்று தெரியாத மனிதர்கள், எப்பொழுதும் குஷியாகப் பாடிக்கொண்டே இருக்கும் அவனை 'ஒரு மாதிரி' என்று நினைத்தார்கள். அவன் உடம்பில் எப்பொழுதும் அலுப்போ, சோர்வோ ஏற்படுவதே இல்லை. வயது நாற்பது ஆகிறது் இருபது வயது இளைஞனைப்போல் துறுதுறுவென்றிருப்பான். அர்த்தம் புரிந்தோ புரியாமலோ அவன் வாய், உரத்த குரலில் சதா ஒரு பாட்டை அலப்பிக்கொண்டே இருக்கும்.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி...

குழி வெட்டும் வேலை இல்லாத சமயத்தில் அவன் நந்தவன வேலையில் ஈடுபடுவான். அவன் உழைப்பால்தான் அந்த இடுகாடுகூட நந்தவனமாகி இருக்கிறது. அவனுக்குச் சோகம் என்பது என்னவென்றே தெரியாது.

செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சும்போதும் சரி, பிணங்களுக்கு குழி பறிக்கும்போதும் சரி - சலனமோ, சங்கடமோ ஏதுமின்றி உரத்த குரலில் கழுத்து நரம்புகள் புடைக்க அந்தப் பாட்டைத் தனது கரகரத்த குரலில் பாடுவான். அவனைப் பொறுத்தவரை அந்தப் பாட்டிற்கு அர்த்தம் கிடையாது வெறும் பழக்கம்தான். அது புதைக்கும் இடமாதலால் பெரும்பாலும் குழந்தைகளின் பிரேதம் அங்கு வரும். மூன்றடி நீளம் மூன்றடி ஆழக்குழிகள் வெட்டுவது ஆண்டிக்கு ஒரு வேலையே அல்ல. தலையில் இறுகக் கட்டிய முண்டாசுடன், வரிந்து கட்டிய வேட்டியுடன், கால்களை அகட்டி வைத்துக் கொண்டு நிற்பான். அவன் கையிலுள்ள மண்வெட்டி அனாயாசமாகப் பூமியில் விழுந்து மேற்கிளம்பும். ஒவ்வொரு வெட்டுக்கும் ஈரமண் மடிந்து கொடுக்கும். பூமியே புரண்டு கொடுக்கும்.

‘கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் ... கூத்தாடிப்.... போட்டுடைத்தாண்டி..“

அந்தக் “கூத்தாடி“ என்ற வார்த்தையை அழுத்தி அழுத்தி உச்சரித்த வாறு பூமியின் மார்பை அவன் பிளக்கும்போது அவனை யாராவது கண்டால் அந்தப் பாட்டின் பொருள் தெரிந்துதான் அவன் பாடுகிறான் என்றே எண்ணத் தோன்றும். உண்மையில் அந்தப் பாட்டுக்கு உரிய பொருள் அவனுக்குத் தெரியவே தெரியாது. அவன் அந்தப் பாட்டை, எங்கு எப்பொழுது கற்றுக் கொண்டான்? நமக்கு தெரிந்த ஒவ்வொரு வார்த்தையையும் எங்கு எப்பொழுது நாம் கற்றுக்கொண்டு முதன் முதலில் உச்சரித்தோம் என்று சொல்ல முடியுமா? ஆனால், ஏதோ ஒரு விசேஷமான வார்த்தையைக் குறிப்பாக எண்ணினோமானால் நம்மில் எவ்வளவோ பேர் சொல்லி விடுவோம். ஆண்டி இந்தப் பாட்டை எப்பொழுது எங்கு முதன் முதலில் கேட்டான்? சற்று நினைவு கூர்ந்தால் அவனால் சொல்லிவிடமுடியும். ஒரு நாள் காலை, கயிற்றுக் கட்டிலில் உறக்கம் கலைந்து எழுந்த ஆண்டி, தன் கண்களைக் கசக்கிவிட்ட பின் கண்ட காட்சி அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

குடிசை வாசலில், கிழிந்த கோரைப் பாயில், வழக்கத்திற்கு மாறாக இன்னும் உறக்கம் கலையாமல் தன்னை மறந்து கிடக்கிறாள் முருகாயி. அவன், தான் எழுந்தபின் அவள் தூங்கிக் கொண்டிருப்பதை, கலியாணம் ஆகி இந்தப் பதினைந்து வருஷ காலத்தில் ஒருநாள் கூடப் பார்த்ததில்லை. ”ஏ... முருவாயி...” என்று குரல் கொடுத்தான். அவள் எழுந்திருக்கவில்லை புரண்டு படுத்தாள். அவன் கயிற்றுக்

கட்டிலைவிட்டு எழுந்து அவள் அருகே சென்று அமர்ந்தான். ”உடம்பு சுடுகிறதோ” என்ற நினைப்பில் அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. “முருவாயி...” என்று மறுபடியும் உலுப்பினான். மயங்கிக் கிறங்கிய நிலையில் முருகாயி கண்களைத் திறந்தாள். எதிரில் புருஷன் குந்தி இருப்பதைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்து பேந்தப் பேந்த விழித்தாள். “என்ன முருவாயி... ஒடம்புக்கு என்னா பண்ணுது?” என்று பதறினான் ஆண்டி. ”ஒண்ணுமில்லே... கையி காலெல்லாம் கொடைச்சலா இருக்கு... ஒடம்பு பூரா அடிச்சிப் போட்ட மாதிரி... கிர்னு தலை சுத்துது...” என்று சொல்லும்போதே கறுத்த இமைகள் ஒட்டி ஒட்டிப் பிரிந்தன “கனா ஒண்ணு கண்டேன்,” என்ன கனா புள்ளே?” முருகாயி கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டே கொட்டாவி விட்டாள். ஒரு ”கனாவிலே ஒரு பூச்சி... கறுப்பா.. சின்னதா...” அவள் உடல் முறை குலுங்கிற்று.

”உம்.” ”சொல்லும்போதே திரேகம் சிலுக்குது மச்சான். அந்தக் கறுப்புப் பூச்சி நவுந்து நவுந்து வந்து எங் கையிமேலே ஏறிச்சி... ஏறினவுடனே அது மஞ்சளா மாறிடுச்சி... ஊஹும்... மஞ்ச நெறமில்லை... தங்க நெறம்... அப்பிடி ஒரு சொலிப்பு சொலிச்சிது... அது எங்கையிலே வந்து குந்திக்கிட்டு... “என்னெத் தின்னுடு, என்னெத் தின்னுடுன்னு சொல்லிச்சு”. ”உம் அப்புறம்..?” “தின்னுடு தின்னுடுன்னு சொல்லிக்கிட்டே எங்கையெ கொறிக்க ஆரம்பிச்சுது. எனக்கு என்னமோ புத்தி கொளம்பிப் போய் ஒரு ஆவேசம் வந்திடுச்சி... சீ, இந்த அல்பப் பூச்சி வந்து என்ன தைரியமா நம்மகிட்ட வந்து “தின்னுடு தின்னுடு“ன்னு சொல்லுது பாத்தியா?... நாம்ப திங்கமாட்டோம்கிற தைரியம் தானேன்னு நெனைச்சி...” .... அவள் முகம் சிவந்தது, சுளித்தது! “ஒடெம்பெல்லாம் கூசுது மச்சான். அந்தப் பூச்சியே ரெண்டு விரல்லே தூக்கிப் பிடிச்சி வாயிலே போட்டு “கசமுசன்“னு மென்னு... வ்வோ ஓ!...” அவள் சொல்லி முடிக்கவில்லை, குடலை முறுக்கிக் கொண்டு வந்த ஓங்கரிப்பு பிடரியைத் தாக்கிக் கழுத்து நரம்புகளைப் புடைக்க வைத்தது் தலை கனத்தது் மூச்சு அடைக்க, கண்கள் சிவக்க. ”வ் வோ ஓ!....

”மச்சான்... மச்சான்... அந்தப் பூச்சி வவுத்துக்குள்ளே ஓடுது மச்சான்...” மறுபடியும் ஓர் பலத்த ஓங்காரம். அடி வயிறைப் பிசைந்து கொண்டே தலை குனிந்து உட்கார்ந்தாள். வாயெல்லாம் வெறும் உமிழ்நீர் சுரந்து ஒழுகியது. ”மச்சான்... வவுத்திலே பூச்சி.... ஆண்டி புரிந்து கொண்டான். அவன் உடல் முழுதும் இன்பக் கிளுகிளுப்பு ஓடிப் பரவியது. பதினைந்து வருஷமாய் வாய்க்காதது... எத்தனையோ காலம் நினைத்துப் பார்த்து,

ஏமாந்து ஏமாந்து, இல்லை என்ற தீர்க்கமான முடிவில் மறந்தே போனபின்... உடலைக் குலுக்கி, குடலை முறுக்கி ஓங்கரித்தாள்... முருகாயி. ”ஆ... அதுதான்.... ஹாஹா... முருகாயி அதுதான்... ஹாஹா!” ஆண்டி சிரித்தான். ”வ்வோஓ!...” குத்திட்டுத் தலை குனிந்து உட்கார்ந்திருந்த முருகாயியை உடலோடு சேர்த்து அணைத்துக் கொண்டு ஆண்டி சிரித்தான். “ஹாஹாஹ்ஹா... அதுதான் புள்ளே, அதுதான்“. பலத்த ஓங்கரிப்புடன் வந்த சிரிப்பைத் தாங்க முடியாது தவித்தாள் முருகாயி. ”மச்சான் வவுத்தைப் பொறட்டுதே. தாங்க முடியலியே ஐயோ!”... என்று பதறினாள்.

”சும்மா, இரு புள்ளே, நம்ப வடிவேலு வைத்தியர் கிட்டே போயி எதனாச்சும் மருந்து வாங்கியாறேன்” என்று மேல் துண்டை உதறித் தோள்மீது போட்டுக் கொண்டு கிளம்பினான் ஆண்டி. முருகாயி சிரித்தாள். ”ஏ! சும்மாத்தானே இரு மச்சான். யாராவது சிரிக்கப்போறாங்க.” ”நீ படற அவஸ்தையைப் பாக்க முடியலியே புள்ள...” ”நீ ஏன் பாக்கிறே?.... அந்தாலே தள்ளிப்போய் நின்னுக்க...??” ஆண்டி மனசுக்குள் கும்மாளியிடும் மகிழ்ச்சியுடன் இடுகாட்டின் கேட்டருகே நின்றான். அப்போதுதான் அந்தச் சாலை வழியே சென்ற காவி தரித்த பண்டாரம் ஒருவன் தன்னை மறந்த லயத்தில் அந்தப் பாட்டைப் பாடியவாறு நடந்தான்.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி....

இதுவரை அனுபவித்தறியாத ஒரு புதிய உணர்வில், மகிழ்ச்சியில் லயித்து, தன் நிலை மறந்து நின்ற ஆண்டியின் மனத்தில், தாளலயம் தவறாமல் குதித்தோடி வந்த அந்தப் பாட்டின் ஒவ்வொரு வார்த்தையும் ஆழப்பதிந்தன. அதைப் பதிய வைப்பதற்காகவே பாடுவதுபோல் அந்தப் பண்டாரம் அந்த நான்கு வரிகளையே திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டு நடந்தான்

அன்று முதல் தன்னையறியாமல் ஆண்டியும் அந்தப் பாடலைப் பாடிக் குதிக்க ஆரம்பித்தான். ”நந்தவனத்தில் ஓர் ஆண்டி” ஆயிரக்கணக்கான மனித உடல்கள் மாண்டபின் புதையுண்ட அந்த பூமியில் ஒரு மனிதன் பிறந்தான். ஆண்டிக்கு ஒரு மகன் பிறந்தான். தாயின் கருவில் அவன் ஜனித்த அந்த நாளில் பிறந்த குதூகலம் ஆண்டிக்கும்

என்றும் மறையவில்லை. பொழுதெல்லாம் தன் செல்வ மகனைத் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடினான். முயான நூற்றுக்கணக்கான குழந்தைகளின் சவங்களுக்குக் குழி பறித்த ஆண்டியின் கரங்கள் தன் செல்வ மகனை மார்போடு அணைத்து ஆரத் தழுவின. தனது மதலையை மார்புறத் தழுவி மகிழ்ந்த ஆண்டியின் கரங்கள் ஊரார் பிள்ளைகளின் சவங்களுக்குக் குழி பறித்தன. ஊராரின் புத்திர சோகம் அவனுக்குப் புரிந்ததே இல்லை. ரோஜாச் செடிக்குப் பதியம் போடும் சிறுவனைப் போல் பாட்டுப் பாடிக்கொண்டே குழி பறிப்பான்.

அருகிலிருக்கும் அந்தப் பச்சைச் சிசுவின் பிரேதத்தைப் பார்த்தும், அதோ பக்கத்தில், பீறிவரும் அழுகையை அடக்கிக் கொண்டு நிற்கும் அந்தத் தகப்பனைப் பார்த்தும் - நெஞ்சில் ஈரமில்லாமல் பசை இல்லாமல் பாடிக் கொண்டிரக்கிறானே.... சீசீ இவனும் ஒரு மனிதனா அதனால்தான் அவனை எல்லோரும் “ஒரு மாதிரி“ என்று சொல்ல ஆரம்பித்தார்கள். குழி பறித்து முழுத்தபின் நேரே தன் குடிசைக்கு ஓடுவான். தூளியில் உறங்கும் இருளனைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுவான்: கூத்தாடுவான். அந்த மகிழ்ச்சிக்கு, குதூகலத்திற்கு, பாட்டிற்கு, கும்மாளத்துக் கெல்லாம் காரணம் இருளன்தானா? இரண்டு ஆண்டுகளுக்குப் பின்... எத்தனையோ பெற்றோரின் ஆனந்தத்துக்கு, கனவுகளுக்கெல்லாம் புதை குழியாயிருந்த அந்த இடுகாட்டில் மரணம் என்ற மாயை மறந்து, ஜனனம் என்ற புதிரில் மட்டும் லயித்துக் குதித்துக் கொண்டிருந்த ஆண்டியின்... ஆண்டியின்... சொல்ல என்ன இருக்கிறது? இருளன் ஒரு நாள் செத்துப் போனான்.

வாடியிருந்து வரம் கேட்டு, காத்திருந்து தவமிருந்து காலம் போன ஒரு நாளில், எதிர்பாராமல் - நினைவின் நப்பாசைகூட அறுந்துபோன ஒரு காலமற்ற காலத்தில் வாராமல் வந்து அவதரித்து, ஆசை காட்டி விளையாடிக் கனவுகளை வளர்த்த இருளன், எதிர்பாராமல் திடீரென்று, இரண்டு நாள் கொள்ளையிலே வந்ததுபோல் போய்விட்டான். ஆசைகளையும், கனவுகளையும், பாழுக்கும் பொய்மைக்கும் பறி கொடுத்த முருகாயி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு புரண்டு புரண்டு அழுதாள். எத்தனையோ சோகங்களின் திரடுகள் கரடு தட்டி மேடிட்டுப் போன, அந்த மயான பூமியில் தனது பங்கிற்காக அந்தத் தாய் ஒப்பாரி வைத்து அழுதாள். வேப்ப மரத்தடியில், கட்டித் தொங்கும் வெறும் தூளியினருகே, முழங்கால்களில் முகம் புதைத்துக் குந்தி இருக்கிறான் ஆண்டி.

எங்கோ வெறித்த விழிகள்... என்னென்னமோ காட்சிகள்.. எல்லாம் கண்டவை... இனி, காண முடியாதவை... அதோ இருளன்! வேலியோரத்தில் தவழ்ந்து சென்றதும்... தூளியிலிருந்து உறக்கம் கலைந்தபின் தலையை மட்டும் தூளிக்கு வெளியே தள்ளித் தொங்க விட்டுக்கொண்டு, கன்னம் குழையும் சிரிப்புடன் "அப்பா"வென்று அழைத்ததும்... செடிக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு இருக்கும்போது அவனறியாமல் பின்னே வந்து, திடீரென்று பாய்ந்து புறம் புல்லி உடலைச் சிலிர்க்க வைத்து மகிழ்வித்ததும்... எதிரிலிருக்கும் தட்டத்துச் சோற்றில், வேகமாய்த் தவழ்ந்து வந்து - தனது பிஞ்சுக் கைகளை இட்டுக் குழப்பி விரல்களுக்கிடையே சிக்கிய இரண்டொரு பருக்கைகளை வாயில் வைத்துச் சுவைத்துச் சப்புக்கொட்டி, கைதட்டிச் சிரித்துக் களித்ததும்... நெஞ்சோடு நெஞ்சாய்க் கிடந்து இரவு பகல் பாராமல் நாளெல்லாம் உறங்கியதும்... பொய்யா? கனவா?... மருளா?.... பித்தா?... பேதைமையா? ஆண்டி சித்தம் குலைவுற்றவன் போல் சிலையாய் உட்கார்ந்திருந்தான். இருளன் தவழ்ந்து திரிந்த மண்ணெல்லாம், அவன் தொட்டு விளையாடிய பொருளெல்லாம், அவன் சொல்லிக் கொஞ்சிய சொல்லெல்லாம் ஆண்டியின் புலன்களில் மோதி மோதிச் சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்தன. அதோ குடிசையினுள்ளே அந்தச் சிறு பாலகனின் சடலம் ஊதிப் புடைத்துக் கிடக்கிறது. வாயிலும் கண்களிலும் ஈக்கள் மொய்க்கின்றன.

நெற்றியில் சாந்துப் பொட்டு கறுத்துப் போன இதழ்களுக்கிடையே பால் மணம் மாறாத இளம் பற்கள் மின்னித் தெரிகின்றன. கையையும் காலையும் அகல விரித்துக் கொண்டு... ஆழ்ந்த நித்திரையோ?... 'இல்லை. செத்துப் போய்விட்டான்". முருகாயி அவன் கைகளை மார்பின்மீது கோத்து வைத்தாள். முகத்தில், கண்களில் மொய்த்த ஈக்களை விரட்டினாள். பிணத்தின் மீது ஒரு துணியை எடுத்துப் போத்தி மூடினாள்... கடைசியில்... கடமை என்று ஒன்று இருக்கிறது அல்லவா? சிவந்த கண்கள் நீர்த்தாரை பொழிய, தலையின் மேல் துண்டை எடுத்துச் சுற்றிக் கொண்டான் ஆண்டி மூலையில் கிடந்த மண்வெட்டியை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டான். நனைத்து வைத்திருந்த மஞ்சள் துணியில் இருளனைச் சுருட்டி எடுத்து மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு புறப்பட்டான். "ஐயோ!.... என் ராசா" என்ற குரல் வெடித்தது - முருகாயி கதறிக் கொண்டே பூமியில் விழுந்து துடித்தாள். ஆண்டியின் கால்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு அவனைப் போகவிடாமல் இழுத்தாள். கையில் ஒரு சோகம் நெஞ்சில் ஒரு சோகம். காலைப் பிடித்துக் கொண்டு ஒரு பெரும் சோகம்... ஐயோ, அவன் என்ன

செய்வான்? நின்ற நிலையில் தவித்தான். எல்லா சோகத்துக்கும் குழி பறிக்க, தோளில் தொங்குகிறதே அந்த மண்வெட்டி, அதனால் முடியுமா?....

ஒரு கை பிணத்தை அணைத்தது. மறு கை மண்வெட்டியின் பிடியை இறுகப் பற்றியது. ”முருகாயி... அழுவாதே புள்ளே...” என்று சொல்லிக்கொண்டே அவனும் அழுதான். அவள் “ஓ“வென்று கதறியழுதாள். அவள் பிடியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு நடந்தான் ஆண்டி! அவனுக்கு இத்தனை நாளாய் பிணங்கள்தான் தெரியும். அந்தப் பிணங்களின் பின்னே இத்தனை சோகமா...? “ஐயோ...“ அன்று அந்த நந்தவனத்துக்கு என்ன பூரிப்போ?... மரங்களும் செடிகளும் புதுமலர்க் கொத்துகளை அந்த மயான பூமியெங்கும் சிதறிச் சொரிந்து கொண்டிருந்தன. ஆண்டி தனது இழந்த கனவைக் கைகளில் ஏந்தி நடந்தான். அந்தப் பன்னீர் மரத்தடியில் இருளனுக்குக் குழி தோண்ட வேண்டும். அந்த மரம் அவன் மீது எப்பொழுதும் அதன் வாசமுள்ள மலர்களைப் பொழிந்து நிற்கும்.“ மகனின் சடலத்தை மண்மீது கிடத்தினான். தோளில் கிடந்த மண்வெட்டியைக் கையில் ஏந்தி மரமாய் நின்றான்.

அவனது கண்கள் சூனியமான வானவெளியை வெறித்து விழித்தன. வெறித்த விழிகள் சிவந்து கண்ணீர் பெருக்கின. நாசியும், உதடுகளும் தாளாத சோகத்தில் துடித்தன. நெஞ்சில் என்னவோ அடைத்தது. மனசை இரும்பாக்கிக் கொண்டு மண்வெட்டியை ஓங்கினான். ஓங்கிய கைகள் நடுங்கின. கால்கள் பூமியில் நிலைக்காமல் தடுமாறின. உயர்த்திப் பிடித்திருந்த மண்வெட்டியை உதறி எறிந்துவிட்டு “மவனே“ என்று அலறியவாறு சடலத்தின் மீது விழுந்தான். “ஓ“ வென்று கதறி அழுதான். அழுது சோர்ந்தான்...“ வெகுநேரம் தன் செல்வ மகனின் இனிமேல் பார்க்க முடியாத மகனின் - முகத்தை வெறித்துப் பார்த்தவாறே உட்கார்ந்திருந்தான். வேர்வைத் துளிகள் நெற்றியில் சரம் கட்டி நின்றன. மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டு மண்வெட்டியை எடுத்தான். கால்களை அகட்டி நின்று, கண்களை மூடிக்கொண்டு மண்வெட்டியை ஓங்கி, பூமியில் பதித்தான். ‘நந்தவனத்தில் ஓர் ஆண்டி!“ அந்தப் பாட்டு!... அவன் பாடவில்லை. ஊரார் பிணத்துக்குக் குழி பறிக்கும்போது மனசில் அரிப்போ கனமோ இல்லாமல் குதித்து வருமே அந்தப் பாட்டு... “பாடியது யார்?...“ மீண்டும் ஒரு முறை மண்வெட்டியை உயர்த்தி, பூமியை கொத்தினான்.... ‘நந்தவனத்தில் ஓர் ஆண்டி’ ....மீண்டும் அந்தக் குரல்!... “யாரது!...“ புலன்களை எல்லாம் அடக்கிக் கொண்டு மீண்டும் மண்வெட்டியால் பூமியை வெட்டினான். மீண்டும் ஒரு குரல் : நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி...“ “ஐயோ! அர்த்தம் புரிகிறதே...“ ஆண்டி மண்வெட்டியை

வீசி எறிந்துவிட்டுத் திரும்பிப் பார்த்தான். தூணைப் பிளந்து வெளிக்கிளம்பிய நரசிம்மாவதாரம் போன்று, பூமியை, புதைகுழி மேடுகளைப் பிளந்து கொண்டு ஒரு அழகிய சின்னஞ்சிறு பாலகன் வெளிவந்தான். கைகளைத் தட்டித் தாளமிட்டவாறே ஆண்டியைப் பார்த்து சிரித்துக் கொண்டே பாடியது சிசு.

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்

தயவனை நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி....

கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைக்

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி....“

குரல்கள் ஒன்றாகி, பலவாகி, ஏகமாகிச் சங்கமித்து முழங்கின. அந்த மயான பூமியில் எத்தனையோ காலத்திற்கு முன் புதையுண்ட முதற் குழந்தை முதல், நேற்று மாண்டு புதையுண்ட கடைசிக் குழந்தை வரை எல்லாம் உயிர்பெற்று, உருப்பெற்று ஒன்றாகச் சங்கமித்து, விம்மிப் புடைத்து விகஸித்த குரலில் மழலை மாறாத மதலைக் குரலில் பாடிக் கொண்டு கைத்தாளமிட்டு அவனைச் சுற்றிச் சூழ நின்று ஆடின. வானவெளியெல்லாம் திசை கெட்டுத் தறிகெட்டுத் திரிந்து ஓடின. ஆண்டி தன்னை மறந்து வாய்விட்டுச் சிரித்தான். அதோ, அவன் இருளனும் அந்தப் பாலகர் நடுவே நின்று நர்த்தனம் புரிகிறான். தாளம் போடுகிறான். பாட்டுப் பாடுகிறான். என்ன பாட்டுத் தெரியுமா?...

‘‘நந்தவனத்தில் ஓர் ஆண்டி“

அடைத்துப் புடைத்து நெருக்கிக் கொண்டு ஓடும் சிசுக்களின் மகா சமூத்திரத்தில் தன் இருளனைத் தாவி அணைக்க ஓடினான் இருளனைக் காணோம்... தேடினான், காணோம்... காணோம் இருளனை மட்டும் காணவே காணோம்...

அந்தச் சிசுக்கள் யாவும் ஒன்று போல் இருந்தன. என்னுடையது என்றும், இன்னொருவனுடையது என்றும், அவன் என்றும், அதுவென்றும் இதுவென்றும் பேதம் காண முடியாத அந்தச் சமுத்திரத்தில் இருளனை மட்டும் எப்படி இனம் கண்டுவிட முடியும்! ஆண்டி தவித்தான்! ஆ!... என்ன தவிப்பு... என்ன தவிப்பு... பன்னீர் மரத்தடியில் பிள்ளையின் பிணத்தருகே முகம் புதைத்து வீழ்ந்து கிடக்கும் ஆண்டியைக் கண்டு பதறியடித்துக் கொண்டு ஓடினாள் முருகாயி. அவனைப் புரட்டி நிமிர்த்தி மடி மீது

வைத்துக் கொண்டு கதறினாள். அவன் விழிகள் மெல்லத் திறந்தன. தெய்வமே! அவனுக்கு உயிர் இருந்தது அவன் சாகவில்லை. இன்னும்கூட அவன் அந்த "நந்தவனத்தில் தான் வாழ்கிறான். ஆனால் முன்புபோல் இப்பொதெல்லாம் பாடுவதில்லை. இடுகாட்டிற்கு வரும் பிணங்களைப் பார்க்கும் போதெல்லாம் "கோ"வென்று கதறி அழுகிறான். ஊராரின் ஒவ்வொரு சோகத்திற்கும் அவன் பலியாகிறான்! ஆனால் இப்பொழுதும் ஊரார் அவனை 'ஒரு மாதிரி" என்று தான் சொல்லுகிறார்கள்!"

**ஆசிரியரைப் பற்றி**

தமிழ் மக்களின் இலக்கிய ரசனையையும் சிந்தனையையும் பாதித்த எழுத்தாளர்களுள் ஜெயகாந்தனும் ஒருவர். இவர் நவீன இலக்கியம், அரசியல், கலை மற்றும் பத்திரிக்கை உலகில் கடந்த 50 ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல்பட்டு வருபவர். தமிழ்ச் சிறுகதை உலகில், இன்றுள்ள காலக் கட்டத்தை ஜெயகாந்தனின் காலம் என்று குறிப்பிடும் அளவிற்கு ஜெயகாந்தன் கதைகள் இலக்கியத் தரமும் ஜனரஞ்சகமும் உடையனவாகத் திகழ்கின்றன. ஜெயகாந்தன் 1933-ல் கடலூரின் பிறந்தவர். இவர் எழுதிய முதல் சிறுகதை சௌபாக்கியம் என்ற இதழில் 1950-ல் வெளிவந்தது. 1958-ல் ஒரு பிடி சோறு என்ற அவருடைய முதல் சிறுகதைத் தொகுதி வெளியானது. ஜெயகாந்தன் 13 சிறுகதைத் தொகுதிகளும் 25-க்கும் மேற்பட்ட குறுநாவல்களும் 17 நாவல்களும் 25 கட்டுரை நூல்களும் எழுதியுள்ளார். தேவன் வருவாரா?, ஒருபிடி சோறு, யுகசந்தி, பாரிஸுக்குப் போ, சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் போன்றன இவரது படைப்புகளுள் முக்கியமானவை, ஜெயகாந்தன் ஒரு முற்போக்கு எழுத்தாளர். ஏழை, எளிய மக்களின் மனக் குமுறல்களையும் விருப்பு, வெறுப்புகளையும் மனிதநேயத்துடன் பார்த்து, உணர்ந்து படம்பிடித்துக் காட்டுவதில் இவர் வல்லவர். இவரது கதைகளில் வேகமும் விறுவிறுப்பும் காணப்படும். அத்தகைய கதைகளில் ஒன்று 'பொம்மை' என்பதாகும்.

# 7. நாற்காலி

**- கி. ராஜநாராயணன்**

நாற்காலி இல்லாததும் ஒரு வீடா? எங்கள் வீட்டில் இப்படித் திடீரென்று எல்லோர்க்கும் தோன்றிவிட்டது. அவ்வளவுதான், குடும்ப “அஜெண்டா“வில் வைக்கப்பட்டு இந்த விஷயத்தில் விவாதம் தொடங்கியது. முதல்நாள் எங்க வீட்டுக்கு ஒரு குடும்ப நண்பர் விஜயம் செய்தார். அவர் ஒரு சப்ஜட்ஜ். வந்தவர் நம்மைப்போல் வேட்டி சட்டை போட்டுக்கொண்டு வரப்படாதோ, சூட்டும் பூட்டுமாக வந்து சேர்ந்தார். எங்கள் வீட்டில் முக்காலிதான் உண்டு. அதன் உயரமே முக்கால் அடிதான். எங்கள் பாட்டி தயிர் கடையும்போது, அதிலே தான் உட்கார்ந்து கொள்வாள். அவளுக்குப் பாரியான உடம்பு. எங்கள் தாத்தா தச்சனிடம் சொல்லி அதைக் கொஞ்சம் அகலமாகவே செய்யச் சொல்லியிருந்தார். சப்ஜட்ஜுக்கும் கொஞ்சம் பாரியான உடம்புதான். வேறு ஆசனங்கள் எங்கள் வீட்டில் இல்லாததால் அதைத்தான் அவருக்குக் கொண்டுவந்து போட்டோம்.

அவர் அதன் விளிம்பில் ஒரு கையை ஊன்றிக்கொண்டு உட்காரப் போனார். இந்த முக்காலியில் ஒரு சனியன் என்னவென்றால் அதன் கால்களுக்கு நேராக இல்லாமல் பக்கத்தில் பாரம் அமுங்கினால் வாரித் தட்டிவிடும். நாங்கள் எத்தனையோதரம் உறியில் வைத்திருக்கும் நெய்யைத் திருட்டுத்தனமாக எடுத்துத் தின்பதற்கு முக்காலி போட்டு ஏறும் போது அஜாக்கிரதையினால் பலதரம் கீழே விழுந்திருக்கிறோம். பாவம் இந்த சப்ஜட்ஜும் இப்பொழுதே கீழே விழப்போகிறாரே என்று நினைத்து அவரை எச்சரிக்கை செய்ய நாங்கள் வாயைத் திறப்பதற்கும் அவர் தொபுகடீர் என்று கீழே விழுந்து உருளுவதற்கும் சரியாக இருந்தது. நான், என் தம்பி, கடைக்குட்டித் தங்கை எங்கள் மூவருக்கும் சிரிப்புத் தாங்க முடியாமல் புழக்கடைத் தோட்டத்தைப் பார்க்க ஓடினோம். (சிரிப்பு) அதில் அமரும் போதெல்லாம் என் தங்கை அந்த சப்ஜட்ஜ் மாதிரியே கையை ஊன்றிக் கீழே உருண்டு விழுந்து காண்பிப்பாள். பின்னும் கொஞ்சம் எங்கள் சிரிப்பு நீளும். எங்கள் சிரிப்புக்கெல்லாம் இன்னொரு முக்கிய காரணம் அவர் கீழே விழும்போது பார்த்ததும் எங்கள் பெற்றோர்கள், தாங்கள் விருந்தாளிக்கு முன்னால் சிரித்துவிடக்கூடாதே என்று வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டதை நினைத்துத்தான்!

ஆக, நாங்கள் எல்லார்க்கும் சேர்த்துச் சிரித்துவிட்டு வீட்டுக்குள் பூனை போல அடிஎடுத்து வைத்து நுழைந்து பார்த்த போது அந்தப் பாரியான உடம்புள்ள

விருந்தாளியைக் காணவில்லை. அந்த முக்காலியையும் காணவில்லை. “அதை அவர் கையோடு கொண்டு போயிருப்பாரோ?“ என்று என் தங்கை என்னிடம் கேட்டாள்! இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரே, எங்கள் வீட்டில் எப்படியாவது ஒரு நாற்காலி செய்துவிடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. இந்த நாற்காலி செய்வதில் ஒரு நடைமுறை கஷ்டம் என்னவென்றால், முதலில் பார்வைக்கு எங்கள் ஊரில் ஒரு நாற்காலி கூடக் கிடையாது! அதோடு நாற்காலி செய்யத் தெரிந்த தச்சனும் கிடையாது.

நகரத்தில் செய்து விற்கும் நாற்காலியை வாங்கிக்கொண்டு வந்துவிட்டால் போச்சு, என்று எங்கள் பெத்தண்ணா ஒரு யோசனையை முன்வைத்தான். அது உறுதியாக இராது என்று நிராகரித்து விட்டார் எங்கள் அப்பா. பக்கத்தில் ஒரு ஊரில் கெட்டிக்காரத் தச்சன் ஒருவன் இருப்பதாகவும் அவன் செய்யாத நாற்காலிகளே கிடையாது என்றும், கவர்னரே வந்து அவன் செய்த நாற்காலிகளைப் பார்த்து மெச்சி இருக்கிறார் என்றும் எங்கள் அத்தை சொன்னாள். அத்தை சொன்னதிலுள்ள இரண்டாவது வாக்கியத்தை கேட்டதும் அம்மா அவளை, “ஆம் இவ ரொம்பக் கண்டா“ என்கிற மாதிரிப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டாள்! அப்பா வேலையாளைக் கூப்பிட்டு, அந்தத் தச்சனுடைய ஊருக்கு அவனை அனுப்பிவிட்டு எங்களோடு வந்து உட்கார்ந்தார். இப்போது, நாற்காலியை எந்த மரத்தில் செய்யலாம் என்பது பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்தது.

தேக்கு மரத்தில்தான் செய்ய வேண்டும். அதுதான் தூக்க, வைக்க லேசாகவும், அதே சமயத்தில் உறுதியாகவும் இருக்கும் என்றாள் பாட்டி. தன்னுடைய நீட்டிய கால்களைத் தடவிக்கொண்டே. (பாட்டிக்குத் தன்னுடைய கால்களின் மீது மிகுந்த பிரியம் சதா அவைகளைத் தடவிவிட்டுக்கொண்டே இருப்பாள்) இந்தச் சமயத்தில் எங்கள் தாய்மாமனார் எங்கள் வீட்டுக்குள் வந்தார். எங்கள் பெத்தண்ணாவும் ஓடிப்போய் அந்த முக்காலியைத் தூக்கிக்கொண்டு வந்தான். சிறிது நேரம் வீடே கொல்லென்று சிரித்து ஓய்ந்தது. மாமானார் எங்கள் வீட்டுக்கு வந்தால் அவருக்கென்று உட்காருவதற்கு அவரே ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார். தலை போனாலும், அந்த இடத்தில் தான் அவர் உட்காருவார். பட்டக சாலையின் தெற்கு ஓரத்தில் உள்ள சுவரை ஒட்டியுள்ள தூணில் சாய்ந்துதான் உட்காருவார். உட்கார்ந்ததும் முதல் காரியமாகத் தன் குடுமியை அவிழ்த்து ஒரு தரம் தட்டித் தலையைச் சொறிந்து கொடுத்துத் திரும்பவும் குடுமியை இறுக்கிக் கட்டிக்கொண்டுவிடுவார். இது அவர் தவறாமல் செய்கிற காரியம். இப்படிச் செய்துவிட்டு அவர் தன்னையொட்டியுள்ள தரையைச் சுற்றிலும் பார்ப்பார். “தலையிலிருந்து

துட்டு ஒன்றும் கீழே விழுந்ததாகத் தெரியவில்லை“ என்று அண்ணா அவரைப் பார்த்து எக்கண்டமாகச் சொல்லிச் சிரிப்பான்.

அவர் எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் இப்படிக் காகித பாணங்களினால் துளைத்தெடுக்கப்படுவார்! சம்மந்தக்காரர்கள் நீங்கள் பார்த்து என்னைக் கேலி செய்யாவிட்டால் வேறு யார் செய்வார்கள் என்கிற மாதிரியே வாயே திறக்காமல் கல்லுப் பிள்ளையார் மாதிரி அவர் பாட்டுக்கு உட்கார்ந்து புன்னகையோடு இருப்பார். எங்களுடைய ஏடாசிப் பேச்சுக்களின் காரம் அதிகமாகும் போது மட்டும் அம்மா எங்களைப் பார்த்து ஒரு பொய் அதட்டுப் போடுவாள். அந்த அதட்டின் வாக்கியத்தின் கடேசி வார்த்தை “கழுதைகளா…“ என்று முடியும். மாமனார் வந்து உட்கார்ந்ததும் அம்மா எழுந்திருந்து அடுப்படிக்கு அவசரமாய்ப் போனாள். அவளைத் தொடர்ந்து ஆட்டுக்குட்டியைப் போல் அப்பாவும் பின்னால் போனார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஆளாடி வழியாக அம்மா கையில் வெள்ளித் தம்ளரில் காயமிட்ட மோரை எடுத்துக்கொண்டு நடந்துவர, அம்மாவுக்குப் பின்னால் அப்பா, அவளுக்குத் தெரியாமல் எங்களுக்கு மட்டும் தெரியும்படி வலிப்புக்காட்டிக்கொண்டே அவள் நடந்து வருகிற மாதிரியே வெறுங்கையை தம்ளர் ஏந்துகிற மாதிரி பிடித்துக் கொண்டு வந்தார்!

அவர் அப்படி நடந்து வந்தது, “அவ அண்ணா வந்திருக்கானாம் ரொம்பஅக்கறையாய் மோர் கொண்டு போய்க் கொடுக்கிறதைப் பாரு“ என்று சொல்லுகிறது மாதிரி இருக்கும். மோரும் பெருங்காயத்தின் மணமும், நாங்களும் இப்பொழுதே மோர் சாப்பிடணும் போல் இருந்தது.

மாமனார் பெரும்பாலும் எங்கள் வீட்டுக்கு வருகிறது மோர் சாப்பிடத்தான் என்று நினைப்போம். அந்தப் பசுமாட்டின் மோர் அவ்வளவு திவ்வியமாய் இருக்கும். அதோடு எங்கள் மாமனார் எங்கள் ஊரிலேயே பெரிய கஞ்சாம்பத்தி. அதாவது ஈயாத லோபி என்று நினைப்பு எங்களுக்கு. இந்தப் பசுவை அவர் தன்னுடைய தங்கைக்காக கண்ணாவரம் போய்தானே நேராக வாங்கிக்கொண்டு வந்தார். இந்தக் காராம் பசுவின் கன்னுக்குட்டியின் பேரில் என் தம்பிக்கும் குட்டித் தங்கைக்கும் தணியாத ஆசை. வீட்டை விட்டுப் போகும்போதும் வீட்டுக்குள் வரும்போதும் மாமனார் பசுவை ஒரு சுற்றுச் சுற்றி வந்து அதைத் தடவிக் கொடுத்து (தன் கண்ணே எங்கே பட்டுவிடுமோ என்ற பயம்) இரண்டு வார்த்தை சிக்கனமாகப் புகழ்ந்துவிட்டுத்தான் போவார். “பால் வற்றியதும் பசுவை அவர் தன்னுடைய வீட்டுக்குக் கொண்டு போய் விடுவார். கன்னுக்குட்டியும் பசுவோடு போய்விடும்“

என்று பெரிய பயம் என் சிறிய உடன்பிறப்புக்களுக்கு. பின்னால் ஏற்படப் போகிற இந்தப் பிரிவு அவர்களுக்குக் கன்னுக்குட்டியின் மேல் மேலும் பிரீதியையும் மாமனாரின் பேரில் அதிகமான கசப்பையும் உண்டு பண்ணிவிட்டது.

சாப்பிடும்போது இந்தச் சின்னஞ் சிறுசுகள் தங்களுடைய பார்வையாலேயே அவரைக் குத்துவார்கள் கிள்ளுவார்கள்! நாற்காலி விவாதத்தில் மாமனாரும் அக்கறை காட்டினார். தனக்கும் ஒரு நாற்காலி செய்யவேண்டுமென்று பிரியம் இருப்பதாகத் தெரிவித்தார். எங்களுக்கும் ஒரு துணை கிடைத்தது மாதிரி ஆயிற்று. வேப்ப மரத்தில் செய்வது நல்லது என்றும் அதில் உட்கார்ந்தால் உடம்புக்கு குளிர்ச்சி என்றும், மூல வியாதி கிட்ட நாடாது என்றும் மாமனார் சொன்னார். வேப்ப மரத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்ததும் அப்பா மாமனாரை ஆச்சரியத்தோடு கூடிய திருட்டு முழியால் கவனித்தார். எங்கள் மந்தைப் புஞ்சையில் நீண்டநாள் வைரம் பாய்ந்த ஒரு வேப்ப மரத்தை வெட்டி ஆறப்போட வேண்டுமென்று முந்தாநாள்தான் பண்ணைக்காரனிடம் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார்! பெத்தண்ணா சொன்னான். “பூவரசங்கட்டையில் செய்தால் ரொம்ப நன்றாக இருக்கும்.

அது கண் இறுக்கமுள்ள மரம். நுண்ணமாகவும் பளபளப்பாகவும் இருக்கும் உறுதியுங்கூட என்றான்“. எங்கள் அக்கா சொன்னாள், “இதுகளெல்லாம் வெளிர் நிறத்தில் உள்ளவைகள். பார்க்கவே சகிக்காது. கொஞ்சநாள் போனால் இதுகள் மேல் நமக்கு ஒரு வெறுப்பே உண்டாகிவிடும். நான் சொல்லுகிறேன். செங்கரும்பு நிறத்திலோ அல்லது எள்ளுப் பிண்ணாக்கு மாதிரி கறுப்பு நிறத்திலோ இருக்கிற மரத்தில்தான் செய்வது நல்லது அப்புறம் உங்களிஷ்டம்’ என்றாள்.

பளிச்சென்று எங்கள் கண்களுக்கு முன்னால் கண்ணாடிபோல் மின்னும் பளபளப்பான கருப்பு நிறத்தில், கடைந்தெடுத்த முன்னத்தங்கால்களுடன் சாய்வுக்கு ஏற்ற வளைந்த, சோம்பல் முறிப்பது போலுள்ள பின்னத்தங்கால்களுடனும், ஒரு சுகாசம் தோன்றி மறைந்தது. எல்லார்க்குமே அவள் சொன்னது சரி என்று பட்டது. ஆக எங்களுக்கு ஒன்றும் எங்கள் மாமனார் வீட்டுக்கு ஒன்றுமாக இரண்டு நாற்காலிகள் செய்ய உடனே ஏற்பாடு செய்யப்பட்டது.

இரண்டு நாற்காலிகளும் எங்கள் வீட்டில் வந்து இறங்கிய போது அதில் எந்த நாற்காலியை வைத்துக்கொண்டு எந்த நாற்காலியை மாமனார் வீட்டுக்கு கொடுத்தனுப்புவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஒன்றைப் பார்த்தால் மற்றதைப்

பார்க்கவேண்டாம் அப்படி ‘ராமர், லெச்சுமணர்’ மாதிரி இருந்தது. ஒன்றை வைத்துக் கொண்டு மாமனார் வீட்டுக்கு ஒன்றைக் கொடுத்தனுப்பினோம். கொடுத்தனுப்பியது தான் நல்ல நாற்காலியோ என்று ஒரு சந்தேகம்! ஒவ்வொருத்தராய் உட்கார்ந்து பார்த்தோம். எழுந்திருக்க மனசே இல்லை. அடுத்தவர்களும் உட்கார்ந்து பார்க்க வேண்டுமே என்பதற்காக எழுந்திருக்க வேண்டியிருந்தது. பெத்தண்ணா உட்கார்ந்து பார்த்தான். ‘ஆஹா“ என்று ரசித்துச் சொன்னான். இரண்டு கைகளால் நாற்காலியின் கைகளைத் தேய்த்தான். சப்பணம் போட்டு உட்கார்ந்து பார்த்தான். “இதுக்கு ஒரு உறை தைத்துப் போட்டுவிட வேணும். இல்லையென்றால், அழுக்காகி விடும்’ என்று அத்தை சொன்னாள்.

குட்டித் தங்கைக்கும் தம்பிப் பயலுக்கும் அடிக்கடி சண்டை வரும். “நீ அப்போப் பிடிச்சி உக்காந்துகிட்டே இருக்கியே, எழுந்திருடா, நான் உட்காரணும் இப்போ“ என்று அவனைப் பார்த்துக் கத்துவாள். ஐயோ, இப்பத்தானே உட்கார்ந்தேன் பாரம்மா இவளை என்று சொல்லுவான். அழ ஆரம்பிப்பதுபோல் முகத்தைப் போல் வைத்துக்கொண்டு. தீ மாதிரி பரவிவிட்டது ஊருக்குள் எங்கள் வீட்டிற்கு நாற்காலி வந்த விஷயம். குழந்தைகளும் பெரியவர்களும் பெருங்கொண்ட கூட்டம் வந்து பார்த்துவிட்டு போனார்கள். சிலர் தடவிப் பார்த்தார்கள். ஒரு கிழவனார் வந்து நாற்காலியைத் தூக்கிப் பார்த்தார். “நல்ல கனம் உறுதியாகச் செய்திருக்கிறான்“ என்று தச்சனைப் பாராட்டினார். கொஞ்சநாள் ஆயிற்று. ஒரு நாள் ராத்திரி இருக்கும். யாரோ கதவைத் தட்டினார்கள்.

உள் திண்ணையில் படுத்திருந்த பெத்தண்ணா போய் கதவைத் திறந்தான். ஊருக்குள் யாரோ ஒரு முக்கியமான பிரமுகர் இப்பொழுதுதான் இறந்துபோய்விட்டாரென்றும் நாற்காலி வேண்டுமென்றும் கேட்டு எடுத்துக்கொண்டு போனார்கள். இறந்து போன ஆசாமி எங்களுக்கும் வேண்டியவர் ஆனதால் நாங்கள் யாவரும் குடும்பத்தோடு போய்த் துட்டியில் கலந்து கொண்டோம். துட்டி வீட்டில் போய்ப்பார்த்தால்.... எங்கள் வீட்டு நாற்காலியில் தான் இறந்து போன அந்தப் “பிரமுகரை“ உட்கார்த்தி வைத்திருந்தார்கள்! இதற்குமுன் எங்கள் ஊரில் இறந்து போனர்களைத் தரையில் தான் உட்கார்த்தி வைப்பார்கள். உரலைப் படுக்கவைத்து அது உருண்டுவிடாமல் அண்டை கொடுத்து, ஒரு கோணிச் சாக்கில் வரகு வைக்கோலைத் திணித்து அதைப் பாட்டு வசத்தில் உரலின் மேல் சாத்தி அந்தச் சாய்மானத் திண்டுவில் இறந்து போனவரை. சாய்த்து உட்கார்ந்திருப்பது போல் வைப்பார்கள்.

இந்த நாற்காலியில் உட்கார வைக்கும் புது மோஸ்தரை எங்கள் ஊர்க்காரர்கள் எந்த ஊரில் போய் பார்த்துவிட்டு வந்தார்களோ, எங்கள் வீட்டு நாற்காலிக்குப் பிடித்தது வினை. (தரை டிக்கட்டிலிருந்து நாற்காலிக்கு வந்து விட்டார்கள்!) அந்த வீட்டு 'விசேஷம்" முடிந்து நாற்காலியை எங்கள் வீட்டு முன்தொழுவில் கொண்டுவந்து போட்டுவிட்டுப் போனார்கள். அந்த நாற்காலியைப் பார்க்கவே எங்கள் வீட்டுக் குழந்தைகள் பயப்பட்டன. வேலைக்காரனைக் கூப்பிட்டு அதை கிணற்றடிக்குக் கொண்டு போய் வைக்கோலால் தேய்த்துத் தேய்த்துப் பெரிய வாளிக்கு ஒரு பதினைந்து வாளி தண்ணீர்விட்டுக் கழுவித் திரும்பவும் கொண்டு வந்து முன் தொழுவத்தில் போட்டோம். பலநாள் ஆகியும் அதில் உட்கார ஒருவருக்கும் தைரியம் இல்லை. அதை எப்படித் திரும்பவும் பழக்கத்துக்குக் கொண்டுவருவது என்றும் தெரியவில்லை.

ஒருநாள் நல்ல வேளையாக எங்கள் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார். அந்த நாற்காலியை எடுத்துக்கொண்டு வந்து அவருக்குப் போடச் சொன்னோம். அவரோ பரவாயில்லை நான் சும்மா இப்படி உட்கார்ந்து கொள்கிறேன் என்று ஜமக்காளத்தைப் பார்த்துப் போனார். எங்களுக்கு ஒரே பயம். அவர் எங்கே கீழே உட்கார்ந்து விடுவாரோ என்று. குடும்பத்தோடு அவரை வற்புறுத்தி நாற்காலியில் உட்கார வைத்தோம். அவர் உட்கார்ந்த உடனே சின்னத் தம்பியும் குட்டித் தங்கையும் புழக்கடைத் தோட்டத்தைப் பார்த்து ஓடினார்கள். மத்தியில் மத்தியில் வந்து நாற்காலியில், உட்கார்ந்தவருக்கு என்ன ஆச்சு என்று எட்டியும் பார்த்துக் கொள்வார்கள்!

மறுநாள் எங்கள் வீட்டுக்கு வந்த ஒரு உள்ளூர்க் கிழவனார் தற்செயலாகவே வந்து நாற்காலியில் உட்கார்ந்து எங்களுக்கு மேலும் ஆறுதல் தந்தார். (இப்பொழுதே அவர் அந்த நாற்காலியில் உட்கார்ந்து பார்த்துக் கொள்கிறார்! என்று பெத்தண்ணா என் காதில் மட்டும் படும்படியாகச் சொன்னான்) இப்படியாக, அந்த நாற்காலியைப் "பழக்கி"னோம். முதலில் வீட்டிலுள்ள பெரியவர்கள் உட்கார்ந்தோம். குழந்தைகளுக்கு இன்னும் பயம் தெளியவில்லை. "கொஞ்சம் உட்காரேண்டா முதலில்" என்று கெஞ்சுவாள் குட்டித் தங்கை தம்பிப் பயலைப் பார்த்து. "ஏன் நீ உட்காருவது தானே?" என்பான் அவன் வெடுக்கென்று. எங்கள் வீட்டுக்கு வந்திருந்த பக்கத்துத்தெரு சுகந்தி தன்னுடைய ஒரு வயசுத் தம்பிப் பாப்பாவைக் கொண்டு வந்து உட்கார வைத்தாள் அந்த நாற்காலியில். அதிலிருந்துதான் எங்கள் வீட்டுக் குழந்தைகளும் பயமில்லாமல் உட்கார ஆரம்பித்தார்கள்.

திரும்பவும் ஒருநாள் ராத்திரி யாரோ இறந்து போய் விட்டார்கள் என்று நாற்காலியைத் தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள். இப்படி அடிக்கடி நடந்தது. நாற்காலியை வருத்தத்தோடு தான் கொடுத்தனுப்புவோம். வந்து கேட்கும் இழவு வீட்டுக்காரர்கள் எங்கள் துக்கத்தை வேறு மாதிரி அர்த்தப்படுத்திக் கொள்வார்கள்..... தங்களவர்கள் இறந்து போன செய்தியைக் கேட்டுத்தான் இவர்கள் வருத்தம் அடைகிறார்கள் போலிருக்கிறது என்று நினைத்துக் கொள்வார்கள்.

தூக்கம் கலைந்த எரிச்சல் வேற செத்துத் தொலைகிறவர்கள் ஏன் தான் இப்படி அகாலத்தில் சாகிறார்களோ தெரியவில்லை“ என்று அக்கா ஒருநாள் சொன்னாள். “நல்ல நாற்காலி செய்தோமடா நாம் செத்துப்போன ஊர்க்காரன்கள் உட்காருவதற்காக, சை“ என்று அலுத்துக் கொண்டான் அண்ணன். ‘நாற்காலி செய்யக் கொடுத்த நேரப்பலன்“ என்றாள் அத்தை. பெத்தண்ணா ஒருநாள் ஒரு யோசனை செய்தான். அதை நாங்கள் இருவர் மட்டிலும் தனியாக வைத்துக்கொண்டோம். ஒருநாள் அம்மா என்னை ஏதோ காரியமாக மாமனாரின் வீட்டுக்குப் போய்வரும்படி சொன்னாள். நான் அவருடைய வீட்டுக்குள் நுழைந்தபோது மாமனார் நாற்காலியில் அமர்க்களமாய் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார். அவர் வெற்றிலை போடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதே ஒரு சுவாரஸ்யமான பொழுதுபோக்கு.

தினமும் தேய்த்துத் துடைத்த தங்க நிறத்தில் பளபளவென்றிருக்கும் சாண் அகலமும், முழநீளம், நாலுவிரல் உயரம் கொண்ட வெற்றிலைச் செல்லத்தை நோகுமோ நோகாதோ என்று அவ்வளவு மெல்லப் பக்குவமாகத் திறந்து, பூஜைப் பெட்டியிலிருந்து சாமான்களை எடுத்து வைக்கிற பதனத்தில் ஒவ்வொன்றாக எடுத்து வெளியில் வைப்பார். வெற்றிலையை நன்றாகத் துடைப்பாரே தவிர காம்புகளைக் கிள்ளும் வழக்கம் அவரிடம் கிடையாது. (அவ்வளவு சிக்கனம்) சிலசமயம் மொறசல் வெற்றிலை அகப்பட்டு விட்டால் மட்டும் இலையில் முதுகிலுள்ள நரம்புகளை உரிப்பார். அப்பொழுது நமக்கு, “முத்தப்பனைப் பிடிச்சு முதுகுத் தோலை உறிச்சி பச்சை வெண்ணெயைத் தடவி....“ என்ற வெற்றிலையைப் பற்றிய அழிப்பாங்கதைப் பாடல் ஞாபகத்துக்கு வரும்.

களிப்பாக்கை எடுத்து முதலில் முகர்ந்து பார்ப்பார். அப்படி முகர்ந்து பார்த்துவிட்டால் “சொக்கு“ ஏற்படாதாம். அடுத்து அந்தப் பாக்கை ஊதுவார்! அதிலுள்ள கண்ணுக்குத் தெரியாத பாக்குப் புழுக்கள் போக வேண்டாமா, அதற்காக. ஆரம்பத்தில் மெதுவாக ஆரம்பிக்கும் இந்த முகர்ந்து பாத்தலும் ஊதலும் வரவர வேகமாகி ஒரு

நாலைந்து தடவை மூக்குக்கும் வாய்க்குமாகக் கை மேலும் கீழும் “உம் உஷ், உம் உஷ்“ என்ற சத்தத்துடன் சுத்தமாகி டபக்கென்று வாய்க்குள் சென்றுவிடும்! ஒருவர் உபயோகிக்கும் அவருடைய சுண்ணாம்பு டப்பியை பார்த்தாலே அவருடைய சுத்தத்தைப் பற்றித் தெரிந்துவிடும். மாமனார், இதிலெல்லாம் மன்னன். விரலில் மிஞ்சிய சுண்ணாம்பைக் கூட வீணாக மற்றப் பொருள்களின் மேல் தடவ மாட்டார். அவருடைய சுண்ணாம்பு டப்பியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொள்ளலாம். பதினைந்து வருசத்துக்குமுன் வாங்கிய எவரெடி டார்ச் லைட் இன்னும் புத்தம் புதுசாக இப்பொழுதுதான் கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்ததோ என்று நினைக்கும்படியாக உபயோகத்தில் இருக்கிறது அவரிடம். அதோடு சேர்ந்து வாங்கிய எங்கள் வீட்டு டார்ச் லைட், சொட்டு விழுந்து நெளிசலாகி மஞ்சள் கலரில் பார்க்கப் பரிதாபமாக, ஒரு சாகப்போகும் நீண்ட நாள் நோயாளியைப் போல் காட்சியளிக்கிறது.

நாற்காலியை அவர் தவிர அந்த வீட்டில் யாரும் உபயோகிக்கக் கூடாது. காலையில் எழுந்திருந்ததும் முதல் காரியமாக அதைத் துடைத்து வைப்பார். ஒரு இடத்திலிருந்து அதை இன்னொரு இடத்துக்குத் தானே மெதுவாக எடுத்துக் கொண்டு போய்ச் சத்தமில்லாமல் தண்ணீர் நிறைந்த மண் பானையை இறக்கி வைப்பது போல் அவ்வளவு மெதுவாக வைப்பார். மாமனார் என்னைக் கண்டதும் “வரவேணும் மாப்பிள்ளைவாள் என்று கூறி வரவேற்றார். கொஞ்சம் வெற்றிலை போடலாமே? என்று என்னைக் கேட்டுவிட்டுப் பதிலும் அவரே சொன்னார். படிக்கிற பிள்ளை வெற்றிலை போட்டால் கோழி முட்டும்!“

அம்மா சொல்லியனுப்பிய தகவலை அவரிடம் சொல்லிவிட்டு வீடு திரும்பினேன். ராத்திரி அகாலத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. வீட்டில் எல்லாரும் அயர்ந்த தூக்கம். நான் பெத்தண்ணாவை எழுப்பினேன். நாற்காலிக்காக வந்த ஒரு இழவு வீட்டுக்காரர்கள் வெளியில் நின்று கொண்டிருந்தார்கள். பெத்தண்ணா அவர்களைத் தெருப்பக்கம் அழைத்துக் கொண்டு போனான். நானும் போனேன். வந்த விஷயத்தை அவர்கள் சொல்லி முடித்ததும் பெத்தண்ணா அவர்களிடம் நிதானமாகப் பதில் சொன்னான். “நாற்காலிதானே....? எங்கள் மாமனார் வீட்டில் இருக்கிறது. போய்க் கேளுங்கள் தருவார்’. அவர்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்து இருவரும் சத்தமில்லாமல் சிரித்தோம்! அப்பா தூக்கச் சடைவோடு படுக்கையில் புரண்டு கொண்டே “யார் வந்தது?“ என்று கேட்டார்.

‘வேலையென்ன..... பிணையலுக்கு மாடுகள் வேணுமாம்“ என்றான் பெத்தண்ணா. துப்பட்டியை இழுத்துப் போர்த்திக் கொண்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டார் அப்பா. இப்பொழுது மாமனார் காட்டில் பெய்து கொண்டிருக்கிறது மழை? ரொம்பநாள் கழித்து, நான் மாமனார் வீட்டுக்கு ஒருநாள் போன போது அவர் தரையில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். வழக்கமான சிரிப்புடனும் பேச்சுடனும் என்னை வரவேற்றார். ”என்ன இப்படிக் கீழே! நாற்காலி எங்கே?” சுற்றும் முற்றும் கவனித்தேன். வெற்றிலையின் முதுகில் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டே என்னை ஆழ்ந்து பார்த்துப் புன்னகை செய்தார். பின்பு அமைதியாய் “அந்தக் காரியத்துக்கே அந்த நாற்காலியை வைத்துக்கொள்ளும்படி நான் கொடுத்துவிட்டேன். அதுக்கும் ஒன்று வேண்டியதுதானே?“ என்றார். எனக்கு என்ன சொல்வது? தெரியவில்லை. வீட்டுக்குத் திரும்பி வரும் போது இந்தச் செய்தியைச் சொல்லப் பெத்தண்ணாவிடம் வேகமாக விரைந்தேன். ஆனால் வரவர என்னுடைய வேகம் குறைந்து தன்நடையாயிற்று.

**ஆசிரியரைப் பற்றி**

கி.ரா என்று சுருக்கமாக அழைக்கப்படும் கி.ராஜநாராயணன் (பிறப்பு: 1922) கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர். கோவில்பட்டியின் அருகில் உள்ள இடைசெவல் கிராமத்தைச் சேர்ந்தவர். 1958 -இல் சரஸ்வதி. இதழில் இவரது முதல் கதை வெளியானது. இவரின் கதையுலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளையும் விவரிப்பவை. கரிசல் வட்டார அகராதி என்று மக்கள் தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி இவரே. சாகித்ய அகாடமி விருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2016ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகள் பெற்ற, தொண்ணூறு வயதான கி.ரா. தற்போது புதுச்சேரியில் வாழ்ந்து வருகிறார்.

# 8. பிரும்மம்

## - பிரபஞ்சன்

நாங்கள் புது வீட்டுக்குக் குடி போனோம். ஆச்சரியமாக வீட்டுக்கு முன்னால் கொஞ்சம் நிலம் வெறுமே கிடந்தது. ஒரு நாலு முழ வேஷ்டியை விரித்தது போன்று கிடந்தது அது. அதை என்ன பண்ணலாம் என்று நாங்கள் யோசித்தோம். வீட்டுப் பெரியவர்களுக்குச் சலுகை கொடுப்பது மாதிரி, மரியாதை கொடுக்கிற பழக்கத்தை உத்தேசித்து பாட்டியைக் கேட்டோம். அவள் ஆகி வந்த பழக்கங்களுக்கேற்ப, ஒரு பசு வாங்கிக் கட்டி வளர்க்கலாம் என்றாள். பசு வீட்டுக்கு லட்சணம். பசு வந்தாலே வீட்டுக்கு லட்சுமி வந்தது போல. பசு பால் கொடுக்கும். பாலில் இருந்து மோர், தயிர், வெண்ணெய், நெய் முதலானவை கிடைக்கும். பசு பெய்வதை மூத்திரம் என்று சொல்லக் கூடாது. அதைக் கோமியம் என்று கூற வேண்டும். அந்தக் காலத்தில் மனுஷர்கள் வீட்டுக்கு ஒரு பசு வளர்ப்பார்கள். இப்போதெல்லாம் மனுஷர்கள் ரொம்ப மாறிப் போய்விட்டார்கள்.

பாட்டியின் கருத்தை அம்மா ஒரே அடியில் அடித்து வீழ்த்தினாள். “காலம் பூராவும் இந்தக் குடும்பத்துக்கு உழைத்து உழைத்து உருக்குலைந்து ஓடாகத் தேய்ந்து போனது போதாதென்று இப்போ மாட்டுச்சாணி வேறு வார வேண்டுமா?“ என்று கேட்டாள். அவள் கட்டிக்கொண்டு வந்ததில் இருந்து அவளும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறாள். அவள் நாத்திமார்கள் அவளைச் சந்திரமதியாகப் படுத்தி வைத்தார்கள். காலை நாலு மணிக்கு எழுந்திருக்கும் அவளை ராத்திரி சாமம் ரெண்டு மணிக்கே படுக்கவிட்டார்கள். ஊர் உலகத்தில் உள்ளது மாதிரி அவளுக்குப் புருஷன் வாய்க்கவில்லை. நாள் கிழமைகளில் அவளுக்குப் பட்டுப்புடவை இல்லை. கண்ட கழிசடைகள் எல்லாம் வைரமாகப் போட்டுக் கொண்டு ஜொலிக்க, சாதா பவுனுக்கே இவள் அல்லாடுகிறாள். கல்யாணம் காட்சிகளில் அவள்தான் எவ்வளவு அவமானப்படுகிறாள். கடைசியாக அம்மா, வாய் வலி காரணமாக நிகழ் உலகத்துக்குத் திரும்பி, “ஒரு வெண்டை, ஒரு கத்தரி, ஒரு தக்காளி செடி போடலாம். கறிக்கு ஆகும், கொத்தமல்லி கூடப் போடலாம்தான்“ என்றாள்.

சௌந்தரா, என் தங்கையின் பெயர். இதைக் கடுமையாக ஆட்சேபித்தாள். “ஹோம் சயின்ஸ்“ என்கிற அபூர்வமான கல்வியைக் கற்பவள். அவள் தோழி வீட்டில் மல்லிகை, கனகாம்பரம், ரோஜாச் செடிகள் போட்டிருக்கிறது. மல்லிகை, ரோஜா, கனகாம்பரம் பறித்துக் கட்டி தலையில் வைத்துக் கொண்டு காலேஜ் போகலாம். ரம்மியமாக இருக்கும்.

பூக்கள் அற்புதமானவை. அழகை ரசிக்கத் தெரிய வேண்டும். கத்தரி, வெண்டை எல்லாம் வெறும் சோற்றுக்கே ஆகும். மனிதன் சோற்றால் மட்டுமே ஜீவித்திருக்க மாட்டான். சௌந்தரா கனவுகளைத் தின்று வாழ்பவள். எந்த முடிவுக்கும் வராமலேயே சபை கலைந்தது. எங்கள் அனைவருக்கும் சிந்திக்கவும், செய்யவும் அனேக காரியங்கள் ஏறிட்டுப் போயின. ரெண்டு நாள் கழித்து அப்பா, சாயங்காலப் பொழுதில் எங்களை அழைத்து, காலியாகக் கிடக்கும் நிலத்தில் முருங்கை நடலாம் என்றார். முருங்கை மரம் இருக்கும் மரங்களிலேயே சிறந்தது வேர் வீட்டு மதிலையோ, வீட்டு அஸ்திவாரத்தையோ தகர்க்காது. இடத்தை அடைக்காது. முருங்கைக்கீரை கீரைகளிலேயே ரொம்ப விசேஷமானது. கபத்தைக் கரைக்கும். கால்ஷியம் சத்து உள்ளது. கந்தசாமி முதலியார் கூட எழுதியிருக்கிறார். காயைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. சாம்பார் வைக்கலாம். வாசனை ஊரைக் கூட்டும். காரக் குழம்பு கூட வைக்கலாம் தான். தேங்காய்த் துருவல் போட்டுக் கறி பண்ணலாம். வீட்டு முகப்பில் மரம் ஓர் அழகைத் தரும். நிழலும் தரும். வீதியை ஒட்டிய அறைக்கு எப்பவும் வெயில் வராது. குளிர்ச்சியாய் இருக்கும். அப்பாவுக்கு முருங்கை பிடிக்கும். எனக்கும் பிடிக்கும். அம்மாவுக்குப் பிடிக்கும், பிடிக்காது என்பதில்லை.

அடுத்த நாள் காலை அப்பாவின் சினேகிதர் வீட்டில் இருந்து அவர் பையன் ஒரு முருங்கைக் கிளையைக் கொண்டு வந்தான். அப்பாவை எழுப்பிக் கொடுத்தான். அப்போது நாங்கள் தூங்கி எழுந்து காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அன்று வெள்ளிக் கிழமையாய் வேறு அமைந்திருந்தது. அம்மா ஸ்நானம் பண்ணி, கூந்தல் முனையில் ஈரம் போக துணி சுருட்டிக் கட்டியிருந்தாள். மஞ்சள் மினுக்கில் அவள் வழக்கத்துக்கு விரோதமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். அதன் காரணமாக அவள் அழகாக விளங்கினாள்.

முருங்கைக் கிளை கொண்டு வந்த பையனுக்குக் காபி, உபசாரம் எல்லாம் நடந்தது. அப்பா குளிக்கப் போனார். சாதாரணமாக அவர் அரை மணி முக்கால் மணி நேரம் குளிப்பார். அன்று அதிசீக்கிரமாகக் குளித்துவிட்டு, நீர் சொட்டச் சொட்டத் துண்டை இடுப்பில் சுற்றிக்கொண்டு வந்தார். அப்பாவிடம் ஒரு பட்டு வேஷ்டியும் பட்டுத் துண்டும் இருந்தது. தாத்தாவின் திவச நாளிலும் பண்டிகை விசேஷ காலங்களிலும் அவர் அதைத்தான் அணிவார். மஞ்சளும் இல்லாமல், பழுப்பும் இல்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்டு இருந்தது அது. கரை பச்சை வண்ணத்திலே கை அகலம் இருக்கும். வெயில் பட்டால் எரிவதுபோல் மினுங்கும். வருஷத்தில் பத்துப் பனிரெண்டு நாட்களுக்கே

அது பயன்பட்டு வாழ்ந்தது. மற்ற நாட்களில் அலமாரியிலேயே அது மடித்து வைக்கப்பட்டிருந்ததால் அதற்கென்று தனிமணமும் குணமும் ஏற்பட்டிருந்தது. அதை அலமாரியை விட்டு எடுக்கும் போதெல்லாம் கற்பூர வாசனை பரவும். அப்பா அந்த வாசனையோடு இருக்கும் போது அவரை எனக்குப் பிடிக்கும். அன்றும் ஏதோ விசேஷ தினம் போல அப்பா அந்த வேஷ்டியைக் கட்டிக் கொண்டு துண்டை மேலே போர்த்துக் கொண்டார்.

முருங்கைக் கொம்பு கொஞ்ச நாழிகை முன்புதான் ஒடிக்கப் பட்டிருந்தது. அதனின்று நீர் சுரந்தது. பசிய மர வாசனை அதனின்றும் வந்தது. மெல்லிய மேல் தோல் சிதைந்து உள்ளே பச்சை காண இருந்தது. அந்தச் சதுர நிலத்தில் நடுப்பாங்காக அந்த காம்பை அப்பா நட்டார். அம்மா அவருக்குத் துணை செய்தாள். அம்மா குனிந்து அந்த முருங்கைக் கொம்பைப் பிடித்துக் கொண்டிருந்த போது அவள் முதுகுப் பக்கம் தலையில் முடித்திருந்த துண்டின் ஈரம் பட்டு நனைந்திருந்தது. அப்பா பள்ளம் தோண்டி கம்பை நட்டார். நான் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்தேன். சௌந்தரா ஓடிப் போய் வாளியில் நீர் கொண்டு வந்து கொம்பைச் சுற்றி மண்ணில் வார்த்தாள். அம்மா மூன்றாவது வீட்டுக்கு ஓடிப்போய் மாட்டுச் சாணம் கொண்டு வந்து கொம்பின் முனையில் அப்பி வைத்தாள். அன்று காலை நேரம் பூராவும் எங்களுக்கு முருங்கையே விஷயமாக இருந்தது. நானும் அப்பாவும் எங்கள் ஆபீஸ்களுக்கும், சௌந்தரா காலேஜுக்கும் அன்று லேட்டாகவே போனோம்.

அடுத்த சில நாட்களுக்கு நாங்கள் முருங்கையைப் பற்றி சுத்தமாய் மறந்து போனோம். முருங்கை என்கிற விஷயம் எங்கள் வாழ்வில் இடம் பெற்றதாகவே எங்கள் யாரின் உணர்விலும் இல்லை. ஒருநாள் காலை என்னை என் படுக்கையில் வந்து எழுப்பினாள் சௌந்தரா. அவள் குரலிலும் அசைவிலும் அவசரம் தெரிந்தது. என்னைப் பிடித்துக் குலுக்கினாள். “சனியனே! காலைல வந்து என் உயிரை ஏன் எடுக்கிறே…“ ‘அண்ணா, வந்து பாரேன். முருங்கை மரம் முளைச்சிடுச்சி! சுருக்கென நான் எழுந்து உட்கார்ந்தேன். இருவரும் கீழே வந்தோம். முருங்கையைச் சுற்றி வீட்டார் அனைவரும் நின்றிருந்தார்கள். பட்ட மரம் போலும் குச்சி போலும் தோற்றம் கொண்டிருந்தது முருங்கை, அதன் பட்டையின் பல்வேறு இடங்களில் பச்சைப் புள்ளியாகத் தளிர்விட்டிருந்தது. ஒட்ட வைக்கப்பட்ட பச்சைப் பயிறு. கிளர்த்திக் கொண்டு வெளியேறத் துடிக்கும் உயிரின் உருவம் பார்க்கப் பரவசம் தந்தது. தொட, என் விரல் என்னை அறியாமல் நீண்டது. “உஸ். அதை தொடக் கூடாது“ என்றாள் பாட்டி. பச்சைக்

குழந்தைகளையும், பூக்களையும், தளிர்களையும் விரல் நீட்டிச் சுட்டக்கூடாது. தொடவும் கூடாது. தொட்டால் அதுகளுக்கு ஊறு. அன்று முதல் விடிந்ததும் எங்களின் முதல் வேலை முருங்கையைப் பார்ப்பதுதான். அதன் வளர்ச்சியின் ஒவ்வொரு கணுவும் எங்களுக்குத் தெரிந்தே நிகழ்ந்தது. உளுந்தம் பொட்டின் அளவான தளிர், மெல்லிய நரம்பு போல அதுவிடும் கிளை, பச்சைப் பட்டாணியைப் போல அதன் இலை, ஊடே ஊடே தோன்றும் அதன் புதிய புதிய தளிர்கள் எல்லாம் எங்கள் கண் முன்பாகவே நிகழ்ந்தன.

இதற்கிடையே நான் ரெண்டு சட்டைகள் புதிதாகத் தைத்துக் கொண்டேன். என் முழுக்கால் பேண்ட் சற்று இறுக்கமாகி விடவே அதைப் பிரித்து விடவேண்டியிருந்தது. ஒரு நாள் ரகசியமாக அதன் ஒரு - ஒரே ஓர் - இலையைப் பறித்து வாயில் போட்டுச் சுவைத்தேன். வித்தியாசமாக ஒன்றும் இல்லை. எனக்கு அது சுவாரஸ்யமாக இருந்தது. முருங்கையைப் பயன் கொண்ட அந்த முதல் நாள் இப்போதும் என் கண்முன் நிற்கிறது - நெஞ்சில் நிற்பது போல. அம்மாவுக்கு நெய் உருக்க வேண்டி இருந்தது. முருங்கைக்கீரை போட்டு உருக்கினால் நெய் ரொம்ப வாசனையாக இருக்கும் என்றாள் பாட்டி அம்மா அப்படியே செய்தாள். மத்தியான சாப்பாட்டுக்கு அந்த நெய்யையே நாங்கள் விட்டுக் கொண்டு சாப்பிட்டோம். முருங்கையின் விசேஷமோ அன்றி மனதின் விசேஷமோ நெய் என்றைக்குங் காட்டிலும் அன்று ரொம்ப சுவையாய் இருந்தது. நெய்யில் விழுந்திருந்த கீரையும்கூட தின்ன ஒரு மாதிரியாய் நன்றாகவே இருந்தது. அழகாகத் துளிர்விட்ட அதைப் பறித்து அம்மா ஹிம்சித்து விட்டாளே என்கிற துக்கம் என் மனசுக்குள் இருக்கத்தான் செய்தது. அது நாளுக்கு நாள் தான் பெருக்கிக்கொண்ட ஆகிருதியினால் செளந்தராவையே நேரங்களில் எனக்கு நினைவூட்டியது. அம்மா செளந்தராவை தன் யெளவனத்தின் கடைசி காலத்தில்தான் வாங்கிக் கொண்டாள். எனக்கும் அவளுக்கும் பதினைந்து வருஷ பிராய வித்தியாசம் ஏற்பட்டு விட்டது.

செளந்தராவை அவள் குழவிப் பருவம் தொட்டே அருகிருந்து கண்டு வருகிறேன். அதையும் அது முளைவிட்ட பருவம் தொட்டே தரிசித்து வருகிறேன். அவள் பாயில் புரண்டு, தன் பார்வையில் என் முழங்கால் மட்டும் விழ, அந்த அடையாளத்தை மட்டும் கண்டு, தன்னைத் தூக்கிச் சொல்லி அழுதது அது தன் குறுந்தளிர்க் கைகளைக் காற்றில் வீசி என்னை நேயம் கொண்டாடியது அவள் முதல் நாள் பள்ளிக்கூடம் போகும் விசேஷத்தைக் கொண்டாடவென்று அதற்காகவே தைத்த சட்டை பாவாடை புரளப் புரளப் போட்டுக் கொண்டு நின்றது வறண்டு மரத்துக் காய்ந்து நின்ற கொம்பில், பச்சை

பச்சையாய்க் கொத்து கொத்தாய் நாலு பக்கமும் சிலிர்த்துக் கொண்டு நின்றது அவள் மலர்ந்த போது நடுவீட்டில் ஜமக்காளம் போத்தின நாற்காலியில் மாலை அணிந்த கழுத்தோடு உட்கார்ந்து கொண்டு வெட்கத்தில் சிரித்தது புட்டு சுற்றிஉளுந்து களி தின்று சடங்கு கொண்டாடியது எல்லாம் என் நினைவுகளில் பக்கம் பக்கமாய் நின்றது.

நான் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேலைக்குப் புறப்படுகையில் அது கையை அசைக்கும், பேசுவதாய் இருக்கும். எங்கள் சம்பாஷணைக்கு வார்த்தை அவஸ்யப்படவில்லை. ஒலி இன்றியமையாமை இல்லை. உணர்வுகள் போதுமானவையாய் இருந்தன. இமைகள் உதடுகளாகிப் போயின. சௌந்தரா கூடத்து ஜமக்காள நாற்காலியில் உட்கார்ந்தது போல் அதுவும் நின்றது. அதன் கால்களுக்கிடையில் நிழல் திரண்டது. நானும் அப்பாவும் அதன் கால்களுக்கடியில் சைக்கிளை நிறுத்துவதாகச் செய்தோம். மத்தியான காலங்களில் நான் அதன் கால்களுக்குப் பக்கத்தில் ஈசிசேரை போட்டுக் கொண்டு உட்காருவேன். காற்று சுகத்திலும் நிழல் அருமையிலும் என்னைப் பொறுத்த வரை வெயில் அஸ்தமித்துவிடும். புஸ்தகங்கள் படிப்பதும், எழுதுவதும் அதன் அடியில் என்றாகிவிட்டது. எழுத்து கண்ணுக்கு மறையும் வரை என் வாசிப்பும் சிருஷ்டியும் அதன் அடியில் - அதன் ஆதரவில் என்றாகிவிட்டது. காவிரி ஆற்றங்கரையில் நான் கல்லூரி வாசம் செய்திருந்தேன். ஸம்ஸ்கிருதம் கற்றது ஆற்றங்கரை அருகிருந்த ஒரு பழைய ஓட்டு வீட்டில். அந்தக் காலத்து மனுஷர்களைப் போலவே அந்தக் காலத்து வீடுகளும் பெரிசாய் இருக்கும். நாலு கைத் தாழ்வாரம். நடுவில் பெரிய முற்றம். வீட்டுக்குள்ளேயே எங்கள் வாத்தியார் மரம் வைத்திருந்தார்.

அது முருங்கையாக வாய்த்திருந்தது. அதன் கீழ்தான் என் பாடம் நடந்தது. அதற்கு மட்டும் வாய் இருந்தால் ராம ஸப்தத்தையும், கோதா ஸ்துதியையும் என்னைக் காட்டிலும் இனிமையாகவும், ஆத்மபூர்வமாகவும் சொல்லி இருக்கும். அதன் கீழ் எண்ணற்ற மாணவர்கள் அமர்ந்து பாஷை படித்திருப்பார்கள். வாத்தியார் ஒரு நாள் முருங்கையை பிரும்ம விருட்சம் என்றார். முருங்கையின் மேல் தோல், காய், கீரை முதலானவை மனுஷ இனவிருத்திக்குக் காரணமாகிய புணர்ச்சிக்குத் தீவிர உந்துதலும் உரமும் தருவதால் அது சிருஷ்டிக்கு உதவுவதாகிறது. பிரமனும் சிருஷ்டி பரமான காரியங்களிலேயே இருப்பதால் அது பிரம்ம விருட்சம் என்றாகிறது என்றார். அந்த நாள் முதற்கொண்டு நான் அதை நோக்கும் போதெல்லாம் நாலு திசைகளிலும் சிரம் கொண்ட பிரம்மமே என் கண்களுக்குப் புலப்படுவதாயிற்று. வாத்தியார், குழந்தைகள், நாங்கள் அனைவரும் பிரம்ம விருட்ச நிழலில் வளர்ந்தவர்கள். சௌந்தராவுக்கு வரன் நிச்சயமாயிற்று. அவளுக்கு

அவரும் பிடித்திருக்கவே கல்யாணம் சட்டென்று கூடி முடிந்தும் போயிற்று. அவன் புருஷனோடு புறப்படுகையில் அப்பா, அம்மா, நான், பாட்டி என எல்லோரிடமும் முண்டு முண்டாக நின்று அழுதாள். உறவுகளைப் பிரிவது என்பது எல்லோருக்கும் துன்பமான அனுபவமாகத் தான் இருக்கும்.

அவள் நேசித்தவற்றுள் முருங்கையும் கட்டாயம் இருக்கும். இப்போதெல்லாம் எங்கள் வீட்டில் பெண்டுகளின் வரத்து அதிகமாக இருந்தது. அம்மாவை ஒத்த பெண்டுகள், எதிர் வீட்டு, பக்கத்து வீட்டு, மூன்றாவது நாலாவது வீட்டுப் பெண்கள் வயது காரணமாக இவர்கள் பெரும்பாலும் குண்டாகவும் அல்லது அதீத ஒல்லியாகவும் இருப்பார்கள். நான் வீட்டுக்குள் நுழைகையில் சரேலென்று என்னைக் கடந்து இவர்கள் போவார்கள். இவர்கள் மீதிருந்து ஏதேனும் ஒருவகை வாசம் வீசும், மிளகாய் நெடி, கொத்தமல்லி வாசனை, அழுக்கின் கார நெடி, கழுவாத உடம்பின் கவிச்சை எல்லாம். தவறாமல் இவர்கள் கைகளில் ஒரு கொத்து முருங்கைக்கீரையும் அல்லது ரெண்டு மூன்று காயும் இருக்கும். இதற்காகவென்றே வருபவர்கள் வேறு எதற்காகவோ வருபவர்களாக அபிநயித்து, கடைசியில் அம்மாவே கீரை பறித்துக் கொடுக்கும்போது புளகித்து சிரித்துப் பேசிவிட்டுச் செல்வார்கள். அம்மா பொதுவாக அண்டை வீடுகளுக்கு வம்பு சமாசாரங்களுக்காகப் போகிறவள் அல்ல. அதில் அவளுக்கு நாட்டம் இல்லை. எனவே பெண்டுகள் அவளைப் புறக்கணித்தே இருந்தார்கள். முருங்கை வந்தபின் அவளுக்கு உறவுகள் தேடி முளைத்தன. எங்கள் வீட்டுக் கீரை தேன் என்று பயன் கொண்டவர்கள் சொன்னார்கள். காய் மதுரம் என்றார்கள். அது தன்னைக் குறித்த பாராட்டெனவே ஆனந்தம் மிளிரும் அம்மாவுக்கு.

அது அடர்த்தி இன்றி மற்றவை போல மிருக பலம் இன்றி வானத்தை நோக்கியே வளர்ந்தது. வானமே தன் இலட்சியம் என்பதுபோல அது வளர்ந்தது. அதன் உச்சி வானக் கூரையைத் தொட்டாலும், என் மனசுக்குள் அது தவழும் குழந்தை. மனிதர்கள் ஒருநாள் தங்கள் கோரைப் பற்கள் நீள மரங்களையெல்லாம் வெட்டிப் போட்டார்கள். கற்களை வைத்துச் சுவரெழுப்பித் தங்ள் வாழ்விடங்களையும் சாவிடங்களையும் அமைத்துக் கொண்டார்கள். ஆதலினால் பட்சி ஜாதிகள் கூடுகளை இழந்து வானத்தில் திரிந்தன. முருங்கை காக்கை குருவிகளுக்கு இல்லம் ஆயிற்று. எங்கள் காதுகளுக்கு மனித இரைச்சலும், இயந்திரக் கூச்சலும் ஓசையாய் இருந்த நிலைபோய் பறவையின் நாதம் இசை ஆயிற்று. மாடியில் என் அறையின் ஜன்னல் வழி பார்த்தால் முருங்கையின் தலைப்பகுதி தெரியும். என் படுக்கையின் மேல் படுத்திருந்துகூட அதனைப் பார்க்க

முடியும். காலையில் ஏதேனும் ஒரு பறவையின் பேச்சு கேட்டுத்தான் நான் கண்களைப் பிட்டுக் கொள்ளும் வழக்கம் அமைவதாயிற்று.

சூரிய கிரணங்கள் மண்ணில் பாயாத அந்த வைகறைப் போதின் வெண்மையான சூழலில், ஒரு சிட்டுவோ, ஒரு காகமோ, அபூர்வமாக எப்போதாவது வரும் மைனாவோ, கருவாட்டு வாலியோ பேசக் கேட்டுக் கொண்டே உலகத்தின் ஒரு பொழுதை எதிர்கொள்வது மிக இனிய அனுபவமாக இருக்கும். மனிதர்கள் தங்கள் வீடுகளில் தாங்கள் மட்டுமே தனித்து எவ்வாறு வாழ்கிறார்கள் என்று எங்களுக்குத் தோன்றும். விடியல் போதை மனிதர்களைக் காட்டிலும் பறவைச் சாதியே ஆர்வத்தோடும் சந்தோஷத்தோடும் வரவேற்கின்றன. அவற்றின் உற்சாகம், விளையாட்டு மைதானத்தில் இருக்கும் குழந்தைகளின் கும்மாளத்தை ஒக்கும் ஒரு கிளையில் இருந்து மறு கிளைக்குச் சிறகுகளைச் சிலிர்த்துக் கொண்டு தாவும். அலகால் நெஞ்சை நீவிவிட்டுக் கொள்ளும். சாயுங் காலங்களில் அவை வேறு மாதிரி தோன்றும். வேறு மாதிரி கூவும். ஒரு நாள் வாழ்க்கையை முடித்துவிட்ட திருப்தியும், சாந்தமும் போது முடிந்துவிட்டதே என்கிற ஆதங்கமும் அந்தக் குரல்களில் இருக்கும். முருங்கைக்காய்ப் பறவைகளோடும், தொங்கும் காய்களோடும் பார்த்தால், அசப்பில் தன் தோள்மீது குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொண்டு குதிபோடும் தாத்தாவைப் போலத் தோணும். திடீரென்று ஆயிரம் வருஷத்திய முதுமையில் மூச்சுவிடும். பாவமாய் இருக்கும். திடீரென்று விடலைப் பையனின் குஷியில் குதிபோடும்.

எங்கள் வீட்டில் முருங்கை சம்பந்தப்படாத சமையல் இப்போதெல்லாம் இல்லை. முருங்கைக் கீரை பிரட்டல், அல்லது கூட்டு காய் சாம்பார். முருங்கைக்காய் சாம்பாருக்கு மற்றதுக்கில்லாத விசேஷமான மணமும் சுவையும் உண்டு. எனக்கு அது ரொம்பப் பிடிக்கும் காய் காரக்குழம்பு காய் பொரியல் இவ்வாறு ஏதேனும் இருக்கும். எங்கள் மரத்துப் பொருள்கள் எல்லாமே எங்களுக்குப் பிடிக்கும். எங்கள் வீட்டுக்கு மூணாவது வீட்டில் ஹெட்மாஸ்டர் ஒருத்தர் குடி வந்தார். மிகப் பெரிய பள்ளிக்கூடத்தில் மிகப் பெரிய வாத்தியார் அவர். அவர் எங்கள் தெருவுக்குக் குடிவந்த பிறகும் நாங்கள் காரியாதிகளைக் கவனித்துக் கொண்டிருந்தோம். நாங்கள் அவருக்குப் புல்லாகத் தெரிந்தோம். தெருவில் போகும் போதும் வரும்போதும் அவர் வானத்தைப் பார்த்தவாறே நடந்தார். எதிர்வீட்டுக் கோனார், வாத்தியார் வீட்டுத் திண்ணையில் மாட்டைக் கட்டிப் பால் கறந்தார். வாத்தியார் வந்து தலைமயிர், துண்டு, வேஷ்டி பறக்க ஓர் ஆட்டம் ஆடினார்.

தெருவார் அவர் தொண்டையின் முழு ஆகிருதியையும் அன்றே கண்டனர். ஒரு நாள் அவர் என்னைக் காண வந்தார். உத்தியோக உடையிலேயே இருந்தார். எலிஸபெத் காலத்து ஆங்கிலத்தில் தற்கால கல்வித் துறையின் சீர்கேடு, சினிமா, மாவுமிஷின், குடும்பக் கட்டுப்பாடு எல்லாவற்றையும் பற்றிச் சம்பாஷித்தார். தவறுதான். அவரேதான் பேசினார். கடைசியாக "அடடே... முருங்கை மரம்..." என்றார். நான் ஆமோதிக்க அவஸ்யம் இருக்கவில்லை. அது முருங்கை, கொஞ்சம் காயும், கீரையும் பறித்துக் கொடுத்தேன். அவருக்கு மேலும் கீழும் பல்வரிசை. ஆழகான இப்போதெல்லாம் மாலைகளில் முருங்கையின் கீழ் இருப்பது இயலாததாயிற்று. திடீரென்று வானம் நினைத்துக் கொண்டு மழையைப் பொழிந்தது. காலம் அதன் கிரியைகளை மிக ஒழுங்காகவே செய்தது. காற்றில் ஈரம் கோத்து, அறைக்குள் இருப்பது சுகமாக இருந்தது. மண் குழைந்தும், ஈரம் செறிந்தும் போகவே நடப்பது நிதானம் தேவைப்படும் தொழிலாயிற்று. அடிக்கடி காற்று பலத்து வீசி நித்திய வாழ்க்கைக்கு இடையூறு ஆயிற்று. பலத்த காற்று அடிக்கடி ஊரைக் கடப்பதாயிற்று. ஒருநாள் மழையில் அலுவலகம் சென்றேன். உள் இருக்கையிலேயே பலத்த காற்று வீசியது. ஜன்னல் கதவுகள் கட்டுப்படுத்த முடியாத படிக்கு அடித்து பயம் எழுப்பின. எல்லாம் முடிந்து அமைதி நிலவியது. மதிய உணவுக்கு நான் வீடு திரும்பினேன்.

எங்கள் வீட்டுக்கு முன்னால் சிறுவர்களும் பெரியவர்களுமாக ஒரு பெரும் கூட்டம் நின்றிருந்தது. தெருவை அடைத்துக் கொண்டு வீழ்ந்து கிடந்தது முருங்கை. மெலிய மெலிய விரல்களாக கிளைகள். பொட்டு பொட்டாய் இலைகள். ஊடே தங்கப் பொட்டாய் மஞ்சளாகிப் பழுத்துப் போன இலைகள். கீரைகளாகவும், காய்களாகவும், விறகாகவும் அவரவர் தங்கள் சக்திகளுக்கு ஏற்ப திரட்டிக் கொண்டு சென்றார்கள். பார்த்துக் கொண்டே இருக்கும் போதே மரம் இருந்த இடம் சூன்யமாயிற்று. அம்மாவும், அப்பாவும், பாட்டியும் தள்ளி நின்று கொண்டிருந்தார்கள். நான் வழக்கமாக சைக்கிளை நிறுத்தும் இடத்தில் கொண்டு நிறுத்தினேன். முருங்கையின் நிழலில்தான் நான் சைக்கிளை நிறுத்தும் வழக்கம். முருங்கை இடுப்பொடிந்து நிற்பது போல இருந்தது. பாதி மண்ணில் புதைந்தும் பாதி புழுதியும் அது ஆகி இருந்தது.

மறுநாள் காலையில்தான் அது இல்லாமையின் தாக்கம் எனக்குப் புலப்பட்டது. நேற்று இருந்தது. இன்று காலை, மொட்டையாக அடித்தண்டு மட்டும் நின்றது. கொஞ்ச நாள் போயிருக்கும். ஒருநாள் காலை காப்பிக்கு மாடியை விட்டுக் கீழிறங்கி, வழக்கப்படி டம்ளரோடு முருங்கையின் அருகில் போய் நின்றேன். எனக்கு அங்கு ஆச்சரியம்

காத்திருந்தது. துண்டாகி நின்றிருந்த மரத்திலிருந்து, ஓர் இடத்தில் சின்னதாய் கிளைத்திருந்தது - உயிர்தான்.

**ஆசிரியரைப் பற்றி**

பிரபஞ்சன் புதுச்சேரியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் சாரங்கபாணி வைத்தியலிங்கம். புதுச்சேரியில் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கரந்தை கல்லூரியில் தமிழ்வித்வான் பட்டம் பெற்றார். தனது வாழ்க்கையை தஞ்சாவூரில் ஆசிரியராகத் தொடங்கினார். குமுதம், ஆனந்த விகடன் மற்றும் குங்குமம் ஆகிய வாரப் பத்திரிக்கைகளில் பணிபுரிந்தார். இவரது முதல் சிறுகதை ‘என்ன உலகமடா’ பரணி என்ற பத்திரிக்கையில் 1961ல் வெளியானது. இவர் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். இதுவரை 46 நூல்களுக்கும் மேலாக எழுதியுள்ளார். 1995இல் இவரது வரலாற்றுப் புதினம் ‘வானம் வசப்படும்’ தமிழுக்கான சாகித்திய அகாதமி விருதைப் பெற்றது. இப்புதினம் ஆனந்தரங்கம் பிள்ளையின் காலத்தைக் களமாகக் கொண்டுள்ளது. இவரது படைப்புகள் ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் மற்றும் சுவீடிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இவரது நாடகமான ‘முட்டை’ டெல்லி பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலுள்ளது. மேலும் நேற்று மனிதர்கள், ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள் ஆகிய இவரது படைப்புகள் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளன. மேலும் வானம் வசப்படும், மானுடம் வெல்லும், காகித மனிதர்கள், கண்ணீரால் காப்போம், ஏரோடு தமிழர் உயிரோடு போன்ற சிறந்த நாவல்களையும் படைத்துள்ளார். இவரது சிறுகதைத் தொகுப்பான ‘நேற்று மனிதர்கள்’ பல கல்லூரிகளில் பாடநூலாக வைக்கப் பெற்றுள்ளது.

# 9. பட்டாம்பூச்சியும் தூக்கமும்

**- சிவசங்கரி**

சலனம். தோளருகே... தலைக்கு மேலே... ட்யூப் லைட்டிலிருந்து ஒரு சாண் தள்ளி உட்காரலாமா, வேண்டாமா என்ற யோசனையுடன் சில நொடிகளுக்கு இறக்கைகளைப் படபடத்தவாறு தயங்கிய அந்த பட்டாம்பூச்சி ப்ரார்த்தித்துக் கொண்டது போல பிரதட்சிணமாகவும், அப்பிரதட்சிணமாகவும் நாலைந்து முறைகள் விளக்கை சுற்றி வந்துவிட்டு, களைத்துப் போய் சுவற்றில் தொற்றிக் கொண்டு இளைப்பாற முற்பட்டது. மூக்கிலிருந்து இறங்கிவிட்ட கண்ணாடியை மேலே தள்ளியவன் ஒருவித ஸ்வாரஸ்யத்துடன் பட்டாம்பூச்சியைக் கவனித்தான். அப்படியொன்றும் அழகானது என்று சொல்ல முடியாது. ஓரோர் பட்டாம்பூச்சி போல ஆரஞ்சும், மஞ்சளுமாய் மின்னவில்லை. சாதாரண பழுப்பு நிறம், இறக்கைகளின் ஓரங்களில் கரை கட்டின மாதிரியும், நடுவில் பொட்டுப் பொட்டாயும் கறுப்பு வண்ணம், பழுப்பில் கறுப்பு எப்படி எடுபடும்? அவனுக்கு மீனாம்பா பாட்டியின் ஞாபகம் வந்தது. ரொம்ப சின்ன வயசில், வருஷா வருஷம் கோடை விடுமுறைக்கு ஆதிச்சபுரத்திலிருந்த மீனாம்பா பாட்டி வீட்டுக்குத்தான் போவது வழக்கம்.

பாட்டி வீட்டை ஒட்டிக் கால்வாய் சலசலத்துக் கொண்டு ஓடும். அமானுஷ்ய அமைதியை பங்கப்படுத்தும் முயற்சியில் சில்வண்டுகள் எப்போதும் சத்தமிடும். நாணற்புதர்களுக்கு மேலே வண்ண வண்ணமாய் பட்டாம்பூச்சிகள் பறந்து ஆளை மயக்கும். அப்படி ஆளைக் கிறங்க அடித்த வண்ணத்துப்பூச்சி ஒன்றை அது ஏமாந்திருந்த சந்தர்ப்பத்தில் இரண்டு இறக்கைகளையும் ஒருசேர பிடித்து, வீட்டுக்குத் தூக்கி வந்து "இதுவும் தட்பான்பூச்சி போல காலை தூக்குமாடா?" என்று ஒருநாள் சின்னக் கோண்டுவிடம் கேட்டதை காதில் வாங்கியவாறு மீனாம்பா பாட்டி வந்து விட்டாள். "என்னடா செஞ்சுண்டு இருக்கே?" "ஒண்ணும் இல்ல பாட்டீ... தும்பி மாதிரி இதுவும்..." முடிப்பதற்கு முன் பாட்டி அதட்டினாள்.

"அடே... கடங்காரா... அதும்பாட்டுக்கு தேமேன்னு போற வண்ணாத்திபூச்சிய பிடிச்சுண்டு வந்து ஏண்டா ஹிம்ச பண்றே... சட்டுனு மறுபடி பறக்க விட்டுடு... இல்லேன்னா உன்னை அது சபிச்சிடும்..." அவன் சிரித்தான். "ஐயே... இது வண்ணாத்தி பூச்சி இல்ல பாட்டீ... பட்டாம்பூச்சி... இங்கி-ஷ்ல 'பட்டர்ஃப்ளை"னு சொல்." நாலே எட்டில் கிட்டத்தில் வந்து பாட்டி மறுபடியும் அவன் முடிக்கும் முன்னர் குறுக்கிட்டு முடித்தாள்.

”வண்ணாத்திப்பூச்சி பாவம் பொல்லாது விட்டுடுனு சொல்றேன். கேக்காம மேல மேல பேசுறியா... படவா...” பாட்டிக்கு கோபம் அதிகம் வந்தால் வலிக்கக் குட்டுவாள். தெரியும். அதற்கு இடம் தராமல் பட்டாம்பூச்சியைப் பறக்க விட்ட அன்று இரவுதான் முற்றத்தில் வெள்ளையாய் நிலா வெளிச்சம் விழ, கையில் வத்தல் குழம்பு சாதத்தை நல்லெண்ணையை விட்டு மணக்க மணக்க பிசைந்து போட்டுக் கொண்டே பாட்டி முதல்முறையாய் அந்தக் கதையைச் சொன்னாள். ”குருவிக்கூட்டை கலைச்சா, நம்ப குடும்பம் சிதறிடும் அதும்பாட்டுக்கு இருந்துட்டு போகட்டுமே... கூட ஒரு தடவை பெருக்கிட்டா போச்சு...” அம்மாவின் சிபாரிசில் குருவிகள் சௌக்யமாய் குடும்ப வாழ்க்கையைத் தொடர, விரைவிலேயே முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் ஓயாமல் கத்துவது கேட்க ஆரம்பித்தது, ஒருநாள் ராத்திரி மணி ஒன்பதரை, பத்து இருக்கும், விளக்கை அணைத்து படுத்து கொஞ்ச நேரம் கூட ஆகியிருக்காது, “டப்“ என்று ஏதோ அடிபடும் ஓசை. பின்னோடு ‘சொத்“தென்று தரையில் எதுவோ விழும் சத்தம்... மின் விசிறியில் அடிபட்டு தாய்க் குருவி செத்துப் போனதும், அடுத்து வந்த நாட்களில் குஞ்சுகள் அம்மாவுக்காக பரிதவித்ததும் நினைவுக்கு வர, அவன் சங்கடப்பட்டான்.

அந்தக் குருவிபோல இந்தப் பட்டாம்பூச்சியும் சுழலும் விசிறியின் இறக்கையில் சிக்கிக் கொள்ளலாம் என்கிற எண்ணம் இருப்புக் கொள்ளாமையை அதிகமாக்க, அவசரமாய் எழுந்து சுவரில் தடவி ஸ்விட்சைக் கண்டுபிடித்து, ∴பேனை நிறுத்தினான். மறுபடி இருட்டைத் துழாவிக் கொண்டே கட்டிலில் உட்கார்ந்தான். ஓரிரு நிமிஷங்கள் செல்வதற்குள் கழுத்திலும், கக்கத்திலும் வியர்வை கசகசக்க ஆரம்பித்ததும் மேற்கொண்டு பொறுக்க முடியாதவனாய் எழுந்து விளக்கைப் போட்டான். மொட்டுப் போல கதவுக்கு மேலே சமர்த்தாய் உட்கார்ந்தது, வெளிச்சம் பரவியதும் மீண்டும் பறக்கத் துவங்க அவன் ஓரத்தில் வைத்திருந்த குடையை எடுத்துக் சுவரில் தட்ட அதை விரட்டப் பார்த்தான். பட்டாம்பூச்சி அறைக்குள்ளேயே சுழன்று வந்ததே தவிர வெளியே போக பிடிவாதமாய் மறுத்தது. சில நொடிகளுக்கு என்ன செய்வது என்று புரியாத தினுசில் அவன் மூச்சிரைக்க நின்றான். பட்டாம்பூச்சியை மறந்துவிட்டுப் புத்தகத்தைப் படிக்கலாமா என்று நினைத்தான். முடியாது என்று தோன்ற விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தான். புழுக்கம் அதிகமாய் இருந்ததில் உறக்கம் வர மறுத்தது. பட்டாம்பூச்சி எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு மின்விசிறியை சுழலவிட்ட சில நொடிகளுக்கெல்லாம் அது மடத்தனமாய் குறுக்கே பறந்து அடிபடுகிற மாதிரியான கற்பனை எழ, “சனியன், சனியன்“ என்று வாய்விட்டு வைதுகொண்டே எழுந்தான்.

இரவு முழுவதும் இப்படி அல்லாடிக் கொண்டிருந்துவிட்டு. காலையில் அவன் எழுந்தபோது கண்கள் லேசாகச் சிவந்திருந்தன. முகத்தில் நீர் சுரந்திருந்தது. கழிவறைக்குச் சென்று திரும்பிய போது எதிர்பட்ட மூணாவது அறை பாஸ்கர் “என்ன, நைட் ஷோவா?“ என்று கண்களைச் சிமிட்டி வினவியது எரிச்சலை எழுப்பியது. உடை உடுத்தி தயாரான நாழிகையில் அந்தப் பட்டாம்பூச்சி ஜன்னல் வெண்டிலேட்டர் மேல் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க முடிய, மாலை அலுவலகத்திலிருந்து திரும்புவதற்குள் அது நிச்சயம் வெளியே பறந்து விடும் என்று உறுதியாய்த் தோன்றியது. எதற்கும் இருக்கட்டும் என்று ஜன்னலை அகலத் திறந்து, கொக்கியைப் போட்டுவிட்டு கிளம்பினான்.

நாள் முழுவதும் துளி ஓய்வு இல்லாமல் உழைத்துவிட்டு மாலையில் லாட்ஜுக்கு வந்து, பூட்டியிருந்த அறைக் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்து விளக்கை போட்ட நொடியில் அது நாழிகை மறந்திருந்த பட்டாம்பூச்சியின் ஞாபகம் தலைதூக்கியது. சட்டையைக் கூட கழற்றாமல் கண்களை சுழற்றி பார்த்தவரையில் அது தென்படாது போக, சன்னமாக விசிலடித்துக் கொண்டே மின்விசிறியை வேகமாக ஓடவிட்டான். உடைகளைக் கழற்றி, லுங்கி அணிந்து, குளியறைக்குச் சென்று முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தான். ஈரத் துண்டை நாற்காலியின் முதுகில் போட்டுவிட்டு, கண்ணாடிக்கெதிராக நின்று தலைசீவிய போது முதலில் பின்னால் சலனத்தை உணர முடிந்தது. பிறகு கண்ணாடியில் பிரதிபலிக்க பிம்பத்தையும் பார்க்க முடிந்தது. திரும்பினான். அதுவேதான் அந்தப் பழுப்பு பட்டாம்பூச்சியேதான். அன்றிரவும் முந்தின இரவுபோல அல்லாட்டத்தில் முடியுமோ என்கிற பதட்டம் எழ, கையிலிருந்த சீப்பை ஆத்திரத்துடன் பட்டாம்பூச்சியை நோக்கி வீசி எறிந்தான்.

யாரோ மணி அடித்து கூப்பிட்ட மாதிரி வந்து கழுத்தை அறுக்கறதே சனியன்! லாட்ஜ் பையனைக் கூப்பிட்டு அதைத் துரத்தச் சொல்லலாம் என்று எண்ணினான். பத்து நாட்களுக்கு முன் கீழ்தளத்தில் இருக்கும் செந்தில் அறையில் கருந்தேள் ஒன்று எப்படியோ புகுந்து விட்டதும், அதை அடிக்க கூப்பிட்டதற்காக போவோர் வருவோரிடமெல்லாம் “ஒரு ஆம்பிளை, தேளக் கண்டு பயப்பட்டா எப்படி?“ என்று லாட்ஜ் பையன் சொல்லி டபாய்த்ததும் நினைவுக்கு வர, பட்டாம்பூச்சியை துரத்த அழைத்தால், நாளைக்கு பேரை சந்தி சிரிக்கப் பண்ணி விடுவான் என்ற பயம் தோன்ற நினைப்பை மாற்றிக் கொண்டான். எரிச்சல் அடங்காமலேயே விளக்கை அணைத்து, கதவை பூட்டிக் கொண்டு மெஸ்ஸுக்கு சாப்பிடப் போனான். திரும்பி வந்தபோது பிரச்னை இன்னும் கொஞ்சம் சிக்கலாயிருந்தது.

எங்கிருந்தோ அறைக்குள் வந்துவிட்ட சாம்பல் நிறப் பல்லி ஒன்று, பட்டாம்பூச்சிக்குக் குறி வைத்து அதை துரத்திக் கொண்டே நகர, பின்தொடரும் ஆபத்தை உணராமல் பட்டாம்பூச்சி தன் இஷ்டத்துக்கு மடத்தனமாய் சஞ்சரிக்க, அதை வேடிக்கை பார்த்தவாறு கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாமல் அவன், பல்லி பூச்சியை நெருங்க விடாமல் விரட்ட முற்பட்டான். சுவரில் பலமாய் தட்டி பல்லியை பயமுறுத்தினாலும் அது சில நிமிஷங்களுக்கு கட்டிலுக்கு அடியில், கதவில் இருந்த விரிசலில் என்று இண்டு இடுக்கு பார்த்து ஒளிந்து கொண்டிருந்துவிட்டு, மறுபடி ஓசைப்படாமல் வெளிப்பட்டு தன் இரையை தொடருவதிலேயே குறியாய் இருக்க, இவன் அதற்கு மிஞ்சின எச்சரிக்கையுடனும் வேகத்துடனும் செயல்பட வேண்டி வந்தது. இருக்கிற கஷ்டம் போதாது போல சில சந்தர்ப்பங்களில் பல்லி எட்டிப் பிடிக்கிற தொலைவில் வலிய வந்து அந்த முட்டாள் பட்டாம்பூச்சி உட்காருவதை விரட்டிவிடும் வேலையோடு மின்விசிறியை நிறுத்தி, புழுக்கம் அதிகமானால் ஓடவிட்டு, மறுபடி நிறுத்திய அவஸ்தை வேறு சேர்ந்து கொண்டது.

இதனடுவில் பதட்டத்தில் இவன் எழுப்பிய ஓசைகளை கேட்டுவிட்டு, மூடியிருந்த கதவை அடுத்த அறை சுந்தரலிங்கம் தட்டி, ‘என்ன சத்தம், தம்பி? நிம்மதியா தூங்கவிடாம என்னத்த உருட்டிக்கிட்டு இருக்கீங்க? நடு ராத்திரில?“ என்று அதட்டலான விசாரிப்பையும் சமாளிக்க வேண்டி வந்தது. இரவு கழிந்து, பொழுது விடிந்தபோது சொத சொதத்து ஏகத்துக்கு சிவந்து கண்களும், அவைகளைச் சுற்றி கருவளையங்களுமாய் இருந்தவன் அதே கோலத்தில் ஆபீஸுக்குப் போனதும் தலையோடு கால் ஏறிட்ட அதிகாரி சிடுசிடுப்பை மறைக்காமல் கேட்டுவிட்டார். திசஸ்ட் “வாட்ஸ் ராங்? ரொம்ப நல்ல பையன்னு நினைச்சிருந்தேனே?” அவருடைய மாப்பிள்ளை சென்ற ஆண்டு குடி நோயாளியாக மாறி வயிறு வீங்கி, ரத்த வாந்தி எடுத்து இளம் மனைவியையும் பிஞ்சு பிஞ்சாய் இரண்டு குழந்தைகளையும் விட்டுவிட்டு அகாலமாய் செத்திருந்தது, தூசி விழுந்து யாருக்காவது கண்கள் சிவந்து போனால்கூட ‘குடி கேஸ்தான்“ என்கிற தீர்மானத்தில் “நல்ல பையன்னு நினைச்சிருந்தேனே வாட்ஸ் ராங்?“ என்ற கேள்விதான்.

மதியம் ஆவதற்குள் வேலைகளை ஒழுங்காக கவனிக்க முடியாமல் கண்கள் ஓரேடியாய் எரிந்தன. இமைகள் திறக்க மறுத்தன. சிந்தனை தெளிவில்லாமல் கன்னாபின்னா என்று ஓடியது. பீச்சில் காத்தாட உட்கார்ந்து விட்டு, இருட்டிய பிறகு லாட்ஜுக்குத் திரும்பியபோது அவன் ஏகத்துக்கு ஓய்ந்திருந்தான். உள்ளே நுழையவே

தயக்கமாக இருந்தது. மின்விசிறியையோ விளக்கையோ போடாமல் கொஞ்சநேரம் சும்மா உட்கார்ந்தான். பிறகு மெதுவாக எழுந்து விளக்கை ஏற்றிவிட்டு, கூசின கண்களை வெளிச்சத்துக்கு பழக்கி மெதுமெதுவாக அவன் நிமிர்ந்த போது எங்கிருந்தோ பறந்து வந்த பட்டாம்பூச்சி பரிச்சயம் ஆகிவிட்ட தைரியத்தோடு ட்யூப்லைட்டின் விளிம்பிலேயே அமர, விளக்கின் அடிப்பக்கத்தில் சாமர்த்தியமாய் மறைந்திருந்துவிட்டு சரக்கென்று வெளிப்பட்ட சாம்பல் பல்லி, கண்மூடி திறக்கும் அவகாசத்தில் அதை நோக்கி தாவ... முக்கோணமாய், குறுக்கே கோடு கிழித்த அரை உள்ளங்கை சைஸில் தெரிந்த பட்டாம்பூச்சியின் உடம்பில் பாதிப்பகுதி காணாமல் போயிற்று. மரண அவஸ்தையில் துடித்த மிகுதியை, தலையை உதறி நாலு விழுங்கலாய் விழுங்க... எண்ணி சில கணங்கள் நகர்வதற்குள் அந்த பட்டாம்பூச்சி இருந்த சுவடு தெரியாமல் மறைந்தது மாயமாக..

அவன் எதையுமே சிந்திக்க, செய்யத் தோன்றாத மாதிரி செயலிழந்து போனான். உடம்பு விரைத்தது. பிடறியில் வியர்த்தது. அடி உதட்டை நாவால் மெதுவாக ஈரமாக்கி மூச்சை இழுத்து வெளியிட்டான். பின்னர் தலையைக் குனிந்த வண்ணம் கட்டிலை நெருங்கி மெல்ல காலை நீட்டி படுத்துக் கொண்டான். சில நிமிஷங்களில், இன்னும் சாப்பிடாததையோ, விளக்கை அணைக்காமல் இருப்பதையோ குறித்து அலட்டிக் கொள்ளாமல் நிம்மதியாய் உறங்க ஆரம்பித்தான்.

**ஆசிரியரைப் பற்றி**

இவர் தமிழக எழுத்தாளர் ஆவார். இவர் அக்டோபர் 14 ஆம் தேதி 1942 இல் பிறந்தவர். இவர் நாவல், சிறுகதை, பயணக் கட்டுரை, இலக்கியக் கட்டுரை, நேர்காணல், மொழிபெயர்ப்பு எனப் பல தளங்களில் இயங்குகிறார். இவரது முதல் சிறுகதையான ‘அவர்கள் பேசட்டும்’ என்னும் சிறுகதை குழந்தையில்லாத இளம் தம்பதியின் மெல்லிய உணர்வுகளைச் சித்தரிக்கும் கதையாகும், இக்கதை 1968 மே 12 ஆம் நாளிட்ட கல்கி இதழில் பிரசுரமாகியது. இவர் 150 க்கும் மேற்பட்ட சிறுகதைகள் மற்றும் குறுநாவல்கள், 35 நாவல்கள், 13 பயணக் கட்டுரைத் தொகுப்புக்கள், 7 கட்டுரைத் தொகுப்புக்கள், 2 வாழ்க்கைச் சரிதங்கள் எழுதியுள்ளார்

## 10. யானை டாக்டர்

**- ஜெயமோகன்**

ஒரு நீண்ட சிறுகதையில் ஒரு பகுதி மட்டும் இங்கு இடம் பெறுகிறது) அவருடன் சேர்ந்து மிருகங்களை நானும் பழகிக்கொண்டேன். குக்கி யானையின் காலில் மிதித்து ஏறி மத்தகத்திலமர்ந்து காட்டு மரங்களின் கிளைகளினூடாகச் சென்றேன். ஆள் மேலே ஏறியதும் தன் உயரத்தை அந்த ஆளின் உயரத்துடன் சேர்த்துக் கணக்கிட்டுக்கொள்ளும் யானையின் நுட்பத்தை ஒவ்வொரு முறையும் பிரமிக்காமலிருக்க முடியவில்லை. டாக்டர் கே கரடி ஒன்றுக்குக் காலில் கட்டுப் போட்டபோது அந்தக் கால்களைப் பற்றிக் கொண்டேன். மான்களின் சாணிகளை பாலிதீன் பைகளில் சேகரித்து, சாம்பிளுக்குக் கொண்டு வந்தேன். ஒரே மாதத்தில் புழுக்கள் பூச்சிகளின் கைக்குழந்தைகள் என்று காண என் கண்ணும் பழகிவிட்டது.

குண்டு குண்டாக மென்மையாக புசுபுசுவென்று ஆவேசமாகத் தின்றுகொண்டு நெளிந்து கொண்டிருக்கும் புழுக்களில் தெரியும் உயிரின் ஆவேசத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது மனம் மலைப்புறும். வெண்ணிறமான தழல்துளிகளா அவை? அறிய முடியாத மகத்துவம் ஒன்றால் அணுவிடை வெளி மிச்சமில்லாமல் நிறைக்கப்பட்டது இப்பிரபஞ்சம் என்று அப்போது தோன்றி புல்லரித்துவிடும். உண் என்ற ஒற்றை ஆணை மட்டுமே கொண்ட உயிர். அந்தத் துளிக்கு உள்ளே இருக்கின்றன சிறகுகள், முட்டைகள். ஒவ்வொரு கணமும் உருவாகும் ஆபத்துகளை வென்று மேலெழுந்து அழியாமல் வாழும் கற்பனைக்கெட்டாத கூட்டுப்பிரக்ஞை. பூச்சிகளுடன் மனிதன் மோதக்கூடாது என்ற டாக்டர். கே சொல்வார். மனிதன் செய்யும் பெரிய பிழை என்னவென்றால் பூச்சிகளை அவன் தனித்தனியாகப் பார்த்துத் தன்னுடன் ஒப்பிட்டுக் கொள்கிறான். பூச்சிகள் ஒட்டுமொத்தமான அறிவும் உணர்வும் கொண்டவை. கோடானுகோடி பூச்சிகள். நாள்தோறும் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும் மாபெரும் திரள் அது. அப்படிப் பார்த்தால் அவை மனிதத் திரளைவிடப் பற்பல மடங்கு பெரியவை. மனிதனின் பூச்சிக்கொல்லியுடன் மோதுவது தனிப்பூச்சி அல்ல, ஒரு பூச்சிப்பெருவெளி. அவற்றின் சாரமாக உள்ள அதிபிரம்மாண்டமான பூச்சிமனம். அது அந்தப் பூச்சிக் கொல்லியைச் சில மாதங்களில் சாதாரணமாக வென்று செல்லும்.

ஒரு வெண்புழுவைக் கையில் எடுத்துக்கொள்வேன். அது நெளிந்து நெளிந்து மென்மையாக மேலேறும்போது கையில் ஒரு கைக்குழந்தையை எடுத்துக்கொள்ளும் அதே முரண்பட்ட மனஎழுச்சி உருவாகும். மிக மென்மையான மிக எளிய ஓர் உயிர். ஆனால் முடிவற்ற சாத்தியங்களும் மகத்தான ஆற்றலும் உள்ளே உறங்குவது அதிபிரம்மாண்டமான ஒன்றின் பிரதிநிதி. சிலசமயம் புழுவை உதட்டருகே கொண்டு வந்து அதன் கண்களைப் பார்ப்பேன். உணவைத்தவிர எதையுமே பார்க்கத் தேவையற்ற கண்கள். ஆனால் அதற்கு என்னைத் தெரியும் என்று தோன்றும். அது ஒரு சிறிய மின்னணுக்கண். அதன்வழியாகப் பூச்சிப்பெருவெளி என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதை நோக்கிப் புன்னகை செய்வேன். ஆம், ஒருவேளை நீ என்னையும் தின்று வளரக்கூடும். பரவாயில்லை. மண்மீது நானும் நீயும் ஒன்றுதான். செல்லக்குட்டி… பூக்குட்டி என்று கொஞ்ச வேண்டும் போலிருக்கும். டாக்டர் க இலக்கியங்களில் அபாரமான ஈடுபாடு கொண்டவர். தேடி வரும் ஒரு ஆதிவாசிக் கிழவியைக்கூட ஏமாற்றம் கொள்ளச் செய்யாத, ஒரு மிருகத்தின் சிகிச்சையைக்கூட மறுநாளைக்கு ஒத்திப்போடாத கடுமையான அன்றாட வேலைகளுக்கு நடுவே அவர் உலகின் முக்கியமான அறிவியலிதழ்களில் உலக அறிவியல் சமூகமே கொண்டாடும் ஆய்வுக்கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தார். அக்கட்டுரைகள் அடங்கிய இதழ்கள் அவரது மர அலமாரியில் சீராக அடுக்கப்பட்டிருக்கும். அந்த இதழ்களின் மற்ற கட்டுரைகள் புரியாத அறிவியல் நெடியுடன் இருக்க டாக்டர் கே எழுதிய கட்டுரை மட்டும் உற்சாகமான கச்சித நடையில் மெல்லிய நகைச்சுவையுடன் அழகிய கவிதை மேற்கோள்களுடன் இருக்கும். அவருக்குப் பிடித்தமான கவிஞர் லார்ட் பைரன். ஒருமுறை காட்டுக்குள் நானும் அவரும் சென்றுகொண்டிருந்த போது டாக்டர் கே கைகளை ஆட்டினார். ஜீப் நின்றது. அவர் சத்தமின்றிச் சுட்டிக்காட்டிய இடத்தில் புதருக்குள் ஒரு செந்நாயின் காதுகள் தெரிந்தன.

அது எங்களை வேவுபார்ப்பதை உணர்ந்தேன். அவர் இன்னொரு இடத்தைச் சுட்டிக்காட்டினார். அங்கே இன்னொரு செந்நாய் தெரிந்தது. சில நிமிடங்களில் அந்தக் காட்சி தெளிவாகியது. ஆறு செந்நாய்கள் ஆறு திசைகளிலாக மையத்தில் இருப்பதைக் காவல்காத்து நின்றன. ‘அங்கே அவர்களின் தலைவன் அல்லது குட்டிபோட்ட தாய் நகர முடியாமல் கிடக்கிறது“ என்றார் டாக்டர் கே. ஆங்கிலத்தில். கண்களை அங்கேயே நாட்டியபடி மிக மெல்லிய முணுமுணுப்பாக “இங்கேயே இருங்கள். அசைய வேண்டாம். கைகளைத் தூக்கக்கூடாது. நான் மட்டும் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்“ என்றார். நான் பதற்றத்துடன் ‘தனியாகவா?’ என்றேன். “இல்ல, அதுங்களுக்கு என்னைத் தெரியும்.

“இல்ல டாக்டர், ப்ளீஸ், செந்நாய்கள் ரொம்ப ஆபத்தானவைன்னு சொன்னாங்க“ “கண்டிப்பா ஆபத்தானவைதான்... பட்...“ திரும்ப “திஸ் இஸ் மை ட்யூட்டி“ என்றபின் மெல்லக் கதவைத் திறந்து இறங்கி அந்தச் செந்நாய்களை நோக்கி சென்றார்.

என் வழியாக ஒரு குளிர்ந்த காற்று கடந்து சென்றது. கைகளால் மெல்ல என் பைக்குள் இருந்த சிறிய துப்பாக்கியைத் தொட்டேன். அதன் குளிர் ஆறுதலை அளித்தது. டாக்டர் மேடேறி அந்த நாய்களின் அருகே சென்றார். புதருக்குள் இருந்து முதல் நாய் தலைதூக்கிக் காதுகளை முன்னால் மடித்து அவரைப் பார்த்தது. அவர் நெருங்க நெருங்கத் தலையைக் கீழே கொண்டுவந்து மூக்கை நன்றாக நீட்டி அவரைக் கவனித்தது. மற்ற நாய்கள் இருபக்கமும் சத்தமே இல்லாமல் அவரை நோக்கி வருவதைக் கண்டேன். சில நிமிடங்களில் அவர் அந்த ஆறு நாய்களாலும் முழுமையாகச் சூழப்பட்டுவிட்டார். டாக்டர் கே முதல் செந்நாயின் அருகே சென்று அசையாமல் நின்றார். சில நிமிடங்கள் அந்த நாயும் அவரும் ஒரு மௌனமான பிரார்த்தனை போல அப்படியே நின்றார்கள். பின் அந்த நாய் நன்றாக உடலைத் தாழ்த்திக் கிட்டத்தட்ட தவழ்ந்து அவர் அருகே வந்தது. முகத்தை மட்டும் நீட்டி அவரை முகர்ந்தது. சட்டென்று பின்னால் சென்றபின் மீண்டும் வந்து முகர்ந்தது. “ஹுஹுஹு“ என்று ஏதோ சொன்னது. புதர்களுக்குள் நின்ற மற்ற நாய்கள் நன்றாக நிமிர்ந்து தலைதூக்கி நின்றன.

முதல் நாய் அவர் அருகே நெருங்கி அவரது பூட்ஸ்களை நக்கியது. பின் அது அவர்மேல் காலைத்தூக்கி வைத்து அவர் கையை முகர்ந்தது. அதன் உடல்மொழி மாறுவதைக் கண்டேன். நம்மை வரவேற்கும் வளர்ப்புநாய்போல அது வளைந்து, நெளிந்து, உடலைக்குழைத்து வாலைச் சுழற்றியது. அவரைப் பார்த்துக் கொண்டு வாலாட்டியபடியே பக்கவாட்டில் நடந்து சென்றபின் துள்ளி ஓடிக் கொஞ்சதூரம் போய், காதைப் பின்னால் தழைத்துக் கொண்டு நான்குகால் பாய்ச்சலில் அவர் அருகே ஓடி வந்து நின்று, மீண்டும் முன்னால் துள்ளி ஓடியது. அவரை ஒரு விசேஷ விருந்தாளியாக அது நினைப்பது தெரிந்தது. அவர் வந்ததில் அதற்குத் தலைகால் புரியாத சந்தோஷம் என்று தெரிந்தது. அந்த கௌரவத்தை எப்படிக் கொண்டாடுவதென்று அதற்குப் புரியவில்லை.

மற்ற நாய்களும் வாலைச் சுழற்றுவது புதர்களின் அசைவாகத் தெரிந்தது. பின் ஒரு நாய், முதல் நாய் நின்ற இடத்தை எடுத்துக்கொள்ளப் பிற நான்கும் அவற்றின் பழைய இடத்துக்குச் சென்றன. டாக்டர் கே புதர்களுக்குள் குனிந்து எதையோ பார்ப்பது தெரிந்தது. பின் அவர் அமர்ந்துகொண்டார். அங்கே அந்த நாய் “குவ் குவ் குவ்“ என்று

நாய்க்குட்டி போல ஏதோ சொல்வது மட்டும் கேட்டது. அரைமணி நேரம் கழித்து பாக்டர் கே திரும்பி வந்தார். காரில் ஏறிக்கொண்டு "போலாம்" என்றார். 'என்ன சார்?" என்றேன். "அங்க அவங்க தலைவன் அடிபட்டுக் கெடக்கறான்" என்றார். "என்ன அடி?" சிறுத்தைன்னு நெனைக்கறேன். வலதுகால் சதை பேந்து போயிருக்கு. எலும்பும் முறிஞ்சிருக்கலாம்..." "நாம என்ன பண்றது?" என்றேன். "ஒண்ணுமே பண்ண வேண்டாம். அது அவங்களோட வாழ்க்கை, அவங்க உலகம்... நாம் பாக்க வேண்டியது ரெண்டுமூணு விஷயம்தான். அந்த நாயை யாராவது மனுஷங்க ஏதாவது பண்ணியிருக்காங்களாங்கிறது முதல்ல. அப்டீன்னா குற்றவாளியக் கண்டுபுடிச்சுத் தண்டிக்கணும். ரெண்டு, வழக்கமா இல்லாத ஏதாவது தொற்றுநோய் இருக்கான்னு பாக்கணும். இருக்குன்னா உடனடியா நடவடிக்கை எடுக்கணும்..." ஆ நான் "அப்டியே விட்டுட்டு போறதா, "அது செத்துட்டா?" என்றேன். "சாகாது... ஆனா அந்த நாய் இனிமே தலைவன் இல்லை. அனேகமா என்னைக் கூட்டிண்டுபோச்சே அவன்தான் இனிமே தலைவன்..." "நாம ஏதாவது மருந்து போட்டா என்ன?' 'என்ன மருந்து? நம்மளோட வழக்கமான ஆண்டிபயாட்டிக்குகளா? காட்டுமிருகங்களோட ரெஸிஸ்டென்ஸ் என்ன தெரியுமா? இந்த மருந்துகளைக் குடுத்து பழக்கினா அப்றம் காட்டுக்குள்ளயும் ஊரைமாதிரி மூணு கிலோமீட்டருக்கு ஒண்ணுன்னு ஆரம்ப சுகாதார நிலையம் தெறக்க வேண்டியதுதான்".

நான் பெருமூச்சுடன் "அந்த நாய் உங்கள அடையாளம் கண்டது அமேஸிங்கா இருந்தது..." என்றேன். "நாய்னா என்னன்னு நினைச்சே? சச் எ டிவைன் அனிமல்... மனிஷன் என்னமோ அவன் பெரிய புடுங்கின்னு நினைக்கிறான். மிருகங்களுக்கு ஆத்மா கெடையாது' பகுத்தறிவு கெடையாது. அவனோட எச்சப்புத்தியிலே ஒரு சொர்க்கத்தையும் கடவுளையும் உண்டு பண்ணி வச்சிருக்கானே, அதில மிருகங்களுக்கு எடம் கெடையாதாம். நான்ஸென்ஸ்...' டாக்டர் கே முகம் சிவந்தார். பைரன் கவிதை ஒண்ணு இருக்கு. "ஒரு நாயின் கல்லறையில் எழுதப்பட்ட வாசகம்" படிச்சிருக்கியா? "இல்லை" என்றேன். அவர் காட்டையே சிவந்த முகத்துடன் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டுத் திடீரென்று மந்திர உச்சாடனம் போலச் சொல்ல ஆரம்பித்தார். 'When some proud son of man returns to earth. Unknown to glory. but upheld by birth..." நான் அந்த அவ்வரிகளை அவரது முகமாகவே எப்போதும் நினைத்துக் கொள்வேன். ஆனால் நாய் வாழ்க்கையில் உன்னத நண்பன் வரவேற்பதில் முதல்வன்! பாதுகாப்பதில் முந்துபவன்! அவன் நேர்மை நெஞ்சம் உரிமையாளனுக்கே சொந்தம், அவனுக்காகவே உழைக்கிறான் உண்டு உயிர்க்கிறான்! அந்த வரிகளை நான் டாக்டர் கேயின் வாழ்க்கைப் பிரகடனமாகவே

பலமுறை நினைத்துக் கொண்டதுண்டு. நட்பு மட்டுமே ஆன்மாவாக மாறி நிறைந்து ஒளிரும் கண்களுடன் நட்பேயான வாலுடன் குரைப்புடன் நட்பேயான நட்பேயான காதுகளுடன் நட்பேயான அதனருகேநோக்கி எதற்காகஞ்சேல் குளிர்நாசியுடன் என் கண் முன்னால் ஒரு நாய் நின்றது. நான் உனக்கு என்றது. நீயே நான் என்றது.

நீ என்னை நம்பலாம், எந்த இறைவனுக்கும் நிகராக“ என்றது. “ஏனென்றால் இறையெனப்படுவது ஒன்று உண்டென்றால் அது ததும்பிச் சொட்டிய ஒரு துளியே நான்!“. சற்றும் கவனிக்காமல் தொடுவானை ஏங்கிக்கொண்டு ஓர் மானுட அற்பன் நான். வாழ்நாளெல்லாம் தேடிக் நின்றிருந்தான். அவன் கொண்டிருந்தவன் அதிகாரத்தை, இன்பத்தை, அடையாளங்களை.. அதற்கான சதுரங்கங்கள், அதற்கான அணிவகுப்புகள், அதற்கான புன்னகைகள், அதற்கான அர்த்தமற்ற ஆயிரம் சொற்கள். 'Man Vain insect!' என்ற பைரனின் கர்ஜனையை நான் அன்று அந்தக் காட்டில் டாக்டர் கேயின் செக்கச்சிவந்த தணல்முகத்தில் இருந்து கேட்டேன். இடிமுரசுகள் அதிர வானமே சுட்டுவிரல் நீண்டி மனிதனை நோக்கிச் சொன்னது. “உனது அன்பு ஆசை மட்டுமே. உனது நட்போ ஏமாற்று. உனது புன்னகை போலி, உனது சொற்கள் வெறும் மோசடி“.

என் மனம் நெகிழ்ந்து கண்கள் நிறைந்தன. நான் என்ற நினைப்பே என்னைக் கூசச் செய்தது. என் உடம்பே அழுக்குபட்டு நாறிக் கொண்டிருப்பது போலிருந்தது. அழுக்குச்சட்டையைக் கழற்றி வீசுவதுபோல என்னை உதறிவிட்டு நான்குகால்களுடன் அந்த அதிதூய பசுமைவெளியில் பாய்ந்து செல்ல வேண்டும். இந்தக் காற்றும் இந்த வெயிலும் என்னை அன்னியமென ஒதுக்காமல் அணைத்துக்கொள்ளும். அங்கே வலி உண்டு. நோய் உண்டு. மரணம் உண்டு. ஆனால் கீழ்மை இல்லை. ஒரு துளிகூடக் கீழ்மை இல்லை. “உன்னை நன்கறிந்த எவரும் அருவெறுத்து விலகுவர். உயிர் கொண்ட கீழ்த்தரப் புழுதியே நீ விசும்பி அழுதபடி நான் ஜீப்பை நிறுத்திவிட்டேன். டாக்டர் கே என்னைத் திரும்பிப் பார்க்காமல் உறைந்த தழல்போல அப்படியே அசையாமல் அமர்ந்திருந்தார்.

மனிதனின் கீழ்மைகளை ஒவ்வொரு நாளும் முகத்திலறைந்தது போலப் பார்க்கவேண்டும் என்றால் நீங்கள் காட்டில் இருக்க வேண்டும். அனேகமாக இங்கே சுற்றுப்பயணம் வருபவர்கள் படித்தவர்கள், பதவிகளில் இருப்பவர்கள். ஊரில் இருந்தே வறுத்த, பொரித்த உணவுகளுடனும் மதுக்குப்பிகளுடனும்தான் வருவார்கள். வரும் வழிதோறும் குடித்துக்கொண்டும், தின்றுகொண்டும் இருப்பார்கள். வாந்தி எடுப்பார்கள்.

மலைச்சரிவுகளின் மௌனவெளியைக் காரின் ஆரனை அடித்துக் கிழிப்பார்கள். முடிந்தவரை உச்சமாக கார் ஸ்டீரியோவை அலறவிட்டுக் குதித்து நடனமிடுவார்கள். ஓங்கிய மலைச்சரிவுகளை

நோக்கிக் கெட்ட வார்த்தைகளைக் கூவுவார்கள். ஒவ்வொரு காட்டுயிரையும் அவர்கள் அவமதிப்பார்கள். சாலை ஓரத்துக் குரங்குகளுக்குக் கொய்யாப் பழத்தைப் பிளந்து உள்ளே மிளகாய்ப்பொடியை நிரப்பிக் கொடுப்பார்கள். மான்களை நோக்கிக் கற்களை விட்டெறிவார்கள். யானை குறுக்கே வந்தால் காரின் ஆரனை உரக்க அடித்து அதை அச்சுறுத்துவார்கள். என்னால் எத்தனை யோசித்தாலும் புரிந்துகொள்ள முடியாத விஷயம் காலி மதுக்குப்பிகளை ஏன் அத்தனை வெறியுடன் காட்டுக்குள் வீசி எறிகிறார்கள் என்பது. வண்டிகளை நிறுத்திச் சோதனையிட்டு மதுக்குப்பியுடன் இருப்பவர்களை இறக்கி பெல்ட்டைக் கழற்றி வெறியுடன் ரத்தம் சிதற அடித்திருக்கிறேன். ஜட்டியுடன் கடும்குளிரில் அலுவலகம் முன்னால் அமரச் செய்திருக்கிறேன். ஆனாலும் காட்டுச்சாலையின் இருபக்கமும் குப்பிச்சில்லுகள் குவிவதைத் தடுக்கவே முடிவதில்லை.

மற்ற எந்த மிருகத்தைவிடவும் யானைக்கு மிக அபாயகரமானது அந்தக் குப்பி உடைசல். யானையின் அடிக்கால் ஒரு மணல்மூட்டை போன்றது. குப்பிகள் அனேகமாக மரத்தில் மோதி உடைந்து மரத்தடியிலேயே கிடக்கும். யானை அதன் மகத்தான எடையுடன் அதன்மேல் காலை வைத்தால் குப்பி நேராக அதன் பாதங்களுக்குள் முழுக்கப் புகுந்துவிடும். இருமுறை அது காலைத் தூக்கி வைத்தால் நன்றாக உள்ளே செல்லும். அதன் பின்னால் யானை நடக்க முடியாது. இரண்டே நாட்களில் காயம் சீழ் வைக்கும். புழுக்கள் உள்ளே நுழையும். புழுக்கள் சதையைத் துளைத்து, சீழை உள்ளே கொண்டு செல்லும். முக்கியமான குருதிப் பாதைகளையோ எலும்பையோ அவை தொட்டுவிட்டதென்றால் அதன்பின் யானை உயிருடன் எஞ்சாது. வீங்கிப் பெருத்துச் சீழ் வடியும் கால்களுடன் பலநாட்கள் யானை காட்டில் அலையும். ஒரு கட்டத்தில் நடமாட முடியாமலாகும்போது ஏதாவது மரத்தில் சாய்ந்து நின்றுவிடும்.

ஒருநாளில் முப்பது லிட்டர் தண்ணீர் குடித்து இருநூறு கிலோ உணவு உண்டு ஐம்பது கிலோமீட்டர் நடந்து வாழவேண்டிய உயிர் அப்படி ஐந்து நாட்கள் நின்றால் மெலிந்து உருக்குலைந்துவிடும். முதுகு எலும்பு மேலே துருத்தும். கன்ன எலும்புகள் புடைத்தெழும். காது அசைவது குறையும். மத்தகம் தாழ்ந்து தாழ்ந்து வரும். மெல்ல துதிக்கையைத் தரையில் ஊன்றி, குப்புறச் சரிந்து நிற்கும். பின் மத்தகமே தரையில்

ஊன்றும். அடுத்தநாள் பக்கவாட்டில் சரிந்து வயிறு பாறைபோல மறுபுறம் எழுந்து நிற்க விழுந்து கிடக்கும். வாலும் துதிக்கையும் மட்டும் சுழல, கண்களை மூடித் திறந்தபடி நடுங்கிக் கொண்டிருக்கும். பிற யானைகள் அதைச் சூழ்ந்து நின்று தலையாட்டிப் பிளிறிக் கொண்டிருக்கும். அதன்பின் யானை சாகும். கடைசித் துதிக்கை அசைவும் நின்ற பின்னரும்கூடப் பலநாள் யானைக்கூட்டம் சுற்றி நின்று கதறிக் கொண்டிருக்கும். பின்னர் அவை அதை அப்படியே கைவிட்டுப் பல கிலோமீட்டர் தள்ளி முற்றிலும் புதிய இன்னொரு இடம் நோக்கிச் சென்றுவிடும். யானையின் தோலின் கனம் காரணமாகச் சடலம் அழுகாமல் இந்தக் காட்டில் எந்த மிருகமும் அதைச் சாப்பிட முடியாது. அழுகிய யானையைச் செந்நாய்கள் முதலில் தேடிவந்து வாயையும் குதத்தையும் மட்டும் கிழித்து உண்ணும். பின்னர் கழுகுகள் இறங்கி அமரும். கழுதைப்புலிகள் கூட்டம் கூட்டமாக வெகுதொலைவிலிருந்து தேடிவரும். மனிதனைவிட நூற்றிஎழுபது மடங்கு அதிக நியூரான்கள் கொண்ட மூளை உடைய காட்டின் பேரரசன் வெறும் வெள்ளெலும்புகளாக மண்ணில் எஞ்சுவான்.

ஒருமுறை முதுமலையில் ஒரு யானைக்குக் கால்வீங்கி அது காட்டில் அலைவதாகத் தகவல் வந்தபோது டாக்டர் கேயுடன் நானும் சென்றேன். காட்டுக்குள் அந்த யானை இருக்குமிடத்தை குறும்பர்கள் ஏற்கனவே கண்டு வைத்திருந்தார்கள். அவர்களை ஏற்றிக்கொண்டு ஒரு ஜீப்பில் காட்டுக்குள் நுழைந்தோம். அதுவும் பழங்காலக் குதிரைப்பாதைதான். நெடுந்தூரம் சென்றபின் ஜீப்பை நிறுத்திவிட்டு நானும் டாக்டரும் காட்டுக்குள் சரிவிறங்கிச் சென்றோம். துப்பாக்கியுடன் இரு வனக்காவலர்களும் மற்ற பொருட்களுடன் இரு குறும்பர்களும் கூட வந்தார்கள். உடலை அறுக்கும் வேய்மூங்கில் இலைகளை அகற்றி டாக்டர் கே முன்னால் சென்று கொண்டே இருந்தார். தரையில் வேர்முடிச்சுகள் காலைத் தடுக்கின. நான் மரங்களைப் பற்றிக்கொண்டு நடந்தேன். எழுபதை நெருங்கினாலும் டாக்டர் கே மிகக் கச்சிதமான உடல் கொண்டவர்.

காடு அவருக்கு மீனுக்குக் கடல்போல. கொஞ்சநேரத்தில் காற்றில் யானைகளின் நெடி மெலிதாக வர ஆரம்பித்தது. யானைகள் ஏற்கெனவே எங்களைக் கவனித்துவிட்டன என்று தெரிந்தது. மெல்லிய யானை உறுமல்கள் கேட்டன. இன்னும் கொஞ்சம் இறங்கிச் சென்றபோது இருபக்கமும் மூங்கில்பத்தைகள் பரவிய ஓடை ஒன்றுக்கு அப்பால் பச்சைநிறமாக வெயில் தேங்கி நின்ற புல்வெளியில் பன்னிரண்டு யானைகள் கூட்டமாக நிற்பதைக் கண்டோம். இன்னும்கூட யானைகள் இருக்கலாமென்று நினைத்துக் கண்களை ஓட்டியபோது மேலும் ஆறு யானைகள் மூங்கில் புதர்களுக்குள் மேய்ந்துகொண்டு நிற்பது

தெரிந்தது. அங்கே நான்கு குட்டிகள் நிற்பது மேலும் கூர்ந்து நோக்கியபோது தெரிந்தது. டாக்டர் கே தன் கருவிகளை எடுத்துப் பொருத்திக் கொண்டார். சிறிய ஏர்கன் போன்ற ஒன்று. அதில் மாத்திரையே குண்டாக இருக்கும். யானையைக் கூர்ந்து தொலைநோக்கியால் கவனித்தார். அதன் எடையை அவதானிக்கிறார் என்று தெரிந்தது. எடைக்கு ஏற்பத்தான் அந்த யானைக்கான மயக்கமருந்து அளவைத் தீர்மானிக்க முடியும்.

அவர் முழுமையாகத் தனக்குள் மூழ்கி வேலைசெய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கருவிகளைப் பொருத்திக் கையில் எடுத்துக் கொண்டதும் "நீங்க இங்க இருங்க... நான் போய் பாக்கறேன்" என்றார். அவரிடம் எதுவும் சொல்லமுடியாதென்று ஏற்கனவே நன்றாக அறிந்திருந்தேன். "அது பெரிய மரத்தடி பக்கத்திலே நின்னிட்டிருக்கு. கீழே விழுந்தா அடிபட்டிரும். அதக் கொஞ்சம் சதுப்புக்குக் கொண்டு வரணும். மத்த யானைகளுக்கு நான் என்ன செய்யப்போறேன்னு தெரியாது. அதனால அதுங்க ரெஸிஸ்ட் பண்ணும்" என்றார். "யானைகளுக்குத் தெரியுமா, இந்தக் காயத்துக்குக் காரணம் மனுஷங்கதான்னு" "கண்டிப்பா... ரொம்ப நன்னா தெரியும்' "அப்ப என்ன பண்றது?" என்றேன். "பார்ப்போம்" என்றார். டாக்டர் கே மெதுவாகக் கீழே இறங்கி ஓடையைக் கடந்து சேற்றுப் பரப்பில் இறங்கினார். யானைகள் அழுந்த நடந்து உருவான குழிகள் கால் உள்ளே போகுமளவுக்கு ஆழமாக, நெருக்கமாகப் படிந்திருந்தன. அவற்றின் விளிம்புகளில் கால் வைத்து மெதுவாக அவற்றை நெருங்கினார். யானைகளின் நடுவே நின்ற பெரிய பிடியானை உரக்க உறுமியது. அதைக்கேட்டு மற்ற யானைகளும் பிளிறின. ஒரு யானை டாக்டர் கேயை நோக்கித் திரும்பியது. அதன் காதுகள் வேகமாக அசைந்தன. தலையை வேகமாகக் குலுக்கியபடி டாக்டரை நோக்கி வந்தது.

டாக்டர் கே அசையாமல் நின்றார். அது மேலும் தலையைக் குலுக்கி எச்சரிக்கை விடுப்பது போல உறுமிக்கொண்டு இன்னும் இரண்டடி முன்னால் வந்தது. யானை தலையைக் குலுக்கினால் அது எச்சரிக்கிறது, தாக்குவேன் என்கிறது என்றுதான் அர்த்தம். என் இதயத்துடிப்பைக் காதுகளில் கேட்டேன். எழுந்து ஓடி டாக்டரிடம் சென்று அவர் அருகே நின்றுகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டேன். என் கண்ணெதிரே டாக்டரை யானை சிதைத்துப்போட அதைப்பார்த்தபடி சும்மா இருந்தால், அவரது சடலத்தைச் சுமந்தபடி திரும்பிச்செல்ல நேர்ந்தால், நான் என்னை ஒருபோதும் மன்னிக்கப்போவதில்லை. ஆனால் என்னால் அசைய முடியவில்லை. என் நாக்கு வறண்டு உள்ளே இழுத்துக்கொண்டு வாய் காலியாக இருப்பதைப்போல் இருந்தது.

டாக்டர் கே அசையாமல் சில நிமிடங்கள் நின்றார். யானையும் அசையாமல் நின்றது. பிற யானைகள் மொத்தமும் உடலால் அவரைக் கவனிக்கின்றன என்று தோன்றியது. டாக்டர் கே மேலும் முன்னே சென்றார். இப்போது அந்த யானை நெருங்கி வந்தது. ஆனால் தலையைக் குலுக்கவில்லை. மத்தகத்தை நன்றாகத் தாழ்த்தியது. அதுவும் எச்சரிக்கை அடையாளம்தான். டாக்டர் கே சீராக அதைநோக்கிச் சென்று அதன் முன் நின்றார். அது பேசாமல் நின்றது. நெடுநேரம் என்ன நடக்கிறதென்றே தெரியவில்லை. பலமணிநேரம் ஆகிவிட்டதென்று தோன்றியது. யானை என்ன நடந்தது என்றே தெரியவில்லை. அந்த பின்வாங்கியது. பெரிய பிடியானை திரும்பி டாக்டர் கே யைப் பார்த்து உறுமியபின் வாலைச் சுழற்றி வைத்துக்கொண்டது. பின்பு ஒவ்வொரு யானையாக மேலே ஏறி மறுபக்க மலைச்சரிவில் மூங்கில் கூட்டங்களுக்குள் சென்றன. கடைசி யானையின் வால்சுழற்சியும் பச்சை இலைகளுக்குள் மறைவது வரை நம்பமுடியாமல் நான் பார்த்து நின்றேன். டாக்டர் கையைத் தூக்கி எங்களிடம் வரும்படி சைகை காட்டினார். நானும் பிறரும் ஓடைக்குள் இறங்கிச் சென்றோம்.

எங்களைக் கண்டதும் காயம்பட்ட யானை கோபத்துடன் தலையைக் குலுக்கி முன்னால் வர முயன்றது. பின்பு மெல்லப் பிளிறிவிட்டு அங்கேயே நின்றது. டாக்டர் எங்களை மேலும் அருகே வரச்சொன்னார். வனக்காவலர்கள் நின்று விட்டார்கள். நானும் குறும்பர்களும் மட்டும் முன்னால் சென்றோம். யானை சட்டென்று சாய்ந்திருந்த மரம் அதிர நிமிர்ந்து எங்களை நோக்கி வந்தது. அதன் பின்னங்கால் வீங்கி மற்ற கால்களைவிட இருமடங்காக இருந்தது. ஆசை அதைக் கிட்டத்தட்ட இழுத்துத்தான் அது முன்னகர முடிந்தது. அது நாலடி முன்னால் வந்ததும் டாக்டர் அதைச் சுட்டார். மாத்திரை அதன் தோளுக்கு மேல் பதமான சதையில் புதைந்தது. யானை உடல் அதிர்ந்து அப்படியே நின்றது. காதுகளை அசைப்பது நின்றது. பின்பு வேகமாக அசைக்க ஆரம்பித்தது. அந்த அசைவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. முன்காலைக் கொஞ்சம் வளைத்து ஆடியது. சட்டென்று பக்கவாட்டில் விழுந்து சேற்றை அறைந்து புல்மேல் சாய்ந்தது. துதிக்கை புல்மேல் ஒரு தனி விலங்கு போலப் புரண்டது. துதிக்கையின் நுனி மட்டும் தூக்கி சிறிய நாசிக்குமிழ் அசைய எங்களை வாசம் பிடித்தபின் யானை அசைவிழந்தது.

டாக்டர் கே யானையின் அருகே அமர்ந்து சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினார். நான் அவருக்கு உதவினேன். எங்களைச் சுற்றி மூங்கில் காடுகளுக்குள் யானைகள் எங்களையே கூர்ந்து நோக்கிக் கொண்டு நிற்பதை உணர்ந்தேன். என் முதுகு மேல் குளிர்ந்த பனிக்காற்று போல அவற்றின் பார்வையை அறிந்தேன். ஏதாவது ஒரு

கணத்தில் அந்த யானைகளுக்கு நாங்கள் தவறாக ஏதோ செய்கிறோம் என்று தோன்றினால் என்ன ஆகும்? யானையின் காலில் பாதி பீர்புட்டி ஒன்று முழுமையாக உள்ளே ஏறியிருந்தது. அதைச் சுற்றி சீழ் கட்டி, சீழில் புழு வைத்து சிறுதேன்கூடு போலப் பொருக்கோடியிருந்தது. கத்தியால் பாக்டர் கே அந்தப் பொருக்கை வெட்டியதும் பெரிய தயிர்க்கலயம் உடைந்தது போலச் சீழ் வெளியே கொட்டியது. தேன்கூடு போலச் சிறிய துளையறைகளுக்குள் வெண்புழுக்கள் நெளிந்தன.

டாக்டர் அந்தச் சீழ்பட்ட சதையை முழுக்கச் சிறிய கோடாலி போன்ற கருவியால் வெட்டி எடுத்தார். புழுக்கள் என் கைகளில் ஏறின. அவற்றைச் சுண்டி எறிந்தேன். மொத்தச் சீழையும் வெட்டி வீசியபின் பீர்க்குப்பி ஆழப்பதிந்திருந்த சதையைக் கத்தியால் அறுத்து எடுத்து வீசிக்காயத்தை நன்றாக விரித்துப் புட்டியை உருவி எடுத்தார். ஆச்சரியமாக இருந்தது. கிட்டத்தட்ட என் கையளவு பெரிய புட்டி "ஒருவாரம் கூட ஆகலை, பொழைச்சுது" என்றார் டாக்டர் கே. புட்டியை உருவியதும் மேலும் சீழ் கொட்ட ஆரம்பித்தது. அந்தப்பகுதிச் சதையை முழுக்க வெட்டி, சீவி எடுத்து வெளியே கொட்டினார். சீழ்வாடை குறைந்து குருதிவாடை எழ ஆரம்பித்தது. குருதி ஊறி சிவப்பாகப் புண்ணை நனைத்து வ ழிந்து பின் குமிழியிட ஆரம்பித்ததும் தலையணை அளவுக்கு பஞ்சை எடுத்து அதில் மருந்தை நனைத்து உள்ளே திணித்து இறுக்கி வைத்துப் பெரிய பேண்டேஜ் நாடாவால் சுற்றிக்கட்டினார். அதன் பசை இறுக்கமாக ஒட்டிக்கொண்டது. அதன் காலின் கூடாரத்துணிபோன்ற தோலின்மீது சிறிய எவர்சில்வர் கிளிப்புகளைக் குத்தி இறுக்கி அதனுடன் பேண்டேஜை சேர்த்து ஒட்டிக்கட்டி இறுக்கி முடித்தார். அதன் மேல் கீழே கிடந்த கரிய சேற்றை அள்ளி நன்றாகப் பூசி மூடினார்.

யானையின் காதில் அதைத் திரும்பவும் கண்டுபிடிப்பதற்கான சிக்னல் கம்மலைக் குத்தி அணிவித்து விட்டு எழுந்தோம். எங்கள் உடைகளும் கைகளும் முழுக்க ரத்தமும், சீழுமாக இருந்தது. புழுக்களை உதறிவிட்டுப் பொருட்களைச் சேகரித்துக் கொண்டு கிளம்பினோம். திரும்ப வந்து ஓடையில் கைகளைக் கழுவிக் கொண்டிருந்தபோது பிளிறல் ஒலியுடன் யானைகள் ஒவ்வொன்றாக இறங்கி வந்து அந்த யானையைச் சூழ்ந்து கொண்டன. அந்த யானைப்பாட்டி கீழே கிடந்த யானையின் காலில் பெரிதாகத் தெரிந்த பாண்டேஜைத் துதிக்கையால் தடவிப் பரிசோதனை செய்து மெல்லப் பிளிற மற்ற யானைகளும் பிளிறின. சில யானைகள் அப்பகுதியில் பரவிக்கிடந்த குருதியைத் துதிக்கையால் மோப்பம் பிடித்தன. ஒரு யானை அங்கே நின்று காதுகளை முன்னால் தள்ளி எங்களைப் பார்த்தது.

“பேண்டேஜை அவுத்திராதில்ல?“ என்றேன். “அதுக்குத் தெரியும்“ என்றார். “ஆனா யானைக்குப் பொதுவா வெள்ளை நிறம் புடிக்காது. சேறு பூசலைன்னா நிம்மதியில்லாம காலை நோண்டிண்டே இருக்கும்.“ “குணமாயிடுமா?“ என்றேன். “அனேகமா பதினஞ்சு நாளிலே பழையபடி ஆயிடும். யானையோட ரெஸிஸ்டென்ஸ் பயங்கரம். சூதாரண ஆண்டிபயாட்டிக் கூட அபாரமா வேலை செய்யும்“ என்றார். முதுமலையில் இருந்து மீண்டும் டாப்ஸ்லிப்புக்குக் காரில் திரும்பும்போது டாக்டர் கே சொன்னார் ‘என்ன ஒரு டிவைன் பீயிங். என்னிக்காவது தமிழ்நாட்டிலே யானை இல்லாமப் போனா அப்றம் நம்ம பண்பாட்டுக்கே என்ன அர்த்தம்? மொத்த சங்க இலக்கியத்தையும் தூக்கிப்போட்டுக் கொளுத்திர வேண்டியதுதான்“.

**ஆசிரியரைப் பற்றி**

ஜெயமோகன் 1962 ஏப்ரல் 22 ஆம் தேதி பிறந்தார். ஜெயமோகனின் தந்தையின் பெயர் எஸ். பாகுலேயன் பிள்ளை. இவரது பூர்வீகம் குமரி மாவட்டம் விளவங்கோடு வட்டம், திருவரம்பு. இவருடைய தாத்தா அடிமுறை ஆசான். ஆகவே சங்கு ஆசான் என அழைக்கப் பட்டிருக்கிறார். 1978இல் பள்ளிப்படிப்பை முடித்து, முழுக்காட்டில் இருந்தபொழுது மலையாளப் புதினங்களுக்கு அறிமுகம் ஆனார். 1988ல் எழுதிய ‘ரப்பர்’ என்னும் புதினத்தை 1990ல் அகிலன் நினைவுப் போட்டிக்காக சுருக்கி அனுப்பி, அதற்கான விருதைப் பெற்றார். 1998 முதல் 2004 வரை ‘சொல் புதிது’ என்னும் சிற்றிதழை நண்பர்களுடன் இணைந்து நடத்தினார். ஜெயமோகன் மலையாளத்திலும் எழுதுகிறார். மாத்ருபூமி, பாஷாபோஷினி இதழ்களில் இவர் எழுதிய கட்டுரைகள் கரன்ட் புக்ஸ் பதிப்பாக ‘நெடும்பாதையோரம்’ என்ற பேரில் வெளியாகியுள்ளன. தமிழில் ‘நூறு நாற்காலிகள்’ என்ற பெயரில் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பு “நூறு சிம்ஹாசனங்கள்“ என்ற பெயரில் மலையாளத்தில் வெளிவந்துள்ளது. இவர் 1990 ஆம் ஆண்டு அகிலன் நினைவுப் போட்டிப் பரிசையும், 1994 ஆம் ஆண்டுக்கான சம்ஸ்கிருதி சம்மான் தேசியவிருதையும், 2011 ஆம் ஆண்டு ‘அறம்’ சிறுகதைத் தொகுதிக்காக முகம் விருதையும் பெற்றார். 2012இல் சிறந்த திரைக்கதைக்கான ‘கேரளா ஃபிலிம் கிரிட்டிக்ஸ்’ விருது பெற்றுள்ளார். இவர் படைத்த புதினங்களில் ரப்பர், விஷ்ணுபுரம், பனிமனிதன், கொற்றவை, அனல்காற்று ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவர் படைத்த சிறுகதை நூல்கள் மண், ஆயிரங்கால் மண்டபம், ஜெயமோகன் சிறுகதைகள், பேய்க்கதைகளும் தேவதைக் கதைகளும், ஊமைச்செந்நாய், அறம் ஆகியவையாகும்.

# அலகு – 4

## நாவல்

## இல்லந்தோறும் இதயங்கள்

**- சு. சமுத்திரம்.**

**ஆசிரியரைப் பற்றி**

சு.சுமுத்திரம் தென்காசி மாவட்டம் திப்பணம்பட்டி கிராமத்தில் பிறந்தார். அகில இந்திய வானொலியிலும் தூர்தர்சனிலும் வேலை பார்த்தவர். 14 புதினங்கள், 4 குறுநாவல்கள், 2 கட்டுரைத் தொகுப்புகள், ஒரு நாடகம், 300-க்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகள் 22 தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. பல படைப்புகள் தெலுங்கு, மலையாளம், ஹிந்தி மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அடிமட்டத்து மக்களின் வாழ்க்கையும், துன்பங்களும் இவரது படைப்புகளின் முக்கியக்களமாக அமைந்துள்ளன. 1190 –ல் அவரது 'வேரில் பழுத்த பலா' என்னும் நாவலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றார். தமிழ்நாடு அரசாங்கம் 2000 ஆண்டில் அமைத்த தமிழிலக்கிய சங்கப் பலகையின் குறள்பீடம் என்ற அமைப்பின் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தார்.

**நாவலில் வரும் பாத்திரங்களும் அவர்களுக்கிடையிலான உறவுகளும்**

| | |
|---|---|
| மிராசுதார் | - அருணாசலம் |
| இராமலிங்கம் | - அருணாசலத்தின் மூத்த மகன் |
| கனகம் | - இராமலிங்கத்தின் மனைவி |
| சந்திரன் | - அருணாசலத்தின் இளைய மகன் |
| மணிமேகலை | - அருணாசலத்தின் மகள் (கதைத் தலைவி) |
| வெங்கடேசன் | - மணிமேகலையை இளமையில் விரும்பியவன் |
| குமரேசன் | - வெங்கடேசனின் தந்தை |

| | |
|---|---|
| இரத்தினம் | - தொழிலாளர்களுக்காகப் பாடுபடுபவன் |
| | - அண்ணன் என்று மணிமேகலையால் அழைக்கப்படுபவன் |
| கோவிந்தன் | - கூத்துக் கலைஞன் |
| சபாபதி | - அரக்கோணத்தில் வாழ்பவர் |
| சங்கரன் | - சபாபதியின் மூத்த மகன் |
| லட்சுமி | - சங்கரனின் மனைவி |
| ஜெயராஜ் | - சபாபதியின் இளைய மகன் (கதைத் தலைவன்) |
| | - மணிமேகலையின் கணவன் |
| இராமபத்ரன் | - லட்சுமியின் தந்தை |
| வசந்தி | - இராமபத்ரனின் இளைய மகள் |
| | - ஜெயராஜின் இரண்டாம் மனைவி |
| மணி | - மணிமேகலைக்கு மருந்து தரும் கம்பவுண்டர். |
| சீதா, பாமா, இந்திரா, பாஸ்கர் | - சபாபதியின் பிள்ளைகள் |
| ரமா, சேகர் | - சங்கரன் லட்சுமி குழந்தைகள் |
| பத்மா,கனகராஜ் செல்வி | - இராமலிங்கம், கனகம் பிள்ளைகள் |

**இல்லந்தோறும் இதயங்கள் நாவலின் கதைச்சுருக்கம்**

இல்லந்தோறும் இதயங்கள் நாவலின் ஆசிரியரான சு. சமுத்திரம் அவர்கள், சமூகப் பிரச்சனைகள், அரசியல் அவலங்கள், அதிகாரிகளின் அத்துமீறல்கள் முதலியவற்றை நாவலாக எழுதியுள்ளார். இந்நாவலின் கதை குடும்பப்பாங்கான ஒன்று.

குணக்குன்றான ஒரு இளம்தாய், பிறந்த வீட்டாராலும், புகுந்தவீட்டாராலும் கணவனாலும் பாராட்டப்படும் புகழ்வாழ்வு வாழ்ந்தவள். பெருநோயின் அறிகுறி அவளைப் பாதிக்கிறபோது, அப்பெண் எப்படியெல்லாம் சிதைக்கப்படுகிறாள் என்பதைச் சித்திரிக்கிறது இந்நாவல்.

மணிமேகலை என்பவள் இந்நாவலின் கதைத் தலைவி. தூத்துக்குடி அருகே உள்ள ஊரில் வாழும் தன் தந்தை மிராசுதார் அருணாசலத்தைப் பார்க்க வருகிறாள் மணிமேகலை. அவளோடு சென்னையிலிருந்து உடன் வருகிறாள் அவள் கணவனின் தங்கை (நாத்தனார்) பாமா. மேகலையின் மூத்த அண்ணன் இராமலிங்கம். அவருடைய பிள்ளைகள் பத்மா கனகராஜ், செல்வி ஆகியோரும் மேகலையை அன்பாக வரவேற்கிறார்கள். இராமலிங்கத்தின் மனைவி கனகம், மணிமேகலையின் வரவில் அவ்வளவாக உற்சாகம் காட்டவில்லை. மணிமேகலை தன் தம்பி சந்திரனுக்கு நாத்தனார் பாமாவை மணமுடித்துவிடலாம் என எண்ணுகிறாள். தந்தையின் நோய்க்குரிய மருந்தை மணிமேகலை கொடுக்க, அவரும் உடல் தேறி வருகிறார். இராமலிங்கத்தின் மனைவி கனகமோ, தன் தங்கையைத்தான் கொழுந்தன் சந்திரனுக்கு மணமுடிக்க வேண்டுமென்று எண்ணுகிறாள். குடும்பப் பிரச்சனை காரணமாக மேகலை சென்னைக்குப் பயணமாகிறாள்.

பாகப்பிரிவினை செய்ய வேண்டுமென்கின்றனர் மணிமேகலையின் மூத்த மைத்துனரும், மனைவி லட்சுமியும், மாமனார் இராமபத்ரனும். மணிமேகலை இதைத் தடுத்துவிட்டதால் இராமபத்ரன் மணிமேகலை மீது கோபம் கொள்கிறார். சென்னையில் பீச், பொருட்காட்சி போன்றவற்றைப் பார்க்க எல்லோரும் செல்கிறார்கள். சீதாவுக்குத் தலைச்சுற்றல் வர டாக்டரிடம் காண்பிக்கிறாள் மணிமேகலை. உடன் செல்லும் மணிமேகலைக்குத் தொழுநோயின் அறிகுறி இருப்பதாக டாக்டர் சொல்ல, குடும்பமே அவளை வேறுவிதமாக நோக்குகிறது.

ஜெயராஜ் அவளைவிட்டு விலகி வசந்தியோடு பழகுகிறான். மணிமேகலையின் மாமனாரும் மற்ற குடும்ப உறுப்பினர்களும் அவளை வெறுக்கின்றனர். இந்த நோயைப்பயன்படுத்தி இராமபத்ரன் மணிமேகலையின் மேல் வெறுப்பு ஏற்படும்படி வினையேற்றுகிறார். கம்பவுண்டர் மணி என்பவன் இவளிடம் முதலில் நல்லவன் போல் நடித்து பிறகு தவறாக நடக்கமுயற்சிக்கிறான். அவனைத் திட்டி அனுப்புகிறாள் மணிமேகலை. அவளுக்கு வந்த நோய்பற்றிக் கேள்விப்பட்ட அவளின் தந்தை

அருணாசலத்திற்கு உடல் நலமில்லாமல் போய்விடுகிறது. தூத்துக்குடிக்கு வரும் மணிமேகலையை யாருமே அன்பாக வரவேற்கவில்லை.

ஜெயராஜ் வசந்தியை மணமுடிக்கிறான். சபா காரியதரிசியின் வீட்டில் வேலைபார்க்கிறாள். கூத்து கோவிந்தன் உதவியால் தொழுநோயாளிகள், ஆதரவற்ற குழந்தைகளுக்கு இல்லம் அமைக்க எண்ணுகிறாள் மணிமேகலை. இதற்காகத் தன் சொத்து, நகை, ரொக்கம் முதலியவற்றைக் கணவனிடம் கேட்கிறாள். கணவன் இவற்றைத் தரவில்லையென்றால் உண்ணாவிரதம், மறியல் போன்றவற்றில் ஈடுபடுவோம் என்கிறாள். மாமனார் மணிமேகலை கேட்டதைக் கொடுக்க, தொழுநோய் வந்தவர்களின் பிள்ளைகளுக்குக் காப்பகம் கட்டும் கங்கணத்தோடு வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.

அன்றைய மணிமேகலை சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றினாள். இவளோ ஆதறவற்றவர்களுக்கு அநாதை இல்லம் அமைக்கிறாள். வாழ்க மணிமேகலை, வளர்க அவள் தொண்டு.

**கொடுமன இராமபத்ரனின் செயல்கள்**

'தன்பெண்டு தன்பிள்ளை தன்வீடு சோறுண்டு, இவையுண்டு தானுண்டு என்றிருப்போன் சின்னதொரு கடுகுள்ளம் கொண்டவன்' என்று பாரதிதாசன் குறிப்பிடும் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இராமபத்ரனின் செயல்கள் விபரீதமாகவே உள்ளன.

சிலப்பதிகாரத்தின் எதிர்த்தட்டுத் தலைமைப் பாத்திரம் தலைவிதிதான் கமலாம்பாள் சரித்திரத்தில் வம்பர் மகாசபை. இந்நாவல் எதிர்த்தட்டுத் தலைமைப் பாத்திரமாக வருவது இராமபத்ரன்தான்.

"இன்னல்செய் இராவணன் இழைத்த தீமை போய்
துன்னருங் கோடுமனக் கூனி தோன்றினாள்"

என்று கூனியைக் கம்பன் வர்ணிப்பார். இராமபத்ரனின் அறிமுகமோ இவ்வாறு வருகிறது. இராமபத்ரன் முன்னாளைய தூத்துக்குடிவாசி. அக்காள் புருசனின் மளிகைக் கடையில் வேலை செய்து, அத்தானின் தங்கையையே மனைவியாக்கிக் கொண்டவர். கட்டைத் தொட்டிகளும் கசாப்புக் கடைகளும் வைத்து முன்னேறி, தன் மகள் லட்சுமியை மைத்துனன் மகன் சங்கரனுக்குக் கொடுத்தவர்.

“குறியா துட்ட ஒதுக்கணும் தனியா அமுக்கணும். ஆபத்துக்கு அப்பா தம்பி உதவமாட்டான். பணந்தான் உதவும்” என்பவர். தன் மகளையும் மருமகனையும் தனிக்குடும்பமாக்க நினைத்தவர். அம்முயற்சியில் தோல்வியடைகிறார். பெண்கள் குடும்ப விவகாரம் பற்றிப் பேசக்கூடாது என்னும்போது, இராமபத்ரனின் ஆணாதிக்க மனம் வெளிப்படுகிறது. ”இது ஆம்புள விவகாரம். நீ ஒன் வேலயப் பாத்துக்கிட்டுப் போ“ என்கிறார் மணிமேகலையிடம். அவளின் தொழுநோய், குடும்ப உறுப்பினர்களுக்கும் தொத்திவிடும் என்று டாக்டரிடம் பரிசோதிக்க அழைத்துப் போகிறார். தன் மகள் வசந்திக்கு மாப்பிள்ளை தேடுகிறேன் என்று தூத்துக்குடி போனவர் மணிமேகலையின் தொழுநோய் பற்றி முரசறைந்து வருகிறார்.

பெரியமனுசி ஆகாத நிலையில் தன் மகள் வசந்தியை ஜெயராஜ்க்கு மணமுடிக்க வேண்டும் என்று எண்ணியவர் அது முடியாதபோது, மணிமேகலைக்கு நோய் வந்தபின் தன் மகளை அவனுக்கு மணமுடித்து வைக்கிறார். மனிதரில் பலருக்குத் தலையில் மூளை உண்டு அதை வைத்துச் சிந்திப்பார்கள். ஆனால் இராமபத்ரனுக்கோ உடம்பெல்லாம் மூளையாக இருந்தாலும், அது முழுவதும் தோய்ந்ததுதான். இராமபத்ரன் கனியிருப்பக் காய்கவர்பவர்” என்றால் அது முழுவதும் உண்மையே!

**கூத்து கோவிந்தனின் பங்கு**

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவைநாடி இனிய சொல்லின் என்ற முன்னோர் வாக்கிற்கு இணங்க வாழ்வில் எப்பொழுதும் சொற்கள் மட்டுமல்ல செயலாலும் சிலர், எப்போதும் எங்கும் பிறர்க்கு உதவும் உபகாரிகளாக இருப்பார்கள். அத்தகு நல்லவர்களில் ஒருவனே கோவிந்தன். கூத்துக்கலை ஆடுவதால் இவனைக் கூத்துக்கலைஞன் என்றே எல்லோரும் அழைக்கிறார்கள். மக்கள் இவனை இழிவாகப் பேசினாலும் உயர்வாகவே எடுத்துக்கொள்ளும் இயல்பினன். “கூத்தாடி பய மவனே“ என்கிறாள் ஒருத்தி. ‘ஒம்ம புத்திக்குத்தான் இப்படி கூத்து கீத்துன்னு உருப்படாம போறீரு“ என்று பழிக்கிறாள் மற்றொருத்தி. என்றாலும் அதை ஏற்றுக்கொள்கிறான்.

பழைய புராண, இதிகாசக் கதைகளை அவ்வாறே மேடையேற்றுவது போல் இல்லாமல், பழமையில் மாற்றமும் செய்யும் கற்பனைமிக்க கலைஞனாக இவன் வலம் வருகிறான். அரிச்சந்திரன் மயான காண்டத்தில், “தாலி கட்டிய கணவன் எங்கே” என்று சந்திரமதியிடம் அரிச்சந்திரன் வினவுவதாக மாபெரும் மாற்றத்ததைச் செய்கிறான்.

"பாசத்த கிண்டலா காட்டுவோம். பணக்காரங்க மாதிரி கிண்டல பாசமா காட்டமாட்டோம்" என்பவன் கோவிந்தன். "நான் கொடுத்த பெட்டிய பத்திரமா வச்சிருக்கியளா" என்று மணிமேகலையிடம் ஒரு பெண் கேட்க, "நீ கொடுத்த பெட்டி... பவளக்கொடிக்கு அர்ச்சுனராசதுரை வச்சுக் கொடுத்த ரத்னப்பெட்டி. பத்ரமா இருக்கும் என்று கோவிந்தன் கூறுகிறான். இதனைத்தான் "இவனோட வேலயே எடக்குப் பேசறது தானே என்கிறாள் ஒரு பெண். திக்கற்ற பெண்ணாய் மணிமேகலை திணறும்போது, சபா காரியதரிசியின் வீட்டில் அவளுக்கு வேலை வாங்கிக்கொடுத்து துணை செய்கிறான் கோவிந்தன்.

இராமபத்ரனின் இளைய மகள் வசந்தி, மணிமேகலையின் வாழ்க்கையைப் பறித்துக் கொண்டபோது, கோவிந்தனின் சொற்கள் கனலாகின்றன. "வாம்மா ராசாத்தி! நான் மூளியலங்காரி மூதேவி சண்டாளியாய் நடிக்க ஆள் கிடைக்காமல் அவஸ்தைப்படுறேன்... இருக்க இடம் கொடுத்த தங்கச்சிகிட்ட படுக்க இடத்த பறிச்ச முண்ட" என்று வசந்தியைக் கோவிந்தன் திட்டுகிறான். கைம்மாறு வேண்டா கடப்பாடாகப் பெய்யும் மழை போல பிரதி உபகாரம் பார்க்காது உதவி செய்வான் கூத்துக் கோவிந்தன் என்றால் உண்மையிது வெறும் புகழ்ச்சியில்லை எனலாம்.

**இல்லம் தோறும் இதயங்கள் நாவலின் கருப்பொருள்**

"நாவல் என்பது காவியக் கதையும் நாடகமும் இணைந்து உருவான கலப்பு வடிவம்" என்பார் கெதே. மேலும் நாவலை 'உரைநடைக் காவியம்' என்றும் 'சட்டப்பை நாடகம்' என்றும் 'புனைகதை வரலாறு' என்றும் வர்ணிப்பார்கள். மனிதர் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை நாவல் வர்ணித்தாலும், சில செய்திகளை மனித குலத்திற்குச் சொல்வதாகவே நாவல்கள் எழுகின்றன. இந்தச் செய்தி அல்லது கருத்தைத் தான் 'கருப்பொருள்' என்கிறோம். கரு என்பதை 'அடி நாதமான செயல் அல்லது இயக்கம்' என்று இலக்கியச் சொல்லகராதி வரையறுக்கிறது. நீர்க்கரையிலிருந்து கல்லொன்றை எறிய கல் விழுந்த இடத்தைச் சுற்றிலும் அலை அலையாய் எழும்பும். சுழலும் அலைகளை நாவல்களில் வரும் நிகழ்வுகள் என்றால், கல் விழுந்த புள்ளி உள்ளதே அதனை நாவலின் கரு என்று விளக்கலாம்.

மணிமேகலை மனதிற்கு இதமான இனிய செயல்களை செய்பவள். யாரிடத்தும் அன்பு பாராட்டுபவள். அவள் உடல் நலத்தோடு உள்ள போது அவளை உயர்வாகப்

பார்க்கும் உறவுக் கண்கள், உடலுக்கு ஊறு ஏற்பட்டநிலையில் உதாசீனம் செய்கிறது. தொழுநோயாளிகளை இச்சமூகம் வெறுத்து வருகிறது. தீர்க்க முடியாத நோயல்ல, பெரு நோய் என்று வெறுக்க வேண்டாம் என்ற செய்தியை இந்நாவலின் கருப்பொருட்களில் ஒன்றாகக் கொள்ளலாம்.

துன்பங்கள் பல தொடர்ந்தாலும், துவண்டு போகாமல் துடிப்போடு பெண் செயல்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நாவலின் பின்பகுதியில் மணிமேகலையின் செயல்கள் விளங்குகின்றன. துறைதோறும் பெண்கள் துடிப்போடு செயல்பட்டால் சீரழியும் சமூகம் சிறப்படையும் என்பது நாவலின் இன்னொரு கருப்பொருள்.

ஒடுக்கப்பட்டவர்கள் ஒதுங்கி நின்றால், உதறி எறியப்படுவர். ”ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட வேண்டுமென்பதை நாவல் இன்னொரு செய்தியாகத் தருகிறது. அதனால்தான் மணிமேகலை, இரத்தினம் போன்றவர்கள் வீதிக்குவந்து போராடத் தயாராகிறார்கள்.

நாவல் என்பது படித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல முடித்தவுடன் செயல்பட வைக்கவும் வேண்டுமென்ற கூற்றுப்படி, இந்நாவலின் கருப்பொருட்கள் சரிந்த சமுதாயத்தை உயர்த்தி நம்மைத் தூண்டிவிடும் என்பதில் ஐயமில்லை.

**நாவலின் தலைப்புப் பொருத்தம்**

ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பகுதிகளில் அடங்கிய நீட்சியை உடைய, கற்பனைப் பாங்குமிக்க உரைநடைக் கதையே நாவல் என்று நாவலுக்கு ஆக்ஸ்போடு அகராதி இலக்கணம் கூறுகிறது. அந்நாவலுக்கான தலைப்பை ஆசிரியர் தேர்வு செய்வார். அந்த அளவில் இல்லம் தோறும் இதயங்கள் என்னும் தலைப்பு இந்நாவலுக்கு மிகவும் பொருத்தமாகும்.

நாவலில் வரும் கதை மாந்தர்களின் பெயரை வைத்து நாவலுக்குத் தலைப்பிடலாம். நாவலின் கருப்பொருளை மையமாக வைத்து, நாவலுக்குத் தலைப்பிடலாம். ஆசிரியன் தானே ஏதாவதொரு தலைப்பையும் இடலாம். எப்படித் தலைப்பிட்டாலும் நாவலுக்குத் தலைப்பு பொருத்தமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு தனிமனிதனும் ஒவ்வொரு தனித்தீவு என்பார்கள் வீட்டுக்கு வீடு வாசப்படி என்ற பழமொழியும் உண்டு. மனிதனுடைய சாயலும், கைரேகையும் எல்லோருக்கும் ஒன்று

போல் இருப்பதில்லை அவ்வாறே ஒவ்வொரு வீட்டிலும் வாழ்பவர்கள் வெவ்வேறு உணர்வுடையவர்களே என்பதை இந்நாவலின் தலைப்பு விளக்குகிறது. மணிமேகலையை நேசித்த புகுந்த வீட்டார் வெறுப்பதேன்? தொடர்பில்லாமல் கூத்துக் கோவிந்தன் மணிமேகலைக்கு உதவுவதேன்? சந்திரனை நேசித்த பாமா வேறு ஒருவனுக்கு மாலை இடுவதேன்? நல்லவனான மணி சந்தர்ப்பத்தால் மணிமேகலையிடம் தவறாக நடப்பதேன்? தன் மனைவியை விட்டு விட்டு, வசந்திக்கு ஜெயராஜ் வாழ்க்கை தந்ததேன்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம், ஒவ்வொரு இதயமும் வெவ்வேறு வழியில் செயல்படுவதுதான் காரணம் என்று தலைப்பு நமக்குத் தெளிவுறுத்துகிறது.

அடைக்கப்பட்ட அறைக்குள்ளிருக்கும் பொருட்களை ஓரளவு காட்டும் சாவித்துவாரம் போல் நாவலில் புதைந்துள்ள விஷயங்களை இந்நாவலின் தலைப்பு வெளிப்படுத்துவதால் தலைப்பு பொருத்தமானதே ஆகும்.

**மணிமேகலையின் வாழ்வுயர வெங்கடேசன், சி.ரத்தினத்தின் பங்கு**

“நாவல், அதைப் படிப்பவர்களை ஒரு கற்பனையான உண்மை உலகிற்கு அழைத்துச் செல்கிறது. படைப்பாளன் உருவாக்கியதால் அந்த உலகம் புதியது” என்பார் காதரைலீவர். வேதியியலில் கிரியா ஊக்கி என்று ஒரு பொருளைக் கூறுவர். வேதிமப் பொருட்கள் இரண்டின் வினையை, தான் அதில் பங்கேற்காமல் ஏற்படுத்த வைக்கும் பொருளைக் கிரியா ஊக்கி என்பர். இல்லந்தோறும் இதயங்கள் என்னும் நாவலில் வெறுத்து ஒதுக்கப்பட்ட மணிமேகலையின் வாழ்வில் வசந்தக் காற்றாய் உள்ளனர் வெங்கடேசனும், இரத்தினமும். நாவலின் இறுதிப்பகுதியில் இவர்கள் இருவரும் ஆற்றும்பணி அருமையானது.

குமரேசனின் மகன் வெங்கடேசன். மணிமேகலையும் அவனும் இளமையில் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர். மணிமேகலையின் குடும்பத்தார் ஒப்புதல் அளிக்காததால், நிறைவேறாக் காதலாகிவிடுகிறது. வெங்கடேசன் வக்கீலுக்குப் படித்து கடைசியில் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறான்.

இரத்தினம் ஏழைகளின் நண்பன். உரிமைக்குக் குரல் உயர்த்துபவன். சாதிமதச் சம்பிரதாயங்களை வெறுப்பவன் விவசாயச் சங்கம் வைத்ததால், அவனோடு பேசுவதைக்கூட அநாகரீகமாக, மணிமேகலையின் அப்பாவும், அண்ணனும் கருதுகின்றனர். இரத்தினமும் கடைசியில் மணிமேகலைக்கு உறுதுணையாய் உதவுகிறான்.

தொழுநோயின் அறிகுறி தென்பட்டதால் புகுந்த வீடும், பிறந்த வீடும் மணிமேகலையை வரவேற்கத் தயாராக இல்லை. வாழ்க்கை அவளுக்கு பல அனுபவப் பாடங்களை அளித்தது. வெங்கடேசன் தன் மூத்த வக்கீல் மூலம் மணிமேகலைக்காக ஜெயராஜ்க்கு இரண்டு நோட்டீஸ்கள் அனுப்புகிறான். அறுபது பவுன் நகை வேண்டும் ஜீவனாம்சம் வேண்டும், இவ்விரண்டிற்கும் முறையான பதிலில்லை. அந்த நேரத்தில் இரத்தினத்தை உடனே வரவும் என்று சொல்லி வரவழைக்கிறான். இரத்தினத்தை இங்கு அறிமுகப்படுத்தும் போது "மணிமேகலைக்கும் வெங்கடேசனுக்கும் உபதேசத்தான்" என்கிறார் ஆசிரியர்.

மணிமேகலை, வெங்கடேசன், இரத்தினம், கூத்துக் கோவிந்தன் அனைவரும் மணிமேகலையின் பிறந்த வீட்டில், ஜெயராஜை முகத்திற்கு முகம் சந்திக்கிறார்கள். பிள்ளையைக்கூட தன் பக்கம் அனுப்பாமல், பார்த்துவிட்டுப்போ என்ற பதில் வந்தவுடன் மணிமேகலை கண்ணகியாக மாறுகிறாள். அவளை அவமானமாகப் பேசுகிற ஜெயராஜிடம் கோவிந்தன் பக்கம் கண்மூடித்தனமாகக் கோபப்படுகிறான். டெலிபோன் செய்ய சென்ற சங்கரனை, இரத்தினம் எச்சரிக்கிறான். ஜெயராஜ் குடும்பத்தாரின் பேக்டரியைக் கோர்ட் மூலம் முடக்குவேன் என்கிறான் வக்கீல் வெங்கடேசன். மணிமேகலையும், இரத்தினமும் சொத்தும் நகையும் கிடைக்கும்வரை உண்ணாவிரதமும், போராட்டமும், மறியலும் நடத்தப் போவதாகக் கூறியவுடன், அவள் மாமனார் நகைப்பெட்டியைத் தருகிறார்.

சாதுமிரண்டால் காடுகொள்ளாது என்ற மூதுரைப்படி, அமைதியாய் அடங்கிக் கிடந்த மணிமேகலைக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து, பூவொன்று புரட்சிப் புயலாக மாறச் செய்த பெருமை வெங்கடேசனையும் இரத்தினத்தையுமே சாரும்.

**மணிமேகலையின் பிறந்தவீட்டார் செயல்கள் (இராமலிங்கம் - கனகம்)**

நாவல்களில் சமூகநாவல், உளவியல், வட்டார நாவல், அறிவியல் நாவல் என பலவுண்டு. ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமூகப், பொருளாதாரச் சூழ்நிலையினை வெளியிடுவதில் தீவிர ஆர்வம் காட்டும் நாவலைச் சமூகநாவல் எனலாம். அதுபோல் குடும்ப உறவுகளிடையே ஏற்படும் உரசல்களைக் காட்டும் நாவல்களைக் குடும்பநாவல் எனலாம். அவ்வகையில் இல்லந்தோறும் இதயங்களை இல்ல நாவல் எனலாம். இந்நாவலில் இடம் பெறும் குடும்பங்களில் தூத்துக்குடியில் வாழும் அருணாசலம் என்பவரின் குடும்பம் ஒன்று. அரக்கோணத்தில் வாழும் சபாபதியின் குடும்பம் இன்னொன்று.

தூத்துக்குடியில் அருணாசலத்தின் வீடுதான் மணிமேகலையின் பிறந்தவீடு. அவ்வீட்டு உறுப்பினர்களின் செயல்பாடுகளைக் காண்பது அவசியம்.

மணிமேகலையின் தம்பி சந்திரன், பாமாவோடு காதல் புரிவதற்குத் தன் அக்கா துணையாக இருக்கும்பொழுது பாசத்தில் வளர்பிறையாக இருந்த சந்திரன், காதலை நினையாதே கடிதங்களை எரித்துவிடு என்று மணிமேகலை அறிவூட்டும்பொழுது அவள் மீதுள்ள பாசத்தில் தேய்பிறை போல் ஆகிறான்.

கனகம் மணிமேகலையிடத்து அன்பில்லாமல் கரித்துக்கொண்டேயிருப்பவள். இராமலிங்கம் மணிமேகலைமீது கரிசனமுடையவன். அவர்களின் பிள்ளைகள் பத்மா, கனகராஜ், செல்வி எல்லோருமே மணிமேகலையிடம் அன்பாக உள்ளனர். அவள் ஊரைச் சார்ந்த ஏழை மக்களிடம் பேசுவது, கௌரவத்திற்கு இழுக்கென்று கருதுகிறான் இராமலிங்கம். கனகம் தன் தங்கையைக் கொழுந்தனுக்குக் கட்டிவைக்கலாம் என்னும் கனவோடிருக்க, மணிமேகலை அதைக் கலைப்பதால் கனகத்திற்கு அவள் மீது கோபம் அதிகமாகியது. புகுந்த வீட்டில் உதாசீனப்படுத்தப்பட்டதால் பிறந்த வீடான தூத்துக்குடிக்கு வருகிறாள் மணிமேகலை. காரில் வராமல் நடந்து வந்ததால் மானம் குறைந்துவிட்து என்று சீறுகிறான் இராமலிங்கம். அவள் நகைகள் எதுவுமின்றி பிறந்த வீட்டிற்கு வந்திருப்பதைக் கணவனிடம் சுட்டுகிறாள் கனகம்.

மணிமேகலைக்கு மகன் பிறந்ததால்தான் அத்தனை சங்கடங்களும் வந்தன என்று கனகம் எரியும் நெருப்பில் எண்ணெயை கொட்டுகிறாள். சந்திரனின் தன் காதலி பாமா, வேறொருவனைக் திருமணம் செய்கிறாள்.. மணிமேகலை, கோவிந்தன், இரத்தினம் ஆகியோருடன் கூத்தடிப்பதாகக் குண்டொன்றினை அவள் மேல் வீசுகிறாள் கனகம். கடைசியாக மணிமேகலையைப் பற்றிய நோய் எல்லோரையும் பற்றிவிடும் என்று சொல்ல பேதலித்த மனதினளாய் மணிமேகலை மீண்டும் அரக்கோணம் போகிறாள்.

“எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும்“ என்று திண்டாடித் தவிக்கும் மணிமேகலையைப் பிறந்த வீடும் புறக்கணிக்கும் சூழலைத்தான் நாவலில் பார்க்கமுடிகிறது. சித்தியில்லா இடத்தைப் பிடித்த அண்ணி கனகம், தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை இராமலிங்கத்தின் மூலம் ஒவ்வொன்றையும் செயல்படுத்தும் கொடுமை மிகப் பெரியது.

**நாவலின் வழி புலப்படும் சமுதாயச் சிந்தனைகள்**

"குறிப்பிடத்தக்க ஏதேனும் ஒரு செய்தி பற்றியதாகவும், மாந்தர்களையும் ஆழ்ந்த நோக்கினையும் அடித்தளமாக உடையதாகவும், உரைநடையில் அமைகின்ற புனைகதைதான் நாவல்" என சேம்பர் கலைக்களஞ்சியம் வரையறை செய்கிறது. படைப்பாளி ஒரு படைப்பை உலகிற்குக் கொடுப்பதே ஏதாவது செய்தியொன்றை அறிவிக்கவே. சு. சமுத்திரம் எழுதிய இல்லம்தோறும் இதயங்கள் என்னும் இந்நாவலும் பல சமூகச்செய்திகளை விவரிக்கிறது.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையுமே ஒரு நாவல். மத்தியதர வகுப்பினரின் வாழ்க்கையை அடித்தளமாகக் கொண்டதுதான் இந்நாவல். மகிழ்விக்கக் கூடிய பணியை மட்டுமல்லாமல் அறிவூட்டும் பணியையும் நாவல் செய்யும். தன் காலத்தையோ அல்லது கடந்த காலத்தையோ தன் நாவலில் ஆசிரியன் படைப்பதால் வாழ்க்கை பற்றிய ஒரு உண்மையான திறனாய்வாளன்" வாழ்க்கையைப் பாடும் ஒளிபடைத்த நூல் என நாவலைப் புகழ்கின்றனர்.

தற்காத்துத் தன்னை மணந்தவனைப் பேணி தகுந்த சொற்களைப் பேசி, சோர்விலாத தன்மையான பெண் இருந்தால் எந்தக் குடும்பத்திலும் இல்லாதது ஒன்றுமில்லை என்பார் வள்ளுவர். இதனை "இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்கிறது வள்ளுவம்.

மணிமேகலை தன் கணவன் ஜெயராஜ், கணவனின் தந்தை சபாபதி, தந்தை அருணாசலம், அண்ணன் குடும்பத்தார் எல்லோரிடமும் அன்பு பாராட்டுகிறாள். கூத்து கோவிந்தன், இரத்தினம், மணி ஆகியோரிடமும் அன்பு செலுத்துகிறாள். பாரதிதாசன் கூறிய "நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்பதை சமுத்திரம் தன் நாவலில் மணிமேகலை மூலம் காட்டுகிறார்.

தவிர்க்க முடியாத சூழல் தவிர, கூட்டுக்குடும்பம் சிதையாமலிருந்தால் இந்தியா முன்னேறும். வியாபாரம் பெருகும் என்பதே நாவலாசிரியர் கூறும் அடுத்த செய்தி. பாகப் பிரிவினைக்கு ஏற்பாடு செய்யும் இராமபத்ரனின் முயற்சியைத் தவிடு பொடியாக்குகிறாள் மணிமேகலை. பெட்ரோல் பங்க் வைக்கும் புதிய தொழில் முயற்சி தொடங்குகிறது. கூட்டுக்குடும்பம் இருந்தால்தான் முதியவர்களும் சிறு குழந்தைகளும் சரியான முறையில் பாதுகாக்கப்படுவார்கள்.

அன்பால் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்புவார்களேயானால் சமூகம் அதற்குப் பச்சைக் கொடிகாட்ட வேண்டும். சந்திரன் - பாமா இரண்டு பேருடைய காதலுக்கு மணிமேகலை ஒப்புதல் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அது நிறைவேறவும் பாடுபடுகிறாள். ஆனால் காலச்சூழல் அவர்களின் காதலைக் கல்யாணத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவில்லை. வாழ்க்கையில் தீமையும், பாவமும் செய்பவர்களே கடைசியில் தொழுநோய்க்கு ஆளாவர் என்பது தமிழகத்தின் தவறான எண்ணமாக உள்ளது. “கை அமுக்கிக் கால் அமுக்கி காடு செல்ல வேண்டாமோ” என்று “அகல்விளக்கு“ எனும் நாவலின் கதைத் தலைவன், தான்செய்த குற்றங்களால் கடைசியில் தொழுநோய்க்கு ஆளாகிறான் என்று மு. வரதராசனார் சித்திரிக்கிறார்.

மணிமேகலைக்குத் தொழுநோயின் அறிகுறி உள்ளது கண்டுபிடிக்கப்பட்டவுடன், புகுந்த வீட்டார் கணவன் உட்பட அனைவரும் அவளை வெறுத்து ஒதுக்குகின்றனர். மூன்று ஆண்டுகள் தொடர்ந்து மாத்திரை எடுத்துக்கொண்டால் நோய் நீங்கிவிடும் என்று மருத்துவர்கள் கூறினாலும், மணிமேகலைக்குத் தனிப்படுக்கை, தனித்தட்டு என்று ஒதுக்குகின்றனர். இதன்மூலம் சமூகத்தின் தவறான போக்கைச் சுட்டி, அது தவிர்க்கப்பட வேண்டும் என்ற செய்தியினை ஆசிரியர் கூறுகிறார்.

தன்னை ஒதுக்கியவனைத் தான் உதறக்கூடாது, தாலி என்பது கணவன் மனைவி உறவுக்கான தகுதிதான். தாலியால் அவளைக் கொத்தடிமையாக நடத்துவார்களேயானால் பொங்கி எழவேண்டுமென்கிறார் ஆசிரியர். பெண்களுக்குச் சொத்தில் பங்கு கொடுக்க வேண்டும் என்பது சமுத்திரத்தின் வாதம். “என் நகை, ரொக்கம், சொத்துல பங்கு கிடைக்குமா? கிடைக்காதா? எனக் கேட்கிறாள் மணிமேகலை.

துன்பம் வந்தபோது துவண்டுபோகாமல் துன்பத்தை உரமாகக் கொண்டு தொடர்ந்து செயல்படவேண்டும். தன்னை எதனால் சமூகம் வெறுத்து ஒதுக்கியதோ. அதே தொழுநோயாளிகளுக்கு ஆதரவு இல்லம் அமைக்க எண்ணுகிறாள் மணிமேகலை. தொழுநோயார்களின் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்றையும் அமைக்க எண்ணுகிறாள். பிரச்சனைகளைக் கூறுவதோடு நாவலாசிரியரின் பணி நின்று விடாது. அதனைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வ வழிகளையும் ஆசிரியர் கூறுகிறார். அன்புடைய மனிதநேயம், பிறர் பழிக்காத இல்லற வாழ்க்கை, கணவன் தவறு செய்யும்பொழுது தட்டி, அதட்டிக் கேட்பது எல்லாவற்றிற்கும் மேலாகத் தொழுநோய் ஒன்றும் தீண்டத்தகாததல்ல

ஆதரவற்றவர்களுக்கு அரவணைப்பு தருவது போன்ற பல செய்திகளால் அலங்கரிக்கப்பட்ட அழகான இல்லம்தான் இந்நாவல்.

**நாவலின் மொழி நடை**

”உரைநடையில் அமையும் கற்பனைப் பாங்குமிக்க புனைகதை மனித வாழ்வின் மதிப்புரையாக அமைவது நாவல்” என்று எர்னஸ்ட் எ.பேக்கர் என்பவர் கூறியுள்ளார். நாவலில் கதை முக்கியமானது. கதாபாத்திரங்கள் இன்றியமையாதவர்களாக இருந்தாலும், ஒரு நாவலாசிரியனை இன்னொரு நாவலாசிரியனிடமிருந்து வேறுபடுத்துவது அந்தந்த ஆசிரியரின் மொழி நடையே ஆகும். சு.சமுத்திரத்தின் மொழி நடையை அறிவது அவசியம். ஒவ்வொரு ஆசிரியனின் மொழிநடையும் அவனின் ஆளுமைப்பண்பை வெளிப்படுத்தும். படைப்பாளியின் நடையினை வளர்க்கும். படைப்பாளனும் காலமும் இடமும் நாவலின் நடையைச் செழுமைப்படுத்துகின்றன. இதனையே எஸ்ராபவுண்டு என்னும் அறிஞர் “ஒவ்வொரு காலக்கட்டமும் நினைவிற்குத் தன்கால நடையினை வளர்க்கிறது. ஒவ்வாரு படைப்பாளனும் தன்னுடைய ஆளுமையினை வெளியிட வேண்டும். அதற்காகத் தன் காலநடையில் மாற்றம் செய்கிறான்” என்கிறார்.

ஆசிரியர் சு.சமுத்திரம் இருப்பது திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இந்தப் பின்புலமும், ஆசிரியரின் தனித் தன்மையும் சேர்ந்து அவருடைய மொழிநடையை உருவாக்கியுள்ளது. மணிப்பிரவாள நடையில் தமிழில் வடமொழி கலந்து இருந்தது. தற்போது தமிழில் அளவுக்கதிகமாகவே ஆங்கிலச் சொற்கள் கலந்துள்ளன. எக்ஸ்பிரஸ் ரயில், பிளாட்பாரம், டவுன், கிலோமீட்டர், டிரஸ், பவுடர், பாத்ரூம், ரிசர்வ், கம்பார்ட்மெண்ட் என பல ஆங்கிலச் சொற்கள் இந்நாவலில் இடம் பெற்றுள்ளன. உரையாடும்போது “தம்பி சீரியஸ்ஸீன்னு லட்டர் போட்டிருந்தான்“ என்று தமிழும் ஆங்கிலமும் கலந்து வருகிறது. இது ஆசிரியரின் குறைபாடன்று. நகரப் பாத்திரங்கள் இப்படித்தானே பேசுகின்றன.

கவிதையில்தான் உவமைகள் வருமென்றில்லை. உரைநடையில் சு. சமுத்திரம் கையாளும் உவமைகள், நாம் வாழும் காலத்தைக் காட்டுகின்றன. ரயில் பெட்டிக்குள் சந்திரன் வேகமாக ஏறுவதை ”மண்லாரி போல ரயில் பெட்டிக்குள் ஏறினான்“ என்றெழுதுகிறார். மேகலையோடு வந்த பெண் பாமா அங்குமிங்கும் தத்தளிப்பதைப் ”பல்லவன் பஸ்சுக்காக வழிவிடும் ஆட்டோ ரிக்ஷா போல அங்குமிங்காக ஆடித் தன்னை பேலன்ஸ் செய்துகொண்டாள்” என்றெழுதுகிறார். தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதியைச் சார்ந்த கிராம மக்களின் பேச்சில் தமிழ்க் கிராமிய மணம் வீசும். சான்றாக ”கூத்தாடிப்பய

மவன உன் வேலயப் பாத்துகிட்டு போயமில", ”ஒம்ம புத்திக்கத்தான் இப்படி கூத்து கீத்துன்னு உருப்படாமப் போறீரு” என்னும் தொடர்களைக் கூறலாம்.

மணிமேகலை தன் மகனை அரக்கோணத்தில் விட்டுவிட்டு தூத்துக்குடி வருகிறாள். தந்தைக்குப் பணிவிடை புரிகிறபோதே அழும் குழந்தையும், அதனை அதட்டி அடக்கும் புருஷனும் அவள் மனதில் நிழலாடுகின்றனர். இதனை ஆசிரியர் குறிப்புப் பொருள்படும்படி வருணிக்கிறார். ”பசுமாடு தன் கன்றை நக்கிக் கொண்டிருந்தது. கூடு கட்டிய காகம் கூட்டுக்குள் குஞ்சுக்கு எதையோ கொடுத்துக் கொண்டிருப்பதுபோல் தெரிந்தது. பத்துப் பன்னிரண்டு குஞ்சுகளுடன் வலம் வந்த கோழி, வீட்டுப் பூனையைப் பார்த்து கொக்கரித்தது. தூரத்துப் பாதையில் தெரிந்த பன்றி பின்னால் இடைவெளி போட்டு வந்த தன் குட்டிகள் வந்து சேருவது வரைக்கும் காத்து நின்றது. மாடு, கோழி, பன்றி, காகம் போன்றவை தனக்குப் பிறந்தவைகளை எவ்வாறெல்லாம் பாதுகாக்கின்றன. ஆனால் தான் அவை மாதிரியில்லையே என்னும் குறிப்பை இவ்வருணனை வெளிபடுத்துகிறது.

எழுதும் மொழியில் வாக்கிய அமைப்பு இருக்கும். எந்த வடுவும் இல்லாமல் வரும். பேச்சுமொழியில் இவை வர சாத்தியமில்லை. பொருட்காட்சிப் பார்க்கப் புறப்படும் சூழலில் இடம்பெறும்

“எத்தன பேரு போறீங்க”

மாமா தவிர, எல்லாரும்”

“கார்ல இடம் இருக்காதே”

என்னும் உரையாடல் சமுத்திரத்தின் மொழி நடையினைப் படம் பிடித்துக்காட்டுகிறது. பல வகையான உணர்ச்சிகளையும் மொழி நடை வெளிப்படுத்தும். மணிமேகலை கோபத்தோடு தன் கணவனை நோக்கி, “அறுபது பவுன் நகை வரணும், அப்பா கொடுத்த ரொக்கம் வரணும். சொத்து செட்டில் ஆகணும். என் பிள்ளையும் எனக்கு வேணும்”. என்று உறுதியுடன் பேசுகிறார். மணிமேகலையின் கோபத்தைப் புலப்படுத்தும் மொழிநடை இது.

ஆசிரியர் வாழும் காலத்தையும் அவருடைய இடத்தையும், அவர் பிறந்து வளர்ந்த மக்களையும் புலப்படுத்தும் வகையில் சு. சமுத்திரத்தின் மொழிநடை அமைந்துள்ளது. பேச்சு மொழிநடையை இயல்பாகக் கையாண்டு நாவலுக்குப் பெருமை சேர்த்துள்ளார் ஆசிரியர்

# அலகு – 5

## இலக்கிய வரலாற்று நோக்கில் படைப்பும் படைப்பாளிகளும்

### தொ.மு.சி. ரகுநாதன் நூல்கள்

தொ. மு. சிதம்பர ரகுநாதன் சிறுகதை, நாவல், விமரிசனம், ஆய்வு, மொழிபெயர்ப்பு, நாடகம், வாழ்க்கை வரலாறு எனப் பலதுறைகளிலும் எழுதியவர். பத்திரிகை ஆசிரியராக இருந்தவர். ரகுநாதனின் எழுத்துக்கள் தமிழில் மார்க்சிய சிந்தனைகளை வளர்த்தது. ரகுநாதன் திருநெல்வேலியில் அக்டோபர் 21, 1923ல் பிறந்தார். இவரது முதல் சிறுகதை 1941ல் பிரசண்ட விகடனில் வெளிவந்தது. இந்திய சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக 1942ல் சிறைக்குச் சென்றார். 1944ல் தினமணியில் உதவி ஆசிரியராகவும், பின்பு 1946ல் முல்லை என்ற இலக்கியப் பத்திரிக்கையிலும் பணியாற்றினார்.

இவரது முதல் புதினமான புயல் 1945ல் வெளியானது. அதைத் தொடர்ந்து 1951ல் பஞ்சும் பசியும் என்ற புதினத்தை எழுதினார். இப்புதினம் செக் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு 50000 பிரதிகள் விற்பனையானது. அதே ஆண்டு தனது சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டார். 1954-56 வரை சாந்தி என்ற முற்போக்கு இலக்கிய மாதஇதழை நடத்தினார். அந்த இதழ் மூலம் டேனியல் செல்வராஜ், சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், கி. ராஜநாராயணன் போன்ற இளம் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தினார். அடுத்த பத்தாண்டுகளுக்கு அமைப்புசாரா எழுத்தாளராக பணிபுரிந்தார். 1960ல் சோவியத் நாடு பதிப்பகத்தில் சேர்ந்து நிறைய ரஷியப் படைப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகளைத் தொகுத்து வெளியிட்டார். அவர் மொழிபெயர்ப்பில் குறிப்பிடத்தக்கது மாக்சிம் கார்க்கியின் ‘தாய்’.

அவரது இலக்கிய விமர்சன நூலான பாரதி - காலமும் கருத்தும் 1983ல் சாகித்திய அகாதமி விருது பெற்றது. 1985ல் இளங்கோ அடிகள் யார்? என்ற சமூக வரலாற்று ஆய்வினை வெளியிட்டார். 1988ல் சோவியத் நாடு இதழிலிருந்து ஓய்வு பெற்றார். 2001 டிசம்பர் 31ல் பாளையங்கோட்டையில் காலமானார். தமிழ் எழுத்தாளர் புதுமைப்பித்தன் இவரது நண்பர். 1948ல் புதுமைப்பித்தன் இறந்தபின் அவரது படைப்புகளைச் சேகரித்து வெளியிட்டார். 1951ல் தன் நண்பரின் வாழ்க்கை வரலாற்றை

வெளியிட்டார். 1999ல் புதுமைப்பித்தன் கதைகள் - விமரிசனங்களும் விஷமங்களும் என்ற நூலை வெளியிட்டார்.

1942 முதல் 1962 வரை இவரது எழுத்துலக வாழ்க்கை முழுவேகத்தில் இருந்தது. இவர் ஒரு சோஷியலிச யதார்த்தவாத எழுத்தாளர். தமிழ்நாட்டின் கைத்தறி நெசவாளர்கள் படும்பாட்டைத் தனது பஞ்சும் பசியும் நூலில் தெளிவாகக் காட்டியுள்ளார். அவரது கொள்கைகளை அந்நூல் பிரதிபலிக்கிறது. திருச்சிற்றம்பலக் கவிராயர் என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். ரகுநாதன் மொத்தம் 4 சிறுகதைத் தொகுப்புகள், 3 கவிதைத் தொகுப்புகள், 3 புதினங்கள், 2 நாடகங்கள் மற்றுமொரு வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

**படைப்புகள்**

**சிறுகதை**

- சேற்றில் மலர்ந்த செந்தாமரை
- க்ஷணப்பித்தம்
- சுதர்மம்
- ரகுநாதன் கதைகள்

**கவிதைகள்**

- ரகுநாதன் கவிதைகள்
- கவியரங்கக் கவிதைகள்
- காவியப் பரிசு

**நாவல்**

- பஞ்சும் பசியும்
- புயல்
- முதலிரவு (தமிழ்நாட்டரசால் தடைசெய்யப்பட்டது)
- கன்னிகா

**நாடகம்**

- சிலை பேசிற்று
- மருது பாண்டியன்

**மொழிபெயர்ப்பு**

- தாய் (கார்க்கியின் - தி மதர்)
- லெனினின் கவிதாஞ்சலி (மயகொவ்ஸ்கியின் இரங்கற்பா - விளடிமிர் இலிச் லெனின்)

**விருதுகள்**

- சாகித்திய அகாதமி விருது - 1983
- சோவியத் லேண்ட் நேரு விருது (தாய் மற்றும் லெனினின் கவிதாஞ்சலிக்காக)
- தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை பரிசு
- பாரதி விருது – 2001

## பொன்னீலன்

பொன்னீலன் தமிழ் முற்போக்கு இலக்கியவாதிகளில் குறிப்பிடத்தக்க படைப்பாளி. குமரி மாவட்டம், நாகர்கோயில் அருகே மணிகட்டிபொட்டல் என்ற ஊரில் 1940ல் பிறந்தவர். இவரது அன்னை அழகிய நாயகி அம்மாளும் குறிப்பிடத்தக்க படைப்பாளி. இவரது இயற்பெயர் ஸ்ரீகண்டேஸ்வர பக்தவத்ஸலன். சபாபதி என்று இன்னொரு பெயரும் உண்டு. பொன்னீலன் இளங்கலை படிப்பு முடித்து ஆசிரியர் பயிற்சிபெற்று உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். கல்வி அதிகாரியாகப் பணி நிறைவு பெற்றார். சிறுவயதிலேயே மார்க்சிய ஈடுபாடு கொண்டிருந்த பொன்னீலன் நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளைத் தன் வாழ்க்கையிலிருந்து களைவதை முக்கியமான செயல்பாடாகக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். ஆசிரியர் சங்கம் மூலமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் கிடைத்த உறவு அவருக்கு உதவியது. ஆயினும் நெல்லை மாவட்டத்தில் பணிபுரிந்த நாட்களில் மார்க்ஸிய ஆய்வாளர் நா.வானமாமலையுடன் கொண்ட தொடர்பும் வானமாமலை நடத்திய ‘ஆராய்ச்சி’ என்ற சிற்றிதழுமே தன்னை உருவாக்கிய சக்திகள்

என்று பொன்னீலன் குறிப்பிடுகிறார். தொடக்கத்தில் ஆராய்ச்சி இதழில் கட்டுரைகள் எழுதிவந்தார்.

நெல்லையில் இருந்த நாட்களில் தி. க. சிவசங்கரன் இவருக்கு நெருக்கமானார். தாமரை இதழின் ஆசிரியப்பொறுப்பில் இருந்த அவர் பொன்னீலனை சிறுகதைகள் எழுதும்படி தூண்டினார். முதல் சிறுகதைத் தொகுதி ஊற்றில் மலர்ந்தது 1978ல் வெளிவந்தது. ஆயினும் பொன்னீலனை இலக்கிய கவனத்துக்குக் கொண்டுவந்தது 1976ல் வெளிவந்த கரிசல் என்ற நாவலே. இது அவர் அப்போது பணியாற்றிவந்த கோயில்பட்டி மக்களையும் நிலத்தையும் சித்தரிக்கும் சோஷலிச யதார்த்தவாத நாவலாகும்.

பொன்னீலனின் பெரும் படைப்பு 1992ல் வெளிவந்த ‘புதிய தரிசனங்கள்’ என்ற இரண்டு பாக நாவல். இந்திரா காந்தி அமல்படுத்திய நெருக்கடிநிலைக் காலத்தைச் சித்தரிக்கும் இந்நாவல் ஜனநாயகத்தின் வேர்களைத் தேடும்படைப்பு. அக்காலத்தில் பொன்னீலனின் கட்சி எடுத்த நெருக்கடி நிலைத் தரவு நிலைப்பாட்டை மிகக் கடுமையாக விமரிசிக்கும் படைப்பும் கூட. பொன்னீலன் 1994 ம் வருடத்திற்கான சாகித்ய காதமி விருதைப் புதிய தரிசனங்கள் நாவலுக்காகப் பெற்றார். பொன்னீலனின் உறவுகள் என்ற சிறுகதை, மகேந்திரனால் பூட்டாத பூட்டுகள் என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்தது. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைமைப் பொறுப்பில் நீண்ட காலமாகப் பணியாற்றி வந்தார்.

**படைப்புகள்**

**புதினங்கள்**

- கரிசல்
- கொள்ளைக்காரர்கள்
- புதிய தரிசனங்கள்
- தேடல்
- மறுபக்கம்
- பிச்சிப் பூ
- புதிய மொட்டுகள்
- ஊற்றில் மலர்ந்தது

**சிறுகதைகள்**

- இடம் மாறிவந்த வேர்கள்
- திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன
- உறவுகள்
- புல்லின் குழந்தைகள்
- அன்புள்ள
- நித்யமானது
- சக்தித்தாண்டவம் (தொகுப்பாளர் அழகு நீலா)
- பொட்டல் கதைகள்
- அத்தானிக் கதைகள்

**கட்டுரைகள்**

- புவி எங்கும் சாந்தி நிலவுக ( 10.09. 85 முதல் 02. 10.85 வரையிலான சமாதான யாத்திரை அனுபவங்களின் தொகுப்பு)
- தற்காலத் தமிழிலக்கியமும் திராவிட சித்தாந்தங்களும்
- முற்போக்கு இலக்கிய இயக்கங்கள்
- சுதந்திர தமிழகத்தில் கலை இலக்கிய இயக்கங்கள்
- சாதி மதங்களைப் பாரோம்
- தாய்மொழிக் கல்வி
- தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற வரலாறு
- தெற்கிலிருந்து ( வாழ்க்கை வரலாறு கட்டுரைகள்)
- தமிழ் நாவல்கள்

**வாழ்க்கை வரலாறுகள்**

- ஜீவா என்றொரு மானுடன்
- தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி
- வைகுண்டர் காட்டும் வாழ்க்கை நெறி

- ஒரு ஜீவநதி
- தொ. மு. சி, ரகுநாதன் (இந்திய இலக்கியச் சிற்பிகள்)

**தொகுத்தவை**

- ஜீவாவின் சிந்தனைகள்
- ப. ஜீவானந்தம் நூல் திரட்டு

## சுந்தர ராமசாமி, (மே 30, 1931 - அக்டோபர் 14, 2005)

நவீனத் தமிழ் இலக்கியத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர் சுந்தர சுந்தர ராமசாமி. இவர் ஒரு நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர் எனப் பல இலக்கியவினங்களில் ஆளுமை பெற்றிருந்தார். பசுவய்யா என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர். நவீனத் தமிழ் இலக்கியத்தில், தமிழ் மொழியினை பல்வேறு தளங்களுக்குக் கொண்டு சென்றவர். மார்க்சியக் கண்ணோட்டத்தில் தொடங்கிய இவர் எழுத்துக்கள் இறுதியாக பட்டறிவுத் திறனாய்வு சார்ந்த உய்யநிலை நடப்பியல் நோக்கில் கால்கொண்டன எனலாம்.

இவா் தன் இளமை பருவத்தில், தொ.மு.சி.ரகுநாதனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தொ.மு.சி-யினால் மார்க்ஸிய தத்துவங்களிலும் ஈர்க்கப்பட்டவராகவும் இருந்தார். பிறகு தொ.மு.சி ஆசிரியராக இருந்த சாந்தி என்ற இதழில் எழுதத் தொடங்கினார்.1953 ஆம் ஆண்டு 'சாந்தி' பத்திரிக்கையில் இவர் எழுதிய 'தண்ணீர்' கதைக்கு முதல் பரிசு கிடைத்தது.

சுந்தர ராமசாமி சமூக சீர்திருத்தவாதிகளான காந்தி, பெரியார், அரவிந்தர், இராமகிருஷ்ண பரம அம்சர், இராம் மனோகர் லோகியா, ஜேசி குமரப்பா, ஜே.கிருஷ்ணமூர்த்தி, தமிழ் இலக்கியத்தில் புத்துணர் திறனைப் புகுத்திய புதுமைப்பித்தன் எனப் பலரது நூல்களின் தாக்கத்துக்கு ஆட்பட்டுள்ளார். மேலும் மலையாள இலக்கியச் சுடரான எம். கோவிந்தனை 1957இல் தொடர்பு கொண்டு தொடர்ந்து அவரது நண்பராக கடைசிவரை விளங்கியுள்ளார்.. 1950களில் பொதுவுடைமைத் தோழரான ப. ஜீவானந்தம் அவர்களைச் சந்தித்துள்ளார். அதனால் இவருக்கு மார்க்சியத் தத்துவத் தாக்கம் ஏற்பட்டது. தொ.மு.சி. ரகுநாதன் ஆசிரியராகவிருந்து வெளியிட்ட சாந்தி இதழில் அவரது

இலக்கியத் தொடர்பு உருவானது. மேலும் இவர் சரஸ்வதி இதழில் ஆசிரியக் குழு உறுப்பினராகியதும் எழுத்தாளராக வளர உதவியது.

**படைப்புகள்**

**நாவல்**

- ஒரு புளியமரத்தின் கதை (1966)
- ஜே.ஜே. சில குறிப்புகள் (1981)
- குழந்தைகள் பெண்கள் ஆண்கள் (1998)

**சிறுகதைகள்**

- சுந்தர ராமசாமி சிறுகதைகள் முழு தொகுப்பு (2006)

**கட்டுரைகள்**

- ந.பிச்சமூர்த்தியின் கலை: மரபும் மனிதநேயமும் (1991)
- ஆளுமைகள் மதிப்பீடுகள் (2004)
- காற்றில் கரைந்த பேரோசை
- விரிவும் ஆழமும் தேடி
- தமிழகத்தில் கல்வி: வே.வசந்தி தேவியுடன் ஓர் உரையாடல் (2000)
- இறந்த காலம் பெற்ற உயிர்
- இதம் தந்த வரிகள் (2002)
- இவை என் உரைகள் (2003)
- வானகமே இளவெயிலே மரச்செறிவே(2004)
- வாழ்க சந்தேகங்கள் (2004)
- புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம் (2006)
- புதுமைப்பித்தன் கதைகள் சுரா குறிப்பேடு (2006)
- மூன்று நாடகங்கள் (2006)
- வாழும் கணங்கள் (2005)

**கவிதை**

- சுந்தர ராமசாமி கவிதைகள் முழு தொகுப்பு (2005)

**மொழிபெயர்ப்பு**

- செம்மீன் - தகழி சங்கரப்பிள்ளை(1962)
- தோட்டியின் மகன்(புதினம்) - தகழி சங்கரப்பிள்ளை(2000)
- தொலைவிலிருக்கும் கவிதைகள்(2004)

**விருதுகள்**

- குமரன் ஆசான் நினைவு விருது.
- இயல் விருது – தமிழ் இலக்கியத் தோட்டம் 2001 இல் வாழ்நாள் சாதனைக்காகப் பெற்றார்.
- கதா சூடாமணி விருது (2004)

## நாஞ்சில் நாடன்

எழுத்தாளர் நாஞ்சில் நாடன் திசம்பர் 31, 1947-ல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வீர நாராயணமங்கலம் என்னும் ஊரில் பிறந்தவர். நவீனத் தமிழ் இலக்கியத்தின் முக்கியப் படைப்பாளர்களில் ஒருவர். இவரது இயற்பெயர் க.சுப்பிரமணியம். துணைவியார் பெயர் சந்தியா சுப்பிரமணியம். வேலையின் காரணமாகப் பல ஆண்டுகள் மும்பையில் வாழ்ந்தார். தற்போது கோயம்புத்தூரில் வாழ்ந்து வருகிறார்.

இவர் நகைச்சுவையும் சமூகவிமர்சனமும் இழையோடும் படைப்புகளுக்காகப் புகழ்பெற்றவர். தமிழ் மரபிலக்கியத்தில் உள்ள தேர்ச்சி இவரது படைப்புகளில் வெளிப்படும். கம்பராமாயணத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவர். ‘தெய்வங்கள் ஓநாய்கள் ஆடுகள்’ என்ற சிறுகதைத் தொகுதி மூலம் புகழ்பெற்றார். தலைகீழ் விகிதங்கள் இவரது முதல் நாவல் ஆகும். இவரின் மிக முக்கியமான அடையாளம் நாஞ்சில் நாட்டு வட்டார வழக்கிலான எழுத்துநடை. தலைகீழ் விகிதங்கள் நாவலை இயக்குநர் தங்கர்பச்சான் ‘சொல்ல மறந்த கதை’ என்ற பெயரில் திரைப்படமாக்கினார்.

**படைப்புகள்**

**புதினங்கள்**

- தலைகீழ் விகிதங்கள் (1977)
- என்பிலதனை வெயில்காயும் (1979)
- மாமிசப்படைப்பு (1981)
- மிதவை (1981)
- சதுரங்கக் குதிரை (1993)
- எட்டுத் திக்கும் மதயானை (1998)

**சிறுகதைகள்**

- தெய்வங்கள் ஆடுகள் ஓநாய்கள் (1981)
- வாக்குப்பொறுக்கிகள் (1985)
- உப்பு (1990)
- பேய்க்கொட்டு (1994)
- பிராந்து (2002)
- நாஞ்சில் நாடன் கதைகள் (2004)
- சூடிய பூ சூடற்க
- முத்துக்கள் பத்து (தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு)
- கான் சாகிப்
- கொங்குதேர் வாழ்க்கை

**கவிதை**

- மண்ணுள்ளிப் பாம்பு (2001)
- பச்சை நாயகி
- வழுக்குப்பாறை
- புளிக்கும் ஆப்பழம்

**கட்டுரைகள்**

- நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் வாழ்க்கை (2003)
- நஞ்சென்றும் அமுதென்றும் ஒன்று (2003)
- நதியின்பிழையன்று நறும்புனல் இன்மை
- தீதும் நன்றும்
- திகம்பரம்.
- காவலன் காவான் எனின்
- அம்பறாத்தூணி (கம்பராமாயணம் குறித்த கட்டுரை தொகுதி)
- அகம் சுருக்கேல்
- எப்படிப் பாடுவேனோ?
- கைம்மண் அளவு (குங்குமம் வார இதழ் கட்டுரைகள்)

**விருதுகளும்**

- 2010ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது இவரது சூடிய பூ சூடற்க என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு வழங்கப்பட்டது.
- கனடாவின் இலக்கியத்தோட்டத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான இயல்விருது தொராண்டோவில் இவருக்கு அளிக்கப்பட்டது.

## வண்ணதாசன்

வண்ணதாசன் என்ற புனைப்பெயரில் சிறுகதைகளும், கல்யாண்ஜி என்ற புனைப்பெயரில் கவிதைகளும் எழுதுபவரின் இயற்பெயர் சி.கல்யாணசுந்தரம் இவர் திருநெல்வேலியில் பிறந்தவர். இவரது தந்தை இலக்கியவாதி தி. க. சிவசங்கரன் ஆவார்.இவர் தந்தையும் சாகித்ய அகாதமி விருது பெற்றவர். நவீன தமிழ்ச் சிறுகதை உலகில் மிகுந்த கவனம் பெற்ற எழுத்தாளரான வண்ணதாசன், தீபம் இதழில் எழுதத் துவங்கியவர். 1962 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தொடர்ந்து சிறுகதைகள் எழுதி வருகிறார். இவரது சிறுகதைகள் பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

**படைப்புகள்**

**சிறுகதைத் தொகுப்புகள்**

- கலைக்க முடியாத ஒப்பனைகள்
- தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்
- சமவெளி
- பெயர் தெரியாமல் ஒரு பறவை
- மனுஷா மனுஷா
- கனிவு
- நடுகை
- உயரப் பறத்தல்
- கிருஷ்ணன் வைத்த வீடு
- ஒளியிலே தெரிவது (உயிர்மை - சுஜாதா அறக்கட்டளை இணைந்து வழங்கிய 2011ஆம் ஆண்டில் சிறுகதைக்கான சுஜாதா விருதைப் பெற்றது)
- சில இறகுகள் சில பறவைகள்
- ஒரு சிறு இசை

**புதினங்கள்**

- சின்னு முதல் சின்னு வரை

**கவிதைகள்**

- புலரி
- முன்பின்
- ஆதி
- அந்நியமற்ற நதி
- மணல் உள்ள ஆறு

**கட்டுரைகள்**

- அகம் புறம்

**கடிதங்கள**

- வண்ணதாசன் கடிதங்கள்

**விருதுகள்**

- 'ஒரு சிறு இசை' – சாகித்திய அகாதமி விருது (2016)
- இலக்கியச் சிந்தனை விருது
- விஷ்ணுபுரம் விருது (2016)
- கணடா தமிழ் இலக்கியத் தோட்டம் - தமிழ் இலக்கியத்திற்கான வாழ்நாள் சாதணையாளர் விருது (2018)
- தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 'மதிப்புறு முனைவர்' பட்டம் வழங்கியுள்ளது.

## தோப்பில் முகமது மீரான்

தோப்பில் முகமது மீரான் (செப்டம்பர் 26, 1944 - மே 10, 2019) தமிழ் எழுத்தாளர். இஸ்லாமிய வாழ்க்கையைச் சித்தரிக்கும் எழுத்தாளர்களில் முதன்மையானவராகக் கணிக்கப்படுகிறார். கன்னியாகுமரி மாவட்டத்தின் கடலோர மண் சார்ந்த இஸ்லாமியக் கலாச்சாரத்தையும், வாழ்க்கையையும், வட்டார வழக்கையும் தன் படைப்புகளில் எழுதியுள்ளார். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முகம்மது மீரான் கல்வி பயின்றது மலையாள மொழியில். இவர் மலையாளத்தில் எழுதியபோது கேரள வழக்கப்படி தன்னுடைய தாயின் குடும்பப்பெயரான தோப்பில் என்பதைத் தன் பெயருடன் சேர்த்துக்கொண்டார். ஆனால், தேங்காய்ப்பட்டிணத்தில் அவரது வீட்டு மதிலுக்குப் பின்பக்கம் தோப்பு என்னும் பெயரால் ஒரு சுடுகாடு இருந்தது என்றும், ஒடுக்கப்பட்டவர்களை எழுதுபவர் என்பதால் தன் பெயரைத் தோப்பில் முகமது மீரான் என்று வைத்துக் கொண்டதாகவும் மீரான் ஒரு நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். தோப்பில் முகமது மீரான் நெல்லை மாவட்டத்தில் விளையும் வத்தல் மிளகை விவசாயிகளிடமிருந்து வாங்கி குமரிமாவட்டம், கேரளத்தின் திருவனந்தபுரம் மாவட்டம் பகுதிகளிலுள்ள மளிகை வணிகர்களுக்கு மொத்தமாக விற்கும் வணிகம் செய்துவந்தார். 2007 ல் பக்கவாதத் தாக்குதலுக்குப் பின் வணிகம் செய்வதை நிறுத்திக்கொண்டார்.

திருநெல்வேலியில் வாழ்ந்தார். நெல்லையில் தி.க.சிவசங்கரன் போன்றவர்களுக்கு அணுக்கமானவராக இருந்தார்.

மலையாளம், அரபி, நாகர்கோவில் வட்டார வழக்கு, இஸ்லாமியர்களின் தனிப்பட்ட பேச்சு வழக்கு மற்றும் இஸ்லாமிய சமயத்தின் தொன்மக் குறியீடுகள் ஆகியவற்றின் கலவையான நடையில் முகமது மீரான் தமது புனைகதைகளை எழுதினார்.

**படைப்புகள்**

**நாவல்கள்**

முகம்மது மீரான் மலையாள எழுத்தாளர் வைக்கம் முகமது பஷீரின் எழுத்துக்களால் மிகவும் கவரப்பட்டார். அவரது எழுத்துப் பணி மலையாளத்தில் தொடங்கியது. திருவனந்தபுரத்தில் வசித்த எழுத்தாளர் ஆ. மாதவனுடன் ஏற்பட்ட நட்பால் தமிழ் நூல்களைப் படிக்கத் தொடங்கி, விரைவில் தமிழில் எழுதவும் தொடங்கினார். மீரான் முதன் முதலில் எழுதிய ஒரு கடலோர கிராமத்தின் கதையில் இஸ்லாமியச் சமூகத்தின் பழமையான அதிகாரக் கட்டமைப்பைக் காட்டி,பொருளியல் அதிகாரமும் மதமும் ஒன்றுக்கொன்று கருவியாகி எளிய மக்களைச் சுரண்டுவதைச் சித்தரித்தார். அவரது தந்தை எம்.ஓ. முகமது அப்துல் காதர், கடலோர கிராமங்களைப் பற்றிச் சொன்ன கதைகளே ஒரு கடலோர கிராமத்தின் கதையாக விரிந்ததாக குறிப்பிடுகிறார். இந்நாவலை எம்.சிவசுப்ரமணியம் மொழிச்செம்மை செய்து உதவினார். 1977-ல் முஸ்லீம் முரசு பத்திரிகையில் வெளிவந்த இந்த நாவல் இலக்கியச்சூழலில் கவனிக்கப்படவில்லை. 1988-ம் ஆண்டு தானே அதைப் பதிப்பித்தார். ஒரு கடலோர கிராமத்தின் கதை இலக்கிய உலகின் கவனத்தைப் பெற்றது. எழுத்தாளர் சுந்தர ராமசாமி அதைத் தமிழின் ஒரு முக்கியமான நாவலாகக் கருதினார்.

குமரி மாவட்டத்தில், இந்திய தேசத்தின் சுதந்திரத்துக்கு முன் நடக்கும் சம்பவங்களைப் பிணைத்து கடலை நம்பி வாழ்ந்த இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மக்களின் வாழ்வை அந்த காலகட்டத்தினூடாகச் சித்தரித்த நாவல் ‘துறைமுகம்’. ஒரு காலத்தில் கேரள மன்னர் ஐந்து முஸ்லீம் நெசவாளர்களை ஒரு கிராமத்தில் குடிவைக்கிறார். அவர்களால் உருவாகிய அஞ்சுவண்ணம் தெருவில் வாழும் மாறுபட்ட மனிதர்களின் வாழ்க்கையை அதன் வரலாற்றுடனும். தொன்மத்துடனும் அழியா நினைவுகளுடன் பதிவு செய்திருக்கிறார் முகமது மீரான். மண்ணின் மரபான வாழ்க்கை

நோக்குக்கும் புதிதாய் முளைத்துவரும், கல்வி பெற்ற உலகளாவிய நோக்குக்குமான மோதலே அஞ்சுவண்ணம் தெரு நாவல்.. 1970-களில் திருவனந்தபுரம் மாவட்டத்தின் கடலோரப் பகுதியான பூவாற்றில் மீனவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் நடந்த மோதலை அடிப்படையாகக் கொண்டது கூனன் தோப்பு.சாகித்ய அகாடமி விருது பெற்ற சாய்வு நாற்காலியும் வீழ்ச்சியின் கதையே.

மீரான் அடித்தள இஸ்லாமிய மக்களின் வாழ்க்கையை எழுதியவர். மதநம்பிக்கையின் பெயரிலான மோசடிகளை கண்டித்தார். மத அடிப்படைவாதத்துக்கும் எதிரானவர். எளியமக்களின்பால் பரிவு கொண்டவை அவருடைய நாவல்கள்.

- ஒரு கடலோரக் கிராமத்தின் கதை (1988)
- துறைமுகம் (1991)
- கூனன் தோப்பு 1993)
- சாய்வு நாற்காலி (1997)
- அஞ்சுவண்ணம் தெரு (2010)

**சிறுகதைகள்**

மீரான் சிறுகதைகளின் பேசு பொருள்கள் மனித சமூகம் முழுமைக்குமானவை. பழமை, பாரம்பரியம், மரபு இவற்றைச் சிதைத்து மாறிவரும் நவீன உலகத்தின் அகப்புற முரண்களை அவரது சிறுகதைகள் பேசுகின்றன.

- அன்புக்கு முதுமை இல்லை
- தங்கராசு
- அனந்தசயனம் காலனி
- ஒரு குட்டித் தீவின் வரிப்படம்
- தோப்பில் முகமது மீரான் கதைகள்

**மொழிபெயர்ப்புகள்**

முகமது மீரான் மலையாளத்திலிருந்து சில முக்கியமான ஆக்கங்களைத் தமிழில் மொழியாக்கம் செய்திருக்கிறார். வைக்கம் முகமது பஷீரின் வாழ்க்கை வரலாறு அவற்றுள் ஒன்று.

- தெய்வத்தின் கண்ணே (என்பி. முகமது)
- வைக்கம் முகமது பஷீர் வாழ்க்கை வரலாறு (ஆய்வுக் கட்டுரை) ( எம். என். கரச்சேரி)
- ஹுஸ்னுல் ஜமால்- (மொயின் குட்டி வைத்தியர்)
- த்ரிகோட்டூர் பெரும-(யு.ஏ.காதர்)

**விருதுகள்**

- சாகித்திய அகாதெமி விருது – சாய்வு நாற்காலி (1997)
- தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற விருது
- இலக்கியச் சிந்தனை விருது
- லில்லி தேவசிகாமணி விருது
- தமிழக அரசு விருது
- அமுதன் அடிகள் இலக்கிய விருது
- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருது
- எஸ்.ஆர்.எம், தமிழ்ப்பேராய விருது 2012-அஞ்சுவண்ணம் தெரு

## நீல பத்மநாபன்

நீல பத்மநாபன் என்னும் நீலகண்டப்பிள்ளை கன்னியாகுமரி மாவட்டம் இரணியலில் 1938 ஏப்ரல் 26 ஆம் நாள் நீலகண்டப்பிள்ளை - சானகி அம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார். தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்களுள் ஒருவர். புதினம், சிறுகதை, கட்டுரை, கவிதை என பல வகைகளிலும் எழுதுபவர். இலையுதிர் காலம் புதினத்துக்காக 2007ஆம் ஆண்டின் தமிழ் நூல்களுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ள நீல பத்மநாபன், பொறியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரின் படைப்புகள் கடந்த 25 ஆண்டுகளாக நவீனத்துவ வடிவ இலக்கணத்தால் மதிப்பிடப்பட்டு எதிர்மறைகள் சுட்டப்பட்டுள்ளன.

நீல பத்மநாபன் கல்லூரியில் பயிலும்பொழுதே, கேரள பணியாளர் தேர்வாணையத் தேர்வை எழுதி வெற்றி பெற்றிருந்தார். எனவே கல்லூரிக் கல்வி முடிந்ததும் திருச்சூரில்

அரசு அலுவலகம் ஒன்றில் சில காலம் பணியாற்றினார். தந்தை வற்புறுத்தலினால் அவ்வேலையைத் துறந்து பொறியியல் படிக்கச் சென்றார். 1963ஆம் ஆண்டில் கேரள மாநில மின்வாரியத்தில் இளநிலை மின்பொறியாளராகப் பணியிற் சேர்ந்தார். படிப்படியாக உயர்ந்து 1993 ஆம் ஆண்டில் துணை முதன்மைப் பொறியாளராக பணி ஓய்வு பெற்றார.

”கதைக் கருவைத்தேடி நான் ஒரு போதும் அலைந்திருக்கவில்லை. ஒரு பிரத்யேக கணத்தின் தெறிப்பில், ஏனோ ஒரு சொல்லத்தெரியாத தன்மையில் சிலிர்த்துப்போய் நேரிலும் காணும், சொல்லிக்கேட்கும் சில கருத்துக்களை மட்டும் என் மனம் சுவீகரித்துக் கொள்கிறது. உதறினாலும் விலகாமல் உள்ளத்தில் இறுகப்பற்றிக்கொள்ளும் இந்தக்கரு தன்னை எடுத்தாள என்னை விடாப்பிடியாக நிர்பந்திக்கிறது. இரும்பு இதயம் படைத்தவர்களுக்காக நான் எழுதவில்லை. காரணம் எனக்கு இரும்பு இதயம் இல்லை என்பதுதான். என்னைப்போல் சாதாரண ஆசை நிராசைகள் கொண்ட சாதாரண மனித ஜீவிகளுடன் என் பிரச்னைகள், உணர்ச்சிகளை, வியப்புகளை, வெறுப்புகளை பரிமாறிக்கொள்ளவே நான் எழுதுகிறேன்” என்று நீல பத்மநாபன் தன்னைப் பற்றி குறிப்பிட்டதுண்டு.

**படைப்புகள்**

**புதினங்கள்**

- தலைமுறைகள் (1968)
- பள்ளிகொண்டபுரம் (1975)
- பைல்கள் (1973)
- உறவுகள் (1975)
- மின் உலகம் (1976)
- நேற்று வந்தவன் (1978)
- உதய தாரகை (1980)
- வட்டத்தின் வெளியே (1980)
- பகவதி கோயில் தெரு (1981)
- போதையில் கரைந்தவர்கள் (1985)
- தீ தீ
- முறிவுகள்

- தேரோடும் வீதி (1987)
- பாவம் செய்யாதவர்கள் (1991)
- வெள்ளம் (1994)
- கூண்டினுள் பட்சிகள் (1995)
- யாத்திரை அனுபவங்கள் சமர் (1997)
- அனுபவங்கள்
- சமர்
- இலை உதிர் காலம் (2005)

2004 ஆம் ஆண்டில் மேற்கண்ட அனைத்துப் புதினங்களும் அடங்கிய தொகுப்பு 'நீல பத்மநாபனின்' நாவல்கள் என்னும் தலைப்பில் வெளிவந்தது.

**சிறுகதைகள்**

- மோகம் முப்பது ஆண்டு (1969)
- சண்டையும் சமாதானமும் (1972)
- மூன்றாவது நாள் (1974)
- இரண்டாவது முகம் (1978)
- நாகம்மாவா? (1978)
- சிறகடிகள் (1978)
- சத்தியத்தின் சந்நிதியில் (1985)
- வான வீதியில் (1988)
- அவரவர் அந்தரங்கம் (1998)
- பிறவிப் பெருங்கடல் (2008)
- என்னைப்போல் இருவர் (2012)
- ரௌத்திரம்
- நொண்டிப் புறா
- பூஜை அறை
- பகை

2000 ஆம் ஆண்டு வரை இவரால் எழுதப்பட்ட சிறுகதைகள் அனைத்தும் அடங்கிய தொகுப்பு 'நீல பத்மநாபன்' கதைகள் என்னும் பெயரில் வெளிவந்தது.

**கவிதைகள்**

- நீல பத்மநாபன் கவிதைகள்(1975)
- நா காக்க (1984)
- பெயரிலென்ன (1993)

2003ஆம் ஆண்டு வரை இவரால் எழுதப்பட்ட கவிதைகள் அடங்கிய தொகுப்பு 'நீல பத்மநாபனின் 148 கவிதைகள்' என்னும் தலைப்பில் 2003 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

**கட்டுரைகள்**

- சிதறிய சிந்தனைகள் (1978)
- இலக்கியப் பார்வைகள் (1988)
- சமூகச் சிந்தனை (1991)
- யாரிடமும் பகையின்றி (1993)
- வாழ்வும் இலக்கியமும் (1997)
- நவீன இலக்கியம் - சில சிந்தனைகள் (2001)
- இன்றைய இலக்கியச் செல்நெறிகள் (2003)
- ஐயப்ப பணிக்கரின் ஆளுமையும் சில படைப்பு மாதிரிகளும் (2006)
- உணர்வுகள் சிந்தனைகள் (2008)
- பார்வைகள் மறுபார்வைகள் (2010)

2005 ஆம் ஆண்டு வரை இவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் அடங்கிய தொகுப்பு நீல பத்மநாபனின் கட்டுரைகள் என்னும் தலைப்பில் 2005 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

**நாடகத் தொகுதி**

- தனிமரம் (2009)

**திரட்டுநூல்**

- குரு சேத்திரம் (1976)

**மொழிபெயர்ப்புகள்**

- தற்கால மலையாள இலக்கியம் - 1985,
- மதிலுகள் - நவீன மலையாள இலக்கியம் (2000)
- ஐயப்பப் பணிக்கரின் கவிதைகள் (1999)
- ஐயப்பப் பணிக்கரின் கோத்ர யானம் (2002)

**விருதுகள்**

- உறவுகள் என்னும் புதினம் ராஜா அண்ணாமலைச் செட்டியார் பரிசினைப் பெற்றது.
- தமிழ் அன்னை விருது
- முதியோர் இல்லத்தைக் கதைக் களனாகக் கொண்டு நீல பத்மநாபன் எழுதிய இலை உதிர் காலம் புதினம், 2007ஆம் ஆண்டின் தமிழ் நூல்களுக்கான சாகித்திய அகாதமி விருது, கோவை கஸ்தூரி சீனிவாசன் அறநிலையத்தின் ரங்கம்மாள் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மொழிபெயர்ப்பிற்கான சாகித்திய அகாதமி விருது
- தமிழ்நாடு அரசு விருது
- மைசூர் சிஜஜஆரின் பாஷா பாரதி பரிசு

## ஸ்ரீதரகணேசன்

எழுத்தாளர் ஸ்ரீதரகணேசன் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர். பெரிய படிப்போ, உத்தியோகமோ, வேறு வசதியோ வாய்க்காதவர். தொழிலாளி, தமிழ் இலக்கிய உலகுக்குப் புதியவர். இவர் 1977 முதல் எழுதி வருகிறார். இவரது படைப்புகள் கணையாழி, தாமரை, செம்மலர், கவிதாசரன், கோடங்கி உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் வெளியாகியுள்ளன. சிறுகதை, நாவல், குறுநாவல் என பல தளங்களிலும் செயல்படும் படைப்பாற்றல் மிக்கவர். இளம் வயதில் நாடகங்கள் நடிப்பதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். ஜெயகாந்தனின் எழுத்துக்களினால் வசீகரிக்கப்பட்டு எழுத்துலகுக்கு வந்தரர்.

இவர் மார்க்சியப் பார்வை கொண்டவர். சமுகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் கூலித் தொழிலாளர்களின் வாழ்வியல் துயரங்களை தன் எழுத்தில் வடிப்பவர்.

'உப்புவயல்' இவருடைய முதல் நாவல். உப்பளத் தொழிலாளர்களாக உருமாறியுள்ள தூத்துக்குடி வட்டார அரிசன சகோதரர்களின் வாழ்வைச் சித்தரிக்கும் நாவல் இது. ஒதுக்குப்புற விளிம்பில், மக்கிப்போன சேரியில் வாழும் இவர்களின் நம்பிக்கைக் கனவுகளை வேகமாக வளர்ந்து வரும் புதிய முதலாளித்துவம் எப்படியெல்லாம் சிதைத்துச் சின்னாபின்னமாக்குகிறது என்பதை உப்புவயல் நாவல் வழி வெளிக்காட்டுகிறார் ஸ்ரீதரகணேசன்.

**படைப்புகள்**

**சிறுகதைகள்**

- மீசை (2009)

**நாவல்கள்**

- உப்புவயல் (1995)
- வாங்கல் (2001)
- சந்தி (2001)
- அவுரி (2006)

**குறுநாவல்**

- விரிசல் (2007)

**விருதுகள்**

- நெருப்புக் குமிழிகள் - சிறுகதை - கேரள தமிழ்ச்சங்கம்
- நடத்திய சிறுகதைப் போட்டி - முதல்பரிசு (1980)
- உப்புவயல் தமிழக அரசின் பரிசு (1996)
- உப்புவயல் - கரூர் பத்மாவதி மரல்டின் விருது (1996)
- உப்புவயல் - தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன் நத்தின்
- சிறந்த நாவலுக்கான விருது (1996)

- சந்தி – திருப்பூர் கலை இலக்கியப் பேரவை நடத்திய சுதந்திர பொன்விழா நாவல் போட்டி – முதல் பரிசு (1999)
- வாங்கல் - தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருது (2001)
- அவுரி – தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி தலித் எழுத்தாளர்கள் கூட்டமைப்பின் சார்பாக சிறந்த தலித் நாவலுக்கான ‘பாலம்’ விருது (2008)
- வரிசல் - தமிழக அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலவாழ்வுத் துறையின் சார்பாக வழங்கப்படும் சிறந்த நாவலாசிரியருக்கான விருது

## சோ.தர்மன்

சோ. தர்மன் (சோலையப்பன் தர்மராஜ்) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்திலுள்ள கடலையூருக்கு அருகில் உருளைகுடி என்னும் ஊரில் மீ.சோலையப்பன் - பொன்னுத்தாய் ஆகியோருக்கு ஆகஸ்ட் 8, 1953 ல் பிறந்தார். கரிசல்நில எழுத்தாளர்கள் என்று சொல்லப்படும் படைப்பாளிகளில் ஒருவர். நாவல், சிறுகதை, நாட்டாரியல் என செயல்பட்டு வருபவர். தமிழிலக்கியத்தில் தொண்ணூறுகளில் உருவான இயல்புவாத இலக்கிய அலையில் தனியிடம் பெற்றவர்.

1976 முதல் 1996 வரை இருபதாண்டுகள் கோவில்பட்டியிலுள்ள லாயல் டெக்ஸ்டைல் மில் என்னும் தனியார் தொழில்நிலையத்தில் பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றவர். அதன் பின்னர் முழு நேர எழுத்தாளராக கோவில்பட்டியில் வசித்து வருகிறார். சோ.தர்மன் இருபதாண்டுகள் தொழிற்சங்கப்பணிகளில் இருந்தார். அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் அமைப்பின் பொறுப்பில் இருந்தார்.

இவர் தனது தாய்மாமனான எழுத்தாளர் பூமணியிடமிருந்து எழுத்தாளராகும் ஊக்கத்தை அடைந்தார். கி.ராஜநாராயணன், சி.கனகசபாபதி, ஜோதிவினாயகம், தேவதச்சன் ஆகியோரால் வழிநடத்தப்பட்ட கோயில்பட்டியின் இலக்கியச் சூழலில் உருவானவர் சோ.தர்மன். கோயில்பட்டி பகுதியின் கரிசல் காட்டின் இலக்கிய முன்னோடியான கி.ராஜநாராயணின் எழுத்துக்களை முன்னுதாரணமாக கொண்டவர். கோயில்பட்டியில் எழுபதுகளில் தொடர்ச்சியாக நடந்துவந்த இலக்கிய உரையாடல்கள்

சோ.தர்மனின் இலக்கியப்பார்வையை வடிவமைத்தன. தொழிற்சங்க அரசியலின் சிக்கல்களும் அவரை எழுதத் தூண்டின.

ஆனால் முக்கியமாக அவருடைய எழுத்துக்கான தூண்டுதல் கரிசல்நிலத்தில் நிகழ்ந்து வந்த தொடர்மாற்றங்களில் இருந்து எழுந்தது. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கரிசல்நிலத்தில் பருத்தி முதலிய கரிசல்பயிர்கள் இழப்பு தருவனவாக ஆயின. கண்மாய்கள் (ஏரிகள்) சார்ந்தே வேளாண்மை நடந்துவந்த கரிசலில் அந்நீர்நிலைகள் கைவிடப்பட்டு பராமரிப்பின்றி அழிந்தன. மக்கள் தொடர்ச்சியாக ஊரைவிட்டு வெளியேறவே கிராமங்கள் ஆளில்லாமல் விடப்பட்டன. மில் தொழிலாளியாக இருந்தாலும் சோ.தர்மன் தன்னை விவசாயியாகவே உணர்பவர். இந்த வீழ்ச்சி அவருள் வாழ்ந்த விவசாயியை துயரமும் சீற்றமும் கொள்ளச்செய்ததன் விளைவுகளே அவருடைய கதைகள். சோ.தர்மன் தன் பெரும்பாலான நாவல்களிலும் கதைகளிலும் உருளைக்குடி என்னும் சிற்றூரையே களமாக கொண்டு எழுதியிருக்கிறார்.

1980-ல் மதுரையிலிருந்து வெளிவந்த மகாநதி இதழில் வெளியான விருவு என்பது சோ.தர்மனின் முதல் சிறுகதை. தொடர்ச்சியாக இலக்கியச் சிற்றிதழ்களில் சிறுகதைகளை எழுதினார். அன்பின் சிப்பி, ஈரம், சோகவனம், வனக்குமாரன் உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளையும்,ஐந்து நாவல்களையும் எழுதியுள்ளார்.

சோ.தர்மனின் முதல் நாவல் தூர்வை 1996-ல் சிவகங்கை அன்னம் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. அத்தியாயப் பகுப்புகள் இல்லாமல் ஒரே உரைநடை ஓட்டமாக எழுதப்பட்டது அந்நாவல். சோ.தர்மனின் நாவல்களில் முதன்மையானதாகக் கருதப்படுவது கூகை. ஒடுக்கப்பட்ட மக்களின் குறியீடாகவே கூகை அதன்பின்னர் மாறியது. பா.ரஞ்சித் முன்னெடுப்பில் தலித் இயக்க கலை அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டபோது அதற்கு கூகை என்று பெயரிடப்பட்டது. 2019 க்கான சாகித்ய அகாதமி விருது அவர் எழுதிய சூல் நாவலுக்கு வழங்கப்பட்டது. பதிமூன்றாவது மையவாடி (2020) நாவல் உருளைக்குடி கிராமத்திலிருக்கும் கருத்தமுத்துவை மையமாகக் கொண்ட கதையாகும். ஒரு கிராமத்திலிருந்து கல்வியின் நிமித்தம் வெளியே சென்று உலகத்தை அவன் அனுபவங்களால் கற்றுக் கொள்வதாக கதை விரிகிறது. வௌவால்தேசம் (2022) பகடியுடன் சூழ்ந்திருக்கும் சமூக வீழ்ச்சியைச் சித்தரிக்கும் நாவல்.

நாட்டாரியல் சார்ந்த செய்திகளை சேகரித்து ஆவணப்படுத்துவதில் ஈடுபாடு கொண்டவர் சோ.தர்மன். வில்லிசைக்கலைஞர் பிச்சைக்குட்டி பற்றிய வாழ்க்கைவரலாற்று

நூல் எழுதியிருக்கிறார். கி.ராஜநாராயணன், ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், வெங்கட்சாமிநாதன் ஆகியோரை இலக்கியத்தில் தனக்கு அணுக்குமாகக் கருதுபவர், அவர்களுடன் உரையாடலில் இருந்தவர்.

சோ.தர்மன் சுற்று சூழல் விழிப்புணர்வையும், இயற்கையோடு இயைந்த வாழ்வையும் மரபின் அறிவையும் பண்பாட்டையும் எடுத்துரைப்பதில் ஆர்வம் கொண்டவர். அரசின் குத்தகை கண்மாய்களில் ஆடு, மாடு நீர் அருந்த அனுமதிக்கப்படவில்லை. மேய்ப்பவர் அடித்து விரட்டப்படுகிறார் என்ற அவரின் ஆதங்கமான முக நூல் பதிவை மேற்கோள்காட்டி மதுரை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**இலக்கிய இடம்**

சோ.தர்மனின் பெரும்பாலான நாவல்கள் உருளைக்குடி என்னும் அவருடைய சொந்த ஊரைக் களமாகக் கொண்டவை. சென்ற ஐம்பதாண்டுகளில் வேளாண்மையில் உருவான சரிவும், அதன் விளைவாக கிராமச் சமூக அமைப்பில் உருவான சிதைவும், அதன் வழியாக மானுட உறவுகளில் உருவாகும் சிக்கல்களுமே அவருடைய பேசுபொருளாகும். சோ.தர்மனை இயல்புவாத அழகியல் கொண்ட படைப்பாளி என விமர்சகர் ஜெயமோகன் மதிப்பிடுகிறார். ஆசிரியரின் இடையீடின்றி மெய்யான தகவல்கள் வழியாகவும், உணர்ச்சியற்ற மிகையற்ற சித்தரிப்பு வழியாகவும் ஒரு நம்பகமான வாழ்க்கைக்களத்தை உருவாக்கி அதிலிருந்து வாசகர்கள் தங்கள் முடிவுகளுக்குச் செல்லச்செய்வது சோ.தர்மனின் எழுத்துமுறையாகும்.

சோ.தர்மன் பிறப்பால் தலித் என அடையாளப்படுத்தப்படும் சாதியைச் சேர்ந்தவர். ஆனால் அத்தகைய அடையாளங்கள் இலக்கியத்திற்கு எவ்வகையிலும் தேவையானவை அல்ல என்னும் கருத்து கொண்டவர். இடதுசாரி அமைப்புகளுடன் முப்பதாண்டுகள் இணைந்து செயல்பட்டவர். ஆனால் இடதுசாரிக் கருத்துக்களை இலக்கியத்தின் பேசுபொருள் ஆக்கக்கூடாது என்றும், இலக்கியவாதியின் பார்வையை அந்தக் கொள்கைகள் முடிவுசெய்யக்கூடாது என்றும் சொல்பவர். தன்னை தன் கிராமத்தின் கதையை இயல்பாக சொல்ல முற்படும் கதைசொல்லியாக உருவகம் செய்துகொள்பவர். இலக்கியத்தை கற்றறிந்தவராயினும் தன் எழுத்து சாமானியனின் குரலாக மட்டுமே ஒலிக்கவேண்டும் என எண்ணுபவர். சோ.தர்மனின் எழுத்தில் கி.ராஜநாராயணன்,பூமணி இருவருடைய செல்வாக்கும் உண்டு. தமிழிலக்கியத்தில் சாமானியனின் அறச்சீற்றத்தையும் வரலாற்றுணர்வையும் வெளிப்படுத்தியவை அவருடைய படைப்புகள். கு.அழகிரிசாமி, கி.ரா.,

பூமணிக்கு அடுத்த நிலையில் கரிசல் மண்ணின் ஆளுமை சோ.தர்மன்" என்று எழுத்தாளர் கோணங்கி குறிப்பிடுகிறார்.

**படைப்புகள்**

**நாவல்கள்**

- தூர்வை (1996)
- கூகை
- சூல் (2016)
- பதிமூன்றாவது மையவாடி (2020)
- வௌவால் தேசம் (2022)

**சிறுகதைகள்**

- ஈரம் (சிறுகதைத்தொகுதி)
- சோகவனம்
- வனக்குமாரன்
- அன்பின் சிப்பி
- சோகவனம்
- நீர்ப்பழி (முழு அறுபத்தெட்டு கதைகள் அடங்கிய தொகுப்பு - 2020 அடையாளம் பதிப்பகம்)

**விருதுகள்**

- 1992 மற்றும் 1994 ஆண்டுகளில் இலக்கியச் சிந்தனையின் சிறந்த சிறுகதைக்கான விருதினைப் பெற்றிருக்கிறார்.
- கூகை என்னும் புதினத்திற்காகத் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2005-ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றிருக்கிறார்.
- சூல் என்னும் புதினத்திற்காக 2016-ஆம் ஆண்டிற்கான சுஜாதா விருதைப் பெற்றார்.
- சூல் என்னும் புதினத்திற்காக 2019-ஆம் ஆண்டில் சாகித்ய அகாதெமி விருதைப்பெற்றார்.

- முன்னாள் முதல்வர்கள் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரிடமிருந்து மாநில அரசு விருதுகள்.
- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நீதியரசர் வி.ஆர்.கிருஷ்ணய்யர் விருது, சுந்தரனார் விருது.
- கனடா தோட்ட விருது (2005)
- ஆனந்த விகடன் விருது (2019)

## மலர்வதி

தமிழில் கதைகளும் நாவல்களும் எழுதிவரும் எழுத்தாளர் மலா்வதி அடித்தள மக்களின் வாழ்க்கையை எழுதுபவர். இவரது இயற்பெயர் மேரி ஃப்ளோரா. 1979-ல் கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிகோடு என்னும் ஊரில் ஜி. எலியாஸ்- ரோணிக்கம் இணையருக்கு பிறந்தார். வெள்ளிகோடு ஆர்.சி. நடுநிலை பள்ளியில் எட்டாம் வகுப்புவரை படித்தார். முளகுமூடு குழந்தை இயேசு உயர் நிலையில் பள்ளிநிறைவை முடித்து தமிழ் நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தில் பி.லிட் பட்டப்படிப்பு முடித்தார். மலர்வதி கிறிஸ்தவ பக்திநூல்களையே முதலில் எழுதத்தொடங்கினார். முதல் இலக்கியப் படைப்பு 2008 ஆம் ஆண்டு வெளியான 'காத்திருந்த கருப்பாயி' என்னும் நாவல். 'தூப்புகாரி' என்னும் நாவலுக்கு 2012 கேந்த்ரிய சாகித்ய அகாதமியின் இளம்படைப்பாளிகளுக்கான யுவபுரஸ்கார் விருது கிடைத்தது. இலக்கிய ஊக்கமளித்த முன்னோடிகள் என பொன்னீலன், நாஞ்சில்நாடன் இருவரையும் குறிப்பிடுகிறார். நீல பத்மநாபன் ,பிரபஞ்சன், தோப்பில் முகம்மது மீரான், மேலாண்மை பொன்னுசாமி ஆகியோர் தாக்கம் செலுத்திய படைப்பாளிகள்.

தந்தை முகம் பார்க்கும் முன்னே, வேறு பெண்ணுடன் பிரிந்து சென்ற நிலையில் தனது ஐந்து குழந்தைகளை காப்பாற்ற வீட்டின் பக்கத்திலுள்ள கிறிஸ்தவப் பள்ளியில் மாதம் 30 ரூபாய் கூலியில் துப்புரவு தொழிலாளியாக வேலை செய்து வந்த தன் தாயின் துயரை கண்டு வளர்ந்தவர் மலர்வதி. பத்துவயதில் அவர் அண்ணன் குடும்பத்தைக் காப்பாற்ற கல்லுடைக்கச் சென்றார். தன் அன்னையின் வாழ்க்கையையும் தன் அனுபவங்களையும் ஒட்டியே மலர்வதி தூப்புகாரி நாவலை எழுதியதாகக் குறிப்பிடுகிறாா். குமரிமாவட்டத்தில் இருந்து வெளிவரும் முதற்சங்கு, இலக்கிய சிறகு போன்ற இதழ்களுடன் இணைந்து பணியாற்றினார். மலர்வதி அடித்தள வாழ்க்கையை பெண்ணின்

நோக்கில் எழுதும் எழுத்தாளர். ஆவணப்படுத்தும் தன்மைகொண்ட நேரடியான மொழியும் வட்டாரவழக்கும் உடையவை அவருடைய நாவல்கள்.

**படைப்புகள்**

**சமயம்**

- கருணை இயேசுவின் கல்வாரி கண்ணீர் (2005)
- கழுமரத்தில் தொங்கிய கடவுளின் அன்பு (2005)
- சிலுவை வழி சிகரம் (2005)
- இலக்கிய படைப்புகள் (2005)

**நாவல்**

- காத்திருந்த கருப்பாயி- 2008
- தூப்புக்காரி 2012
- காட்டுக்குட்டி 2017
- நாற்பது நாட்கள் 2021 .

**சிறுகதைகள்**

- கருப்பட்டி 2020

**கட்டுரைகள்**

- முதல் காட்சிகள் 2020

**விருதுகள்**

- சாகித்திய அகாடெமியின் யுவபுரஸ்கார் விருது.
- தந்தை பெரியார் விருது
- நாமக்கல் கு. சின்னப்ப பாரதி விருது
- திருப்பூர் தமிழ்ச் சங்க விருது
- எழுத்தாளர் சுந்தர ராமசாமி விருது
- கவிஞர் கவிமணி தாசன் விருது
- எழுத்தாளர் புதுமைப்பித்தன் விருது (இருமுறை)
- அமுதன் இலக்கிய விருது
- புதிய தலைமுறை நம்பிக்கை நட்சத்திரம் விருது

# மாதிரி வினாத்தாள்

# இக்கால இலக்கியம்

## பகுதி – அ

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. குயில்பாட்டின் ஆசிரியர் யார்?

   அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன்

   இ) பாரதியார் ஈ) கவிமணி

2. வீரத்தாய் படைப்பில் இடம்பெறும் சேனாதிபதியின் பெயர்

   அ) மாறன் ஆ) காளிமுத்து

   இ) காங்கேயன் ஈ) சுதர்மன்

3. கவிஞர் வாலி யாருக்கு கடிதம் எழுதினார்?

   அ) திருவள்ளுவருக்கு ஆ) கம்பருக்கு

   இ) இளங்கோவடிகளுக்கு ஈ) கண்ணதாசனுக்கு

4. பாரதிக்கு யாருடன் கந்தர்வ கல்யாணம் நடந்தது?

   அ) கண்ணம்மாள் ஆ) செல்லம்மாள்

   இ) இசைதேவி ஈ) கவிதா தேவி

5. பிரும்மம் சிறுகதையின் ஆசிரியர்

   அ) பி.எஸ்.இராமையா ஆ) ஜெயமோகன்

   இ) ஜெயகாந்தன் ஈ) பிரபஞ்சன்

6. நட்சத்திர குழந்தைகள் சிறுகதையில் இடம்பெறும் குழந்தையின் பெயர்?

   அ) பிருந்தா ஆ) சித்ரா

   இ) தேவகி ஈ) ரோகினி

7. இல்லந்தோறும் இதயங்கள் நாவலை எழுதியவர்

   ஆ) சு.சமுத்திரம் ஆ) மு.வரதராசன்

   இ) இராஜம்கிருஷ்ணம் ஈ) சோ.தர்மன்

8. இல்லந்தோறும் இதயங்கள் நாவலின் முதன்மை கதாப்பாத்திரம்

   அ) கனகம் ஆ) மணிமேகலை

   இ) வசந்தி ஈ) பாயா

**9.** 'யுவபுரஸ்கார்' விருது பெற்ற எழுத்தாளர்

அ) தொ.மு.சி ரகுநாதன் ஆ) நாஞ்சில் நாடன்

இ) ஸ்ரீதரகணேசன் ஈ) மலர்வதி

**10.** வண்ணதாசன் தான் எழுதிய எந்த நூலிற்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார்?

அ) சமவெளி ஆ) நடுளவ

இ) ஒரு சிறு இசை ஈ) புலரி

## பகுதி - ஆ

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

**11. அ)** சின்னக்குயிலின் முற்பிறப்புக் கதையைக் கூறுக.

(அல்லது)

**ஆ)** கண்ணதாசன் காமராசருக்கு எங்ஙனம் தாலாட்டு பாடுகிறார்?

(அல்லது)

**12. அ)** திருநெல்வேலின் சிறப்புகளாக தொ.மு.சி ரகுநாதன் கூறுவன யாவை?

(அல்லது)

**ஆ)** 'புத்தகம் வாழ்க்கையை நிமிர வைக்கும்' – விளக்குக

**13. அ)** அன்பளிப்பு சிறுகதையில் வரும் சாரங்கன் கதாப்பாத்திரம் பற்றி எழுதுக.

(அல்லது)

**ஆ)** விடியுமா சிறுகதை உணர்த்தும் செய்து யாது?

**14. அ)** கூத்து கோவிந்தன் கதாப்பாத்திரம் குறித்து எழுதுக.

(அல்லது)

**ஆ)** இல்லந்தோறும் இதயங்கள் நாவலில் கருப்பொருள் யாது?

**15. அ)** தோப்பில் முகமது மீரான் நாவல்களின் கதைக்களங்களைச் சுட்டுக.

(அல்லது)

**ஆ)** மலர்வதியின் படைப்புகள் குறித்து விளக்குக.

## பகுதி - இ

**அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.**

**16. அ)** குயில்பாட்டில் இடம்பெறும் கற்பனைப் பாத்திரங்கள் பற்றி விவரி.

(அல்லது)

**ஆ)** வீரத்தாய் நாடகத்தில் நிகழும் அரசியல் சூழ்ச்சிகளைக் கட்டுரை வடிவில் எழுதுக.

**17. அ)** பாரதியாரின் சுயவிடுதலை குறித்து வைரமுத்து கூறுவனவற்றை தொகுத்துரைக்க.

(அல்லது)

**ஆ)** அறிவுமதியின் ஹைக்கூ கவிதைகளை ஆராய்க.

**18. அ)** காலனும் கிளவியும் கதைப் பின்னணியை விவரிக்க.

(அல்லது)

**ஆ)** நாற்காலி கதைப்போக்கினை ஆய்க.

**19. அ)** மணிமேகலை கதாப்பாத்திரம் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

**ஆ)** இல்லந்தோறும் இதயங்கள் நாவல்வழி புலப்படும் சமுதாயச் சிந்தனைகளை எடுத்துரைக்க.

**20. அ)** இலக்கிய வரலாற்று நோக்கில் பொன்னீலனின் படைப்புகளை மதிப்பிட்டு ஆய்க.

(அல்லது)

**ஆ)** சோ.தர்மனின் படைப்புகள் குறித்து கட்டுரைக்க.